
முத்துலட்சுமி ராகவன்
எண்ணியிருந்தது ஈடேற...
இரண்டாம் பாகம்

# முத்துலட்சுமி ராகவன்

## எழுதிய

# எண்ணியிருந்தது ஈடேற...

## இரண்டாம் பாகம்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எண்ணியிருந்தது ஈடேற... 2 |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, பிப்ரவரி 2017 |
| தாள் | : | 11.6 Kg புக் பிரிண்ட் |
| நூல் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 400 |
| விலை | : | ரூபாய் 200.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு*

*முத்துலட்சுமி ராகவன்*

# அத்தியாயம் 33

**“உன்னை ஒன்று கேட்பேன்..**

**உண்மை சொல்ல வேண்டும்..**

**என்னைப் பாடச் சொன்னால்**

**என்ன பாடத் தோன்றும்..?”**

**ம**னதில் உள்ள உணர்வுகளை பாடல் வரிகளில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் நந்தினி..

ஸ்வரம் பிசகாத குரலினிமையில் அவள் ஓர் தேர்ந்த பாடகியென்பதை ரவிச்சந்திரன் புரிந்து கொண்டான்..

‘இந்த வாயாடிக்குள் இப்படியொரு இசைத் திறமையா..?’ தாடையைத் தடவியபடி, பாடலை ரசித்தவன் கூடவே அவளை குறுகுறுவென பார்த்து வைத்து அவளுக்குள் தடுமாற்றத்தை உண்டு பண்ணினான்.. பிரத்யேகமான அர்த்தத்தை அறிவிக்கும் ஒரு சிறு பார்வையில் குழம்பித் தவிக்கும் அவளின் விழிகளில் தெரியும் கலக்கத்தைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது..

அச்சத்துடன் இருந்த அவளோ தன் மன உணர்வுகளை இனம் காண முடியாமல் தடுமாறியபடி..

**"காதல் பாட்டுப் பாட**

**காலம் இன்னும் இல்லை..**

**தாலாட்டுப் பாத தாயாகவில்லை.."**

என்று பாடிக் கொண்டிருந்தாள்..

அடர்ந்த கூந்தல் கலைந்திருந்தது.. நீண்ட பின்னலை முன்புறமாக விட்டிருந்தாள்.. அது அவளது மடியைத் தொட்டுப் புரண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

கேரளத்துப் பெண்களுக்கேயுரிய நீளமான கூந்தல் நந்தினியிடமும் இருந்ததைக் கண்டான் ரவிச்சந்திரன்.. கேரளத்துப் பெண்கள் கூந்தலுக்கான அக்கறையை எடுத்துக் கொள்பவர்கள்.. தினமும் தேங்காய் எண்ணையைத் தலைக்குத் தேய்த்து தண்ணீர் ஊற்றிக் குளித்து ஈரக் கூந்தலை சீராக வாரி விரிய விட்டுச் செல்லும் அவர்களின் அழகே தனித்துவம் கொண்டது.. நந்தினியைப் பார்த்தால் கூந்தலுக்காக மெனக்கெடுகிறவளைப் போலத் தெரியவில்லை.. ஏனோதானோ என்று வகிடெடுத்து

கடனேயென்று பின்னலைப் போட்டு முன்னால் விட்டிருந்தாள்.. இழை இழையாகப் பிரிந்து கோக்கு மாக்காக இருந்த பின்னல் கூந்தலுக்காக நந்தினி ஒரு கூந்தல் இழையளவும் பாடுபடவில்லை என்பதைத் தெரிவித்தது.

‘சோம்பேறி..!’

ரவிச்சந்திரனுக்குச் சிரிப்பு வந்தது.. பொதுவாக இது போன்ற சோம்பேறித்தனத்தை அவன் ரசிக்க மாட்டான்.. கடுமையாக சாடுவான்.. நந்தினியிடம் இருந்த சோம்பேறித்தனம் கூட அவனை வசீகரித்ததுதான்.. ஆச்சரியத்திலும் ஆச்சரியம்..! அவளை அவன் அங்குலம் அங்குலமாக ரசித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வின்றி பாடலில் ஆழ்ந்து போயிருந்தாள் நந்தினி..

ஜன்னலோரமாக சாய்ந்து கால்களை பெஞ்சில் மடித்து நீட்டி கையை தலைக்கு முட்டுக் கொடுத்து வானத்தைப் பார்த்த விதம் ரவிவர்மாவின் ஓவியத்தைப் போல இருந்தது..

**“நிலவில்லா மேகம்..!**

**நீரில்லா வானம்..!**

**பேசாத பெண்மை..!**

**பாடாது உண்மை..!**

**கண்ணை மெல்ல மூடும்..**

**தன்னை எண்ணி வாடும்..**

**பெண்ணைப் பாடச் சொன்னால்**

**என்ன பாடத் தோன்றும்..?"**

பாடலின் கடைசி வரியைப் பாடும் போது அவனைப் பார்த்த நந்தினி விழிகளால் கேள்வி கேட்டாள்..

"உனக்குத் தோன்றியதைப் பாடு.." என்றான் ரவிச்சந்திரன்.. பாடலின் ஊடே இடையூறு செய்யாதே என்பதைப் போல பார்வையால் அவனை அதட்டினாள்.. அவன் பயந்தவனைப் போலப் பாவனை செய்தததில் நாக்கைத் துருத்தி உன்னை எனக்குத் தெரியாதா என்று அழகு காட்டினாள்.. அதில் மயங்கிப் போன ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின..

ராஜா வீட்டுக் குழந்தையிடம் விளையாடக் கூட எவரும் அஞ்சுவார்கள்.. குழந்தைப் பருவத்திலிருந்தே மரியாதை கலந்த பணிவையே ரவிச்சந்திரனைச் சுற்றியிருந்தவர்கள் பிரதிபலித்ததைப் பார்த்து வளர்ந்தவனின் ரத்தத்தில்

இயல்பாகவே ஆளுமைத்தனம் ஊறியிருந்தது.. அளந்து பேசுவான்.. கண்டிப்பைக் காட்டுவான்.. பள்ளிப் படிப்பையே மேல்நாட்டுப் பள்ளிகளில் படித்தவன், கல்லூரிப் படிப்பையும் அங்கேயே படித்து முடித்து விட்டு நாடு திரும்பினான்.. அவனது குடும்பத்திற்கு மேல்நாட்டின் முக்கிய நகரங்களில் மாளிகைகள் இருந்தன.. மேல்நாட்டிலேயே அப்படியென்றால் இந்தியாவில் சொல்லவும் வேண்டுமா..? அனைத்து தலைநகரங்களிலும் அவனுக்குச் சொந்தமான பங்களாக்கள் இருந்தன.. அவனது பின்புலம் அறிந்தவர்கள் கிட்ட நெருங்கிப் பேசத் தயங்குவார்கள்.. நந்தினியோ அவனுடன் சரிக்குச் சரியாக வாயடித்தாள்.. சண்டையிட்டாள்.. அழகு காட்டினாள்..

அவளுடன் கழிக்கும் பொழுது ரம்யம் நிரம்பியதாக அவனுக்குத் தோன்றியது.. அழகான ரம்யம்..! அற்புதமான ரம்யம்..! இளவேனிற்காலத்தை உணர்த்தும் ரம்யம்..! இளமை நிரம்பிய ரம்யம்..!

இதுபோன்ற ரம்யத்தை நுகர முடியும் என்று அவன் அந்த நொடிகளில்தான் அறிந்தான்..

**“தனிமையில் கானம்..!**

**சபையிலே மௌனம்..!”**

நந்தினி பாடலைத் தொடர.. அவன் கேலியாக..

“சபையிலே மௌனமா..? யார்..? நீ மௌனமாக இருக்கிற ஆள்..? குட் ஜோக்..” என்றான்..

அவள் புருவங்களைச் சுருக்கி பேசாமலிரு என்று மிரட்டினாள்.. பதிலுக்கு அவன் அவள் செய்ததைப் போல நாக்கைத் துருத்தி அழகு காட்டியதில் அவளது விழிகள் மலர்ந்தன..

அவன்மீது கவனமாக அடுத்த இரு வரிகளை மறந்து விட்டு..

“அன்பு கொண்ட நெஞ்சில்..

ஆறுதல் இல்லை..

என்னைப் பாடச் சொன்னால்..

என்ன பாடத் தோன்றும்..?”

என்று முடித்து விட்டாள்..

“பசிச்சாச் சொல்லு.. கேண்டின்ல பாத்திரத்தை கழுவிப் போட்டிருந்தாலும் தட்டியெழுப்பி உனக்காக எதையாச்சும் கிளறச் சொல்லி வாங்கிட்டு வர்றேன்.. அதை மென்று முழுங்கு.. பாட்டோட வரிகளை மென்று முழுங்காதே..”

அவளுடைய விழிகளுக்குள் உற்றுப் பார்த்தபடி சொன்னான் ரவிச்சந்திரன்..

“பாட்டைப் பாடினாக் கேட்கனும்.. அதை விட்டுட்டு ஆட்டத்தைக் கலைப்பேன்ங்கிற மாதிரி ஊடே ஊடே பேசிக்கிட்டு இருந்தா இப்படித்தான் ஆகும்.. எல்லாம் உங்களாலே வந்தது..” அவன் மேல் குற்றம் சாட்டினாள் நந்தினி..

“என்னாலா..? பாருடா.. பழியை என்மேல தூக்கிப் போடறதை..” கோபமில்லாமல் கோபப்பட்டான் அவன்.. அவனது நடிப்பை மெச்சியவளைப் போல இதழை வளைத்து சுழித்தாள் நந்தினி.. அந்தச் சுழிப்பில் அவன் பார்வை மையம் கொண்டது.. ஈரம் படர்ந்த இதழ்களை அவன் உன்னிப்பாகப் பார்த்தான்.. நந்தினி உதட்டைக் கடித்தபடி ஜன்னலில் முகம் பதித்தாள்.. அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது..

“ஸோ.. என்னோட பாட்டுக்குப் பாட்டு போட்டி நடத்திட்ட..” எதுவுமே நடக்காததைப் போல இயல்பாக பேசினான் அவன்.. அவளுக்குத்தான் அவன் முகத்தைப் பார்த்துப் பேச தயக்கமாக இருந்தது.. ஆனாலும் பேசியாக வேண்டுமே.. இதுபோன்ற தருணங்களில் மௌனம்

ஆபத்தானது.. பேச்சு இனம் புரியாத உணர்வலைகளைத் தடுத்து நிறுத்தும்..

“யெஸ் மை லார்ட்..” என்றாள் நந்தினி..

அவன் கண்கள் மின்னின.. அவளின் ‘வெடுக் வெடுக்’ என்ற துடிப்பான பேச்சு ஆளை ஈர்த்தது..

பயமறியாத இளம் கன்று போன்றவளை அரள வைத்து வேடிக்கை பார்க்க ஆசை கொண்டான்.. இத்தனை மணிநேரம் பிரயாணப் பழக்கத்தில் என்ன செய்தால் அவள் மிரண்டு போவாள் என்பது அவனுக்கு அத்துபடியாகியிருந்தது.. இதோ.. அவள் அரளப் போகிறாள் என்ற ரகசிய சந்தோஷம் முகத்தினில் சூழ.. அவன் என்ன செய்யப் போகிறான் என்று புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தவளிடம்..

“ஊஹும்..?” என்று வசீகரமாக புருவங்களை உயர்த்தி இறக்கிக் கண்களைச் சிமிட்டினான்..

‘ஆத்தாடி..!’

ஆழிப் பேரலையில் அகப்பட்டுக் கொண்டவளாக விதிர்த்துப் போனாள் நந்தினி.. அடி வயிற்றிலிருந்து கத்தி

போலக் கிளம்பிய சிலிர்ப்பு உணர்வு அவளை ஒரு வழியாக்கியது.. உடல் நடுங்க கைகளால் முகத்தை மூடிக் கொண்டவள் விரலிடுக்கில் அவன் என்ன செய்கிறான் என்று பார்த்தாள்..

“கள்ளத்தனமாக பார்க்கறியா..?” என்றான் அவன்..

‘இவனாவது.. மாறுகிறதாவது.. கொஞ்சம் சிரிச்சுப் பேசினாப் போதும்.. திருந்திட்டான்னு ஏமாந்து போறேன்.. சிறுத்தைக்குப் புள்ளிகள் மாறுமா..?’

“என்ன யோசனை..?”

“சிறுத்தைக்கு புள்ளிகள் மாறாதுங்கிற யோசனை..”

“எதுக்காக இந்த புராவெர்ப்..?”

“உங்க குணம் மாறவே மாறாதுங்கிறதுக்குத்தான் இந்த புராவெர்ப்..”

“மாத்திக்கிறதைப் போல மோசமான குணம் எனக்கு இல்லை..”

“ஓஹோ..”

இவனிடம் பேசினால் வேலைக்கு ஆகாது என்று அவனைக் கண்ட நொடியில் எடுத்த முடிவை அப்போதும்

எடுத்தவளாக ரயிலில் கொடுத்திருந்த வெண்மை நிறப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அவனுக்கு முதுகைக் காட்டித் திரும்பிப் படுத்து விட்டாள் நந்தினி..

“தமிழ்நாட்டுப் பெண்களெல்லாம் வீராங்கனைகள்ன்னு கேள்விப் பட்டேன்.. அதெல்லாம் சும்மாவா..?”

எதிர்பக்கமாக திரும்பிப் படுத்திருந்தவளை வம்பிழுத்தான் ரவிச்சந்திரன்.. ரோஷக்கார, மண்வாசனை கொண்ட நந்தினி அதற்கு பதிலடி கொடுக்கக் கட்டாயமாக திரும்பிப் பார்பாள் என்று அவன் கணித்த கணிப்பு பொய்யாகவில்லை..

“அது சும்மா இல்லை சாரே..” என்றபடி அவள் அவன் பக்கமாக திரும்பிப் படுத்து அவன் முகத்தைப் பார்த்தாள்..

“நான் நம்ப மாட்டேன்..” மெல்லிய வெளிச்சத்தில் தோரணையாக ஒய்யாரமாக ஒருக்களித்துப் படுத்திருந்தவளை பார்வையில் வருடும்படி அவன் சொன்னான்..

“நீங்க நம்பனும்னு அவசியம் என்ன..? புலியை முறத்தாலே அடித்து விரட்டின வீரத் தமிழ் பெண்கள் நாங்கன்னு சங்க இலக்கியங்களிலேயே எழுதி வைச்சிருக்காங்க.. மனசிலாயி..?” பெருமையுடன் சென்னாள் நந்தினி..

“அப்பச் சரி..”

நிம்மதியானவனைப் போலச் சொன்ன ரவிச்சந்திரனின் இதழ்களில் மர்மப் புன்னகை நெளிந்தது.

அந்தப் புன்னகையின் பின்னால் ஒளிந்திருக்கும் மர்மம் என்னவாக இருக்கும் என்று புரியாமல் திருதிருத்தாள் நந்தினி..

‘இவன் சொல்ற தினுசே சரியில்லையே.. என்னவா இருக்கும்..?’ அவள் மூளையைக் கசக்கி யோசித்துக் கொண்டிருக்க அவன் தூங்குவதைப் போல நடித்தான்.. நந்தினியால் தூங்க முடியவில்லை.. ஏன் அப்படிச் சொன்னான் என்பதை அறிந்து கொள்ளாமல் எப்படி அவளால் தூங்க முடியும்..?

என்னவென்று அவனிடமே கேட்டு விடலாம் என்று அவனைப் பார்த்தால் அவன் ஆழ்ந்து உறங்குபவனைப் போலக் கண்களை மூடிக் கொண்டிருந்தான்..

‘அதுக்குள்ள தூங்கிட்டானா..?’

அவனை எப்படி எழுப்புவது என்று தெரியாமல் திகைத்தாள் நந்தினி... என்னதான் அவனுடன் சரிக்குச்

சரியாக வாயடித்து, அழகு காட்டிப் பேசிக் கொண்டிருந்தாலும் அவனை அவளுக்குச் சிலமணி நேரங்களுக்கு முன்னர்தானே தெரியும்..

புதிதாக அறிமுகமாயிருப்பவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பி ஏன் அப்படிச் சொன்னாய் என்று கேட்கவும் முடியாமல், தூங்கவும் முடியாமல் அவஸ்தைப் பட்டுப் போன நந்தினி போர்வையை விலக்கி எழுந்து உட்கார்ந்து நகத்தைக் கடித்தாள்.. குளிர்வதைப் போல இருந்ததில் போர்வையைத் தலையோடு சேர்த்துப் போர்த்தியபடி சீட்டை விட்டு எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடைபயில ஆரம்பித்தாள்..

‘காரணம் இல்லாம இவன் அப்படிச் சிரிக்க மாட்டானே..’

அதே குழப்பத்தோடு நடந்து கொண்டிருந்தவள் யார் மீதோ மோதியதில் பயந்து போய் நின்றாள்..

பூட்டியிருக்கும் பெட்டிக்குள்ளே யார் வந்து நிற்பது..? எதிரே பார்த்தாள்.. பார்த்தவளின் விழிகள் நிலை குத்த நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே நின்று விட்டாள்.. வெண்மையாய் புகை வடிவில் பெட்டியின் விட்டத்தை தொட்டுக் கொண்டு உருவமின்றி நின்றது அந்த வடிவம்..!

“யா.. யா.. யார்.. யார் நீ..?”

வார்த்தைகள் தந்தியடிக்க உதவிக்கு ரவிச்சந்திரனை எழுப்பலாம் என்று அவனைப் பார்த்தால் அவன் தலை எது கால் எது என்று தெரியாமல் இழுத்துப் போர்த்தி முகம் காட்டாமல் உறங்கிக் கொண்டிருந்தான்..

இஞ்சி இடுப்பழகனைக் கண்டு விட்டதைப் போல நந்தினி வாயில் தந்தியடித்து வந்த ஓரிரு வார்தைகளும் மறைந்து அங்கு காற்றுத்தான் வந்தது..

அந்த வடிவம் அவளை நெருங்கி வந்ததில் வலது கையை வாய்க்குக் குறுக்கே கொடுத்து..

“வீல்..” என்று அலறிய நந்தினி மயங்கிச் சரிந்தாள்..

அவளது முகத்தில் தண்ணீரின் திவலைகள் வழிந்த தில் உணர்வு வரப் பெற்று அவள் கண் விழித்துப் பார்த்த போது அவள் முகத்திற்கு வெகு அருகாமையில் ரவிச்சந்திரனின் முகம் தெரிந்தது..

லேசாக அவள் அசைந்தாலும் அவள் மீது அவன் சரிந் து விடுவான் போல ஒட்டி உட்கார்ந்து குனிந்திருந்தான்.. நந்தினி இருந்த நிலைமையில் அவனது நெருக்கம் உறைக்கவில்லை..

“பே.. பே.. பே..” என்றாள்..

“நீயென்ன ஊமையா..?” கேலி செய்தான் அவன்..

இவனுக்கு விளையாட நேரம் காலம் கிடையாதா என்று வெகுண்ட நந்தினி விரல் நீட்டி..

“அ.. அ.. அ..” என்று திக்கினாள்..

“இப்பத்தான் ஆனா, ஆவன்னா படிக்கிறயா..?” அவன் அதற்கும் கிண்டல் செய்தான்..

நான் சொல்வதை புரிந்து கொள்ளேன் என்ற ஆற்றாமையோடு தலையை உருட்டிய நந்தினியின் தலையை இரு கைகளாலும் பிடித்து நிறுத்தியவன்.. சிரிப்பை அடக்கிக் கொண்டு..

“மக்கு.. மக்கு..” என்றான்..

‘மக்கா..?’

நந்தினிக்குள் ரோஷம் வரத்தான் செய்தது.. பேயை பற்றிய பயம் அதை முந்திக் கொண்டதில் ரோஷம் பிந்தி விட்டது.. பேயைப் பார்த்தவள் அந்தப் பெட்டியில் இருக்கும் ஒற்றைத் துணையை பகைத்துக் கொள்ள மனமின்றி மக்கைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டாள்..

“வெறும் வாய்தான் உனக்கு.. பயந்தாங்குளி.. இதில புலியை முறத்தாலே விரட்டிய வீரத் தமிழ்ப் பெண்ணைப் பத்தின பெருமை வேற.. அந்தக் காலத்தில அப்படி இருந்திருக்காங்க.. உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. நீ வீராங்கனையா..?”

“நானென்ன ஜான்ஸி ராணியா..? சாதாரண நந்தினி சாரே..” அவன் பக்கத்திலிருக்கும் தைரியத்தில் பழைய நந்தினி மீண்டுவிட...

“கெட்டிக்காரிதான் நீ..” என்று மெச்சிப் போனான் ரவிச்சந்திரன்..

“என்னை விட நீங்க கெட்டிக்காரர் பாஸ்.. சான்ஸ் கிடைச்சதுன்னு என் சீட்டில டேரா போட்டுக்கிட்டு இருக்கீங்களே.. உங்க சீட்டுக்குப் போங்க..”

“மயக்கம் தெளிஞ்சிருச்சுல்ல.. விரட்டத்தான் செய்வ..”

“ரொம்பப் பேசினீங்கன்னா இங்கே வந்த பேய்கிட்ட உங்களைப் பிடிச்சுக் கொடுத்திருவேன்.. ஜாக்கிரதை..”

“அதுசரி.. பேய் வேஷம் போட்டவன் கிட்டேயே பயம் காட்டறியா..?”

“என்னது..? பேய் வேஷம் போட்டீங்களா..? நீங்களா..?”

“நானேதான்..”

ரவிச்சந்தின் எழுந்து நின்று இரண்டு வெள்ளைப் போர்வைகளை முன்புறமும் பின்புறமும் முழுதாக மறைக்கும்படி தலையைச் சுற்றித் தொங்க விட்டுக் கையிரண்டையும் விரித்தான்..

“பே.. பே.. பே..”

ரவிச்சந்திரன்தான் நிற்கிறான் என்று தெரிந்திருந்தும் குழறினாள் நந்தினி..

“ஹா.. ஹா.. இவ்வளவுதானா உன் தைரியம்..?” ரவி ச்சந்திரன் விழுந்து விழுந்து சிரித்தான்..

“ஆனா நான் பார்த்தப்ப நீங்க இழுத்துப் போர்த்திப் படுத்திருந்தீங்களே..?” அப்போதும் நந்தினியால் நம்ப முடியவில்லை..

“நானா படுத்திருந்தேன்..? என் பில்லோதானே படுத்திருக்கு..?”

ரவிச்சந்திரன் சுட்டிக் காட்டிய சீட்டில் அப்போதும் போர்வையைப் போர்த்தி ஓர் ஆள் படுத்திருப்பதைப் போலவே இருந்தது..

“இதுக்கும் பயந்து போய் மயங்கி வைக்காதே..”

ரவிச்சந்திரன் போர்வையை உறுவினான்.. நீளவாக்கில் கிடத்தப் பட்டிருந்த இரண்டு தலையணைகளும் அவளைப் பார்த்துச் கெக்கலி கொட்டிச் சிரித்தன..

‘எப்படி முட்டாளாக்கியிருக்கிறான் பார்..’

தான் ஏமாற்றப்பட்டதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. அவளது பயந்தாகுளித்தனத்தை அவன் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.. வேண்டுமென்றே அரட்டிப் பயமுறுத்தி விளையாடியிருக்கிறான்..

‘அதற்காக இப்படியா..?’ முகம் இறுக தன் சீட்டில் சுருண்டு கொண்டாள் நந்தினி..

“என்மேல கோவிச்சுக்கிறதில ஒரு அர்த்தமும் இல்லை.. கண்ணை மூடித் தூங்கிட்டு இருந்தவன் கண்ணை முழிச்சுப் பார்த்தா வெள்ளையா இங்கேயும் அங்கேயும் ஏதோ நடமாடுது.. யாருன்னு பார்த்தா நீ.. யோசிக்கப் போய்

தப்பிச்சேன்.. இல்லேன்னா உன்னைப் போல நானும்.. ‘பே..பே..’ன்னு ஊமை பாஷை பேசியிருக்கனும்..”

“யாரு..? நீங்க..? பயப்படுவீங்க..?”

“ஹா.. ஹா.. நீயேன் தூங்காம வெள்ளைப் போர்வையை போர்த்திக்கிட்டு வாக்கிங் போன..?”

“ம்ம்ம்.. வேண்டுதல்..! போவீங்களா.. சும்மா இருந்தவகிட்ட தமிழ்ப் பொண்ணுக வீரத்தைப் பத்திப் பேசிட்டு நான் முறத்தக் கொண்டு புலியை விரட்டின தமிழ் பொண்ணுக வீரத்தைப் பத்திப் பேசினதும் அதுசரின்னு ஒரு மார்க்கமா சிரிச்சு வைச்சீங்களே.. எதுக்கு..? அதைப் பத்திக் கேட்கலாம்ன்னா குறட்டை விட்டுத் தூங்கறிங்க..”

“குறட்டையா..? நானா..?”

“இல்லேன்னு இன்னொரு நாள் புருவ் பண்ணுங்க.. இப்ப எதுக்கு ஒருதினுசா சிரிச்சீங்கன்னு எனக்குச் சொல்லுங்க.. தூங்கறவர் கிட்ட அதைப் பத்திக் கேட்க முடியாம.. தூக்கம் பிடிக்காம.. நான் போர்வையைப் போர்த்திக்கிட்டு உலாத்தினா உங்களுக்குப் பேய் போல தோணி வைக்குமா.?”

“அதுவா..? முறத்தாலே புலியை விரட்டின தமிழ் பெண்களோட வீரத்தை நீ நினைவில வைச்சுக்கிறது ரொம்பவும் அவசியம்.. ஏன்னா ‘வய நாடு’ சிட்டியில்லை.. மலை பிரதேசம்.. எங்க எஸ்டேட்டுக்குப் போகணும்னா காட்டு வழியிலதான் போயாகனும்.. யானை, புலி, சிங்கம்ன்னு அனைத்து விலங்கினங்களும் நம்ம பாதைக்கு குறுக்காலே வந்து ‘ஹலோ’ சொல்லும்.. நீ தனியா போறப்ப அதுகளைச் சமாளிச்சுக்குவ இல்ல.. முறம் கொண்டு வந்திருக்கயா.. இல்லைன்னா கோழிக்கோடில வாங்கித் தரட்டுமா..?”

சிரிக்காமல் கேட்டு விட்டு அவன் தூங்க.. புலியைப் பற்றிய பயத்துடன் விடிய விடிய தூங்காமல் விழித்திருந்தாள் நந்தினி..

கருக்கல் போர்த்திய அதிகாலையில் மங்களூர் எக்ஸ்பிரஸ் கோழிக் கோடில் நின்றது..

# அத்தியாயம் 34

**கொ**ட்டக் கொட்ட விழித்திருந்தாள் நந்தினி.. ஜன்னல் கண்ணாடியில் முகம் பதித்து கடந்து செல்லும் ஊர்களின் கார்த்திகை தீபங்கள் போன்ற விளக்குகளின் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. மழையிரவுடன் கூடிய அந்த இரவு நேரப் பயணம் ரசிக்கும்படிதான் இருந்திருக்க வேண்டும்.. அவளால்தான் அதை ரசிக்க முடியவில்லை.. 'வய நாடு..' மலைப்பிரதேசம் என்பதை அறிவாள்.. அது வனப் பிரதேசமாகவும் இருக்கும்.. அந்த வனப் பிரதேசத்தில் சிங்கம், புலி, யானைகளின் நடமாட்டமும் இருக்கும் என்று அவள் அறிந்திருக்கவில்லையே..

'ஏண்டி உத்ரா இதைச் சொல்லலை..?'

மனதுக்குள் புலம்பினாள்.. சொன்னால் நந்தினி பயந்து விடுவாள் என்று நினைத்தாளா..? அதனால்தான் சொல்லவில்லையா..?

எதிரே கந்தவர்வனைப் போல நெடிதான உயரமும், கிறங்க வைக்கும் அழகுமாக படுத்திருந்த ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. சீரான சுவாசத்துடன் தூங்கிக் கொண்டிருந்தான்..

நந்தினிக்கு வெறி வெறியாக வந்தது.. அவளை கலங்கடித்து விட்டு அவன் மட்டும் நிச்சிந்தையாக தூங்குகிறானே..

‘கொடுத்து வைத்தவன்..’ மனதுக்குள் பொருமினாள்..

‘இவனுக்கு மட்டும் நிம்மதியான உறக்கம் வாய்த்திருக்கிறது.. எனக்கு வாய்க்க வில்லையே..’

பெருமூச்சுடன் வெளியே பார்த்தாள்.. கருமை அடர்ந்திருந்தது.. ஆங்காங்கே ஒளிர்விட்ட விளக்குகள் நட்சத்திரங்களின் கோலங்கள் போல தென்பட்டன. .

‘ஊரே உறங்கிக்கிட்டு இருக்கு.. நான் மட்டும் உறங்கலை..’ ரவிச்சந்திரனை முறைத்தாள்.. அவளது முறைப்பை உணராமல் உறக்கத்தில் ஆழ்த்திருந்தான்..

‘உத்ராவுக்கு இருந்த அக்கறை இவனுக்கு ஏன் இல்லை..? சிங்கம், புலி, கரடியைப் பத்திச் சொன்னா நான் பயந்து விடுவேன்னு நினைக்காம பயம் காட்டி விட்டுத் தூங்கறானே.. இவனுக்கெல்லாம் மனச்சாட்சியே இல்லையா..?’

அவள் நினைத்துக் கொண்டிருந்த போதே ரயில் நின்றது.. ரவிச்சந்திரனும் கண் விழித்தான்.. தூங்காமலே உட்கார்ந்து

கொண்டிருந்தவளைப் பார்த்து வசீகரமாக புருவங்களை உயர்த்தி விட்டுக் குனிந்து பெட்டியை எடுத்துக் கொண்டான்.. அசையாமல் உட்கார்ந்திருந்தவளைப் பார்த்து.

“என்ன..? இங்கேயே இருந்துடப் போறியா..? கோழிக்கோடில இறங்கப் போறதில்லையா..? அப்புறம் வய நாட்டுக்கு எப்படி வருவ..? ம்ம்ம்..?” என்று அமர்த்தலாக வினவினான்..

“என்னது.. கோழிக்கோடு வந்திருச்சா..?” நந்தினி பதறி எழுந்தாள்..

எழுந்த வேகத்தில் விழப்போனவளை அவன் தாங்கிப் பிடிக்க அவன் கை வளைவில் சரிந்து அவன் கழுத்தை தன் கையால் வளைத்து சினிமாக் கதாநாயகி போல அவன் முகம் பார்த்தாள்.. படபடத்த அவள் இமைகளையும் மருண்டு விழித்த அவளது விழிகளையும் அவன் பருகு பரு கென பார்த்துக் கொண்டிருந்த போது டி.டி.ஆர் பிரசன்னமாகி அவர்கள் இருவரையும் பார்த்து விட்டார்..

“இன்னுமா லவ் சீன் முடியலை..?”

காண்டான அவரது கேள்வியில் தன்னுணர்விற்கு வந்த நந்தினி அவசரமாக விலகி அவளது பைகளை தூக்கிக் கொண்டாள்..

“இது டிரெயினோட ஃபர்ஸ்ட் கிளாஸ் கோச் சார்.. ஃபைவ் ஸ்டார் ஹோட்டலோட ரூமில்ல..” குத்தலாக அறிவுறுத்தினார் டி.டி.ஆர்..

அதற்குச் சண்டைக்குப் போகாமல்.

“ஹா.. ஹா..” என ரசித்துச் சிரித்தான் ரவிச்சந்திரன்.. அதில் நந்தினிக்கு சினம் தலைக்கேறியது..

‘அந்த ஆள் சொல்கிறதுக்கு இவன் ஹி, ஹின்னு பல்லைக் காட்டறானே.. அந்த ஆள் என்னன்னு நினைத்துக்குவார்..? அவர் சொல்கிறதுதான் உண்மைன்னு ஆகி விடாதா..? எதிர்த்துச் சண்டை போட்டால்தானே அது இல்லைன்னு ஆகும்..?’

டி.டி.ஆரை அனல் பார்வை பார்த்தாள் நந்தினி..

‘அங்கே காதல் பார்வை.. இங்கே அனல் பார்வையா..? ம்ஹூம்.. எனக்கு வாய்ச்சது இந்தப் பார்வைதான் போல.. கட்டிக்கிட்ட மகராசியும் அப்படித்தான் பார்க்கிறா.. டிரெயினில

டிராவல் பண்ற யங் லேடியும் அப்படித்தான் பார்த்து வைக்குது.. எங்கே போனாலும் எனக்கு இந்தப் பார்வைதான் எழுதி வைச்சிருக்கோ..'

விதியை நொந்தபடி அவர்கள் வெளியேறுவதற்காக வழி விட்டார் டி.டி.ஆர்.. அவரிடம் பிரியா விடை பெறுபவனைப் போல கை குலுக்கினான் ரவிச்சந்திரன்..

"என்னைச் சொல்லிட்டு சார் மட்டும் இங்கேயே டேரா போடறாரே.. கோழிக்கோடுதான் வந்திருச்சே.. இறங்கற உத்தேசமில்லையா..?"

டி.டி.ஆரை ஜென்ம விரோதி போல முறைத்தபடி ரவிச்சந்திரனிடம் கடுகடுத்தாள் நந்தினி.. அவன் அதற்கும் சிரித்தபடி..

"கோழிக்கோடு ஒண்ணும் நம்மகிட்ட வரலை.. நாமதான் கோழிக்கோடுக்கு வந்திருக்கோம்.." என்று நந்தினியை மட்டம் தட்டினான்..

"ஜோக்..? சிரிப்பு வரலை.." கறாராக அறிவித்து விட்டு நந்தினி நகர்ந்தாள்..

“பை சார்..” டி.டி.ஆருக்கு கையாட்டிவிட்டு நந்தினியை உரசிக் கொண்டு முன்னேறினான் ரவிச்சந்திரன்..

“தள்ளி வாங்க பாஸ்..” சிடுசிடுத்தாள் நந்தினி..

“ஏம்மா.. விடிய விடிய கோச்சுக்குள்ள லவ் சீனை நடத்திட்டு வெளியே போகிறப்ப தள்ளி வாங்கன்னு சொன்னா எப்படிம்மா அவர் தள்ளி வருவார்..” ரவிச்சந்திரனுக்காக பரிந்து பேசி விட்டு நந்தினியின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானார் டி.டி.ஆர்..

“ஹலோ.. கோச்சுக்குள்ள லவ் சீன் நடந்ததை நீங்க கண்டீங்களா..?”

“என் ரெண்டு கண்ணாலேயும் கண்டேனேம்மா.. ஒரு தடவையில்ல.. ரெண்டு தடவைக் கண்டேன்..”

“கண்ணாலே பார்த்ததும் பொய்.. காதாலே கேட்டதும் பொய்..”

“கண்ணாலே பார்த்தது மெய்ம்மா.. இப்பக் காதாலே நீங்க பேசற வியாக்கினத்தைக் கேட்கிறேன் பாருங்க.. இதுதான் பொய்.. காதில பூச்சுத்தப் பார்க்கறிங்களேம்மா..”

“மிஸ்டர் டி.டி.ஆர்.. மைண்ட் யுவர் வெர்ட்ஸ்..”

நந்தினி சண்டைக்கு ஆய்த்ததமாக.. ரவிச்சந்திரன் வெகு அமைதியாக..

“இப்ப என்ன செய்கிறதா உத்தேசம்..? என் பின்னாலே ஃபாலோ பண்ணப் போறியா.. இல்லை டி.டி ஆர்கூட சண்டை போட்டுக்கிட்டு டிரெயினிலே டிராவல் பண்ணப் போறியா..? கமான்.. க்விக்.. சீக்கிரமா ஆன்ஸர் பண்ணு.. நான் டிரெயினை விட்டு இறங்கியாகனும்..” என்றான்..

“இவர் சொன்னதைக் கேட்டிங்களா..?”

“எல்லாம் கேட்டுச்சு.. இப்ப இவருக்கு விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்கிறதை விட டிரெயினை விட்டுக் கீழே குதிக்கிறதுதான் ரொம்பவும் முக்கியம்..”

வேறு வழியில்லாமல் பல்லைக் கடித்தபடி ரவிச்சந்திரனைப் பின் தொடர்ந்தாள் நந்தினி... பிளாட்பாரத்தில் இறங்கிய ரவிச்சந்திரன் அவள் இறங்கக் கை கொடுத்தான்.. அவன் நீட்டிய கையைப் பற்றிக் கொண்டவளை அப்படியே ‘அலேக்..’ பண்ணித் தூக்கி பிளாட்பாரத்தில் நிற்க வைத்தான்..

“சூப்பர்..” டிரெயினிலிருந்து டி.டி.ஆரின் குரல் கேட்டது..

“எல்லாம் உங்களால்தான்..” வெடித்தாள் நந்தினி..

“கூல்..”

தன் இரண்டு கைகளையும் தேய்த்து நந்தினியின் கன்னங்களில் அழுத்திப் பதித்துக் கதகதப்பை உணர்த்தினான் ரவிச்சந்திரன்.. அப்போதுதான் அவள் குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கிறாள் என்ற விவரமே நந்தினிக்குப் புரிந்தது.. ஊசிகளின் முனைகளால் உடலைத் துளைப்பதைப் போல குளிர் அவள் உடலுக்குள் ஊருடுறிவிப் பாய்ந்தது.. பற்கள் கிடுகிடுக்க..

“வ்..வ்..வென்ன.. துப்பிடிக் கிளிர் கடிக்குது..” என்று தமிழ் வார்த்தைகளை உச்சரிக்கத் தரிங்கிணத்தோம் போட்டாள் நந்தினி..

குளிரில் பற்கள் கிடுகிடுத்து.. அவள் சொல்ல வந்த வார்த்தைகள் எழுத்து மாறி வெளி வந்தன..

“கிளிர் கடிக்குதா..?” உரக்கச் சிரித்த ரவிச்சந்திரன்..

“உன்கிட்ட ஸ்வெட்டர், ஷால்ன்னு எதுவுமே இல்லையா..?” என்று விசாரித்தான்..

“கிருக்கு.. துத்ரா.. வீங்கித் தடு த்தா.. தூக்கில கிருக்கு..” கையிலிருந்த லெதர் பையை பிளாட்பாரத்திலிருந்து பெஞ்சில்

வைத்துத் திறக்க முயன்றாள் நந்தினி.. ரயிலில் ஏஸி கோச்சில் பிரயாணித்ததில் அவளுக்கு குளிர் தெரியவில்லை.. ஏஸியின் மிதமான குளிருக்குப் போர்த்திக் கொள்ளப் போர்வைகள் இருந்தன.. ஸ்வெட்டருக்கும் சால்வைக்கும் வேலையில்லாமல் போய் விட்டதில் அவற்றை அவள் வெளியே எடுக்கவில்லை..

லெதர் பேக்கின் அடியில் மடித்து வைக்கப் பட்டிருந்த ஸ்வெட்டரைத் தேடுகிறேன் பேர்வழியென்று மற்ற துணிகளை அவள் வெளியே எடுக்க முயல..

“ம்ப்ச்.. என்ன செய்துகிட்டு இருக்க..” என்று அதட்டி லெதர் பையின் ஜிப்பை இழுத்து மூடினான் ரவிச்சந்திரன்.

“தென்.. பட்டர்.. ஸோல்வை..” கிடுகிடுக்கும் பற்களோடு கண்டமேனிக்கு பேசி வைத்து ரவிச்சந்திரனுக்கு சிரிப்பை மூட்டி வைத்தாள் நந்தினி..

“கொஞ்ச நேரத்துக்கு வாயை மூடிக்கிட்டு பேசாம வர்றியா..?

ஜங்ஷன் வாசலில் என்னோட கார் காத்துக்கிட்டு இருக்கு..

காருக்குள்ள குளிர் தெரியாது.. இப்போதைக்கு இதைப் போர்த்திக்க.. ஸ்வெட்டரைத் தேடறேன்னு மற்ற டிரஸ்ஸை வெளியே பரத்தாதே..”

கையிலிருந்த ஜெர்கின் கோட்டை நந்தினியின் தோளைச் சுற்றிப் போர்த்தி விட்டான் ரவிச்சந்திரன்.. அவனது நெடிய உயரத்திற்கான கோட் நந்தினிக் கு இடுப்பையும் தாண்டி

போர்வை போல போர்த்தியதில் குளிரிலிருந்து தப்பித்த

நந்தினி..

“உங்களுக்கு..?” என்று ஒழுங்காக தமிழ் பேசினாள்..

“எனக்கு இந்தக் குளிர் பழக்கம்தான்.. ஐ கேன் மேனேஜ்.. கம்..”

ரவிச்சந்திரன் அவனது பெட்டியோடு நந்தினியின் பைகளில் ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு விரைவாக முன்னால் நடந்தான்.. மற்ற பைகளை கைக்கு ஒன்றாகப் பிடித்துக் கொண்டு ஏறக்குறைய அவன் பின்னால் ஓடிய நந்தினிக்கு சமீபத்தில் பார்த்த திரைப்படத்தின் காட்சி ஒன்று நினைவுக்கு வந்தது..

# எண்ணியிருந்தது ஈடேற... 2

அந்தத் திரைப்படத்தின் கதாநாயகன் இப்படித்தான்.. பிடிக்காத பட்டிக்காட்டு மனைவியை பின்னால் ஓடிவரவிட்டு முன்னால் சென்று விடுவான்.. அவன் மனைவி.. பாவம்.. பெட்டிகளை தூக்கிக் கொண்டு இப்போது நந்தினி ஓடுவதைப் போலவே கதாநாயகனின் பின்னால் ஓடுவாள்..

அந்த நினைவு வந்ததும் பையை தொபுகடீர் எனப் போட்டு விட்டு நின்ற இடத்திலேயே ஆணியடித்ததைப் போல நின்று விட்டாள் நந்தினி.. அவள் என்ன பிடிக்காத மனைவியா..? அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக பெல்ட் மன்னனாகப் பட்ட பணக்காரன் ஒருவனை உதறி தள்ளிவிட்டு ஓடி வந்திருக்கும் சுயமரியாதை திலகம்..! ரோஷக்காரி..! அவள் ரவிச்சந்திரனைத் தொடுத்துக் கொண்டு பின்னாலே ஓடுவதா..?

நந்தினியிடம் பேசியபடி வேகமாக போய்க் கொண்டிருந்த ரவிச்சந்திரன் அவன் பேச்சுக்கு எதிர் பேச்சு வரவில்லை என்றதும் நந்தினியா இப்படி அமைதியின் திருவுருவமாக ஆகி விட்டாள்..? என்று ஆச்சரியப்பட்டு அந்த மாற்றத்தைப் பாராட்ட நினைத்துத் திரும்பிப் பார்த்தவன் நந்தினி அவனுடன் வரவில்லை என்றதும் நின்று விட்டான்..

‘எங்கே போயிட்டா..? வழி தெரியாம வேற பக்கமா போயிட்டாளோ.. என் பின்னாடிதானே வந்துக்கிட்டு இருந்தா..?’

துழாவிய அவனது பார்வை சற்றுத் தொலைவில் நின்று விட்ட நந்தினியின் மீது படிந்தது..

‘அங்கே ஏன் நிற்கிறா..?’

அவளை வரச் சொல்லி கையசைத்தான்.. பைகளைத் தூக்கிக் கொண்டு அன்னநடை நடந்து திருவாரூர் தேர் போல ஆடி அசைந்து வந்து சேர்ந்தாள் நந்தினி..

“இப்படி நடந்து வந்தா இன்னைக்கு ஈவினிங்கில தான் நாம ஜங்ஷனை விட்டு வெளியே போக முடியும்.. என் பின்னாலேயே வருகிறதுக்கு என்ன..?” கடிந்து கொண்டான் ரவிச்சந்திரன்..

“நீங்க நடந்தீங்களா..? பறந்தீங்க சாரே.. எங்க ஊர்ப்பக்கம் ஓர் பழமொழி உண்டு..”

“பழமொழி சொல்ல இதுவா நேரம்..?”

“இல்லேதான்.. ஆனாலும் சொல்ல ஆரம்பிச்சிட்ட பழமொழியை சொல்லாம விட்டுட்டா பழமொழி கோவிச்சுக்காதா..?”

இமைகொட்டியபடி அப்பாவி போல கேட்டவளை உற்றுப் பார்த்தான்.. அவனது ஜெர்கினை தோளோடு போர்த்திக் கொண்டு தலையைத் தலையை ஆட்டியபடி அவள் பேசிய விதம் அழகானதாக இருந்தது..

“இதை ஜெர்கினைப் போர்த்தாதப்போ சொல்லி யிருக்கனும்.. நீ பழமொழியை கிழமொழியாய் ஆக்கியிருப்ப.. குளிருக்கு பாதுகாப்பா ஜெர்கின்க்குள்ள பதுங்கியிருக்கல்ல.. வாயடிக்கத்தான் செய்வ..”

“மயிலுக்குப் போர்வை கொடுத்த வள்ளல் வாழ்ந்த நாடு எங்க நாடு.. அவரே அதைச் சொல்லிக் காண்பித்ததில்லையாம்.. இங்கே ஒரு ஜெர்கினைக் கொடுத்து ஒரு நிமிஷம்கூட ஆகலை.. இந்தா.. சொல்லிக் காண்பிச்சாச்சு..”

‘வாயாடி..’ அவன் இதழ்களில் புன்சிரிப்பு படர்ந்தது..

அவளது துடுக்குத்தனமான பேச்சைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது.. பேசும்போது விரியும்

அவளது விழிகளும்.. அவளது தலை ஆடும் போதெல்லாம் கூடச் சேர்ந்து ஆடும் ஜிமிக்கிகளும் அவளது வசீகரத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன..

குளிர் நிரம்பிய கோழிக்கோடில்.. விடியலை நெருங்கிக் கொண்டிருக்கும் பின்னிரவில்.. வீட்டிற் குள்ளோ, காருக்குள்ளோ ஒன்றிக் கொள்ளும் நினைவின்றி ஜெர்கின் கிடைத்து விட்ட மிதப்பில் அவனிடம் வாயாடிக் கொண்டிருக்கும் அந்த வசீகரியின் காதைப் பிடித்துத் திருக வேண்டும் போல அவனுக்கு இருந்தது..

“உனக்கென்ன ஜெர்கின் கிடைச்சிருச்சு.. எனக்கு அப்படியா..?”

“என்னவோ இந்த மண்ணின் மைந்தர் நீங்க.. குளிருக்கே உங்களைக் கண்டா குளிர் வரும்ன்னு காலரைத் தூக்கிக்கிட்டிங்க..? அத்தனையும் பீலாவா..?”

“ஊஹும்..?”

அவளை மயங்கடித்து வீழ்த்தும் வசீகர புருவ உயர்த்துதலை அவன் செய்ய.. அவள் கிறுகிறுத்துப் போனாள்.. குளிருக்கு இதமாக அவனைக் கட்டிக் கொள்ள

வேண்டும் போல இருந்ததில் அரண்டு போனவளாக இரண்டடி தள்ளி நின்றாள்.. அவன் அதற்கும்..

“என்னாச்சு..?” என்று புருவங்களை உயர்த்தி அவளைப் பாடாய் படுத்தினான்..

‘இவனைப் பார்த்து முழுதாய் இன்னும் ஒருநாள் கூட ஆகவில்லை.. ஓர் இரவு கதையைப் போல ஓர் இரவுப் பயணத்தில் கூட வந்த ரயில் சிநேகிதம் மட்டும்தான் உள்ளது.. அதற்குள் க்ளீன் போல்டா.. ?’

திடமில்லாத தன் மனதைக் குறித்த வெறுப்பு நந்தினிக்கு வந்தது..

# அத்தியாயம் 35

**ஆ**ள் என்னவோ அட்டகாசமாகத்தான் இருந்து வைக்கிறான்.. ஆள் மயக்கிதான்.. அதற்காக ஓர் இரவுப் பயணத்திற்குள் அவனிடம் மயங்கி வீழ்ந்து விடுவதெல்லாம் அதிகப்படி.. பருவ வயதின் சலனங்களுக்கு தீவிரமான மதிப்பைக் கொடுக்கக் கூடாது..

“உயர.. உயரப் பறந்தாலும் ஊர்குருவி பருந்தாக முடியாது சார்..”

தனக்குத்தானே சொல்லிக் கொள்வதைப் போலச் சொன்னாள் நந்தினி.. இது எதற்கு என்பதைப் போல புருவங்களை சுருக்கினான் ரவிச்சந்திரன்..

“பழமொழி சார்..”

“அது தெரியுது.. அதை நீ எதுக்குச் சொல்கிறேன்னுதான் தெரியலை.. படுத்தி எடுக்காம சீக்கிரமா விளக்கம் சொல்லு..”

“நீங்க பறக்கிற அளவுக்கு என்னால பறக்க முடியாதுங்கிறதுதான் இந்த பழமொழி சொல்கிற நீதி சார்.. ”

“அதாவது நான் பருந்து..? நீ குருவி..?”

“அதே.. அதே.. உங்க ஸ்பீடுக்கு என்னால வர முடியாது.. கொஞ்சம் நிறுத்தி நிதானித்து நடந்து போனா பெட்டர் சார்..”

“யாருக்கு..?”

“எனக்குத்தான்.. வேற யாருக்கு..? உங்களுக்குன்னு சொல்லிட்டு இந்த கேரளத்துக் குளிரில தப்பிப் பிழைக்க முடியுமா..? யாரு நீங்க..”

“ரவிச்சந்திரன்..” என்றவன் அவள் எதிர்பாராத தருணத்தில் அவள் தலைமீது ஓங்கி ஒரு குட்டை வைத்தான்..

“ஸ்ஆ..” எதிர்பாராத குட்டில் தலையைத் தடவிக் கொண்டு அவனை விரோதமாக முறைத்தாள் நந்தினி..

“செம வாய் உனக்கு..” என்றவன்.. அவள் முகத்துக்கு வெகு அருகே குனிந்து அவளைக் கலவரப் படுத்தி விட்டு..

“ஏய்ய்.. குருவி..! சிட்டுக்குருவி..!” என்று பாடிக் காட்டினான்..

“சிட்டுக் குருவியா..? என் பெயர் நந்தினி..”

“எனக்கு நீ சிட்டுக்குருவிதான்.. ஏய் குருவி.. இப்ப வா குருவி..”

கண்சிமிட்டி அவன் அழைத்ததில் கன்னம் சிவந்து போனாள்.. அவனது உற்சாகம் அவளை ஏளனம் செய்தது.. இவனுடனா வீம்பு கொள்கிறாய் என்று கேட்டது.. அவனது உயரத்திலிருந்து இறங்கி அவளுடன் அவன் கேலி பேசிக் கொண்டிருந்ததில் நாணம் கொண்டாள் நந்தினி.. அவனுடைய ஜெர்கினை அவளுக்குப் போர்த்திவிட்டு குளிரைப் பொருட்படுத்தாமல் அவளைப் பார்த்து சிரித்தது.. அவன் நினைத்திருந்தால் அவனுடைய பெட்டியை மட்டும் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்திருக்கலாம்.. அப்படி அவன் செய்யவில்லையே.. ஈகோ பார்க்காமல் மறுகையில் அவளுடைய லெதர் பேகை எடுத்துக் கொண்டு விரைந்தானே.. அந்த விரைவும் அவளுக்காகத் தனது ஜெர்கினைத் தாரை வார்த்து விட்டுக் குளிரில் நடுங்கியதினால்தானே.. உணக்கையாக அவனது ஜெர்கினில் கதகதப்பாக பதுங்கிக் கொண்டு என்னவோ சுயமரியாதை சுந்தரி போல அவள் பிலிம் காட்டுவது தேவைதானா..? மனச்சாட்சி குறுகுறுத்ததில் அவன் குருவி என்று கூப்பிட்டதை லட்சியம் செய்யாமல் அவனைப் பின் தொடர்ந்தாள் நந்தினி.. அவனது விரைவை அவள் சுட்டிக் காட்டியதால் பொறுமையாக அவளுடன் இணைந்து மெதுவாக நடந்தான் ரவிச்சந்திரன்..

நந்தினியின் ஹேண்ட் பேகில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த புத்தகங்களின் மீது அவனது பார்வை படிந்தது..

“நிறையப் படிப்பியோ..?”

“இப்ப எல்லாரும்தான் படிக்கிறாங்க.. பி.ஈ படிப்பெல்லாம் பெரிய படிப்பா..? அதுக்கும் மேலே எம்.பி.ஏ, எம்.ஈன்னு நிறையப் படிப்பு இருக்கு பாஸ்..”

“அறிவுக் களஞ்சியம்..!”

‘இப்ப எதுக்காக இந்தப் பட்டத்தைக் கொடுக்கிறான்..?’ புரியாமல் திருதிருத்தாள் நந்தினி.. அவளது திருதிரு முழியில் சிரித்தவன் மறுபடியும் அவள் தலையில் கொட்டு வைத்தான்..

“சும்மா எல்.கே.ஜி படிக்கற பப்பாவைக் கொட்டறதைப் போலக் கொட்டிக்கிட்ட இருக்காதீங்க பாஸ்.. வலிக்குது..” சுள்ளென எரிந்து விழுந்தாள் நந்தினி..

“சின்னக் கொட்டுக்கே வலிக்குதுன்னு அலறுகிறயே.. பெரிசாக் கொட்டு வைத்தா என்ன செய்வ..?”

“தாங்க மாட்டேன் பாஸ்.. கையா இது..? இரும்பு உலக்கை மாதிரியில்ல படுஸ்ட்ராங்கா இருக்குது.. ஓங்கி அடிச்சா ஒன்றரை டன் வெயிட்டில அடி விழுகும் போல..

பார்க்கிறயா.. பார்க்கிறயான்னு டெஸ்ட பண்ண நான்தான் கிடைச்சேனா..?”

“ஊஹும்..?”

அவன் ஆரம்பிக்கும் போதே அவசரமாக பார்வையைத் திருப்பித் தப்பிப் பிழைத்தாள் நந்தினி.. இல்லையெனில் அவனது வசீகரப் புருவம் உயர்த்துதல் அவளை வசியம் பண்ணித் தொலைத்திருக்கும்..

“இவ்வளவு வாயடிக்கிறயே.. நிறையப் படிப்பியோன்னு கேட்டா அது ரீடிங் ஹேபிட் பத்திக் கேட்கிறதுன்னு எப்படித் தெரியாம போச்சு..? டிகிரி படிக்கிறதைப் பத்தி அடுக்கிற.. உனக்கு அறிவுக் களஞ்சியம்ன்னு பட்டம் கொடுக்காம என்ன செய்யறது..?”

‘ஓ.. இவன் புத்தகம் படிக்கிற பழக்கத்தைப் பத்திக் கேட்டானா..?’

அது தெரியாமல் பட்டப் படிப்பைப் பற்றிப் பதில் சொல்லி விட்டதில் அசடு வழிய அவனைப் பார் த்துச் சிரித்து வைத்தாள் நந்தினி..

சிரித்துத்தான் சமாளிக்க வேண்டும் என்று அவள் நினைக்க.. “சகிக்கலை..” என்று சான்றிதழ் கொடுத்தான் ரவிச்சந்திரன்..

‘எதைச் சொல்கிறான்..? ஒருவேளை என் சிரிப்பைத்தான் சகிக்கலைன்னு சொல்றானோ..? சேச்சே.. அப்படி இருக்காது.. முகத்துக்கு நேரா கமெண்ட் பண்ற ஆள் இவனில்லை.. மேனர்ஸ் தெரிஞ்சவன்.. பக்கா ஜெண்டில்மேன்.. வேற எதையோ சொல்றான்..’ அவனுக்கு ஆதரவாக நினைத்தபடி..

“எதைச் சொல்கிறீங்க..?” என்று கேட்டாள் நந்தினி..

“உன் சிரிப்பைத்தான் சொல்கிறேன்..” பட்டவர்த் தனமாக அவள் மூக்கை உடைத்தான் அவன்..

‘என்ன தைரியம்..’ நகராமல் நின்று விட்டாள் அவள்.

“இப்படி அருவி போல அசடு வழிய சிரிச்சாச் சகிக்குமா..?”

அவன் நியாயம் கேட்டான்.. “அதுக்குன்னு இப்படியா சொல்வீங்க..?”

“நானாவது மனசில இருக்கிறதை வெளிப்படையாச் சொல்றேன்.. நீ என்னடான்னா நான் சிரிக்க ஆரம்பிச்சாலே

முகத்தைத் திருப்பிக்கற.. என் சிரிப்பு சகிக்காமத்தானே முகத்தைத் திருப்பிக்கற..? அதுக்கு நான் உன்னிடம் சண்டைக்கு வந்தேனா..?”

“என்னது..?”

அவளது கோபமெல்லாம் பஞ்சாக பறந்து விட்டது.. அவனது சிரிப்பின் கவர்ச்சியில் மயங்கி விடுவோமோ என்ற பயத்தில் அவள் முகம் திருப்பித் தப்பிப்பதை அவன் வேறு விதத்தில் புரிந்திருந்ததில் வாய் விட்டுச் சிரித்தாள்..

“இப்ப சிரிக்கிற பாரு.. இது சிரிப்பு..” ரசனையுடன் சொன்னான் அவன்..

அவனது கண்களில் ரசிப்பைப் பார்த்தவளுக்கு என்னவோ போல் ஆனது.. அந்த குளிர் நிரம்பிய பின்னிரவுப் பொழுதில் அவனது ரசிக்கும் பார்வையைத் தொடர விடுவது பாதுகாப்பான செயலல்ல என்று அவளது மனதிலிருந்த பட்ஷி கூவியதில் அவள் பேச்சை மாற்றினாள்..

“நான் நிறையப் புத்தகம் படிப்பேன்னு எப்படிக் கண்டு பிடிச்சீங்க..?” ஆச்சரியத்துடன் கேட்டாள்..

அவன் அவளைப் பார்த்த பார்வை ‘அறிவுக் களஞ்சியம்..’ என்றது..

‘மறுபடியும் நோஸ் கட்டா..?’ நொந்து போனாள் நந்தினி..

“இப்ப என்னவாம்..?” ஆற்றாமையுடன் கேட்டாள்..

“உன் ஹேண்ட் பேக்கப் பாரு.. ஜிப்பைப் போட முடியாம புத்தகங்கள் பிதுங்கிக்கிட்டு எட்டிப் பார்க்குது.. பெல்ட் மன்னனுக்குப் பயந்து ஓடி வர்றப்பவும் இவ்வளவு புத்தகங்களை திணிச்சுக்கிட்டு ஓடி வர்றேன்னா நீ புத்தகப் பிரியையன்னுதானே அர்த்தம்..?”

அவன் அவளை புத்தகப் பிரியை என்று அழைத்ததில் அவளுக்கு மெத்த சந்தோஷம்தான்.. அதைச் சொல்ல வரும்போது பெல்ட் மன்னனையும் சேர்த்துச் சொன்னதில் துளிகூட சந்தோஷமில்லை..

‘கோழிக்கோடு வந்தாலும் பெல்ட் மன்னனைப் பத்தின பேச்சு பின்னாடியே வந்து தொலைச்சா நான் ஓடி ஒளியறதில என்னதான் அர்த்தமிருக்கு..?’

உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு வந்தவளின் கோபம் அவனைப் பாதிக்கவில்லை.. சிறு குழந்தையின் கோபத்தைப் போல அவள் கோபத்தை வேடிக்கை பார்த்தான்..

“நீ கோழிக்கோடுக்கு எதுக்காக வந்தியோ.. எனக்குத் தெரியாது..”

அவன் எதைச் சொல்ல வருகிறான் என்று காது கொடுத்துக் கேட்காமல் உம்மணாம் மூஞ்சித் தனத்தைக் கைவிட்டு..

“தெரியாமலா வேலை கொடுத்திருக்கீங்க..? பயமுறுத்தாதீங்க பாஸ்.. நான் உங்களிடம் வேலை பார்க்கிறதுக்காக கோழிக்கோடுக்கு வந்திருக்கேன்.. எப்பவும் இதை நினைப்பில வைத்துக்கங்க.. மறந்து போய் என்னை கைவிட்டுராதீங்க..?” என்று நீட்டி முழக்கினாள்..

“என்ன சொன்ன..? என்ன சொன்ன..? திரும்பச் சொல்லு..” கண்கள் பளபளக்க அவன் கேட்டான்..

“என்னை கை விட்டுராதீங்கன்னு சொன்னேன்.. அதுக்கென்ன..?”

புரியாமல் அவள் கேட்டதில் பகபகவென சிரித்து வைத்தான்..

“பயமுறுத்தாதீங்க பாஸ்..” என்று அவள் வேண்டிக் கேட்டுக் கொண்ட பின்புதான் அவனது சிரிப்பு நின்றது.

“உன்னைக் கைவிடவே மாட்டேன்.. போதுமா..?”

சிரிப்புத் தவழும் கண்களுடன் உறுதிமொழி போல அவன் சொன்ன பின்புதான் அவள் என்ன சொல்லி வைத்திருக்கிறாள் என்ற விவரமே அவளுக்குப் புரிந்தது..

‘இப்படியா சொல்லி வைப்பேன்..’

அவளால் அவன் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை.. வெட்கிச் சிவந்த அவள் முகத்தைப் பார்க்க அவனுக்கு பிடித்திருந்தது..

“நீ கோழிக்கோடுக்கு எதுக்கு வந்தியோ, எனக்குத் தெரியாதுன்னு நான் சொன்னது வேற ஒன்றைச் சொல்வதற்காக..”

நந்தினிக்கு வாயைத் திறந்து பேசுவதற்கு பயமாக இருந்தது.. அவள் பாட்டுக்கு யோசிக்காமல் வாயில் வந்ததை வைத்துத் தள்ளி விடுகிறாள்.. அது பல்வேறு அர்த்தங்களில்

பரிமளித்து அவன் கேலி பேச தோதாக மாறிப் போய்விடுகிறது..

‘எதுக்கு வம்பு..? இவன் என்னத்தையோ பேசித் தொலைக்கட்டும்.. ஊம் கொட்டிட்டுப் போவோம்..’ என்று வாய்க்குத் தாழ்ப்பாள் போட்டு மௌனம் சாதித்தாள்..

அவள் அமைதியின் திலகமாயிருந்தால்தான் அவனுக்குப் பொறுக்காதே.. அவள் வாயைப் பிடுங்கிப் பேச வைத்து கிண்டல் பண்ணாவிட்டால் அவன் எப்படி ரவிச்சந்திரனாவான்..

“என்னன்னு கேட்க மாட்டியா..?” என்றான்..

‘கேட்டுத் தொலைக்கிறேன்..’ மனதுக்குள் வெகுண்ட நந்தினி ஊரில் உள்ள கடவுள்களையெல்லாம் மனதுக்குள் அழைத்து..

‘இவன் கேலி செய்யறதைப் போல நான் எதையும் பேசித் தொலைச்சிறக் கூடாது சாமி..’ என்று வேண்டுதல் வைத்துவிட்டு சர்வ ஜாக்கிரதையாக..

“என்ன..?” என்ற மூன்றெழுத்தை உச்சரித்தாள்..

“பெரும்பாலான மலையாள எழுத்தாளர்கள் கோழிக்கோடைச் சேர்ந்தவங்கதான்.. இதைச் சொல்லத்தான் ஆரம்பித்தேன்.. நீ டிராக்கையே மாத்திட்ட.. ஹா.. ஹா..”

அவனது கேலிச் சிரிப்பைப் புறக்கணித்து அவன் சொன்ன விவரத்தை செவி மடுத்த நந்தினி..

“நிஜமாவா சொல்கிறீங்க..?” என்று விழிகள் விளீய ஆர்வத்துடன் கேட்டாள்..

“நிஜம்தான்.. மலையாளத்தில நிறைய இண்டெலெக்சுவல் எழுத்தாளர்கள் இருக்காங்க..”

“எழுத்தாளர்கள்ன்னாலே இண்டொலக்சுவல்தான். மூளையிலே களிமண் இருக்கிறவங்களாலே எழுத முடியுமா என்ன..?”

வேண்டுமென்றே மட்டம் தட்டினாள் நந்தினி.. பின்னே.. எப்போதும் அவன்தான் அவளை மட்டம் தட்டிக் கொண்டிருக்க வேண்டுமா..? வாய்ப்புக் கிடைத்தால் அவளும் போட்டுத் தாக்கலாமே..

“அடேங்கப்பா.. பெரிய கண்டு பிடிப்புத்தான் போ..”

இலகுவாக அவன் சிரித்ததில் அவள் உதட்டைக் கடித்தாள்.. அது என்னவோ.. அவளை அவன் மட்டம் தட்டினால் அவள் ரோஷப் பட்டுப் போகிறாள்.. அதுவே அவனை அவள் மட்டம் தட்டினால் எளிதாக எடுத்துக் கொள்கிறான்.. எப்படி..?

‘இவன் தொட்டாச் சிணுங்கின்னு என்னைச் சொல்கிறது சரிதான் போல..’ யோசித்தபடி நடந்தாள்..

“கேரளத்தை உசத்தியாப் பேசனும்னு நான் இதைச் சொல்லலை.. ஜனரஞ்சகமான எழுத்துக்களைப் போல இல்லாம ஆழமான உணர்வுகளைக் கொண்ட இலக்கியத்தரமான படைப்புக்கள் கேரளத்தில் அதிகம்.. அது சினிமாவா இருந்தாலும் சரி.. புத்தகமா இருந்தாலும் சரி.. கேரளத்துப் படைப்பாளிகள் கதை சொல்கிற விதமே தனியா இருக்கும்..”

“இருக்கலாம்..”

அவன் சொல்வதை ஒப்புக் கொள்ளும் மனமில்லாமல் முணுமுணுத்தாள் நந்தினி.. தமிழில் பெரிய படைப்பாளிகள் இல்லையா என்று அவள் மனம் வாதிட்டது.. அதைச் சொல்லவும் செய்தாள்..

“தமிழிலும் நீங்க சொல்கிறதைப் போல ஆழ்ந்த உணர்வுகளைக் கொண்ட படைப்புக்களைத் தரும் படைப்பாளிகள் நிறையப் பேர் இருக்காங்க.. ஜெயமோகன், வாஸந்தி, ராஜம் கிருஷ்ணன்னு சொல்லிக்கிட்டே போகலாம்.. சினிமாவிலும் அப்படித்தான்..”

“விட்டுக் கொடுக்க மாட்டியே..”

“எதுக்காக விட்டுக் கொடுக்கனும்..?”

“மலையாள எழுத்தாளர்கள் எழுதின புத்தகங்களைப் படிச்சிருக்கியா..?”

“ம்ம்ம்.. படிச்சிருக்கேன்.. நல்ல புத்தகங்களை விட்டு வைக்கறதில்லை.. தேடிப் படிப்பேன்.. வைக்கம் முகமது பஷீர் எழுதின கதைகளை படிச்சிருக்கேன்.. இன்னும் கொஞ்ச பேரோட புத்தகங்கள்.. பெயர் சட்டுன்னு நினைவுக்கு வர மாட்டேங்குது.. கதை அருமையா இருக்கும்.. படிச்சிருக்கேன்.. சினிமாவும் அது போலதான்.. ஸ்லோவாப் போகிறதைப் போலத் தோணினாலும் நல்லா இருக்கும்..”

இப்படியொரு குளிர் துளைக்கும் பின்னிரவில் முதல்நாள் மாலையில்தான் அறிமுகமாயிருக்கும் அன்னிய ஆடவனுடன்

இலக்கிய விவாதம் நடத்துவாள் என்று அவள் நினைத்துப் பார்த்திருப்பாளா..?

கனவு போல இருந்தது.. தஞ்சையில் உள்ள அவள் வீட்டைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.. திரும்பவும் எப்போது வீடு திரும்புவோம் என்று ஏக்கமாக இருந்தது..

அம்மாவின் மடியும், அப்பாவின் கண்டிப்புக் கலந்த கவனிப்பும்.. தம்பியின் உரிமையான சண்டையும் எப்போது அவளுக்கு கிட்டும்..?

அழுக வேண்டும் போல இருந்ததில் அவளையு மறியாமல் கன்னங்களில் கரகரவென கண்ணீர் வழிந்தது.. அவளை உற்றுப் பார்த்த ரவிச்சந்திரன் இரக்கத்துடன்..

“வீட்டு ஞாபகம் வந்திருச்சா..?” என்று இதமாக வினவினான்..

“ம்ம்ம்..” குழந்தையாக அவள் தலையை ஆட்டினாள்.. பரிவுடன் அவளது விரல்களைத் தன் விரல்களுக்குள் அடக்கி இறுக்கிக் கொண்டான்.. நந்தினியின் மனம் ததும்பியது..

# அத்தியாயம் 36

அவனது விரல்களின் அழுத்தத்தில் அவள் மனதில் கவிந்திருந்த தனிமை பறந்தோடி விட்டதை உணர்ந்தாள் நந்தினி.. அவன் அவளுக்குச் சொந்த பந்தமில்லை.. உனக்காக நானிருக்கிறேன் என்று உருகும் காதலனும் இல்லை.. முந்தின தினத்தின் மாலைவரை அவன் யாரோ.. அவள் யாரோ..

இருந்தும் அவளது துயர் கண்டு அவன் காட்டிய பரிவில் அவள் மனதில் ஒட்டிக் கொண்டிருந்த கிலேசங்கள் அகன்றன.. விரல் பிடித்துப் பின் தொடரும் சிறு குழந்தையாக அவனைப் பின் தொடர்ந்தாள்.. இருளை விரட்டும் வெளிச்சத்துடன் ஒளிர்ந்த விளக்குகள் கோழிக்கோடில் காலடி பதித்திருக்கும் அவளை வரவேற்பதைப் போல அவளுக்குத் தோன்றி வைத்தது..

‘எதை சாதிக்க வந்திருக்கேன்னு வரவேற்பாம்..?’ மனது சோர்ந்தது.. முதல் தினத்தில் இருந்த தைரியம் காணாமல் போய்விட்டதைப் போல இருந்தது..

“அட.. உன்னால பேசாமக்கூட இருக்க முடியுமா..?” ரவிச்சந்திரனின் கேலியான குரல் அவளை உசுப்பியது..

“என்ன செய்கிறது.. உங்க ஊரோட கிளைமேட் சில்லுன்னு நடுங்க வைச்சு பேச்சைத் துரத்திருதே..” என்றாள்..

ரவிச்சந்திரனுக்காக காத்திருந்த காரைக் கண்டதும் இரண்டடி பின்னால் நகர்ந்து விட்டாள்.. அதுதான் என் கார் என்று அவன் சுட்டிக் காட்டிய போது அதிகபட்சமாக பி.எம்.டபிள்யூ, ஆடி, பென்ஸ் போன்ற கார்களில் ஒன்றாக இருக்குமென்றுதான் பார்த்து வைத்தாள்.. அங்கே அரசிளங்குமரியைப் போல நின்று கொண்டிருந்ததோ கப்பல் போன்ற வெளிநாட்டுக் கார்..

நந்தினியின் வீட்டில் ஒன்றுக்கு மூன்றாக கார்கள் உண்டு.. மேகநாதனும் வெண்ணிலாவும் மட்டும் செல்வதற்கு பி.எம்.டபிள்யூ.. நந்தகுமாரின் நகர்வலத்திற்கு ஹோண்டா சிட்டி.. குடும்பத்துடன் பயணிக்க பார்ச்சுனர் என்று கோடியைத் தாண்டிய ரூபாய்களுக்கு கார்களை வாங்கி வைத்திருக்கும் குடும்பத்தில் பிறந்தவள்தான் அவள்.. சென்னையில் பொறியியல் படிப்பைப் படித்தவள்.. தோழிகளுடன் ஊர்

சுற்றும் போது பல வகையான கார்களை வேடிக்கைப் பார்த்துப் பழக்கப் பட்டவள்..

அவளை மிரட்டியது ரவிச்சந்திரனின் கார்.. அதன் தோற்றப் பொலிவிலும், பிரம்மாண்டத்திலும் விழி விரித்தவள் அதன் விலை என்னவாக இருக்கும் என்று யோசித்தாள்..

‘நிச்சயமா கோடிகளில்தான் இருக்கும்..’

வெந்நிறச் சீருடையும், அதே வெண்மையில் தொப்பியுமாக இருந்த டிரைவர் ரவிச்சந்திரனுக்காக கார்க் கதவை திறந்து விட்டான்.. கம்பீரமாக திரும்பிய ரவிச்சந்திரன் நந்தினிக்காக பின்சீட்டின் கதவைத் திறந்து விட்டதில் டிரைவர் நந்தினியை ஆச்சரியமாகப் பார்த்தான்..

‘யார் இந்த மகாராணி..?’ என்ற அவன் பார்வையில்..

‘போய்யா.. நீ வேற.. நானும் உன்னைப் போல இவனிடம் வேலை பார்க்க வந்தவள்தான்.. நீ டிரைவர்.. நான் மேனேஜர்.. அவ்வளவுதான் வித்தியாசம்..’ என்ற அலுப்புடன் பார்த்தபடி கையில் இருந்த பையை பின்சீட்டில் போட்டுவிட்டு..

“தேங்க்ஸ்..” என்று ரவிச்சந்திரனிடம் சொல்லியபடி பின்சீட்டில் ஏறிக் கொண்டாள்..

தன் கையிலிருந்த நந்தினியின் லெதர் பேக்கையும் பெட்டியையும் டிரைவரிடம் நீட்டினான் ரவிச்சந்திரன்.. அவசரமாக அவற்றைத் தாங்கிப் பிடித்தாலும் திறந்திருந்த கார் கதவை ஒரு கையால் பிடித்தபடி தனது எஜமான விசுவாசத்தை உணர்த்தினான் டிரைவர்.. அதை கண்டு கொள்ளாமல் காரில் ஏறித் தோரணையாக அமர்ந்தான் ரவிச்சந்திரன்.. கார்க் கதவிற்கு வலிக்குமோ என்ற வகையில் மென்மையாக மூடிய டிரைவர் டிக்கியில் பேக்கையும், பெட்டியையும் வைக்க ஓடினான்..

‘அடிமைகள் உருவாவதில்லை.. உருவாக்கப் படுகிறார்கள்..’ நந்தினி நினைத்துக் கொண்டாள்..

இதுபோன்ற பொதுவுடமைத் தத்துவங்களை இதற்கு முன்னால் அவள் நினைத்தும் பார்த்ததில்லை என்பதை அவளது அறிவு அறிவுறுத்தியது.. அவள் முதலாளித்துவ சிந்தனைகளைக் கொண்டவள் என்பதையும் மறக்காமல் நினைவுறுத்தியது..

‘என்னத்தை செய்யறது..? நேத்து வரை முதலாளியா இருந்தவ இன்னைக்குத் தொழிலாளியா மாறிப் போயிட்டேனே..’

நந்தினி சீட்டில் வசதியாக சாய்ந்து கொண்டாள்.. காரின் இதமான வெப்பத்தில் இனி ஜெர்கினின் துணை தேவைப்படாது என்று தோன்றியது.. போர்த்திக் கொண்டிருந்த ஜெர்கினை அகற்றி ரவிச்சந்திரனிடம் நீட்டினாள்..

“வைத்துக்க.. ஹோட்டல் வாசலில் இறங்கறப்ப தேவைப்படும்..” என்றான் அவன்..

“ஹோட்டலா..? நாம வயநாட்டுக்குப் போகலையா..?” மிரண்டு போனாள் நந்தினி.. ரவிச்சந்திரன் திரும்பிப் பார்த்தான்.. உறுத்துப் பார்த்த அவன் பார்வையில் கோபம் தெறித்துக் கொண்டிருந்தது.. நந்தினி அதைப் பற்றிக் கவலைப் படவில்லை..

“உத்ரா வயநாட்டு எஸ்டேட்டில் வேலை பார்க்கப் போகனும்னுதான் சொன்னா.. இடையில் கோழிக்கோடில தங்கனும்னு சொல்லவேயில்லையே..”

“லுக்.. நான் உன் பாஸ்.. என்னோட புராப்பர்டிஸ்ல வயநாட்டில இருக்கிற சேரளம் எஸ்டேட்டும் ஒன்று.. தட்ஸ் ஆல்.. மற்றபடி அது ஒன்று மட்டும் என்னோட பிஸினெஸ்ஸுன்னு நினைத்துக்காதே.. கோழிக்கோடு, திருவனந்தபுரம், மும்பை, டெல்லி, சென்னை, பெங்களூர்,

ஹைதராபாத்துன்னு எல்லா ஊர்களிலும் என்னோட ஸ்டார் ஹோட்டல்ஸ் இருக்கு.. எதையும் செக் பண்ணன்னு தனித்தனியா நேரம் ஒதுக்கிப் போக முடியாது.. என்னோட ஒவ்வொரு செகண்டும் எனக்கு இம்பார்டண்ட்.. ஸோ, எங்கெங்கே நான் இருக்கிறேனோ அங்கங்கே இருக்கிற பிஸினெஸ்களை ஓர்முறை பார்த்து விடுவேன்.. நேரமும் அலைச்சலும் மிச்சம்.. நீ என்னிடம் தான் வேலை பார்க்க வந்திருக்கிற.. சேரளம் எஸ்டேட்டில மட்டும் வேலை பார்க்க வரலை.. அண்டர்ஸ்டாண்ட்..?”

சிவந்த விழிகளுடன் கண்டிப்பும் கறாருமாகப் பேசியவனின் தோரணையில் பயந்து போனாள் நந்தினி.. சற்று முன்பு அவளது கண்ணீர் கண்டு பரிவுடன் விரல் பிடித்து ஆறுதல் சொன்னவனா இவன்..?

இவன் முற்றிலும் வேறுபட்டவனாக இருந்தான்.. முதலாளித்துவத் தோரணையோடு அதட்டினான்.. நீ என்னிடம் வேலை பார்ப்பவள் என்ற எல்லைக் கோட்டைக் கிழித்து அவளைத் தள்ளி நிறுத்தினான்..

“ஆனா.. உத்ரா..” நந்தினி விடாமல் வாதாடினாள்..

“உன்னோட பாஸ் நான்தான்.. உத்ரா இல்லை.. மைண்ட் இட்.. உன்னோட வேலை என்னோட எல்லா பிஸினெஸ்ஸுக்கும் பெர்சனல் மேனேஜரா இருக்கிறது.. தட் மீன்ஸ், யு ஆர் மை பெர்சனல் செகரட்டரி..”

“என்னது.. பெர்சனல் செக்கரட்டரியா..?”

“நீ பெர்சனல் மேனேஜர்ன்னு வெளியே சொல்லிக்கலாம்..” அமர்த்தலாகச் சொல்லி விட்டு அத்துடன் பேச்சு வார்த்தை முடிந்தது என்பதைப் போல அவன் திரும்ப யத்தனித்தான்..

‘என்னே உன் தாராள மனது..’ நந்தினியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“இதையெல்லாம் டிரெயினிலேயே ஏன் சொல்லலை..?”

“எதுக்கு..? நீ டிரெயினை விட்டுக் குதிச்சுக் கலாட்டா பண்றதுக்கா..? இப்பச் சொல்கிறேன்.. கேட்டுக்க.. உன் வேலை பெர்சனல் செக்கரட்டரிதான்.. நான் எங்கே விசிட் போனாலும் என் நிழலா நீ ஃபாலோ பண்ணியாகனும்.. அது இந்தியாவுக்குள்ள இருக்கிற சிட்டிகளாகவும் இருக்கலாம்.. நான் எப்ப எங்கே போக வேண்டியிருக்கும்ன்னு எனக்கே

தெரியாது.. நான் கிளம்புன்னு சொன்ன செகண்டில நீ கிளம்பியாகனும்..”

“நான் திரும்பிப் போயாகனும்..”

“எங்கே..?”

“சென்னைக்கு..”

“பொறுப்பில்லாம ஓடி வந்தவங்கிறதை புரூவ் பண்ற.. இது உன் வீடில்லை.. பிடிக்கலைன்னா ஓடிப் போக.. ரவிச்சந்திரனோட கோட்டை.. என் அனுமதியில்லாம நீ எங்கேயும் போக முடியாது..”

“மீறிப் போனா..?”

“என் பிஸினெஸ் ரகசியங்களைக் களவாடி எதிராளிகள்கிட்டக் கொடுக்க ஓடிப் போயிட்டேன்னு போலிஸில் கம்ப்ளெயிண்ட் கொடுப்பேன்.. தனிப்பட்ட முறையிலும் தேடிப் பிடிப்பேன்.. எனக்குன்னு ஒரு படையே இருக்கு.. என்னைப் பத்தி நீ தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு... போகப்போக தெரிஞ்சுக்குவ.. இப்போதைக்கு அடங்கி உட்காரு.. காரோட கண்ட்ரோல் என் கையில் இருக்கு.. உன்

பக்கமா லாக் ஆகியிருக்கிற டோரை திறக்கனும்னு நீ நினைச்சாலும் திறக்கவே முடியாது..”

“ஆஹா.. காரைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாது பாருங்க..”

“என்னைப் பத்தித்தான் உனக்கு எதுவுமே தெரியாது..”

“ஏன் தெரியாது..? கோடிஸ்வரர்.. ராஜ குடும்பம்.. நீங்க கேரளத்து ராஜாவாவே இருங்க.. ஐ டோன்ட் கேர்.. உங்களிடம் வேலை பார்க்க வந்துட்டதற்காக என்னை இளப்பமா நினைத்து விட வேண்டாம்.. எங்கப்பாவும் கோடிஸ்வரர்தான்..”

“அப்புறம் எதுக்காக என்கிட்ட வேலை பார்க்க ஓடி வந்து என் டயத்தை வேஸ்ட் பண்ற..? உன் வீட்டிலேயே இருந்திருக்க வேண்டியதுதானே..?”

“தெரியாம வந்துட்டேன் சார்..”

“வந்தது வந்ததுதான்.. திரும்பிப் போக முடியாது..”

‘இவன் என்ன இப்படிச் சொல்றான்..’

நந்தினியை பயம் பிடித்துக் கொண்டது.. மேற்கொண்டு வாதாட முடியாமல் டிரைவர் வந்து காரில் ஏறிவிட்டான்..

அதற்கு மேல் பேச ஏதுமில்லை என்பதைப் போல இறுக்கமாகி விட்டான் ரவிச்சந்திரன்.. ஜங்க்ஷன் வாசலில் இருந்த நியான் விளக்கின் ஒளியில் அவன் முகத்தைப் பார்த்த நந்தினிக்குத் திகிலாக இருந்தது.. கல் போன்ற கடினம் அவன் முகத்தில் விரவியிருந்தது..

‘முகம் முழுக்க மென்மையுடன் கிடாரை மீட்டி நான் பாடும் பாடல் நலமாக வேண்டும் என்று பாடிய ரவிச்சந்திரனா இவன்..?’

இல்லை.. இவன் வேறு ஒருவன் என்று அவள் மனம் கூவியது..

‘எங்கே.. நானென்று.. தேடட்டும் என்னை..’

இரவினில், ரயில் பயணத்தில் அவன் பாடிய பாடலின் வரிகள் அவள் காதில் எதிரொலித்தன..

‘இந்த லட்சணத்தில் மூஞ்சியை வைத்திருந்தா எவ இவன் முகத்தைப் பார்ப்பா..?’

நிச்சயமாக அவள் அவன் முகத்தைப் பார்க்கப் போவதில்லையென்ற தீர்மானத்தை மனதில் நிறை வேற்றியபடி அவன் முகத்தைப் பார்க்காமல் ஜன்னல் வழி

தெரிந்த கோழிக்கோடின் அழகைப் பார்க்க ஆரம்பித்தாள் நந்தினி..

மூடு பனிக்குள் மூழ்கியதைப் போலப் பனியின் பொழிவில் மூழ்கியிருந்தது கோழிக்கோடு..! மூடுபனி போன்ற பயம் நந்தினியின் மனதில் கவிந்து மூழ்கடித்தது.. ‘சேரளம்’ எனப்படும் வயநாட்டின் எஸ்டேட்டில் வேலை பார்க்கவென்று கிளம்பி வந்தவளை எங்கே நானோ அங்கே நீயும் என்னோடு என்று கட்டளையிட்டு கோழிக்கோடில் தேங்க வைக்கிறான் ஒருவன்.. கேட்டால் நான் உன் முதலாளி என்று சட்டம் பேசுகிறான்.. அவன் முதலாளி என்பதற்காக அவன் சொல்கின்ற அனைத்தையும் அவள் கேட்டாக வேண்டுமா..?

‘அந்த ‘அனைத்திலும்..’ என்ற வார்த்தையில் எது எது அடங்கும்..?’ நந்தினியின் மனம் நடுங்கியது..

தவறாக எதையும் சொல்லி விட மாட்டான் என்று மனதுக்குள் தைரியத்தை வளர்த்துக் கொள்ள முயன்றாள்.. இவன் வினித்திற்குத் தெரிந்தவன்.. அவனுக்குப் பதில் சொல்ல கடமைப் பட்டவன்..

பாதுகாப்பில்லாத இடத்தில் வேலை செய்ய உத்ராவும், வினித்தும் ஒருபோதும் நந்தினியை அனுப்பி வைத்திருக்க

மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் சுடர் நந்தினியின் மனதை ஆக்ரமித்திருந்த பயத்தின் இருளை விலக்க முயன்றது.. கேரளத்துத் தனித்தன்மையுடன் தெரிந்த வீடுகளைப் பார்த்தாள்.. பெரும்பாலான மலையாள எழுத்தாளர்கள் கோழிக்கோடைச் சேர்ந்தவர்கள்தான் என்று சற்று முன்பு ரவிச்சந்திரன் கூறியது நினைவுக்கு வந்தது..

‘அப்படியா..?’ என்ற கேள்வியோடு நியான் விளக்குகளில் குளித்துக் கொண்டிருந்த கோழிக்கோடை ஆழ்ந்து கவனித்தாள்..

அழகு கொஞ்சி விளையாடியது.. இத்தனை அழகான இயற்கை ததும்பும் ஊரில் வசிப்பவர்களுக்கு கற்பனைக் கடல் பொங்குவதில் ஆச்சரியமேதும் இல்லை என்று நினைத்துக் கொண்டாள்..

‘யாழ்..!’

ஆங்கிலத்திலும்.. மலையாளத்திலும்.. தங்க நிற எழுத்துக்களில் மிளிர்ந்த நட்சத்திர ஹோட்டலின் வளாகத்திற்குள் கார் நுழைந்தது.. ஹோட்டலில் இருந்து வெளிப்பட்ட பணியாள்கள் தடதடவென வரிசையாக நீண்டிருந்த வழவழப்பான படிக்கட்டுகளில் இறங்கி ஓடி வந்து

டிரைவரை முந்திக் கொண்டுக் கார்க் கதவை திறந்து விட்டார்கள்..

என்னதான் பணக்கார வீட்டில் பிறந்திருந்தாலும் இதுபோன்ற தடபுடல்கள் நந்தினிக்குப் புதிது.. தஞ்சையை ஒட்டிய கிராமத்தில் பிறந்து வளர்ந்த மேகநாதன் பணக்காரத்தனத்துடன் கூடிய இயல்புடன் வெகு யதார்த்தமாக இருப்பார்.. காரின் கதவை டிரைவர்தான் திறந்து விடவேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார். .

“காரை நிறுத்தி.. உன் பக்கமா கதவைத் திறந்து காரைச் சுற்றி ஓடி வந்து எனக்குக் கதவைத் திறந்து விடுன்னு சொன்னேனா..? காரைக் கவனி.. எனக்குக் கதவைத் திறந்து விடனும்ங்கிற பதட்டத்திலே எதிலயாவது இடிச்சு வைச்சிராதே..” என்று டிரைவரை அதட்டுவார்..

“டிரைவர் கார்க் கதவைத் திறந்து விடனும்னு உள்ளேயே உட்கார்ந்துக்கிட்டு இருந்தா பார்க்க வேண்டிய வேலையைப் பார்க்க நேரமாகிராதா..?” என்று மற்றவர்களை அதட்டுவார்.. வீட்டிலும் அப்படித்தான்.. வேலையாள்களை எதிர்பார்க்காமல் அவரவருக்குத் தேவையானதை அவரவரே கவனித்துக் கொள்வார்கள்.. மேகநாதனும், வெண்ணிலாவும்

அப்படித்தான் பழகியிருந்தார்கள்.. பிள்ளைகளுக்கும் அதையே பழக்கி விட்டிருந்தார்கள்..

அந்தச் சூழலில் பிறந்து வளர்ந்தவள் அங்கே நடந்த தடபுடலில் பயந்து விட்டாள்.. வெகு தோரணையாக அரச கம்பீரத்துடன் ஓர் அரசனைப் போல இறங்கிய ரவிச்சந்திரன் புதியவனாகத் தெரிந்தான்.. அப்போதுதான் அவனைப் பார்ப்பதைப் போல நந்தினியின் உள்ளம் மருண்டது.. பயந்து நடுங்கியது..

அவள் காரை விட்டு இறங்கி விட்டாளா இல்லையா என்று கூடத் திரும்பிப் பார்க்காமல் மடமடவெனப் படியேறி அவன் போய் விட்டான்.. விக்கித்துப் போன நந்தினி காருக்குள்ளேயே உட்கார்ந்து விட்டாள்.. அவளுக்காக கார்க் கதவைத் திறந்து விட்ட டிரைவர் கருணையுடன்..

“இறங்குங்கம்மா..” என்று சொல்லவும் வேறு வழியின்றி இறங்கினாள்.. அவள் பக்கத்திலிருந்த பைகளை அவள் எடுத்துக் கொள்ளப் போன போது..

“நீங்க போங்கம்மா.. லக்கேஜையெல்லாம் இவங்க கொண்டு வருவாங்க..” என்று ஹோட்டலின் பணியாள்கள் பக்கம் கை காட்டினான் டிரைவர்..

உயர்ந்த ரகத் துணியால் தைக்கப்பட்ட நேர்த்தியான சீருடையுடன் இருந்த பணியாளர்கள் மரியாதையுடன் வழி விட்டார்கள்.. நந்தினி படிகளில் தளர்வுடன் ஏற ஆரம்பித்தாள்.. காரிலும் கார் டிக்கியிலும் இருந்த பெட்டிகளையும் பைகளையும் எடுத்துக் கொண்ட பணியாளர்கள் இடைவெளி விட்டு அவளைப் பின் தொடர்ந்தார்கள்.. ரிசப்சஷனில் இருந்த இளைஞன் ஐ.டி கம்பெனியில் வேலை பார்ப்பவனைப் போல டை கட்டி படு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான்.. ரவிச்சந்திரன் தென்படுகிறானா என்று பார்வையால் துழாவினாள் நந்தினி.. அவனது நிழல்கூடத் தெரியவில்லை..

‘இவ்வளவுதான் இவன் அக்கறையா..?’

அவளுக்கு தேம்பி அழ வேண்டும் போல இருந்தது.. கோழிக்கோடின் நட்சத்திர ஹோட்டலின் ரிசப்சஷனில் துணைக்கு எவருமின்றி தன்னந்தனியளாக அவள் நின்று கொண்டிருக்கும் நிராதரவான நிலைமை அவளை அச்சுறுத்தியது..

“நீங்க உங்க ரூமுக்குப் போகலாம் மேம்..” டைகட்டிய இளைஞன் பணிவுடன் சொன்னான்..

‘எந்த ரூமுக்கு..?’ மிரண்டாள் நந்தினி..

ரவிச்சந்திரனுக்கும் அவளுக்கும் ஒரே அறை பெறப்பட்டிருக்கிறதா..? அவன் முன்னே செல்ல அவள் பின்னே சொல்லப் போகிறாளா..? அவளுக்காக அவன் அறையில் காத்துக் கொண்டிருக்கிறானா..?

திரும்பி ஓடி விடலாமா என்று யோசித்தாள் நந்தினி. . கிங்காங் போல நின்று கொண்டிருந்த பணியாளர்களின் தோற்றம் அவளை அச்சுறுத்தியது.. அவள் ஓடினால் அவர்கள் என்ன செய்வார்கள்..? துரத்திப் பிடிப்பார்களா..?

“சார் எங்கே..?”

எதையும் உறுதிப் படுத்திக் கொள்ளாமல் பயந்து சாகக் கூடாது என்று ரிசப்ஷனில் இருந்த இளைஞனிடம் கேட்டாள்..

“அவரோட ரூமுக்குப் போயிட்டார் மேம்.. உங்களுக்கு ஃபர்ஸ்ட் ஃப்ளோரில ரூம் நம்பர் பிப்டினை அலாட் பண்ணியிருக்கோம்..

யு மே கோ அண்ட் டேக் ரெஸ்ட்.. சார் மார்னிங்கில உங்களுக்குக் கால் பண்ணி அடுத்த புரோக்ராம் என்னன்னு சொல்வாருன்னு சொல்லச் சொன்னார் மேம்..” பவ்யமாகப் பதில் சொல்லி நந்தினியின் பயந்த வயிற்றில் பாலை வார்த்தான் அந்த இளைஞன்..

'அப்பாடி..!' நிம்மதியானாள் நந்தினி..

'கொஞ்ச நேரத்துக்குள்ள என்னவெல்லாம் நினைச்சிட்டேன்.. நைட் டிராவலிலே ஃபர்ஸ்ட் கிளாஸ் கோச்சில அவனும் நானும் மட்டும்தான் இருந்தோம்.. அவன் 'ரோக்'கா இருந்திருந்தா அப்பவே வாலாட்டியிருக்க மாட்டானா..? பக்கா ஜெண்டில்மேன்.. வம்பிழுத்துப் பேசினானே தவிர வில்லத்தனமா எதையும் பேசலையே.. அப்படியிப்படிப் பார்த்தாலும் அது ரேப் பண்ற பார்வையில்லை...'

அவள் மனம் அவனுக்காக வக்காலத்து வாங்கியது.. அப்படியிப்படிப் பார்த்து அவளை வம்பிழுத்து அழிச்சாட்டியம் பண்ணியவன் இப்படி விடியாத பின்னிரவில், அறியாத ஊரில், தெரியாத ஹோட்டலில் அவளை நிறுத்தி வைத்து விட்டு.. யாரோ எவரையோ போல் போய் விட்டதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை..

புரியாத புதிராக அவன் தோற்றமளித்தான்.. உனது லெவல் இதுதான் என்பதை அவன் சுட்டிக் காட்டி உணர்த்தி எல்லைக் கோட்டை வகுத்து அவளைத் தள்ளி நிறுத்தி விட்டதைப் போல அவளுக்கு தன்னிரக்கமாக இருந்தது..

என்னதான் உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது என்று பழமொழி சொன்னாலும்.. அவன் பருந்து, அவள் குருவி என்ற உண்மையில் மனம் வலித்தது..

“ஏய்ய் குருவி..! இப்ப வா குருவி..!”

காதோரமாக ஒலித்த அவன் குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.. அருகில் அவன் இல்லை.. ஒலித்த குரல் பிரமையென்பதில் உள்ளம் பதறியது.. ரயில் ஸ்நேகம் போன்றதா அவனது ஸ்நேகம்..?

ரயில் ஸ்நேகத்தில் அவரவர் அவரவர் ஊர்களில் இறங்கிப் பிரிந்து அவரவர் பாதைகளில் போய் விடுவார்களே..? இங்கே அப்படியில்லையே.. அவளும் அவனும் ஒரே ஊரில் இறங்கி ஒன்றாகத்தான் அங்கு வந்திருக்கிறார்கள்.. ஆனால் அவன் வேறு திசையில் அவள் வேறு திசையில் என்பதைப் போல ஆகிவிட்டதே.. அருகருகே இருப்பவர்கள் எப்படி திசை மாறும் பறவைகளாக முடியும்..?

# அத்தியாயம் 37

**ப**ஞ்சுப் பொதியைப் போன்ற நுரை மெத்தையில் அமிழ்ந்து ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் நந்தினி.. சன்னமான இசையுடன் கூடிய செல்ஃபோனின் ஒலி அவளை எழுப்பியது.. முதல்நாள் இரவுப் பயணத்தில் தூங்காமல் வந்ததின் அலுப்பும் களைப்பும் உடலின் ஒவ்வொரு செல்லிலும் 'விண், விண்' என்று தெறிக்கக் கண் விழிக்காமல் இமைகளை மூடியபடியே செல்ஃபோனைத் துழாவியெடுத்துக் காதுக்குக் கொடுத்தவள்.. "தூங்க விடுங்கம்மா.." என்று சிணுங்கினாள்..

மறுமுனையில் ஓர்நொடி மௌனம் நிலவியது.. அம்மாவா இப்படி அமைதி காக்கிறாள் என்று தூக்கக் கலக்கத்துடன் ஆச்சரியப்பட்டபடி செல்ஃபோனை நழுவ விட்டுத் தூங்கிப் போனாள் நந்தினி..

'அம்மா இப்படிச் சும்மாயிருக்க மாட்டாங்களே.. தலையணையால் ஒரு போடு போட்டு.. வாழ்க்கைப் பட்டுப் போகிற இடத்தில தூங்குமூஞ்சிப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து விட்டோமேன்னு பேசித்

தீர்த்திருவாங்க.. இவங்கம்மா பெண்ணை வளர்த்து வைத்திருக்கிற லட்சணத்தைப் பாருன்னு எனக்கு பேர் வாங்கிக் கொடுக்கனும்ங்கிற முடிவோட இருக்கியான்னு கத்தித் தீர்த்திருவாங்களே..'

கனவு போன்ற நினைவுச் சங்கிலியை அறுப்பதைப் போல.. "இது தஞ்சாவூர் இல்லை.. கோழிக்கோடு.. பேசுகிறதும் உன் அம்மா இல்லை.. உனக்கு வேலை கொடுத்திருக்கிற பாஸ்.." என்று அதட்டலாக ஃபோனில் மிரட்டியது ரவிச்சந்திரனின் குரல்..

'ஆத்தாடி..'

நந்தினியின் தூக்கம் ஓடியே போனது.. ஃபோனை இறுக்கிப் பிடித்துக் காதுக்குக் கொடுத்தவளின் பார்வை படு அழகுடன் இருந்த அந்த அறையை வலம் வந்தது..

"சொல்லுங்க பாஸ்.."

"என்னத்தைச் சொல்கிறது..? மணி பதினொன்னாகப் போகுது.. இன்னமும் தூக்கத்தில் இருக்க.. இந்த லட்சணத்தில் வேலை பார்த்தியின்னா விளங்கிரும்.."

‘விட்ட விடிகாலையில இந்த லட்சணத்தில நீ பேசி வைச்சாலும் விளங்கிரும்.. இதை யார் உனக்குச் சொல்கிறது..? மத்தவங்களை விடு.. என்னால் சொல்ல முடியுமா..?’

“என்ன பதிலைக் காணோம்..? மறுபடியும் தூங்க ஆரம்பிச்சிட்டியா.?”

‘எப்படி எடை போட்டிருக்கிறான்..?’

அவள் பக்கா தூங்குமூஞ்சி என்று அவன் சரியாக கணித்திருப்பதில் பல்லைக் கடித்தாள் நந்தினி..

‘என் ஃபேமிலிக்கும்.. ஃபிரண்ட்ஸுக்கும் மட்டும் தெரிந்த ரகசியத்தை இவன் எப்படிக் கண்டு பிடிச்சான்..?’

“ஊருக்கே தெரியும்..” என்று அவள் மனதைப் படித்ததைப் போல விடை பகன்றான் ரவிச்சந்திரன்..

“என்ன தெரியும்..” ரோஷத்துடன் கேட்டாள் நந்தினி..

“நைட் டிராவலில நான் தூங்கி விழுந்ததை நீங்க பார்த்தீங்களா..? சார்தான் குறட்டை விட்டுத் தூங்கினீங்க.. நான் கொட்டக் கொட்ட முழிச்சுக்கிட்டே வந்தேன்..”

“பிகாஸ்.. யு ஆர் எ வுமன்.. ஐ ஆம் எ மேன்..”

“ஆகப் பெரும் கண்டுபிடிப்பு..! கோழிக்கோடில இருக்கிற எழுத்தாளப் பெருமக்கள்கிட்ட உங்க அறிவு ஜீவித்தனமான கண்டு பிடிப்பைச் சொல்லுங்க.. சாஹித்ய அகாடமி அவார்டுக்கு உங்க பேரை ரெகமண்ட் பண்ணுவாங்க.. பெண்ணா இருக்கிறவ தூங்க மாட்டாளா..?”

“நைட் டிராவலில.. கதவை லாக் பண்ணியிருக்கிற ஃபர்ஸ்ட் கிளாஸ் கோச்சில.. என்னைப் போல ஹேண்ட்சம்மான ஆண் பக்கத்தில இருந்தா எந்தப் பெண்ணும் தூங்க மாட்டா..”

“ஏன்.. ஏன்.. ஏன்..? நீங்க என்ன சிங்கம், புலி, கரடியா..?”

“அதுக்கும் மேலே..”

“எல்லாம் சரி சாரே.. ‘ஹேண்ட்சம்மான ஆண்..’ அப்படின்னுசொன்னீங்க பாருங்க.. அங்கேதான் இடிக்குது..”

“ஊஹும்..?”

காதில் ஒலித்த ‘ஊஹும்..’மில் கிளர்ந்தாள் நந்தினி.. இப்போது அவன் புருவங்களை உயர்த்தி இறக்கியிருப்பான் என்ற நினைவில் மனதில் அந்தத் தோற்றம் வந்து நின்றது..

அவன் அவளைப் பார்த்தபடி வசீகரமாக புருவங்களை உயர்த்தி இறக்கி வைத்தான்.. மயங்கினாள் நந்தினி..

“வாயடிக்காம காபியைக் குடிச்சுட்டுக் கிளம்பி ரிசப்ஷனுக்கு வா..” ஃபோனில் உத்தரவு வந்தது..

மயக்கம் கலைந்த நந்தினிக்கு நடப்பு நினைவுக்கு வந்தது.. அவன் அவளது முதலாளி..! அவள் அவனிடம் வேலை செய்ய வந்தவள்..

மயக்கம் கலைந்த கொதிப்பில் அவனுடன் சண்டைக்குப் போனாள் அவள்..

“இப்ப கம்மாண்ட் பண்றவர்தான் ஹோட்டல் வாசலில காரை விட்டு இறங்கியதும் மாயமா மறைஞ்சீங்களாக்கும்..?”

“நீ யார் என்பதை ரிசப்ஷனில சொல்லி உனக்கு ரூம் புக் பண்ணிட்டுத்தான் மாயமானேன்.. மனசிலாயி..”

“ஏன்..? கூட வந்தா தோஷமாகிருமா..?”

“ஆமாம்.. எனக்கில்ல.. உனக்கு..”

ஆழமான அவனது குரல் புதிர் போட்டது.. இவனே ஒரு புதிர்.. இதில் புதுசா ஒரு புதிர் போடறான் என்று சலித்துக் கொண்டவள்..

“புரியலை..” என்றாள்..

“சில விஷயங்கள் புரியாமல் இருக்கிறதே நல்லது..” என்றான் அவன்..

“யாருக்கு நல்லது..?”

“உனக்குன்னும் சொல்லலாம்... எனக்குன்னும் சொல்லலாம்..”

“எனக்கான நல்லது.. கெட்டதை நானே பார்த்துக்கிறேன்.. நீங்க ஒண்ணும் அக்கறை காட்டறேன் பேர்வழின்னு மூடி மறைக்க வேணாம்.. ஏன் அப்படி எஸ்கேப் ஆனிங்க அப்படிங்கிறதுக்கான காரணத்தைச் சொல்லுங்க.. எனக்குத் தெரிஞ்சே ஆகனும்..”

பிடிவாதம் பிடித்தாள் நந்தினி.. கூட வந்தவன் அவளைத் தள்ளி நிறுத்திவிட்டு ஓடி ஒளிந்ததில் அவளுக்கான நல்லது எது இருக்கக் கூடும் என்று அவள் மனம் குமுறியது..

“சொல்கிறேன்...” யோசனையுடன் அவன் பேசினான்..

“ஒருவகையில் இதை நீ தெரிந்துக்கிறதும் சரிதான்.. எனக்கு ரிலீஃபா இருக்கும்.. அதுக்கு முதலில் ஒண்ணு சொல்றேன்.. அதை நீ ஃபாலோ பண்றது அவசியம்..”

“எது..?”

“இப்படி சரிக்கு சரியா ஆர்க்யூ பண்றது, வாயடிக்கிறது இதையெல்லாம் மத்தவங்க முன்னாடி செய்யாதே..”

“ஏன்..?”

“ஏன்ங்கிறதுக்கான ரீசனை இப்பத்தான் சொன்னேன்.. நான் உன் பாஸ்.. என்னிடம் வேலை பார்க்கிற யாரும் லெவலை மறந்து பேச மாட்டாங்க..”

நேரடியாக விழுந்த அடியில் மனம் தாங்காமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள் நந்தினி.. இந்தப் பேச்சை இவனிடம் கேட்பதற்கு மௌனியாகி விடுவதே சாலச்சிறந்தது என்று அவளது அறிவு மூக்கை உறிஞ்சியது..

“சொல்லிட்டிங்கள்ல.. இனி நீங்க பேசச் சொன்னாலும் பேச மாட்டேன்..”

நந்தினியின் குரலில் அடிப்பட்ட வலி இருந்தது..

“அதில்ல நந்தினி..”அவன் விளக்கம் சொல்ல முயன்றான்..

“ப்ளீஸ் பாஸ்.. நான் கேட்டதற்கான விளக்கத்தைப் பற்றி மட்டும் நீங்கச் சொன்னா போதும்.. என் லெவல் என்னன்னு

நீங்க சொன்ன பிறகும் லெவலை கிராஸ் பண்ணுவேன்னா நினைக்கறிங்க..? எதுக்காக என்கூட வராம மாயமானீங்க..? இயல்பா இருந்தா அதைப் பத்தியே கேட்க மாட்டேன்.. ஏதோ ஒரு நினைவில நீங்க போயிட்டீங்கன்னு சொல்லியிருந்தா பேச்சே இல்லை.. நீங்க அப்படிச் சொல்லலை.. அதுக்கு ஒரு ரீசன் இருக்கிறதாச் சொல்கிறீங்க.. அது என்ன ரீசன்னு தெரிந்துக்காம உங்களிடம் எப்படி நான் வேலை பார்க்க முடியும்..?"

"ஓகே.. கேள்.."

அவன் நிதானித்தான்.. அந்த நிதானம் அவளுக்குள் ஓர் விதமான பயத்தைக் கொடுத்தது.. எதைச் சொல்ல இந்த நிதானம்..? ரவிச்சந்திரன் படுவேகமானவன்.. நிதானமானவன் அல்ல.. இந்த நிதானம் அவனுக்குப் பொருந்தி வரவில்லையே..

"நந்தினி.." கரகரத்த குரலில் அவன் ஆரம்பித்தான்.

"ம்ம்ம்.."

"இது என்னுடைய ஹோட்டல்.."

"ஓ.."

ஸ்டார் ஹோட்டல்களின் சொந்தக்காரன் நான் என்று காரில் அவளிடம் ரவிச்சந்திரன் சொல்லியிருந்தான்தான்.. அவனுக்குச் சொந்தமான 'யாழ்..' ஹோட்டலுக்குத்தான் அவர்கள் போகப் போகிறார்கள் என்று சொல்லவில்லை..

அந்த 'யாழ்..!' நட்சத்திர ஹோட்டலின் பிரம்மாண்டத்தில் பிரமித்துப் போனாள் நந்தினி.. கோடிஸ்வரர்களால் மட்டுமே தங்க முடியும் அந்த ஹோட்டலில் தங்கும் அளவிற்கு அவன் பெருத்த பணக்காரன் என்றுதான் அவள் நினைத்தாலே தவிர..

அந்த ஹோட்டலே அவனுக்குச் சொந்தமானது என்று நினைத்தும் பார்க்கவில்லை..

'இது இவனுடைய ஹோட்டலா..?'

“இங்கே மட்டுமில்லை.. திருவனந்தபுரம், சென்னை, மும்பைன்னு இந்தியாவில இருக்கிற எல்லா சிட்டிகளிலும் என்னோட 'யாழ்..!' ஹோட்டல் இருக்கு.. நீ சென்னையில் படித்தவள்தானே.. என் ஹோட்டலைப் பற்றி நீ கேள்விப் பட்டதில்லையா..?”

“இல்லை..”

“ஓகே.. லீவ் இட்.. நான் சொல்ல வந்தது வேறு.. என்னோட அத்தனை ஹோட்டல்களிலும் எனக்கும், என் ஃபேமிலிக்கும் தனித்தனி ஸ்பெஷல் ரூம்ஸ் உண்டு..”

“ஹோட்டல் ஓனர்ஸிக்கு இருக்கத்தான் செய்யும்.. நான் ஒண்ணும் அந்த ரூம்களிலே ஒன்னிலதான் தங்குவேன்னு அடம் பிடிக்கலையே.. இதுக்காகவா மாயமானீங்க..?”

“அவசரப்படாதே.. நீ சொல்கிறது ரீசன் இல்லை.. என் ஃபேமிலி மெம்பர்ஸ் எப்போதாவது ஒரு முறைதான் என் ஹோட்டல்ஸில் தங்க வருவாங்க.. வெகேஷன் ஸ்பெண்ட் பண்ண எந்த ஊருக்குப் போகிறாங்களோ.. அந்த ஊரில இருக்கிற என் ஹோட்டல்ஸில் தங்குவாங்க.. இல்லேன்னா எங்களுக்குன்னு அங்கே இருக்கிற பங்களாக்களில் தங்குவாங்க.. அவங்க விருப்பத்தைப் பொறுத்து இடம் மாறும்..”

அவன் விவரித்த அவனது வாழ்க்கையின் செல்வச் செழுமையில் அவளுக்குப் பொறாமை, பொறாமையாக இருந்தது.. ஏதோ, தஞ்சையில் ஜவுளிக்கடை.. கிராமத்தில் தோப்பு, துரவு, ஊர் பண்ணையார் குடும்ப அந்தஸ்து என்று சிறு வட்டத்துக்குள் வாழும் குறும்பணக்காரரின் மகள் அவள்..

தஞ்சையிலும், கிராமத்திலும் வீடு கட்டி வாழும் குடும்பத்தைச் சேர்ந்தவள், ஊருக்கு ஒரு வீடு, ஹோட்டல் என்று வாழும் வாழ்க்கையைப் பற்றிக் கேள்விப்பட்டது கூட இல்லை..

‘இப்பேற்பட்ட ராயல் கோடிஸ்வரன் கிட்ட வேலை பார்த்து நடுங்கிறதுக்குப் பதிலா பெல்ட் மன்னனுக்குக் கழுத்தை நீட்டியிருக்கலாம்..’ என்று அவளுக்குத் துக்கம் துக்கமாக வந்தது..

‘இந்த ரோதனை சில மாசத்திலேயே முடிஞ்சுரும்.. கல்யாணத்தை நிப்பாட்டிட்டோம்.. நீ வீட்டுக்கு வான்னு அப்பாம்மா தேடி வந்துட்டா அவங்க பின்னாலே ஓடிப் போயிரலாம்.. பெல்ட் மன்னனுக்குக் கழுத்தை நீட்டினா காலம் பூராவும் பெல்ட் அடி வாங்கனுமே..’ என்றெல்லாம் யோசித்து மனதை சமாதானப் படுத்திக் கொண்டாள்..

‘இவன் பகுமானத்தை நிறுத்தி விட்டுச் சொல்ல வந்ததைச் சொன்னால் தேவலை..’ அவளுக்குத் தலை வலிக்க ஆரம்பித்தது..

பேசாமல் வலி தலையிலா, மனதிலா தேவனே என்று அலறி விடலாமா என்று ஆலோசிக்க ஆரம்பித்தபோது

சோதித்தது போதும் என்று அவன் விவரத்தின் மையப் புள்ளிக்கு வந்து விட்டான்..

“அடிக்கடி வருகிறது நான்தான்.. சிலசமயம் தனியா வருவேன்.. சில சமயம்..” அவன் குரல் தயக்கத்தை வெளிப்படுத்தியது..

‘தயங்கறானா..? இவனா..?’ அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது..

தயக்கத்திற்கும் ரவிச்சந்திரனுக்கும் பொருந்தி வராதே..

“சில சமயம் என்னுடன் ஏதோ ஒரு பெண் இருப்பாள்..” ரவிச்சந்திரன் சொல்ல வந்ததைச் சொல்லி விட்டான்..

‘இவன் என்ன சொல்கிறான்..?’

அவன் சொன்னதை கிரகித்துப் புரிந்து கொள்ள நந்தினிக்குச் சில நிமிடங்கள் தேவைப்பட்டன.. அவள் புரிந்து கொள்ளும் வரை அவன் பொறுமையாக அமைதி காத்தான்.. புரிந்து கொண்டவள்..

“காட்..!!!” என்று அதிர்ச்சியானதும்..

“இதுக்குத்தான் நான் ரீசன் சொல்ல யோசித்தேன்..” என்றான்..

“எவ்வளவு ஈஸியாச் சொல்கீறிங்க மிஸ்டர் ரவிச்சந்திரன்..? நீங்க இப்படிப்பட்டவர்ன்னு உத்ராவும், வினித்தும் என்னிடம் சொல்லலையே..” படபடத்தாள் நந்தினி..

“ஏன் சொல்லனும்..?” எரிச்சலுடன் கேட்டான் ரவிச்சந்திரன்..

“ஏன் சொல்லனுமா..? உங்களை நம்பி உங்களுடன் ஒரே கோச்சில் டிராவல் பண்ணினேனே.. என்னைச் சொல்லனும்..” பொங்கினாள்..

“டிராவல் டயத்தில என்ன பண்ணினேன்..? கையைப் பிடித்து இழுத்தேனா..?” ரவிச்சந்திரன் மடக்கினான்..

“நீங்க அதையும் செய்தீங்க..” நந்தினி நினைவூட்டினாள்..

“தப்பான நோக்கத்துடன் செய்யலை..” ரவிச்சந்திரனும் நினைவுறுத்தினான்..

“எனக்கு உங்களிடம் வேலை பார்க்க விருப்பமில்லை.. எதுக்கோ பயந்து எதிலோ விழுந்த கதையாய் இருக்கே..

இப்பவே நான் சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிறேன்..” எகிறினாள் நந்தினி..

“உன் இஷ்டம்ன்னு சொல்வேன்னு நினைத்தியா..? ஏற்கனெவே உனக்கு வார்ன் பண்ணிட்டேன்.. நானா ரிலீவ் பண்ணாம நீ என்னை விட்டு எங்கேயும் ஓடிப் போக முடியாதுன்னு..”

“என்ன செய்வீங்க பாஸ்..? நீங்க எதை வேண்டுமானாலும் செய்துக்கங்க.. ஐ டோண்ட் கேர்..”

“பட்.. ஐ கேர் எபவுட் யு..”

“ஐ டோன்ட் மைண்ட்..”

“ஐ மைண்ட் இட்.. என்னிடம் நீ வேலை செய்கிறதால உன் மரியாதைக்கு எந்த வித குறைவும் ஏற்பட்டு விடாது.. அதுக்கு நான் கேரண்டி.. உன்னுடன் சேர்ந்து வந்தா உன்கூட ஜாலியா டைம் ஸ்பெண்ட் பண்ணக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கேன்னு ஹோட்டலில் வேலை செய்கிறவங்க நினைத்து விடக் கூடாதுன்னுதான் நான் முன்னாடியே வந்து நீ யார்ங்கிற விவரத்தை ரிசப்ஷனில சொல்லி உனக்குத் தனி ரூம் அலாட் பண்ணினேன்.. இந்நேரம் நீ என்னுடைய பர்சனல் செக்கரட்டரிங்கிற விவரம் எல்லோருக்கும்

தெரிஞ்சிருக்கும்.. இதில இருந்தே நான் யார், என்னோட கேரக்டர் என்னஙகிறதை நீ புரிஞ்சுக்க.. தேவையில்லாம மனதைக் குழப்பிக்காதே.. என்னாலே உனக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. நான் உன்னோட பாஸ்.. நீ என் பெர்சனல் செக்கரட்டரி..”

“பெர்சனல் மேனேஜர்..! செக்கரட்டரி வேலை பார்க்கிறதுக்காக ஒண்ணும் நான் பி.ஈ படிக்கலை..”

“ஓகே.. பெர்சனல் மேனேஜர்..! தட்ஸ் ஆல்..”

குரலில் நகைப்புடன் பேச்சைத் துண்டித்து விட்டான் ரவிச்சந்திரன்.. அமைதியாகி விட்ட மறுமுனையை உணர்ந்தாலும் ஃபோனை காதை விட்டு எடுக்காமல் அப்படியே படுத்திருந்தாள் நந்தினி.. உடலில் உள்ள சக்தியெல்லாம் வடிந்து விட்டதைப் போல சோர்வாக இருந்தது.. ரவிச்சந்திரனுக்குப் பெண்களிடம் பழக்கம் உண்டு என்ற உண்மையில் மனம் அதிர்ந்திருந்தது.. யாரோ ஒருவன்.. தற்சமயத்திற்கு வேலை கொடுத்திருப்பவன்.. அவன் எப்படிப்பட்டவனாக இருந்தால் அவளுக்கென்ன என்று அந்த விவரத்தை ஒதுக்கித் தள்ள அவளால் முடியவில்லை.. அழுகை அழுகையாக வந்தது..

**‘நான் பாடும் பாடல்**

**நலமாக வேண்டும்..**

**இசை வெள்ளம் நதியாக ஓடும்**

**அதில் இளம் நெஞ்சம் படகாக ஆடும்..’**

முன்தின இரவில் மிருதுவான குரலில் அவன் பாடிய பாடல் அவள் மனதை அசைத்தது.. அவன் பாடிய பாடல் ஏன் அவளுக்கு நலமானதாக அமையவில்லை என்று விம்மினாள் நந்தினி..

மனதில் ஒலித்த பாடல் வரிகளில் அவளது இளநெஞ்சம் துரும்பாக ஆடியது.. அவன் அவளுடைய முதலாளிதான்.. ஓர் இரவில் அவன் மீது அவளுக்கு எந்த விதமான எண்ணமும் எழுந்து விடவில்லைதான்.. மனதில் சலனம் ஏற்பட்டாலும் அது இளம் வயதில் அழகும் கவர்ச்சியும் நிறைந்த இளம் வாலிபனைக் கண்டு விட்டால் ஏற்படும் இனம் புரியாத ஈர்ப்பு என்பதை அவள் உணர்ந்திருந்தாள்தான்..

இருந்தும் அவளுக்கும் அவனுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த சன்னமான பிரியத்தின் இழை அறுந்து விட்டதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. அவனுடன்

ஏற்பட்டிருந்த.. சிநேகிதத்தைத் தொடர முடியாமல் அடிப்படை நம்பிக்கை தகர்ந்து விட்டதே..

இனி அவள் என்ன செய்ய வேண்டும்..?

போடா நீயுமாச்சு உன் வேலையுமாச்சு என்று உதறித் தள்ளி விட்டு ஓடிப் போய் விடலாம் என்றால் அவன் அதற்கும் எதையெதையோ சொல்லி பயமுறுத்துகிறான்..

தன் நிலையை நினைத்துத் தலையணையில் முகம் புதைத்துக் கண்ணீர் விட்டாள் நந்தினி.. மனம் விடடு அழுகவும் முடியாமல் காலிங்பெல் அலறியது.. யார் என்ற எரிச்சலுடன் கதவைத் திறந்தாள்.. காபியுடன் ரூம் பாய் நின்றிருந்தான்..

'இது ஒண்ணுதான் குறைச்சல்..' என்று தோன்றிய போதும் ரூம் பாயிடம் அதைச் சொல்ல முடியாமல் விலகி நின்றாள்.. மரியாதையுடன் உள்ளே வந்த ரூம்பாய் அங்கிருந்த டீப்பாயில் காபிக் கோப்பைக்கு வலிக்குமோ என்று மென்மையாக கோப்பையை வைத்து விட்டு வெளியேறினான்.. கதவை மூடிவிட்டு சூடான காபியைக் குடித்து முடித்த நந்தினிக்குத் தலைவலி குறைந்து விட்டதைப்

போல இருந்தது.. குளித்து விட்டு வந்தால் அலுப்புக் குறைந்து புத்துணர்வு ஏற்படும்..

அப்போது யோசித்தால் தெளிவான சிந்தனை வரக்கூடும், இப்போதிருக்கும் சூழலிருந்து விடுப டுவதற்கான வழியும் புலப்படும் என்று தோன்றியதால் மாற்றுடையுடன் குளியலறைக்குள் புகுந்தாள்.. குளித்து உடைமாற்றி உட்கார்ந்த போது மனது தெளிவாக இருந்தது..

ரவிச்சந்திரன் எப்படிப்பட்டவனாக இருந்தால் அவளுக்கென்ன வந்தது..? உலகில் உள்ள அத்தனை முதலாளிகளும் உத்தமமானவர்களா என்ன..? அவரவர் வாழ்க்கை அவரவருக்கு.. நந்தினிக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.. சில வாரங்கள் மறைந்திருப்பதற்கான இடம் தேடி அவனிடம் வேலை பார்க்க ஒப்புக் கொண்டு வந்திருக்கிறாள்.. நிலைமை சீரானதும் அவள் வீட்டுக்குத் திரும்பி விடுவாள்.. அவனே சொன்னதைப் போல அவனால் அவளுக்கு ஆபத்து ஏற்படப் போவதில்லை.. அவளது நிலையைத் தனக்குச் சாதகமானதாக உபயோகப் படுத்திக் கொள்பவனாக இருந்திருந்தால் முதல் நாள் இரவில் அவளை விட்டு வைத்திருக்க மாட்டான்.. சூறையாடியிருப்பான்.. அவனுடன் சேர்ந்து வந்தால்

ஹோட்டலில் உள்ளவர்கள் அவளைத் தவறாக நினைத்து விடக்கூடும் என்று அவளை அம்போ என விட்டு விட்டு முன்னால் விரைந்திருக்க மாட்டான்..

அவனைப் பற்றி அவன்தான் சொன்னான்.. அவளுக்கு எதுவும் தெரியாதே.. அவன் மறைக்க நினைத்திருந்தால் மறைத்திருக்கலாமே.. தங்களின் முதலாளியைப் பற்றி அங்கே வேலை செய்பவர்கள் வாய் திறந்திருக்க மாட்டார்களே..

இந்த ஒன்றுதான் நந்தினியின் பயத்தை விரட்டியது.. தன்னைப் பற்றிய உண்மைகளைச் சொல்வதனால் நந்தினியின் மதிப்பீட்டில் தான் இறங்கி விடுவோம் என்று தெரிந்திருந்தும் வெளிப்படையாக நான் இப்படித்தான் என்னோடு சேர்ந்து நடந்து வந்தால் உன்னை எவரேனும் தவறாக எண்ணிவிட வாய்ப்புண்டு என்று கூறுபவன் அயோக்கியனாக இருக்க வாய்ப்பே இல்லை.. நந்தினி க்கு அது போதாதா..?

போதாது என்பதைப் போல நந்தினியின் மனதில் ஓர் மூலையில் வலி ஏற்படத்தான் செய்தது.. அதைப் புறம் தள்ளி விட்டு எழுந்து நின்றாள்.. செல்ஃபோன் ஒலித்தது.. ரவிச்சந்திரன் அழைக்கிறான் என்றது.. உதட்டைக் கடித்தபடி

ஓர் நொடி நின்றாள்.. சிறிய பெருமூச்சுடன் தன்னை சரிப்படுத்திக் கொண்டு ஃபோனை எடுத்துக் காதுக்கு கொடுத்தாள்..

“இன்னுமா ரெடியாகலை..? நான் ரிசப்சஷனில இருக்கேன்..”

உத்தரவிடும் தொனியில் ரவிச்சந்திரன் பேசினான்..

அவனைப் போலவே ஒட்டுதல் இல்லாமல் அவனிடம் வேலை பார்ப்பவளாகப் பேச நந்தினிக்கு சிரமமாகத்தான் இருந்தது.. கமறிய தொண்டையுடன்..

“இதோ.. வந்துட்டேன் பாஸ்..” என்றாள்..

“டோன் ஒரு மாதிரியிருக்கே.. ஆர் யு ஆல்ரைட்..?” கவலையுடன் கேட்டான் ரவிச்சந்திரன்..

‘ஆமாண்டா.. அணுகுண்டை அலேக்காத் தூக்கி என் தலையிலே போட்டுட்டு ஆர் யு ஆல்ரைட்டுன்னு கேளு.. நீ ரைட் பெர்சனா இல்லை ராங் பெர்சனாங்கிற கேள்வி மண்டைக்குள்ள தடதடன்னு ஓடிக்கிட்டு இருக்கு.. இதில என் குரல் துள்ளவா செய்யும்..?’

நந்தினிக்கு நன்றாக நான்கு கேள்விகள் கேட்டுவிட வேண்டும் போல பற்றிக்கொண்டு வந்தது..

# அத்தியாயம் 38

“**ஏ**ன்.. என்ற கேள்வி.. இங்கு கேட்காமல் வாழ்க்கையில்லை..”

சின்னத் திரையில் படு சுறுசுறுப்பாக கைகளை வீசி, வீசி ஆட்டியபடி மக்கள் திலகம் பாடிக் கொண்டிருந்தார்..

‘சும்மா இருங்க மக்கள் திலகம் சார்.. கேள்வியக் கேட்டுட்டா பதில் சொல்லிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பாங்களாக்கும்..? உங்க காலம் போல இந்தக் காலமில்லை சார்.. அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போயாச்சு.. இங்கு ஊமைகள் ஏங்கவும், உண்மைகள் தூங்கவும் நானா பார்த்திருப்பேன்னு நீங்க பாட்டுக்குப் பாட்டுப் பாடிட்டுப் போயிட்டிங்க.. இப்ப ஊமைகள் ஏங்கிக்கிட்டுத்தான் இருக்காங்க.. உண்மைகள் தூங்கிக் கிட்டுத்தான் இருக்கின்றன.. ஒண்ணும் வேலைக்கு ஆகல.. பொழப்பப் பார்க்கனும்.. நீங்க ரெஸ்ட் எடுங்க..’

ரிமோட்டைக் கைப்பற்றி டி.வியை அணைத்தாள் நந்தினி.. ஹேண்ட் பேகை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறி கதவைப் பூட்டிச் சாவியை கையில் பிடித்துக்

கொண்டு லிப்டை நோக்கி நடந்தாள்.. தரைத்தளத்தில் லிஃப்ட் நின்றதும் வெளிப்பட்டு நடந்தவள் திகைத்து நின்றாள்.. அங்கே வரவேற்பின் அருகே நின்று கொண்டிருந்த ரவிச்சந்திரனைச் சுற்றி ஹோட்டலில் வேலை செய்பவர்கள் நின்று கொண்டிருக்க அவன் எதையோ கேட்டுக் கொண்டிருந்தான்.. ஒவ்வொருவரின் முகத்திலும் நிலவிய படபடப்பில் தான் சீக்கிரம் வந்திருக்க வேண்டுமோ என்ற குற்ற உணர்வு அவளுக்குள் வந்தது..

பாவம் பணியாளர்கள்.. ஹோட்டலின் உரிமையாளன் வரவேற்புப் பகுதியில் நின்று கொண்டிருந்தால் எப்படி அவர்களால் இயல்பாக வேலை பார்க்க முடியும்..?

‘என்னால்தான் இத்தனை களேபரமும்..’

விரைவாக நடந்து அவன் முன்னால் போய் நின்றாள்.. ஹப்பா.. வந்துட்டாங்க என்ற நிம்மதியுணர்வு அத்தனை பணியாளர்களின் முகத்திலும் பரவியதைப் பார்த்தபடி.. “குட்மார்னிங் பாஸ்..” என்றாள்..

“வெரி குட்மார்னிங்.. தேவையான அளவுக்கு ரெஸ்ட் எடுத்தாச்சா..? வொர்க்கை ஸ்டார்ட் பண்ணிடலாமா..?”

என்று கேட்ட ரவிச்சந்திரனின் பார்வை அவளது முகத்தில் மொய்த்து ஆராய்ந்தது..

நந்தினி இயல்பாக முகத்தை வைத்துக் கொள்ளப் பிரயத்தனங்களை மேற்கொண்டாள்.. எதுவுமே நடக்காததைப் போல அவனால் பேச முடிந்தது.. அவளால்தான் முடியவில்லை.. அது ஏனென்றும் அவளுக்குத் தெரியவில்லை..

“ஸ்டார்ட் பண்ணிடலாம் சார்..” பார்வையைத் தாழ்த்திக் கொண்டு மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்..

“தட்’ஸ் குட்.. ஃபர்ஸ்ட் பிரேக்ஃபாஸ்டை முடிச்சுக்கலாம்..”

ரவிச்சந்திரனின் அழைக்கும் பார்வையில் அவனுடன் இணைந்து நடந்தாள் நந்தினி.. இந்தக் காலை உணவை அவரவர் அறைக்கே வரவழைத்துச் சாப்பிட்டிருக்கலாமே என்று தோன்றியது.. அதை அவனிடம் சொன்னபோது பதிலேதும் சொல்லாமல் ஆழ்ந்து பார்த்தான்.. அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று இனம் புரியாமல் அவள் தடுமாறினாள்..

## என்னகம் தொட்டு விட்டான்..’

மீசையை முறுக்கியபடி முண்டாசுக் கவிஞன் மனதில் கவிதை சொல்லிக் கொண்டு வந்தான்.. நந்தினிக்கு சோர்வாக இருந்தது..

‘போ பாரதி.. இவன் இப்படித்தான்.. பார்வையிலே மனசை சலனப்படுத்தி கலங்கடிப்பான்.. மயங்கி நின்னா, நான் பச்சைப் பொறுக்கின்னு கல்லைத் தூக்கிப் போடுவான்.. இவ்வளவு பெரிய கோடிஸ்வரன்.. மனம் போல வாழ்பவன்.. இவன் என்னகம் தொட்டு விட்டாலும்.. ம்ஹூம்..’

நந்தினியின் கண்கள் கலங்கி விட்டன.. இமைகளைச் சிமிட்டி அதை மறைத்துக் கொண்டாள்.. ரவிச்சந்திரனின் கூர்மையான பார்வை படபடக்கும் அவளது பட்டாம்பூச்சி இமைகளின் மீது படிந்தது.. அவன் முகம் இளகியது.. சன்னக் குரலில்..

“ஸாரி..” என்றான்..

‘இவன் எதுக்காக என்னிடம் ஸாரி சொல்லனும்..?’

அடக்கிய கண்ணீர் அடங்காமல் கொட்டி விடவா என்று பயமுறுத்தியது.. சடுதியில் முகத்தைத் திருப்பி அவன் பார்வையிலிருந்து தப்பிக்க முயன்றாள் நந்தினி..

“உட்கார்..”

அவளுக்காக அவன் நாற்காலியை இழுத்துப் போட்டதை அந்த ஏஸி ஹாலில் அங்கும் இங்குமாக நடமாடிக் கொண்டிருந்த பணியாளர்கள் வியப்புடன் பார்த்தார்கள்..

“ப்ளீஸ்.. மைண்ட் யுவர் பிஹேவியர்.. எனக்காக சேரை இழுத்துப் போட்டா உங்க வொர்க்கர்ஸ் மிஸ்டேக் பண்ணிக்கப் போறாங்க..” நந்தினிக்கு கோபம் வந்து விட்டது..

அவளென்ன பப்பாவா..? அவளுடைய நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார அவளுக்குத் தெரியாதா..? அவளுடன் அவன் சேர்ந்து நடந்து வந்தால் ஹோட்டலில் வேலை பார்ப்பவர்கள் அவளைத் தவறாக நினைத்து விடுவார்கள் என்று அவனே விளக்கம் சொல்லியிருக் கிறான்.. வெகு அக்கறையாக அவளுக்காக அவன் நாற்காலியை இழுத்துப் போட்டால் மட்டும் தவறாக நினைக்க மாட்டார்கள்..?

“டோன்ட் வொர்ரி..” புன்னகையுடன் அவன் உட்கார்ந்தான்..

‘அடப் போடா.. கோழிக்கோடில காலை வைச்சதில இருந்து நீ வொர்ரியைத்தான் உண்டு பண்ணிக்கிட்டு இருக்க.. இதில டோன்ட் வொர்ரியாம்..’

மௌன முறைப்புடன் உட்கார்ந்தாள் நந்தினி.. சுற்று முற்றும் பார்த்தாள்.. அந்த சின்ன ஹாலில் அவர்களைத் தவிர வேறு எவரும் உணவருந்த அமர்ந்திருக்கவில்லை.. அவர்கள் உட்கார்ந்திருந்த டேபிள் சேர் போல நான்கு மூலைகளிலும் எதிரும் புதிருமாக இருவர் அமர்ந்து சாப்பிடும்படி நான்கு செட் டேபிள், சேர்கள் இருந்தன.. அவற்றில் ஒன்றில்தான் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.. நடு மையத்தில் ஹாலின் மொத்தப் பரப்பளவையும் ஆக்ரமித்து நீண்டிருந்த பெரிய டேபிள் வேலைப் பாடுகளுடன் வெகு அழகாக இருந்தது.. அதன் இரு முனையிலும் இரண்டு சேர்கள் இருக்க பக்கவாட்டில் பக்கத்திற்கு பதினொன்றாக இருபத்தியிரண்டு சேர்கள் இருந்தன.. மொத்தம் இருபத்தி நான்கு சேர்கள் என்று மனதுக்குள் கணக்கிட்டுப் பிரமித்துப் போனாள் நந்தினி..

“இது பார்ட்டி ஹாலா..?” அறிந்து கொள்ளும் குழந்தைத்தனமான ஆர்வத்துடன் கேட்டாள்..

அதை ரசிக்கும் புன்முறுவலுடன் இல்லையெனும் விதமாய் தலையை ஆட்டிய ரவிச்சந்திரன்..

“இது எங்க ஃஃபேமிலி மட்டும் சாப்பிடறதுக்கான பிரைவேட் டைனிங் ஹால்..” என்றான்..

“ஓ...”

கண்களை விரித்து.. இதழ்களைக் குவித்து.. தலையை ஒரு பக்கமாக சாய்த்து என அலாதியான அழகுடன் மிளிர்ந்தவளின் கதுப்புக் கன்னங்களைப் பிடித்துக் கிள்ள வேண்டும் போல கிளர்ந்தான் ரவிச்சந்திரன்.. இடுங்கிய அவனது கண்களின் மேய்ச்சல் பார்வையில் அவள் மிரண்டு விழித்ததில் சட்டென சிநேகிக்கும் பார்வைக்கு மாறியவன் இதமாக முறுவலித்தான்..

“இந்த டைனிங் ஹாலில் எங்க ஃஃபேமிலியைச் சேர்ந்தவங்க மட்டும்தான் சாப்பிட முடியும்.. மத்தவங்க வர முடியாது .. ஹாலின் வெளியே டோரில பார்த்திருப்பியே.. நாட் அட்மிஷன்னு டோரில போட்டிருப்பாங்க..”

பூடகமான அவன் குரலில் ஏதோ மர்மம் ஒளிந்திருப்பதைப் போல அவளுக்குப் பட்டது.. அது என்ன

மர்மமாக இருக்கு முடியும் என்று நந்தினிக்கு விளங்கித் தொலைக்கவில்லை..

‘இருந்தாலும் இவன் இம்மாம் பெரிய மர்ம வீரனாக இருந்து தொலைக்கக் கூடாது..’ மனதுக்குள் புழுங்கினாள்.

“என்னுடன் டைம் ஸ்பெண்ட் பண்ண வரும் பெண்கள் ரெஸ்ட்டாரெண்டில் சாப்பிட்டுக் கொள்ளலாம்.. இந்த ஹாலுக்குள் நுழைய முடியாது... எங்க ஃபேமிலியா இல்லாம ஃபிரண்ட்லியா இந்த ஹாலுக்குள் எண்டராகியிருக்கும் முதல் பெண் நீதான்..”

இதற்கு நான் மகிழ்ந்து போக வேண்டுமாக்கும் என்று நினைத்துக் கொண்டாலும் அவன் சொல்லிய விளக்கத்தில் மனதுக்குள் ஓர் மத்தாப்பூ ஒளிர்வதை நந்தினியால் தடுக்க முடியவில்லை..

“இந்த ஹாலில் என்னுடன் நீ சாப்பிட்டால் உன் மரியாதை கூடத்தான் செய்யும்.. குறையாது..”

அவன் சொன்னது உண்மைதான் என்பதை அவர்களுக்குப் பரிமாறிய சர்வர்களின் முகத்தில் தெரிந்த பயபக்தி காட்டிக் கொடுத்தது.. தன்னை மகாராணி போல உணர்ந்தாள் நந்தினி.. இருந்தாலும் வீம்பைக் கை விடாமல்

'இதை ஒன்றும் நான் பெரிதா எடுத்துக்கலை..' என்பதைப் போல கெத்தாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

அதை உணர்ந்திருப்பவனைப் போல அவன் குறுஞ்சிரிப்பு சிரித்ததில் 'இவன் என்ன என்னை வேடிக்கை பார்க்கிறானா..?' என்று சினம் கொண்டாள்..

அப்படி அவன் அவளை குழந்தை போல பாவித்து ரசனையுடன் அவளது முக பாவனைகளை வேடிக்கை பார்ப்பது அவளுக்குப் பிடித்தமானதாக இருந்து வைத்ததில் அவளது சினம் அதிகரித்தது..

**'தூண்டிற் புழுவினைப் போல் - சிறு**

**சுடர் விளக்கினைப் போல..'**

மறுபடியும் எட்டயபுரத்துக் கவிஞனின் கவிவரிகள் மனதில் வர நந்தினி பெருமூச்சு விட்டாள்.. அது எதற்கு என்பதைப் போல அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி வசீகரத் தூண்டில் போட்டதில் தூண்டிற் புழுவாகத் தடுமாறினாள்.. சுடர் விளக்கின் சுடரொளி காற்றில் படபடப்பதைப் போல அவளது மனதும் படபடத்தது..

“உங்க ஹோட்டல்ன்னு சொல்கிறீங்க.. நீங்க ஆர்டர் பண்ணாம அவங்க இஷ்டத்துக்கு ஃபுட் அயிட்டத்தைக் கொண்டு வந்து அடுக்கிக்கிட்டு இருக்காங்க..?”

எதையாவது பேச வேண்டும் என்பதற்காக பேசி வைத்தாள்.. மாறாத குறுஞ்சிரிப்புடன் அவளைக் கேலியாக பார்த்தவன்..

“இது என்னோட ஹோட்டல்.. இங்கே அடிக்கடி வருவேன்.. இது ஒண்ணும் ஃபர்ஸ்ட் டைமில்லை.. எனக்கு என்னென்ன ஃபுட் அயிட்டம் பிடிக்கும்ன்னு என் வொர்க்கர்ஸுக்குத் தெரியும் .. இது ஒரு கேள்வின்னு கேட்க வந்திட்ட..” என்று சிரித்தான்..

‘இவன் கிட்ட மாட்டிக்கிட்டு நோஸ்கட் வாங்கறதே என் பிழைப்பாப் போச்சு..’ அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் வெட்கம் பிடுங்கித் தின்றதில் நந்தினி வேறு வகையில் பாய்ந்தாள்..

“உங்களுக்குப் பிடிச்ச ஃபுட் அயிட்டங்கள் எனக்கும் பிடிச்சிருக்கனும்னு கட்டாயம் ஏதுமிருக்கா பாஸ்..? உங்ககிட்ட வேலை பார்க்கிறவங்களுக்கு என்ன பிடிக்கும், ஏது பிடிக்கும்ன்னு கேட்கக் கூடாதுங்கிறது உங்களோட ரூலா

பாஸ்..? டிரெயின் டிராவலிலும் இப்படித்தான்.. உங்க இஷ்டத்துக்கு ஆர்டர் கொடுத்தீங்க.. இங்கே உங்க ஹோட்டலில பிரேக்ஃபாஸ்ட் சாப்பிட வான்னு அழைத்துக்கிட்டு வந்து உட்கார வைத்து உங்களுக்கு பிடிச்ச ஃபுட் அயிட்டத்தை பரத்தி வைச்சுச் சாப்பிடச் சொல்கிறீங்க.. இது ஹிட்லர்த்தனம்ன்னு உங்களுக்குத் தோணலியா..?

ம்ஹூம்.. பேசாம என் ரூமிலேயே சாப்பிட்டிருக்கலாம்..

எனக்குப் பிடிச்சதை வரவழைச்சுச் சாப்பிட்டிருப்பேன்.. உங்ககிட்ட வேலை பார்க்கிறவங்க உங்களுக்குப் பிடிச்ச ஃபுட் வெரைட்டிஸைத்தான் சாப்பிடனுமா..?"

"இல்லையே.. உனக்குப் பிடிச்ச அயிட்டத்தை ஆர்டர் பண்ணு.. கொண்டு வருவாங்க.. டேக் திஸ் மெனு கார்டு.." ரவிச்சந்திரன் சுட்டிக் காட்டிய திசையில் இருந்த மெனுகார்டைக் கண்டதும்.. 'மறுபடியும் பல்ப் வாங்கிட்டேனா..' என்று நொந்து போனாள் நந்தினி.. குப்புற விழுந்தாலும் உதடுகளில் மண் ஒட்டவில்லை என்று காண்பிக்கும் விதமாக மெனு கார்டைப் புரட்டி அவளுக்கு வேண்டிய உணவு வகைகளைச் சொன்னாள்.. நகராமல் பேரர் நின்றதில் ரவிச்சந்திரனைப் போல புருவங்களை

உயர்த்தினாள்... அவனைப் போன்ற தோரணையுடன் அவளால் புருவங்களை உயர்த்த முடியவில்லை...

“வரலைன்னா.. விட்டிரு..” அக்கறையாகச் சொல்வதைப் போலச் சொன்ன ரவிச்சந்திரனின் குரலில் நகைப்பிருந்தது.. லஜ்ஜையுடன் உதட்டை மடித்துக் கடித்தாலும்..

“ஆர்டர் கொடுத்தா ஃபுட் வரும்ன்னீங்க.. இங்கே உங்க பேரர் அசையக் கூட இல்லை.. சிலை மாதிரி நிற்கிராரே..” என்று மிதப்பாக தலையைக் குலுக்கினாள்..

“மெல்ல.. கழுத்துச் சுளுக்கிக் கொள்ளப் போகுது.. நீ சொன்ன ஃபுட் அயிட்டமெல்லாம் ஆல்ரெடி வந்து சேர்ந்தாச்சே.. அதான் இவன் அசையாம நிற்கிறான்.. இவ்விட நோக்கு..” என்றான் ரவிச்சந்திரன்..

“வாஹ்ரே.. வா.. மலையாள வள நாட்டில பிறந்த வருங்கிறத புரூவ் பண்றீங்களாக்கும்..?” என்றபடி டேபிளை பார்வையிட்டாள் நந்தினி..

அவள் கேட்ட உணவு வகைகள் டேபிளின் மீது இருந்தன.. “எனக்கும் இந்த வெரைட்டீஸ்தான் பிடிக்கும்..” ரவிச்சந்திரனின் விழிகள் மின்னின..

‘இதை வைத்து எனக்கு ஆகப் போவதென்ன..?’ நந்தினி உதட்டைப் பிதுக்கி விட்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

“ஃபுட்டில் கூட உன் டேஸ்டும்.. என் டேஸ்ட்டும் ஒண்ணாயிருக்கே..” வியந்தான் ரவிச்சந்திரன்..

‘ஆமாண்டா.. அதுக்கென்ன இப்ப..?’ வெட்டும் பார்வை பார்த்த நந்தினி..

“ஃபுட்டில் கூடன்னா..? வாட்’ஸ் த மீனிங்..? எனக்கொன்னும் புரியலை..” என்று தோள்களைக் குலுக்கினாள்..

“அப்பத் தலையைக் குலுக்கின.. இப்பத் தோள்களா..? இதில புரியாம இருக்கிறதுக்கு என்ன இருக்கு..? நமக்குப் பொதுவான டேஸ்ட்டா பாட்டு இருக்கே.. மறந்திட்டியா..?” ஆழ்ந்து பார்த்தான் ரவிச்சந்திரன்..

**‘அவள் எந்தன் மனமேடை..**

**தவழ்கின்ற பனிவாடை..’**

கேரளத்தின் ஜில்லிப்பை அவளது இருப்பு அதிகப்படுத்திக் கொண்டு இருந்ததைப் போல இருந்தது அவனுக்கு..

**‘எங்கே நானென்று.. தேடட்டும் என்னை..**

## சிந்தாத முத்தங்கள் இந்த..’

நந்தினியின் மனதில் பாடல் எழுந்ததில் மறக்க முடியுமா என்று அவள் துயர் கொண்டாள்..

மறக்கத்தான் வேண்டும்.. அந்த இரவு நேர ரயில் பயணத்தை.. அவனது புருவங்கள் உயர்ந்து இறங்கும் வசீகரத்தை.. அவனது ஆளை மயக்கம் கம்பீர கவர்ச்சியழகை.. அவனிடம் வேலை பார்க்கப் போகும் நா ள்களை என்று அனைத்தையும் அவள் மறந்துதான் ஆக வேண்டும்.. நினைத்துப் பார்ப்பதினால் யாதொரு பயனும் இருக்கப் போவதில்லை.. பதில் சொல்லாமல் உணவில் கவனமாக இருப்பதைப் போல அவள் பாசாங்கு செய்தாள்.. அவளை உற்றுப் பார்த்த ரவிச்சந்திரன்..

“என்னதான் என்னைப் போல உனக்கும் பாட வரும்ன்னாலும்.. மியுசிக் இண்ட்ஸ்ட்ருமென்டை வாசிக்கத் தெரிந்தவன்ங்கிற முறையில நீ என்னை விடக் குறைவுதான்.. எனக்குக் கிட்டார் வாசிக்கத் தெரியும்.. உனக்கு பாட மட்டும்தானே தெரியும்..?” என்று வம்பிழுத்தான்..

“யார் சொன்னது..? நான் வீணை வாசித்தா அந்த சரஸ்வதியே வந்து வாசிக்கிறதைப் போல அற்புதமா

இருக்கும்ன்னு எல்லோரும் சொல்வாங்க.. தெரியுமா..?” ரோஷத்துடன் அவள் வாய்விட்டு விட.. இது.. இது.. இதைக் கேட்கத்தான் நான் வம்பிழுத்தேன் என்று ரவிச்சந்திரனின் கண்கள் சிரித்தன..

# அத்தியாயம் 39

**‘எ**த்தனை அழகு..!’

கரையோரமாக அடர்ந்திருந்த தென்னை மரங்களுக்குப் பக்கத்தில் அலையடிக்கும் கடலைப் பார்க்க ஒரு அழகாக இருந்ததில் லயித்துப் போனாள் நந்தினி..

பக்கத்தில் வெகு இயல்பாக பேண்ட் பாக்கெட்டில் கை விட்டபடி நடந்து வந்து கொண்டிருந்த ரவிச்சந்திரனை ஓரக் கண்ணால் பார்த்தாள்.. நல்லவேளை..! அவள் நோட்டமிடுவதை அவன் கவனிக்கவில்லை.. செல்ஃபோனை காதுக்குக் கொடுத்து வியாபாரம் பேசிக் கொண்டிருந்தான்..

‘எங்க இருந்தாலும் பிஸினெஸ் பேசி முடிச்சுடறான்..’

ரயிலில் அவன் லேப்டாப்புடம் கையுமாக இருந்ததை நினைத்துப் பார்த்தாள் நந்தினி.. அப்போதும் இது போலத்தான்.. ஏதோ ஒரு முக்கியமான ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டதாக மெயில் அனுப்பிக் கொண்டிருந்தான்.. அதை இப்போது அவள் சொன்னால்..

“வேவு பார்த்தியா..?” என்று கேட்டாலும் கேட்டான் என்பதால் முன் ஜாக்கிரதையாக வாய் மூடிக் கொண்டாள்

நந்தினி.. மறுபடியும் அவனைப் பார்த்தாள்.. கடல் காற்றில் அவன் முடி அலை பாய்ந்து முன்னுச்சியில் விழுந்து மறைத்ததில் அவளது மனமும் அலைபாய்ந்தது.. அவன் பார்க்கவில்லையென்ற தைரியத்தில் அவள் நோட்டமிட அவள் எதிர்பாராத தருணத்தில் திரும்பி அவன் அவளது விழிகளை நேருக்கு நேராக சந்தித்தான்..

‘கடவுளே..! நான் பார்க்கிறதைப் பார்த்துட்டானே.. உடனே இவனை சைட் அடிக்கிறேன்னு ஆரம்பிச் சுருவானே..’ நாக்கைக் கடித்தபடி அவசரமாக கடலலைகளைப் பார்ப்பதைப் போல பாசாங்கு செய்தாள் நந்தினி.. மனம் படபடத்தது..

“என்ன்ன்...ன..?”

அதே அழுத்தமான குரல்.. ரயிலில் சீண்டியபோது இப்படித்தான் சீண்டினான்.. அடுத்து என்ன சொல்வான் என்பதுதான் அவளுக்குத் தெரிந்த விவரமாயிற்றே..

“சைட் அடிக்கிறயா..?”

ஒருவிதமான கிசுகிசுப்பு கலந்த ரகசியக் குரலில் அவன் கேட்டபோது அவள் மனதில் ரம்யம் பரவியது..

“ஆஹா.. இவர் பெரிய மன்மதன்.. சைட் அடிக்கிறேன்.. போவீங்களா..” என்ற போது அலைகடல் துள்ளியதைப் போல அவளது குரலும் துள்ளியது..

“நான் பார்க்காதப்ப என்னை நீ பார்த்தா சைட் அடிக்கிறேன்னுதான் மீனிங் ஆகும்..”

“உங்க மீனிங்ஸெல்லாம் இந்த லட்சணமாத்தான் இருக்கும்..”

“ஊஹும்..?”

அவன் புருவங்களை வசீகரமாக உயர்த்தி இறக்கி அந்தக் கடற்கரையின் அழகை அதிகப்படுத்தினான்..

‘கள்ளன்..’

அவன் பேச்சையும் செய்கையையும் அவள் ரசித்தாள்..

‘இப்படித்தான் காலையிலே பிரேக்ஃபாஸ்ட் சாப்பிட்டுக்கிட்டு இருந்தப்ப.. வாயைப் பிடுங்கி நான் வீணை வாசிப்பேன்ங்கிறதை சொல்ல வைத்தான்.. நான் ஒரு ஓட்டை வாய்.. அத்தோடு நிறுத்தினேனா..?’

நந்தினியின் மனம் காலையில் வந்த பேச்சை அசை போட்டது..

“பாருப்பா.. நீ வீணைவாசிச்சா நந்தினி வீணை வாசிக்கிறதைப் போல இருக்காதா..? சரஸ்வதி வீணை வாசிக்கிறதைப் போல இருக்குமா..?”

“யெஸ் பாஸ்..”

“கொள்ளைக் கூட்டத் தலைவனாக்கிட்ட..”

“நீங்கதான் செகண்டுக்கொருதரம் நீங்க பாஸ் நான் உங்க ஸ்டாப்ங்கிறதை நினைவு படுத்தினதா நினைவு..”

“எல்லா நேரத்திலயும் நான் பாஸா இருக்கனும்னு அவசியமில்லை.. சம் டைம்ஸ் ரவிச்சந்திரனாவும் இருப்பேன்..”

புரியாத ஊடுறுவும் பார்வையுடன் சொன்னான் அவன்..

“அந்த சம் டைம்ஸ் எப்பப்ப வரும்னு நீங்க சொல்லிட்டிங்கன்னா தேவலாம்..” பவ்யமாக சொன்னாள் நந்தினி..

“எதுக்கு..? என்னை ரவிச்சந்திரான்னு நீ கூப்பிடறதுக்கா..?” சிரிக்காமல் கேட்டு அவளை மயக்கினான் அவன்.. இதுபோலவே அவன் பேசிக் கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று அவளுக்கு ஏக்கமாக இருந்தது..

“இன்னும் என்னென்ன தெரியும்..? வாயடிக்கிறதை சொல்லக் கூடாது..” என்றான்..

நந்தினி முறைத்தாள்.. அவன் கைகளை உயர்த்திச் சிரித்தான்.. பின், அவளை ஆழ்ந்து பார்த்தபடி..

“ரூமில ஆர்டர் கொடுத்து வரவழைச்சுச் சாப்பிட்டா இப்படிப் பேசிக்கிட்டே சாப்பிட முடியுமா..?” என்று கேட்டான்..

‘ஆமாமில்ல..’

நந்தினிக்கு அவனுடன் உரையாடிக் கொண்டே சாப்பிடும் அந்தச் சூழலை மிகவும் பிடித்திருந்தது.. அவளைப் பற்றி அவனிடம் சொல்ல விரும்பினாள்.. அது ஏனென்றுதான் தெரியவில்லை..

“நான் பரத நாட்டியத்திலேயும் எக்ஸ்பர்ட்டாக்கும்..”

பெருமையாக அறிவித்தாள்.. “வெரிகுட்..” மெச்சினான் அவன்..

“எங்க ஸ்கூல்ல அனிவர்சியில ஒவ்வொரு வருஷமும் பாட்டிலேயும், டான்ஸிலேயும் நான்தான் ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்குவேன்.. எல்லோரும் சொல்வாங்க..”

“என்னன்னு..?”

“ஃபர்ஸ்ட் பிரைஸை எனக்குன்னு நான் ரிசர்வ் பண்ணி வைச்சிருக்கேன்னு..”

“ஊஹூம்..?”

அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி அந்தக் காலைப் பொழுதை அழகாக்கினான்.. இப்போது நினைத்துப் பார்க்கும் போது அவனுடன் அளவளாவிக் கொண்டிருக்கும் அத்தனைத் தருணங்களும் அழகானவைதான் என்று நந்தினிக்குத் தோன்றியது..

அவளது மனநிலை குறித்து அவளுக்கே விசித்திரமாக இருந்தது.. தன்னைப் பற்றிய உண்மையை ரவிச்சந்திரன் அவளிடம் சொன்ன பின்பும் அவன்மீது அவளுக்குள் மயக்கம் உருவாகிறதென்றால் இது விந்தையில்லாமல் வேறு என்ன..?

‘நான் என்ன இவனைக் காதலிக்கவா வந்திருக்கேன்..? பெல்ட் மன்னனைக் கல்யாணம் பண்ணிக்கிறதிலிருந்து தப்பிக்க ஓடி வந்திருக்கேன்.. இவன் எப்படியிருந்தா எனக்கென்ன..? எங்க அப்பாம்மா மனசு மாறியதும் இவனுக்கு டாட்டா காண்பிச்சுட்டு அதே மங்களூர் எக்ஸ்பிரஸ்ல சென்னைக்கு ரிடர்ன் ஆகப் போறேன்.. இடைபட்ட நாளில இவன் கிட்ட கண்ணகி போல முறைச்சுச்

சீன் காட்டிக்கிட்டு இருக்கனுமா..? அப்படி முறைச்சாத்தான் நான் ஸ்டெரியிட் பார்வர்டுன்னு ஆகுமா..?'

நந்தினி வெகு இலகுவாக ரவிச்சந்திரனின் மறு பக்கத்தைக் கடந்தாள்.. அவளுக்குத் தெரிந்த ரவிச்சந்திரன் கண்டிப்பும் கறாருமான ஆளை மயக்கும் கம்மாண்டர்..! மனதை ஈர்க்கும் இசையை அறிந்தவன்.. இரவுப் பாடகன்..! விஷமமும் குறும்புமாக வில்லத்தனமில்லாமல் அவளிடம் வம்பிழுப்பதில் வல்லவன்.. அவனுடன் போடும் சண்டைகள் இனிமை நிரம்பியவையாக இருக்கின்றன..

இதமான அந்தப் பொழுதுகளை நந்தினி ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்..? அந்தந்தப் பொழுதுகளில் வாழ்ந்து விட்டுப் போகலாமே.. சிரிப்பும், கலகலப்பும் பிறர் தர வாரா எனும்போது.. அதை அள்ளி வழங்கும் அட்சயப்பாத்திரம் போல வந்திருப்பவனிடம் முகம் திருப்ப வேண்டிய அவசியமில்லையே..

“என்ன ஆழ்ந்த சிந்தனையில இறங்கிட்ட..?”

“ச்சும்மா..”

“அதுதான் சரி.. ரொம்பவும் சிந்திக்காதே.. உனக்கெல்லாம் அது ஸூட் ஆகாது..”

“உங்களுக்கு மட்டும் ஸூட் ஆகுமோ..?”

“ஆகும்..”

“ஏனாம்..?”

“ஏன்னா சிந்திக்கிறதிலே நீ எல்.கே.ஜி.. நான் யுனிவர்சிட்டி..”

“நினைப்புத்தான்..”

“யாருக்கு..?”

“உங்களுக்குத்தான்..”

“யாரைப் பத்தி..? உன்னைப் பத்தியா..?”

ஆழ்ந்த அவன் கேள்வியில் அவளது முகம் குங்குமமானது..

‘இவன் ஒருத்தன்.. அச்சு அசல் காதலிகிட்டப் பேசறதைப் போலவே பேசி வைப்பான்.. இம்சையெல்லாம் எனக்குத்தான்..’

அவள் கடற்கரையைப் பார்த்தாள்.. பசுமை மிக்க தென்னைமரங்களுடன் இருந்த கடற்கரை அவளை ஈர்த்தது..

“உங்க ஊர்க் கடற்கரையெல்லாம் படு அழகு..” ரசித்தபடி சொன்னாள்..

“அழகு மட்டுமில்லை.. இது வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த இடமும் கூட..” என்றான் ரவிச்சந்திரன்..

“ஹை.. உங்க ஊருன்னதும் கதையளக்கறீங்களா..? எங்க தஞ்சாவூரை விடவா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஊர் இருக்க முடியும்..? எங்க ஊர் பெரிய கோவில் ஒன்று போதுமே..”

“பெருமையடிக்கறதில உன்னை யாரும் மிஞ்சிற முடியாது..”

“உள்ளதைச் சொல்கிறேன்..”

“நானும் உள்ளதைத்தான் சொல்றேன்.. வாஸ்கோடகாமா நறுமணப் பொருள்களைத் தேடி கீழை நாடுகளுக்கு வந்த போது இந்தக் கடற்கரையிலதான் வந்து இறங்கினாராம்..”

“நிஜமாவா..?”

கண்கள் விரியக் கேட்டவளின் அப்பாவித்தனம் அவளை ஈர்த்தது வைத்ததில் அவளை ஆழ்ந்து பார்த்தான்.. அந்தப்

பார்வையில் பேச்சிழந்தவள் கடற்கரை மணலில் கிடந்த கிளிஞ்சல்களைப் பொறுக்குவதைப் போலக் குனிந்து அவன் பார்வையிலிருந்து தப்பித்தாள்..

“கை அழுக்காகும்.. அதைக் கீழே போடு..”

சின்னக் குழந்தையை அதட்டுவதைப் போல அதட்டினான்.. அவளுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.. மூக்கை உறிஞ்சியபடி..

“எனக்குத் தெரியும்..” என்றாள்..

“என்ன தெரியுது..? ஒன்றுமே தெரியலை..” அவளை ஏற இறங்கப் பார்த்தபடி சொன்னான்..

‘இவன் எதைச் சொல்கிறான்..?’ அவளுக்கு குறுகுறுப்பாக இருந்தது..

போடா நீயுமாச்சு.. உன் அதட்டலுமாச்சு என்று துப்பட்டாவை விரித்து அதில் கிளிஞ்சல்களைப் பெறுக்கிப் போட்டு முடிந்து கொள்ளலாமா என்று யோசித்தாள்.. அப்போது அவன் முகம் எப்படியெல்லாம் கோணலாகும் என்று பார்க்க வேண்டும் போல அவளுக்கு ஆசையாக இருந்தது..

‘அஷ்டகோணலாப் போகும்... மகனே... எதுக்கெடுத்தாலும் குச்சியைக் கையில் வைத்திருக்கும் வாத்தியாரைப் போலவா அதட்டற..? என்னை யாருன்னு நினைச்ச..? நான் சேட்டை பண்ண ஆரம்பிச்சேன்னு வைய்யி.. நீ தாங்க மாட்ட.. கோழிக்கோடே வேணாம்.. வய நாட்டு எஸ்டேட்டுக்கு ஓடிப் போகலாம் வான்னு என் கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு ஓடிருவ..’

அப்போதும் அவன் அவள் கையைப் பிடித்து இழுத் துக் கொண்டு ஓட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மிகுந்த திட்டத்தை மனதுக்குள் வகுத்தபடி நந்தினி கிளிஞ்சல் பொறுக்குவதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள்..

“ஒரு இடத்தில அடங்கி நிற்க மாட்டியா..?” என்றான் ரவிச்சந்திரன்..

“ஓடினாத்தான் அது ஆறு சாரே.. தேங்கி நின்னாக் குட்டை..”

தலை நிமிராமல் பதில் சொன்னாள் நந்தினி.. “அப்ப நீ ஆறுங்கிற..?”

“அதே.. அதே..”

“ஓடினாத்தான் ஆறுன்னு பெரியவங்க சொன்னதை நீ வேறுவிதமா அர்த்தப் படுத்திக்கிட்டன்னு நினைக்கிறேன்..”

“எப்படியாம்..?”

“நீ ஆறுங்கிறதைப் புரூவ் பண்ண வீட்டை விட்டு ஓடி வந்திருக்கயே.. அதை வைத்துத்தான் சொல்றேன்..”

“யு.. யு..”

கோபத்தில் முகம் சிவக்க அவனைத் திட்டுவதற்கு வார்த்தை வராமல் திணறினாள் நந்தினி..

“திட்டறதை அப்புறமாக் கண்டினியூ பண்ணிக்கலாம்.. முதலில் கையில் இருக்கிறதைக் கீழே போடு..” மறுபடியும் அதட்டினான் ரவிச்சந்திரன்..

“ஏனாம்..? கிளிஞ்சல் பொறுக்க எனக்குப் பிடிச்சிருக்கு..”

நந்தினி அடம் பிடித்தாள்..

“எனக்குப் பிடிக்கலை..” கண்டிப்புடன் சொன்னான் அவன்..

“உங்களுக்குப் பிடிக்காததை நான் செய்யக் கூடாதா..?”

“ஆமாம் செய்யக் கூடாது..”

“அதுதான் ஏன்னு கேட்கிறேன்.. நானென்ன உங்கள் அடிமையா..?”

“என்னிடம் வேலை பார்ப்பவள்..! கேரளாவில நான் வெல் நோன் பெர்சன்.. இது பீச்.. பப்ளிக் பிளேஸ்.. பல பேர் வந்து போகிற இடம்.. அத்தனை பேருக்கும் என்னைத் தெரியும்.. நீ இப்படிக் கிளிஞ்சலைப் பொறுக்கிக்கிட்டு இருந்தா என் இமேஜ் என்னாகிறது..?”

“நான் கிளிஞ்சல் பொறுக்கிறதுக்கும் உங்க இமேஜுக்கும் என்ன சம்பந்தம்..?”

“ரவிச்சந்திரனின் பெர்சனல் செக்கரட்டரி கோழிக் கோடு பீச்சில கிளிஞ்சல் பொறுக்கிக்கிட்டு இருந்ததா பிஸினெஸ் மேகசின்ல எழுதுவாங்க.. என்னால் அதை அனுமதிக்க முடியாது..”

ரவிச்சந்திரன் குரலை உயர்த்த ஆரம்பித்த போது அவர்கள் பக்கத்திலே..

“எந்தா சாரே.. நீங்களா..?” என்ற இனிய பெண் குரல் கேட்டது..

அந்தக் குரலில் வழிந்தோடிய உற்சாகத்தில்..

‘எவ.. இவ..?’ என்று நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.. கேரளத்துப் பெண்கள் கட்டும் சந்தன நிற ஜரிகை பார்டர் கொண்ட புடவையும், ரவிக்கையுமாக நெற்றியில் செந்நிற ஸ்டிக்கர் பொட்டுக்கு மேல் சந்தனக் கீற்றுடன் மஞ்சளழகி போல பெரிய கண்களுடன் இருந்த அந்தப் பெண் ரவிச்சந்திரனைத் தின்று விடுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. கரிய நிறத்தில் அடர்ந்திருந்த கூந்தலை விரிய விட்டிருந்தாள்.. அது இடுப்புக்குக் கீழ் தொங்கி காண்பவர்களின் மனதை அலைக்கழித்தது..

‘‘நானேதான்.. நீங்க எங்கே இந்தப் பக்கம்..?’’ தமிழில் கேட்டவனுக்கு..

‘‘ஞான் கோவிலுக்கு சாமி கும்பிடப் போயி... வழியில சாரிண்ட திவ்ய தரிசனம் கிட்டி...’’ என்று பரவசத்துடன் கேரளத்தில் பறைந்தாள் அந்தப் பெண்..

‘‘ரோஸி..! ஆ காண்ட்ராக்ட் குறிச்ச விவரம் வெல்லோம் அறிஞ்ஞோ..?’’ ரவிச்சந்திரனும் மலையாளத்தில் சம்சாரிக்க ஆரம்பித்தான்..

ரவிச்சந்திரனிடம் ஒட்டிக் கொள்வதைப் போல ஈஷிய அந்தப் பெண்ணை நந்தினிக்குக் கொஞ்சம் கூடப்

பிடிக்கவில்லை.. தூண்டில் போடும் அவளது பார்வையில் அப்பட்டமான அழைப்பிருந்தது.. அதில் ரவிச்சந்திரன் சிக்காமல் இருந்திருப்பானா என்று கேட்டது நந்தினியின் மனம்..

# அத்தியாயம் 40

**அ**வனைப் பற்றி அவன் சொல்லாமல் இருந்திருக்கலாம் என்று தோன்றியது நந்தினிக்கு.. மனதில் இந்த நோவு ஏற்படாமல் இருந்திருக்கும்.. எந்தவிதச் சந்தேகமுமின்றி இயல்பாக அவனிடம் பேசிப் பழகியிருக்கலாம்.. அவனிடம் பேசிப் பழகுபவர்களைச் சந்தேகிக்காமல் இருந்திருக்கலாம்.. அதற்கெல்லாம் வாய்ப்பின்றி அவன் அவனைப் பற்றிய விவரங்களை ஒப்பித்து விட்டான்.. எதனால் ஒப்பித்தானோ.. நந்தினியின் பாடுதான் திண்டாட்டமாகி விட்டது.. யாரைப் பார்த்தாலும் இவளுடன் இவன் எப்படியெல்லாம் பழகியிருப்பானோ என்று நினைக்கத் தோன்றுகிறது..

“இதுவரை விவரம் அறிஞ்சில்லோ சாரே.. விவரம் கிட்டியிருந்தா ஞான் சாருக்கு இ.மெயில் அனுப்பியிருப்பேனல்லோ..?” அந்த ரோஸி கொஞ்சினாள்..

‘தொலைவிலிருந்து பார்த்தால் இவள் ஆபிஸ் பேச்சைத்தான் பேசுகிறாள் என்று கற்பூரம் அடித்துச் சத்தியம் பண்ணினால் கூட யாரும் நம்ப மாட்டார்கள்..’ நந்தினி மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டாள்..

“ஆ புராஜெக்டு நம்ம கம்பெனிக்கு இம்பார்ட்டண்ட் ரோஸி..”

“ஞான் அறிஞ்சுல்லோ சாரே.. சாரிண்டத்து ஈ புராஜெக்ட் ஏபிக்கேன் அவரானு பாக்யம் செய்திருக் காண்டியது..? ஈ புராஜெக்ட் நிங்களுக்கு தந்தில்லோங்கில் அவருக்கானு நஷ்டம்..? சாருன்னல்ல..?”

அவர்கள் இருவரும் மாறிமாறி மலையாளத்தில் சம்சாரித்ததில் தான் அன்னியப்பட்டு விட்டதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. மலையாளமும் தமிழும் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவிகளைப் போல லய ஒற்றுமையுடன் ஒலித்தாலும் சில வார்த்தைகள் அர்த்தம் புரியாமல் தமிழச்சியான நந்தினியைத் தள்ளி நிறுத்தின..

“நான் வேணும்னா அந்தப் பக்கமா போயிரவா..?”

நந்தினியின் கண்கள் ரவிச்சந்திரனிடம் கனல் கக்கின.. அதில் அவன் கண்கள் மின்னின..

‘இது எதுக்காம்..’ அவள் மனம் கொதித்தது..

ரோஸியிடம் கடலை சாகுபடி செய்தபடி அவளைப் பார்த்துக் கண்களில் பல்பை எரிய வைக்கிறானே.. இவனது லீலா வினோதத்திற்கு ஒரு எல்லையே இல்லையா..?

“இன்னு சாரு ஃப்ரீயானோ..?” ரோஸி குழைந்தாள்..

“வொய்..?” என்றான் ரவிச்சந்திரன்..

“இன்னு லஞ்சுன்னு நமக்கு ஒப்பறத்து போயாலோ..?”

“ஞான் நந்தினிகூட லன்சுண்ண போகான் இருக்கிவா..”

அவர்களின் பேச்சு வார்தையில் ரோஸி அவனை மதிய உணவு உண்ண அழைப்பதையும், அவன் மறுத்து நந்தினியைக் கை காட்டுவதையும் ஒருவழியாக புரிந்து கொண்டாள் நந்தினி.. ஏனோ ரோஸியின் அழைப்பை மறுத்து நந்தினியுடன் உணவுண்ண வேண்டும் என்று அவன் சொல்லி விட்டதில் அவள் மனதில் குதூகலம் உண்டானது.. ரோஸியின் முகம் விழுந்து விட்டதில் தான் வெற்றி பெற்று விட்டதைப் போல சந்தோஷமடைந்தாள்..

“ஆரானு.. நந்தினி..?”

வெகு அருகில் நின்று கொண்டிருந்தவளை விடுத்து எங்கே அந்த நந்தினி என்று ரோஸியின் பார்வை சுற்றிச் சுற்றி வந்ததில் வெறுத்துப் போனாள் நந்தினி..

அவளைப் பார்த்தால் அந்த ரோஸிக்கு நந்தினியாகத் தெரியவில்லையா..?

“இதானு நந்தினி..!”

ரவிச்சந்திரன் கை காட்டியதும் கிளிஞ்சலும் கையுமாக நின்றிருந்த நந்தினியை விசித்திரமாக பார்த்து வைத்தாள் ரோஸி..

“ஈ பெண்குட்டியா..?” என்று அவள் இழுத்த இழுவையில் கையிலிருந்த கிளிஞ்சல்களை அவசரமாக நழுவ விட்டாள் நந்தினி..

‘சொன்னேன்ல்ல..?’ ரவிச்சந்திரனின் பார்வை அவளிடம் வினவியது..

நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளிடமிருந்த பொழிவு நிரம்பிய வசீகரத்தில் ரோஸி அவளை உற்றுப் பார்த்தாள்.. தலை வாரலில் இருந்து.. முக ஒப்பனை வரை ஓர்விதமான அலட்சியம் விரவியிருந்ததை

ரோஸியால் உணர முடிந்தது.. சுடிதாரின் துப்பட்டாவை கழுத்தில் போடாமல் கையில் சுழற்றிக் கொண்டிருந்ததில் வெளிப்பட்ட அவளது அழகைக் குறித்த அக்கறையின்மையில் ரோஸி ஆச்சரியப்பட்டுப் போனாள்.. ரவிச்சந்திரனைப் போன்ற ஆணழகனின் முன்னால் இப்படி ஒப்பனையைப் பற்றிய பிரக்ஞை துளியும் இல்லாமல் ஒரு பெண்ணால் இருக்க முடியுமா..?

கோழிக்கோடில் இருக்கும் ரவிச்சந்திரனின் ஏற்றுமதிக் கம்பெனியில்தான் ரோஸி சூப்பர்வைசராக வேலை செய்து கொண்டிருந்தாள்.. கடல்வாழ் உணவு வகைகளை பதப்படுத்தி அனுப்பும் நிறுவனம் அது..

எப்போதாவது ஒர்முறைதான் அந்தக் கம்பெனிப் பக்கம் போவான் ரவிச்சந்திரன்.. ஹோட்டலுக்குத்தான் அடிக்கடி வந்து செல்வான்.. அதில் ரோஸிக்கு ஏக்கமாக இருக்கும்..

“எனிக்கு ‘யாழ்’ ஹோட்டலிலே ஜோலி கிட்டினா வல்லிய சௌகரியமாயிருக்கும் சாரே..” என்பாள்..

“ஆராரு எவ்விடத்தில ஜோலி பார்க்கனுமோ.. அவ்விடத்திலதான் ஜோலி பார்க்கனும்..” என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவான் ரவிச்சந்திரன்..

என்றேனும் ஓர்நாள் ரவிச்சந்திரன் வரும் போதெல்லாம் அந்த நாள் ஓணம் பண்டிகை நாளைப் போல ரோஸிக்கு பிடித்தமான நாளாக இருக்கும்.. இருப்பதிலே அழகிய சேலையைக் கட்டிக் கொள்வாள்.. மணிக் கணக்கில் கண்ணாடி முன்னால் நின்று நேர்த்தியாக ஒப்பனை செய்து கொள்வாள்.. விழிகளுக்கு மைதீட்டி.. முகத்துக்கு லோஷன் பூசி.. தலையை சிலும்பல் இல்லாமல் வாரி விரிய விட்டு.. மடிப்புக் கலையாமல் சேலையுடுத்தி என்று மணப் பெண்ணைப் போலப் பார்த்துப் பார்த்து தன்னை அலங்காரம் செய்து கொண்டு ரவிச்சந்திரனின் முன்னால் பிரசன்னமாகும் ரோஸிக்கு.. பங்கரை போல நின்று கொண்டிருந்த நந்தினியைப் பார்க்கப் பார்க்க வியப்பாக இருந்தது..

‘ஒருவேளை.. சின்ன வயசில இருந்து கூட வளர்ந்த உறவுப் பெண்ணாக இருக்குமோ..’ என்ற சந்தேகம் ரோஸிக்கு எழுந்த அதே வேளையில் இருக்காது என்றும் அவளுக்குத் தோன்றியது..

அப்படியொரு உறவுப் பெண்ணை ரோஸி அறிவாள்.. ரவிச்சந்திரனை சிறு வயது முதற்கொண்டே அறிந்தவள்.. கூட வளர்ந்தவள்.. அவள் நந்தினியைப் போல ஒப்பனையின் மீது அக்கறையின்றி இருப்பதில்லையே.. ரவிச்சந்திரனை அயர

வைக்கும் ஒப்பனைகளை செய்து கொள்வதில் அவள் கை தேர்ந்தவளாயிற்றே..

“ஆரானு..? சாருண்ட பெந்துவாளோ..?” ரோஸி விசாரித்தாள்..

‘இவ என்ன கேக்கிறா..?’ நந்தினி விழித்தாள்..

“அல்ல.. எண்ட் பெர்சனல் செக்கரட்டரியானு..” என்று ரவிச்சந்திரன் சொன்னான்..

‘ஓ.. இவ நான் இவனுக்கு சொந்தமான்னு கேட்டிருக்கா போல... நான் யாராயிருந்தா இவளுக்கென்ன..?’ நந்தினி பல்லைக்கடித்தாள்..

“பெர்சனல் மேனேஜர்..” அடிக்குரலில் அவள் முணுமுணுத்தாள்..

“கொஞ்சம் அடங்கறியா..? உன் பிரச்னை பெரிய பிரச்னையா இருக்கு.. டெஸிக்னேஷன் எதுவா இருந்தா உனக்கென்ன..? உனக்குத் தேவை வேலை.. அவ்வளவுதான்..” அவளிடம் சீறினான் ரவிச்சந்திரன்..

அவன் நந்தினியிடம் கோபப்படுவதை வெகு திருப்தியாக பார்த்த ரோஸி மனத்தாங்கலுடன்..

“சாருண்ட பெர்சனல் செக்கரட்டரியா என்னப் புரமோட் பண்ணியிருக்கலாமல்லோ..?” என்று கேட்டாள்..

“பெர்சனல் செக்கரட்டரி போஸ்டை விட சூப்பர்வைசர் போஸ்ட் வல்லிய ஜோலி ரோஸி..” என்றான் ரவிச்சந்திரன்..

“எவருக்கு வேணும் வல்லிய ஜோலி..? ஞான் சாருண்ட பக்கத்திலேயே ஜோலி பார்ப்பேனுல்லோ..” ரோஸி விட்ட பெருமூச்சில் நந்தினிக்கு அவளை நான்கு அப்பு அப்ப வேண்டும் போல எரிந்தது..

ரவிச்சந்திரனைப் பார்த்து ரோஸி தாராளமாக ஜொள் விடட்டும்.. நந்தினி வேண்டாமென்று சொல்லவில்லை.. நந்தினியின் பக்கத்தில் நின்று கொண்டுதான் ஜொள் விட வேண்டுமா..? அக்கம் பக்கம் பார்த்து ஜொள் விட்டால் ஆகாதா..?

“எவருக்கு எந்த ஜோலியை அளிக்கனும்னு ஞான் டிசைட் பண்ணனும் ரோஸி..” கண்டிப்பான குரலில் அறிவுறுத்தினான் ரவிச்சந்திரன்..

அந்த மட்டிலும் அவன் நந்தினியிடம் மட்டும் முதலாளி தோரணையைக் காட்டவில்லை.. அவனிடம் வேலை செய்யும்

அனைத்து ஜீவன்களிடமும் காட்டுகிறான் என்பதில் சந்தோஷப் பட்டுப் போனாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் கடுகடுப்பை ரோஸி கண்டு கொள்வதாகவே இல்லை.. தூசியைப் போல அதைத் தட்டி விட்டு விட்டு ரவிச்சந்திரனைப் பார்வையிடும் பணியை செவ்வனே தொடர்ந்தாள்..

"சாருன்னு ஈ டிரஸ்ஸு நன்னயெிட்டு.. ஷேரு நல்லோ ஹேண்ட்சம் மேனாக்கும்.. ஈ டிரஸ்ஸில இன்னும் கூடுதல் ஹேண்ட்சம்மான்னு.."

ஜொள்ளொழுக ரோஸி வழிந்த வழிசலில் இருந்து அவள் ரவிச்சந்திரனின் உடையழகை வியக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டாள் நந்தினி..

அப்படி என்ன வகையான உடையை அணிந்திருக்கிறான் என்று ஓரக்கண்ணால் அவள் நோட்டம் விட்டதில் அவன் காபிக் கொட்டை வண்ணச் சட்டையும், பிஸ்கெட் வண்ண ஜீன்ஸுமாக இருப்பதை அவதானிக்க முடிந்தது..

'நல்லாத்தான் இருக்கான்..' அவள் மனம் ஜொள்ளியது.. அவளது அவதானிப்பை அவன் கண்டு கொண்டு கண்களில்

பல்பை எரிய விட்டதில் அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

‘இந்த ரோஸி இருக்கிறதாலே தப்பிச்சேன்.. இல்லேன்னா சைட்டடிக்கிறயான்னு கூசாம கேட்டு வைப்பான்..’ ரவிச்சந்திரன் நந்தினியை ஒரு மார்க்கமாக பார்த்து விட்டு ரோஸியின் பக்கமாகத் திரும்பி..

“ஆல்ரைட்.. யு கேன் கோ..” என்று பட்டுக் கத்தரித்தான்.. இவ்வளவுதானா என்ற ஏமாற்றத்தில் ரோஸியின் முகம் கூம்பிவிட்டது.. அவனது உடையைப் பற்றிய அவளது வர்ணனைக்கான எந்த பிரதிபலிப்பும் ரவிச்சந்திரனிடம் தென்படவில்லையே.. அவளும் ரவிச்சந்திரனைப் பார்க்கும் போதெல்லாம் ஜொள்ளருவியைக் கொட்டத்தான் செய்கிறாள்.. அவன் கண்டிப்புடன் பேசி அவளை எட்ட நிறுத்தி விடுகிறான்..

“ஞான் வரட்டே..?” நலிந்த குரலில் கேட்டாள்..

“ஓகே.. பை..” அவளை வழியனுப்புவதிலேயே குறியாக இருந்தான் ரவிச்சந்திரன்..

போக மனமில்லாமல் ரோஸி போனதை பார்த்துக் கொண்டிருந்த நந்தினி..

“ஒரு வழியாய் கடலை சாகுபடியை முடிச்சாச்சு போல..” என்றாள்..

“கடலை சாகுபடியா..?” புரியாதவனைப் போல கேட்டான் அவன்..

“ஹ..! யாருகிட்ட காது குத்தறிங்க..? எல்.கே.ஜி பப்பாவுக்கே கடலை சாகுபடியைப் பத்தித் தெரியறப்ப, நீங்க யுனிவர்சிட்டி.. உங்களுக்குத் தெரியாம இருக்குமா..?”

அவனது பாசாங்கை ரசித்தபடி சொன்னாள் நந்தினி.. அவன் “ஹா.. ஹா..” என சிரித்தான்..

“ரெண்டு பேரும் மலையாளத்திலே ஆழமா பேசிக்கறீங்க.. அவளுக்கு உங்களைக் கண்டாலே ஜிவ்வுன்னு ஆகுதுன்னு பட்டவர்த்தனமாத் தெரியுது.. என்னை வேற தேவையில்லாம நிற்கறியேன்னு முறைச்சு முறைச்சுப் பார்க்கிறா.. ரெண்டு பேரும் மலையாளத்தில பேசிக்கிறப்ப நான் எதுக்கு வேஸ்டா இங்க நிக்கனும்னு தள்ளிப் போய் நிக்கலாம்ன்னுதான் நினைச்சேன்.. அதுக்குள்ள பாஸ் அவளைத் துரத்தி விட்டுட்டீங்க..”

நந்தினி நொடித்தாள்.. நொடிக்கும் போது வெளிப்பட்ட அவளது பொறாமை கலந்த முக பாவங்களில் தன்னைத்

தொலைத்தான் ரவிச்சந்திரன்.. மன உணர்வுகளை மறைக்கத் தெரியாத அனிச்ச மலரைப் போன்றவளைக் கண்டு அவனுக்கு என்னென்னவோ ஆகிவைப்பதை அவளிடம் எவர் சொல்வார்..?

அவன் முகத்தில் மென்மை பரவியது.. அது இடம் மாறி அவள் மனதிலும் பரவியது.. இப்படி மென்மையுடன் அவன் பார்ப்பதைப் பார்க்க எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று அவள் மனம் குளிர்ந்து போனாள்..

இது போலவே அவன் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..?

“துரத்தி விடாம இன்னும் கொஞ்ச நேரம் பேச எனக்கு ஆசைதான்.. உன் முகத்தில கடுகு பொரிஞ்சதா.. ஆஹா.. என்னோட பெர்சனல் செக்கரட்டரி கோபமா இருக்காப்பலேயேன்னு துரத்தி விட்டுட்டேன்..”

“பெர்சனல் மேனேஜர்..”

“அதை நீயே சொல்லிக்க..”

“நான் பி.ஈ. படிச்சவ..”

“ரிசல்ட் இன்னும் வரலை.. நினைவில வைச்சுக்க..”

“அதென்ன.. ரோஸியை மட்டும் நீங்கன்னு மரியாதையாய் பேசிட்டு என்னை நீன்னு சொல்றது..? சார் பாஸ்ன்னா நாங்க ரெண்டு பேருமே உங்க ஸ்டாப்ஸ்தானே.. அவளை வாங்கம்பீங்க.. என்னை நீ, வா, போம்பீங்களா..? என்ன சார் நியாயம் இது..? மலையாள வள நாட்டிலே இப்படித்தான் நியாயமிருக்குமா..?”

‘இவ வாய் இருக்கே..’

செழித்து வளர்ந்த காட்டுப் பூக்களிடம் இருக்கும் வனப்பை அவளிடம் கண்டான் ரவிச்சந்திரன்.. இவள் காணக் கிடைக்காதவள் என்று தோன்றியது..

“நீ சின்னப் பப்பா..” வேண்டுமென்றே ராகமிழுத்தான்..

“அவ மட்டும் பீப்பாவா..? நான் சின்னப் பெண்ணுன்னா அவளும் சின்னப் பெண்தான்..”

“மக்கு.. மக்கு.. அவளும் நீயும் ஒன்றா..?” செல்லமாக ரவிச்சந்திரன் குட்டிய குட்டு நந்தினிக்கு வலிக்கவில்லை.. அவன் பதிலில் அவளது மனம் இனித்தது..

‘அப்படி எந்த வகையில் அவளை விட நான் ஸ்பெஷலாம்..?’ அவள் மனம் துள்ளலுடன் சிணுங்கியது.. நீ

எனக்கு முக்கியமானவள் என்ற ஒன்றிரண்டு வார்த்தைகளில் மனதில் ஒன்றிக் கொண்டிருந்த அனைத்து மன ரணங்களும் ஆறிவிட்டன..

# அத்தியாயம் 41

**கு**ளிர்ச்சி மிக்க கோழிக் கோடை சுற்றி வருவதுதான் வேலையா என்று கேட்கத்தான் நந்தினி நினைத்தாள்.. ஆனால் அவள் மனதைக் கவர்ந்திழுத்த கோழிக்கோடின் இயற்கையழகில் பிரமித்துப் போனவளாக அதைக் கேட்காமல் விட்டாள்.. உப்பங்கழிகளில் படகினில் செல்வதைப் போல சுற்றிலும் தென்னை மரங்கள் அடர்ந்திருக்க அதன் நடுவினில் முகத்துவாரம் போலக் குவிந்திருந்த கடலில் படகில் செல்வது அற்புதமான அனுபவமாக அவளுக்கு இருந்தது.. விழிகள் விரிய ஒவ்வொரு இயற்கை காட்சியையும் அள்ளிப் பருகுவதைப் போல குதூகலித்துப் பார்த்தவளைப் பார்த்தபடி ஊரைச் சுற்றிய ரவிச்சந்திரனுக்கு கோழிக்கோடு அவன் பிறந்து வளர்ந்த கேரளத்தின் நகரத்தைப் போல இல்லாமல் புதிதாக தெரிந்தது..

கடற்கரையைச் சார்ந்த இடங்களையே சுற்றிக் கொண்டிருந்து விட்டு மதிய உணவுக்காக ஹோட்டலுக்குத் திரும்பினார்கள்... அவனுக்கா ன பிரத்யேக டைனிங் ஹாலில் உணவருந்தினார்கள்.. இப்போதும் அவளைக் கேட்காமலே அவனுக்குப் பிடித்தமான உணவு வகைகளை கொண்டு வந்த

டைனிங் டேபிளில் பரத்தியிருந்தார்கள்.. நந்தினி உரிமைக் குரலை எழுப்ப முடியாதபடி பேரர்கள் கொண்டு வந்திருந்த அத்தனை உணவு வகைகளும் அவளுக்குப் பிடித்தமான உணவு வகைகளாக இருந்தன.. மீனில் எத்தனை வகையான உணவு வகைகள் உண்டோ.. அத்தனையும் டேபிளில் இருந்ததில் நந்தினியின் நாவில் உமிழ்நீர் சுரந்தது..

அவளுக்கு மீன் பிடிக்கும்.. தஞ்சாவூரில் ஆற்று மீன்கள்கிடைத்தாலும் அவற்றை எப்போதாவது ஒரு முறைதான் வாங்கிவந்து பொரித்து குழம்பு வைத்துக் கொடுப்பாள் வெண்ணிலா.. அரிதாக கிடைத்ததினாலோ என்னவோ.. மீன் பொரியலுக்கும், மீன் குழம்புக்கும் அடித்துக் கொள்வாள் நந்தினி..

“பொம்பளைப் புள்ளையா லட்சணமா நா க்கைக் கட்டுக்குள்ள வைச்சு இருக்கிறாளான்னு பாருங்க.. அெ தன்ன நாக்கை வளர்த்து வைச்சிருக்கிறது..? வாழ்க்கைப் பட்டுப் போகிற இடத்தில உங்களுக்கும் எனக்கும் நல்லாத்தான் பேரு வாங்கிக் கொடுக்கப் போகிறா..”

“அப்பா இது அநியாயம்.. நான் பேச வாயைத் திறந்தாலும் இதே டயலாக்கைத்தான் சொல்கிறாங்க.. சாப்பிட

வாயைத் திறந்தாலும் இதே டயலாக்கைத்தான் ரீபிட் பண்றாங்க.. பெண்ணாய் பிறந்தவளுக்கு பேசத்தான் சுதந்திரம் இல்லைன்னா.. சாப்பிடவுமா சுதந்திரமில்லை..?” தந்தையிடம் முறையிடுவாள் நந்தினி..

குடும்பப் பஞ்சாயத்தின் தலைவரான மேகநாதன் வழங்கும் தீர்ப்பெல்லாம் நந்தினிக்கு எதிரான தீர்ப்பாகத்தான் இருக்கும்..

“அம்மா சொல்கிறதிலயும் ஓர் அர்த்தமிருக்கும்மா.. பெண்களுக்கு நாவடக்கம் வேணுமில்ல..” என்று அறியாயத் தீர்ப்பை வழங்கி விடுவார்..

நாவடக்கம் பற்றிச் சொல்லி வைத்த வள்ளுவர்..

‘யாகாவரராயினும் நாகாக்க..’

என்றுதான் சொல்லி வைத்தார்.. பெண்கள் மட்டும் ‘நாகாக்க’ வேண்டுமெனச் சொல்லவில்லை.. அந்த நாவடக்கத்தையும் யோசிக்காமல் மற்றவர்களின் மனம் புண்படப் பேசி விடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லி வைத்தார்.. சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை..

இதை வெண்ணிலாவுக்கும் மேகநாதனுக்கும் யார் சொல்வது..? ஆறேழு மீன் துண்டங்களுக்காக நாவடக்கம் பற்றிய சொற்பொழிவைக் கேட்க நேரிடும் இன்னல் இல்லாமல் டேபிள் முழுவதும் மீன் வறுவல்களின் வகைகளாக இருந்ததில்..

“ஹை.. ஃபிஷ்..” என்று துள்ளினாள் நந்தினி..

அவளின் உற்சாகத்தில் பேரர்களின் முகங்களில் புன்னகை பரவியது.. வேடிக்கையாக அவளைப் பார்த்த ரவிச்சந்திரன்..

“முடியலை..” என்று தலையை ஆட்டிச் சிரித்தான்..

“உங்களுக்குச் சாப்பிட முடியலைன்னா நோ பிராப்ளம்.. இதைக் காலி பண்ண நானிருக்கேன்.. டோண்ட் வொர்ரி..” அபயமளித்தாள் நந்தினி..

“அதுசரி.. சாப்பாடு போடறவன் வயிறையே காய வைக்கப் பிளான் போடறியா..? உனக்கு வேண்டியதை தேவையான அளவுக்குத் தீர்த்துக்கிட்டு.. இன்னும் வேண்டும்னாலும் கொண்டு வரச் சொல்றேன்.. பட்.. என் வயிற்றுக்கு வஞ்சனை பண்ணாதே.. உன்னோடு சேர்ந்து ஊர் சுத்தினதில செம பசியிலே இருக்கேன்.. இங்கேயிருக்கிற

ஃபுட் அயிட்டம் உனக்கு மட்டும் பிடிச்சதில்ல.. எனக்கும் பிடிச்சதுதான்..” தன் பக்கமாக ஒரு பிளேட்டை இழுத்து வைத்துக் கொண்டான் அவன்..

நந்தினி அதற்கும் “நோ.. பிராப்ளம்..” என்றாள்..

“இங்கே நிறைய அயிட்டம்ஸ் இருக்கே.. எனக்குப் போக உங்களுக்கும் கொஞ்சம் கிடைக்கும்..”

“கொஞ்சம்தான் கிடைக்கும்..?”

“யெஸ் பாஸ்..”

“நீ பிழைத்துக்குவ..”

“உங்க ஆசிர்வாதம் பாஸ்..”

“இந்த ஹோட்டலுக்கு நான்தான் ஓனர்..”

“நான் இல்லேன்னு சொல்லலையே..”

“அதையும் சொல்வியா..?”

“ஏன் பாஸ் சொல்லப் போறேன்..? எனக்குப் பிடிச்ச ஃபிஷ் ஃபுட்ஸை வெரைட்டி, வெரைட்டியா.. பிளேட், பிளேட்டா.. என் முன்னாலே பரப்பியிருக்கீங்க.. உங்களுக்குப் போய் கெடுதல் நினைப்பேனா..?”

சப்புக்கொட்டி மீன் வகைகளைச் சாப்பிட்டபடி வியாக்கினம் பேசினாள் நந்தினி.. பரக்காவெட்டி போல அவள் மீன் பொரியலை காலி பண்ணிய வேகத்தில் மீன் முள் தொண்டையில் சிக்கிக் கொள்ள "விக்.. விக்.." எனத் துள்ளினாள்..

"இதைச் சாப்பிடு.."

சாதத்தில் ஒரு கவளம் எடுத்து அவள் கையில் கொடுத்துச் சாப்பிட வைத்த ரவிச்சந்திரன் தண்ணீர் தம் ளரை அவள் கையில் திணித்தான்.. ஒரு வழியாய் மீன் முள்ளைத் தொண்டைக்குள் தள்ளி இருமிச் சரியான நந்தினியிடம்..

"இத்தனையும் உனக்குத்தான் சொல்லிட்டேன்ல்ல..? அதுக்கப்புறமும் எதுக்காக யாரோ உன் கையில இருக்கிறதைப் பிடுங்கித் தின்று விடுவதைப் போல பறந்துக்கிட்டுச் சாப்பிற..?" என்று கடிந்து கொண்டான்..

"ஃபிஷ் ஃபுட் மேல ஒரு இண்ட்ரெஸ்ட்.. ஹி.. ஹி.."

மீன் முள் தொண்டையில் சிக்கிய அவஸ்தையில் கண்களில் அரும்பி விட்ட நீருடன் நந்தினி அசட்டுச் சிரிப்புச் சிரிக்க முயல..

“நல்லவேளை.. பெல்ட் மன்னன் தப்பித்தார்..” என்றான் ரவிச்சந்திரன்..

“என்னடா.. இன்னும் உங்க ஃபேவரைட் மேன் பெயரைச் சொல்லலையேன்னு நினைத்தேன்..” என்றாள் நந்தினி..

“நீ பண்ற சேட்டையில அவர் நினைவு தானா வந்துருது.. நான் என்ன செய்யட்டும்..? ஆக்சுவலா நந்தினி.. உன்கிட்டயிருந்து தப்பிக்க அவர்தான் ஓடியிருக்கனும்.. அது தெரியாம நீ ஓடி வந்திருக்க..” அமர்த்தலாகச் சொல்லி விட்டு நந்தினியின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானான் ரவிச்சந்திரன்..

“உங்க ஃபுட் அயிட்டத்தையெல்லாம் நான் காலி பண்ணிட்டேங்கிற காண்டில இஷ்டத்துக்குப் பேச வேணாம்.. மைண்ட் இட்..” நந்தினி முறைத்தாள்..

“கேரளாவுக்கு நீ வேலை பார்க்க வந்திருக்கிற மிஸ் நந்தினி. . ஐ ஆம் யுவர் பாஸ்.. மைண்ட் இட்..” அழுத்தமான குரலில் அறிவுறுத்தினான் ரவிச்சந்திரன்..

“ம்ஹும்.. உங்களைச் சொல்லிக் குற்றமில்லை பாஸ்.. ஃபிஷ் அயிட்டம்ன்னாலே எனக்குப் பேச்சுக் கிடைக்கிறது

வழக்கம்தான்.. எங்க வீட்டில ஏழெட்டு மீன் துண்டங்களுக்கு மேலே கண்ணிலேயே காட்ட மாட்டாங்க.. இங்கே பிளேட், பிளேட்டாக் காட்டிட்டு சாப்பிட விடாம 'தடா' போடறிங்க.." சோகமானாள் நந்தினி..

"கொஞ்சம் இவ்விட நோக்கு.."

டேபிள் முழுவதும் பரத்தப் பட்டிருந்த காலி பிளேட்டுகளைக் காட்டினான் ரவிச்சந்திரன்..

"எல்லாம் நீ சாப்பிட்டதுதான்.. யாரும் இங்கே 'தடா' போடலை.. ஸோ, புலம்பறதை நிறுத்திட்டு உன் ரூமுக்குப் போய் ரெஸ்ட் எடு.. ஷார்ப்பா ஐந்து மணிக்கெல்லாம் நீ ரிசப்சஷனில ஆஜராகிரனும்.. அண்டர்ஸ்டாண்ட்..?" அண்டர்ஸ்டாண்ட் என்று பதில் சொல்லத்தான் வாய் திறந்தாள் நந்தினி.. வார்த்தைக்குப் பதில்..

"ஹாவ்.." என்ற ஏப்பம்தான் வந்தது..

"எனக்குன்னு வந்து சேர்ந்திருக்கியே.." மறுபடியும் தலையில் அடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்த நந்தினிக்கு அடித்துப் போட்டதைப் போலத் தூக்கம் வந்தது.. குளிர்

நிரம்பிய கோழிக்கோடில் சுற்றியலைந்த களைப்பில் ஆழ்ந்து தூங்கிவிட்டாள்.. நான்கரை மணியளவில் செல்ஃபோனின் அலார ஒலி இசையாக அவள் காதில் பாய்ந்து எழுப்பி விட்டது..

குளியலறைக்குள் புகுந்து வெந்நீரில் குளியல் போட்டு உடை மாற்றி மிதமான ஒப்பனையுடன் அவள் ரிசப்சஷனுக்கு வந்த போது மணி ஐந்தடிக்க ஒரு நிமிடம் என்றது..

‘ஹப்பாடி.. அவனை முந்திட்டேன்..’

குழந்தைத்தனமான சந்தோஷத்துடன் பார்த்தால் அவன் ரிசப்சஷனில் நின்றிருந்தான்.. காலையில் அவனைச் சூழ்ந்திருந்தைப் போல இப்போதும் ஹோட்டலில் வேலை செய்பவர்கள் அவனைச் சுற்றி நின்றிருந்தார்கள்..

‘இவன் இருக்கானே.. எதிலும் எனை ஜெயிக்க விடமாட்டான்..’ முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு அவனை அணுகினாள்.. அவன் ‘என்ன..?’ எனும் விதமாக புருவங்களை உயர்த்த முற்பட..

“வேண்டாம்.. வேண்டாம்..” என்று பதறினாள்..

அவன் விசித்திரமாக அவளைப் பார்த்து விட்டு.. எதுவும் பேசாமல் டைனிங் ஹாலுக்கு நடந்தான்.. மதியம் சாப்பிட்டதே வயிற்றை நிரப்பியிருக்க..

“எனக்கு எதுவும் வேணாம்..” என்று மறுத்தாள் நந்தினி..

“மழை கொட்டப் போகுது..” கிண்டலாகச் சொன்னவன்..

“காபி கூட வேணாமா..?” என்று கேட்டான்..

“அது வேணும்..” தலையை ஆட்டினாள் நந்தினி..

காபி வந்தது.. குடிச்து முடித்ததும் புத்துணர்வை உணர்ந்தாள்.. ரவிச்சந்திரனுடன் சளசளத் தபடி காரில் ஏறியவளுக்கு எங்கே போகிறோம் என்று கேட்கத் தோன்றவில்லை.. கோழிக் கோடின் இயற்கையழகு நிறைந்த தெருக்களை வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்திருந்தவள் கடற்கரையில் கார் நிற்கவும்..

“பீச்சுக்கு மார்னிங்கே வந்துட்டோமே.. பார்த்த பிளேஸுக்கே அழைத்துக்கிட்டு வந்திருக்கீங்க..?” என்று புரியாமல் கேட்டாள்..

“உன்னைப் போல வொர்க்கர் இருந்தா விளங்கிரும்.. நீ வேலை பார்க்க வந்தியா.. இல்லை.. ஊரைச் சுற்றிப் பார்க்க வந்தியா..?” கோபம் போல கண்களை உருட்டி விழித்தபடி கேட்டான் ரவிச்சந்திரன்..

அதற்கு அவள் கொஞ்சமாவது பயந்தால்தானே..? லேசாகத் தோள்களைக் குலுக்கியபடி..

“வொர்க்கர் மேலேயே குறை சொன்னா எப்படி பாஸ்..? நீங்க வேலை கொடுத்து நான் செய்ய மாட்டேன்னு சொன்னேனா..? நீங்க வேலை சொல்லலை.. நான் செய்யலை.. தட்ஸ் ஆல்..” என்று கைகளை விரித்தாள்..

“ரெடிமேடா பதிலை வைத்திருப்பியே..”

ரவிச்சந்திரன் கடற்கரை மணலில் கால்கள் புதைய நிதானமாக நடந்தான்.. கையைக் கையை ஆட்டிப் பேசியபடி கூட நடந்த நந்தினி யதேச்சையாக கடலைப் பார்த்தாள்.. பார்த்தவளின் விழிகள் விரிந்து பிரமிக்க அப்படியே நின்று விட்டாள்.. கடற்கரை முழுவதும் சுற்றுலாவுக்கு வந்த வர்களும் வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்களும் நிரம்பியிருந்தார்கள்..

# எண்ணியிருந்தது ஈடேற... 2

கடலின் மேற்பரப்பு முழுவதும் கடல் நீரின் நீல நிறம் மறைந்து செந்நிற ஒளியுடன் தகதகத்துக் கொண்டிருக்க சூரியன் கடலின் உள்ளே அரைவட்ட செந்தணல் வடிவாய் இறங்கிக் கொண்டிருந்தான்..

“வாட் எ வொண்டர்ஃபுல் சீனரி..!” நந்தினியின் வாய் முணுமுணுத்தது..

பிரமிப்பு நிறைந்த அவளது பரவச நிலையைக் கலைக்காமல் கைகளை மடித்துக் கட்டியபடி அவளையே பார்த்த வண்ணம் நின்றிருந்தான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் குழந்தை முகத்தில் மிதந்த உணர்வலைகளில் அவனது மனமும் மிதந்தது.. சூரியன் மறைந்ததும் அவன் பக்கமாகத் திரும்பிய நந்தினி..

“தேங்க்ஸ்..” என்றாள்..

எதற்காக என்று ரவிச்சந்திரன் கேட்கவில்லை.. சில உணர்வுகள் வார்த்தைகளால் விவரிக்க இயலாதவை.. லொடலொடவென வாய் பேசும் நந்தினி எதுவும் பேச முடியாமல் தடுமாறிய போது ‘வேண்டாம், விட்டு விடு’ என்ற வகையில் மௌனமாக தலையசைத்தான் ரவிச்சந்திரன்..

கடலோரமாக சிறிது நேரம் நின்றிருந்தார்கள்.. கலங்கரை விளக்கத்தின் ஒளியை அவள் அண்ணாந்து பார்த்தபோது..

“இது பழமையான லைட் ஹவுஸ்..” என்றான் ரவிச்சந்திரன்..

இப்போது ‘அப்படியா’ எனும் வகையில் அவள் தலையசைத்தாள்..

“கோழிக்கோடு சுற்றுலா பயணிகளின் கனவு தேசம்.. இங்கேயிருந்து வய நாட்டுக்கு காரில் போகனும்.. அங்கே போன பின்னாலே நீ வேலை பார்க்க ஆரம்பிக்கலாம்.. முதன் முதலா கேரளாவுக்கு வந்திருக்கிற.. இந்த ஊரைச் சுற்றிக் காட்டாம கூப்பிட்டுக்கிட்டுப் போக எனக்கு மனமில்லை.. இதுக்குன்னு நாம வரப் போகிறதில்லை.. தங்கறதுக்கு என்னோட ஹோட்டல் இருக்கு.. நீ திங்கிறதுக்கும் சேர்த்துத்தான்..”

கடைசி வரிகளில் அவன் சிரிக்க அவள் பழைய நந்தினியாகி.. “நீங்க மட்டும் திங்காம பட்டினி விரதம் இருக்கறீங்களாக்கும்..” என்று சிடுசிடுத்தாள்..

"ஊஹூம்..?" என்று அவன் புருவங்களை உயர்த்திய போது அலறியடித்துக் கொண்டு கலங்கரை விளக்கத்தின் பழமையை ரசிப்பதைப் போலப் பேச்சை மாற்றித் தப்பித்தாள்.. ரவிச்சந்திரனும் அந்த ஊரின் பெருமையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.. அதை ஊம் கொட்டிக் கேட்டபடி கடல் காற்றின் குளிர் ஸ்வெட்டரையும் தாண்டி உடலைத் துளைப்பதை உணர்ந்தபடி மெதுவாக நடந்தவளுக்கு உலகமே அழகாகி விட்டதைப் போல இருந்தது..

# அத்தியாயம் 42

**நூ**று ஆண்டுகளுக்கு முந்தைய துறைமுகங்கள் என்று ரவிச்சந்திரன் சொன்னபோது முதல்நாள் காட்டியதைப் போல அழகு மிகுந்தக் கடற்கரையைக் காட்டப் போகிறான் என்று நம்பித்தான் அவனுடன் சென்றாள் நந்தினி.. ஏதோ சுற்றுலாவுக்கு வந்திருப்பதைப் போன்ற உற்சாகமான மனோபாவம் அவளை ஆக்ரமித்திருந்தது..

ரவிச்சந்திரனின் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் வேலை பார்ப்பவர்கள் மகாராணியைப் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்து வைத்தார்கள்.. பவ்யமான மரியாதையைக் காட்டினார்கள்.. அந்தக் ‘கெத்து’ அவளுக்குப் புதிதானதாக இருந்தது.. அவள் தங்கியிருந்த அறையைத் தேவையில்லாமல் எவரும் அணுகி அவளைத் தொந்தரவு செய்யவில்லை.. வெளியே செல்லும் போது ரிசப்சஷனில் சாவியை ஒப்படைத்து விட்டுப் போவதால் அவள் திரும்பி வருவதற்குள் அறையின் துப்புறவுப் பணி முடிந்து புதிய மெத்தை விரிப்பு, கம்பளிகளுடன் அறை ஜம்மென்னு அவளை வரவேற்றது..

அனைத்து வித பாதுகாப்புகளுடன் இரும்புக் கோட்டை அரண்மனைக்குள் உறங்குவதைப் போன்ற ஓர் பாதுகாப்புணர்வு மனதில் நிரம்பியதால் நந்தினிக்கு நிம்மதியான உறக்கம் வந்தது..

இதுதான் வேலை என்று அவளை உடனடியாக வேலையில் அமிழ்த்தாமல் ரவிச்சந்திரன் ஊரைச் சுற்றிக் காட்டியது அவள் மனதின் புழுக்கத்திலிருந்து தப்பிக்கும் மாற்றமாக இருந்தது..

பொதுவாக நந்தினி இயற்கையை ரசிப்பவள்.. கிராமத்துக்குப் போய் விட்டால் தென்னந் தோப்பிலும் காவேரி ஆற்றங்கரையிலும்தான் நாள் முழுவதும் சுற்றி வருவாள்..

“வயதுப்பெண்.. அடங்கி வீடு தங்கறாளா..?” என்று கிராமத்திலிருக்கும் பாட்டிமார்கள் வெண்ணிலாவிடம் போட்டுக் கொடுத்துப் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வார்கள்..

“ஏண்டி.. தஞ்சாவூரில ஒரு மாமியார்ன்னா.. இங்கே ஊரு பூராவும் உங்கப்பாவோட சின்னம்மா, பெரியம்மான்னு எக்கச்சக்கமான மாமியார்கள்.. என்னைக் குறை சொல்ல எதுடா சாக்குன்னு காத்துக்கிட்டு இருக்காங்க.. நீ பிடி சாக்குன்னு அள்ளியள்ளிக் கொடுக்கறியேடி.. அடங்கி வீட்டில

இருக்க மாட்டியா..” வெண்ணிலா சூரியனாகி சுட்டும் விழிச் சுடர்களால் சுட்டெரிப்பதைப் போலப் பார்த்து மகளை வீட்டுக்குள் பூட்டி வைத்து விடுவாள்..

அப்படிப்பட்ட இயற்கை விரும்பியை கோழிக்கோடில் உலா வரவிட்டால் எப்படித் துள்ளிக் குதிக்க மாட்டாள்..?

“ஹண்ட்ரெட் இயர்ஸுக்கு முந்தின ஹார்பரா..? ஹௌ ஸ்வீட்..” என்றபடி வந்திருந்தவளுக்கு சிதைந்திருந்த துறைமுகங்களைப் பார்ப்பதற்கு அதிர்ச்சியாக இருந்தது..

“என்ன பாஸ்.. இத்தனை டேமேஜா இருக்கு..?”

“ம்ம்ம்..”

“ஏன் எடுத்துக் கட்டலை..?”

“இப்ப யாரும் இதை யூஸ் பண்றதில்லைன்னு விட்டு வைத்திருக்கலாம்.. அதோட இது வரலாற்று நினைவுச் சின்னங்கள்ங்கிறதினால அப்படியே இருக்கட்டும்ன்னு நினைத்திருக்கலாம்..”

“ஐ ஸீ..”

“கடல் கடந்த வணிகத்தில கோழிக்கோடு எக்ஸ்பர்ட் சிட்டியா இருக்கு.. பிஸினெஸ்ஸில் இந்த ஊரின் ஹார்பர் ரொம்பவும் ஃபேமஸ்..”

“அதனாலதான் இங்கே எக்ஸ்போர்ட் கம்பெனி ஆரம்பிச்சிருக்கீங்களா..?”

“கடல் சார்ந்த சிட்டிகளில என்னோட எக்ஸ்போர்ட் கம்பெனிஸ் இருக்கும்.. மீன், இறால்ன்னு பதப்படுத்தப் பட்ட ஸீ ஃபுட்ஸை எக்ஸ்போர்ட் பண்ணுவோம்..”

“இம்போர்ட்ஸுன்னு எதுவுமில்லையா..?”

“நான் இம்போர்ட் பண்றது இல்லை.. பட்.. அந்தக் காலத்தில வாசனைப் பொருள்களுக்கும் பட்டுத் துணிகளுக்கும் கோழிக்கோடுதான் மெயின் மார்க்கெட்டா இருந்ததாம்.. எல்லாப் பொருள்களும் இங்கேயிருக்கிற ஹார்பரிலதான் வந்து இறங்கும்..”

“இண்ட்ரெஸ்டிங்கா இருக்கில்ல..?”

அவள் விழிகள் விரித்து.. தலையை ஆட்டிக் கதை கேட்ட அழகுதான் ரவிச்சந்திரனுக்கு சுவராஸ்யமானதாக இருந்தது.. பல இடங்களுக்கு அவன் அவளை நடத்தியே அழைத்துச்

சென்றான்.. தோதான இடத்தில் காரை நிறுத்தி விட்டு பேன்ட் பாக்கெட்டில் கைகளை நுழைத்தபடி கால்வீசி நடந்தான்.. காரணம் கேட்டவளிடம்..

“காரில் சுற்றிப் பார்த்தா எல்லாத்தையும் மிஸ் பண்ணிட்டதைப் போல இருக்கும்.. வாக்கிங் போல நடந்துக்கிட்டே சுற்றிப் பார்த்தா இந்த ஊர் சொர்க்க பூமியைப் போல இருக்கும்..” என்று விளக்கம் சொன்னான்..

நந்தினிக்கு சொர்க்கம் போலதான் இருந்தது.. கப்பட் பீச்சை சுற்றி வந்தாள்.. எஸ்.எம். ஸ்ட்ரீட்டில் இருக்கும் ஷாப்பிங் சென்டரில் புகுந்து விளையாடினாள்.. வாங்கிய பொருள்களுக்கு பணம் கொடுக்கப் போனபோது ரவிச்சந்திரனின் கிரெடிட் கார்டு பணத்தைச் செழுத்தியிருந்தது..

“நான் பர்ச்சேஸ் பண்ணினதுக்கு நீங்க ஏன் ‘பே’ பண்ணனும்..?” என்று சண்டைக்குப் போனாள்..

“உன் சேலரியில் இருந்து இதைக் கழிச்சுக்குவேன்.. கவலையே படாதே.. நான் கணக்கில ரொம்ப கெட்டி..” என்று பதில் வந்ததும் வாயை மூடிக் கொண்டாள்..

கேரள மரபு மாறாத கலாச்சாரத்துடன் அந்த ஊரின் மக்கள் காணப்பட்டார்கள்.. வீடுகள் கூட கேரள

பாணியிலேயே கட்டப் பட்டிருந்தன.. சில வீடுகளில் பசு மாடுகளைக் கட்டிப் புல் போட்டு வளர்ப்பதைப் போல யானைகளைக் கட்டிப் புல் போட்டு வளர்த்தார்கள்.. தமிழ்நாட்டில் ஆட்டோக்களில் பிரயாணிப்பதைப் போல ஆங்காங்கே உப்பங்கழிகளில் மிதந்த படகுகளில் பிரயாணித்தார்கள்..

“இங்கேயே இருந்துரலாம் போல இருக்கு..” குழந்தைத்தனமாக சொன்னாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின.. அவளை ஆழ்ந்து பார்த்தான்.. அந்தப் பார்வையின் பொருள் புரியாமல் அவள் திகைத்தாள்.. குழந்தைத்தனத்தையும் அவளையும் பிரிக்க முடியாது என்பதில் அவன் மனம் மென்மையானது.. அவனைக் கவரும் யத்தனங்கள் ஏதுமில்லாமல் பாசாங்கில்லாத பேச்சும்.. ஒப்பனையில்லாத இயல்புமாக அவள் அவனைக் கவர்ந்தாள்.. அவளுடன் ஊரைச் சுற்ற அவனுக்குப் பிடித்திருந்தது.. மதிய உணவின் போது அவள்..

“இன்னைக்கு என்ன ஸ்பெஷல்..?” என்று நொட்டை விட்டுக் கொண்டு டேபிளை பார்த்தாள்..

அல்வா, பிரியாணி, நெய் சோறு, என்று இருந்தன..

“என்ன பாஸ்.. அல்வா கொடுக்கப் பார்க்கறிங்களா..?”

அவள் கண்சிமிட்டிச் சிரித்தபோது அவனால் அவள் முகத்திலிருந்து பார்வையை விலக்க முடியவில்லை..

‘எப்படி இவளால் கல்மிசமில்லாத சில்மிசப் பேச்சுக்களைப் பேச முடிகிறது..?’ அவளையே உற்றுப் பார்த்தான்..

“என்னைச் சொல்லிட்டு இப்ப நீங்கதான் சைட் அடிக்கறிங்க..” அவள் ‘கலீர்’ என நகைத்தான்.. அவளிருக்கும் இடத்தில் பரவும் உயிர்ப்பின் அலைகளில் அவன் அமிழ்ந்திருந்தான்.. ஒவ்வொரு நொடிகளிலும் ஒவ்வொரு விதமாக அவள் பரிமளித்தாள்.. ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு அழகை உணர்த்தினாள்..

“உன்னை மிஸ் பண்ணின பெல்ட் மன்னன் பாவம்தான்..”

சன்னப் பெருமூச்சுடன் அவன் சொன்னான்..

எதனால் அந்த வார்த்தைகளை அவன் சொல்கிறான் என்று புரிந்து கொள்ளாமல் வெள்ளைச் சிரிப்புச் சிரித்தாள் நந்தினி..

“நீங்க இருக்கீங்களே.. ஒருநேரம் அவன் தப்பித்தான்ம்பீங்க.. இன்னொரு நேரம் அவன் பாவம்பீங்க.. எந்த நேரம் எதைச் சொல்வீங்கன்னே தெரியலை.. முதலில் அல்வாவுக்கு விளக்கம் சொல்லுங்க.. வேற ஸ்வீட்டைக் கொண்டு வரச் சொல்லியிருக்கலாமில்ல.. இப்படியா அல்வாக் கொடுத்து பயமுறுத்துவீங்க..?”

“நீ அல்வாவுக்கு மடங்கற ஆள்தான்..”

அவளையே குறுகுறுவெனப் பார்த்தபடி அவன் சொன்னதில் அவளது கன்னம் சிவந்து விட்டது..

‘என்னதான் குழந்தைத்தனமாக இருந்தாலும் பெண் என்பவள் பெண்தான்..’ அவளை ரசனையுடன் பார்த்தான் ரவிச்சந்திரன்..

“இது கோழிக்கோடன் அல்வா..” மிருதுவான குரலில் சொன்னான்..

“கோழிக்கோடன் அல்வாவா..”

“ம்ம்ம்.. தமிழ்நாட்டிலே திருநெல்வேலி இருட்டுக்கடை அல்வான்னு சொல்வாங்க இல்லியா..? அதைப்போல இந்த ஊரு அல்வாவுக்கு கோழிக்கோடன் அல்வான்னு பேர்.. இந்த

ஊர் ஸ்பெஷல் அல்வா இது.. அப்புறம் இது மலபார் பிரியாணி..”

“வெயிட்.. வெயிட்.. இதுக்கு நானே விளக்கம் சொல்லிடறேன்.. எங்க ஸ்டேட்டில திண்டுக்கல் தலப்பாகட்டி பிரியாணின்னு சொல்வாங்கள்ல.. அதைப் போல இந்த ஊர் பிரியாணிக்கு மலபார் பிரியாணின்னு பேர் வைச்சிருக்காங்க.. ஆம் ஐ கரெக்ட்..?”

“சாப்பாட்டு விஷயத்தில தப்பாவா ஆன்சர் பண்ணப் போற..? நீ சொன்னா கரெக்டாத்தான் இருக்கும்.. இன்ஜினியரிங் பரிட்சையைத்தான் எந்த லட்சணத்தில எழுதி வைச்சிருக்கேன்னு தெரியலை.. ரிசல்ட் வரட்டும்.. அப்புறம் இருக்கு உனக்கு..”

“இது அநியாயம் பாஸ்..”

“எது..? மலபார் பிரியாணியா..?”

“பிரியாணியைக் குற்றம் சொல்வேனா..?”

“அதானே.. நீ யாரு..?”

“அது தெரியாமலா வேலை கொடுத்துக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கிங்க..?”

“சாப்பாட்டைக் கண்டா இப்படி நீ வீடு கட்டிப் புகுந்து விளையாடுவேன்னுத் தெரியாமத்தான் வேலை கொடுத்துட்டேன்..”

“இப்ப வருத்தப்பட்டு என்ன ஆகப் போகுது..? ஆனது ஆச்சு.. இனி ஆகப் போகிறதைப் பாருங்க பாஸ்..”

“எதைப் பார்க்கச் சொல்கிற நந்தினி.. நீ பிரியாணியை ஒரு கட்டுக் கட்டி வெட்டப் போகிறதை பார்க்கச் சொல்கிறயா..?”

அவன் கிண்டலை காதில் போட்டுக் கொள்ளாமல் நந்தினி பிரியாணியை ஒரு கை பார்த்தாள்.. நெய் சோற்றை ஒரு பிடி பிடித்தாள்.. வேடிக்கை பார்த்த ரவிச்சந்திரனிடம் பிரியாணியை மட்டும் கண்டு கொண்டால் நெய் சோறு வருத்தப்படாதா என்று நியாயம் கேட்டாள்.. அவன் நமட்டுச் சிரிப்புடன் ஆமாமாம் என்று தலையாட்டினான்.. கோழிக் கோடன் அல்வாவை வழித்து உண்டு விட்டு நேந்திரம் வற்றல்களை நொறுக்கினாள்.. கன்னத்தில் கை வைத்திருந்த ரவிச்சந்திரனிடம் இனிப்பைச் சாப்பிட்டால் காரம் சாப்பிட வேண்டும் என்று காரணம் சொன்னாள்..

விருந்துகளில் அறிமுகமாகும் பெண்கள் ரவிச்சந்திரனுடன் பேசியபடி சாப்பிடுவதுண்டு.. அவன் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் நாசுக்காக முள் கரண்டியிலும் ஸ்பூனிலும் இரண்ட வாய் சாப்பிட்டு விட்டு ஜுஸ் தம்ளரைக் கையில் எடுத்து விடுவார்கள்.. அந்த ஜுஸையும் முழுமையாகக் குடிக்காமல் இரண்டு மிடறு விழுங்கிவிட்டு கைக்குட்டையில் வாயை ஒற்றியபடி நகர்ந்து விடுவார்கள்..

அவர்கள் அளவாக உண்பவர்கள்தான் என்றாலும் இரண்டு ஸ்பூன் உணவும் இரண்டு மிடறு ஜுஸுமாக உணவை முடித்துக் கொள்வார்கள் என்று நம்ப ரவிச்சந்திரன் தயாராக இல்லை.. அப்படிப்பட்டவர்களைப் பார்த்தவனுக்கு நந்தினியின் உணவு மீதான ஆர்வம் வியப்பை அளித்தது..

அதை அவனிடமிருந்து அவள் மறைக்க முயவில்லை என்பதில் அவனது வியப்பு அதிகரித்தது..

“முடிச்சாச்சா..?” என்றவன் படுகரிசனமாக..

“போதுமா.. இன்னும் கொண்டு வரச் சொல்லவா..?” என்று சிரிக்காமல் கேட்டு வைத்தான்..

“போதும்.. போதும்.. நிறையச் சாப்பிட்டா ஈவினிங் எழுந்திருக்க முடியாது..” என்றாள் நந்தினி..

“அப்படின்னா இப்பக் குறைவாச் சாப்பிட்டிருக்கன்னா சொல்கிற..?” ரவிச்சந்திரன் அயர்ந்து விட்டான்..

“யெஸ் பாஸ்..”

“உண்மையை உரக்கச் சொல்கிற பாரு.. இந்த அசாத்திய மனோ தைரியத்தை பாராட்டறேன்..”

“தேங்க் யு..”

அலட்டிக் கொள்ளாமல் நன்றி சொல்லிய நந்தினியின் கதுப்புக் கன்னத்தைக் கிள்ள வேண்டும் போல துறுதுறுத்த கையை கட்டுப் படுத்திக் கொண்டு கை கழுவ எழுந்தான் அவன்..

“உன் வீட்டில பிரிபேர் பண்ணி வைச்சிருக்கிற அத்தனை அயிட்டத்தையும் நீ ஒரு ஆளாவே வெட்டிட்டா அவங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாங்க..?”

“அதெல்லாம் எங்கம்மா கெட்டி.. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகுன்னு அளவு சாப்பாட்டைத்தான் என் கண்ணிலே காட்டுவாங்க..”

கொடி போன்ற உடலமைப்புடன் இருந்தவளைப் பார்த்தான் ரவிச்சந்திரன்..

“கெட்டிக்கார அம்மா..” என்று மெச்சிப் போனான்..

“என்னைப் பட்டினி போடறவங்கள்ளாம் உங்களுக்கு கெட்டிக்காரங்கதான்.. அந்தக் கெட்டிக்காரத்தனத்தை நீங்களும் ஃபாலோ பண்ணிராதீங்க பாஸ்.. தாங்க மாட்டேன்.. இது கேரளா.. குளிருக்கு அதிகமா பசிக்கும்..”

சிறுபிள்ளைத்தனமான அவளது கெஞ்சலில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.. வாயை மூடு என்று அவள் தலையில் கொட்டு வைத்தான்.. அன்று மாலை அவளை லயன்ஸ் பார்க்குக்கு அழைத்துக் சென்றான்..

விதம் விதமான பூக்கள்.. இயற்கை நீரூற்றுகளைப் போன்ற செயற்கை நீரூற்றுகள்.. மேடு பள்ளம் நிறைந்த புல்வெளிகள் என்று நந்தினியின் மனதை ரம்யம் நிரப்பி யது.. ஒவ்வொன்றையும் ரசித்து ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் ரவிச்சந்திரன் அவளையே ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்ததை உணரவே இல்லை..

வெகு அருகில் அமர்ந்திருந்தவளின் மீதிருந்து வந்த நறுமணத்தில் மனம் மயங்கிய ரவிச்சந்திரன் எங்கோ ஓர் பறவை பாடுவதைப் போல உணர்ந்தான்..

# அத்தியாயம் 43

**க**லைநயம் கொண்ட இரண்டு குத்து விளக்குகள் மேடையின் இரு பக்கமும் சுடர் விட்டுக் கொண்டிருந்தன.. தூண் போன்ற கட்டமைப்புடன் மேடையின் கூரையைத் தொடுவதைப் போல உயர்ந்து நின்ற விளக்குகளின் முகப்பு அன்ன பட்ஷி வடிவத்தில் இருந்தது..

அந்த சூழலே வித்தியாசமாகவும் கேரளத்து நாகரிகத்தை உணர்த்துவதாகவும் இருந்ததில் நந்தினி ஆர்வமானாள்.. காலையில் கண் வழிக்கும் போதே இன்றைக்கு என்ன இடத்துக்குப் போகப் போகிறோம் என்ற எதிர்பார்ப்புடன் தான் கண்விழித்தாள்.. அதற்கு ஏற்றார் போல ரவிச் சந்திரன் ஃபோனில் அழைத்து..

“சேலை கட்டத் தெரியுமா..?” என்று கேட்டு வைத்தான்..

‘தமிழ்நாட்டுப் பெண்கிட்டச் சேலை கட்டத் தெரியுமான்னு கேட்கிறான் பார்..’ ரோஷம் பொத்துக் கொண்டு வந்தாலும் அதைப் பற்றிய தனது ஆட்சேபத்தைப் பற்றி நந்தினி மூச்சுக்கூட விடவில்லை..

அவளுக்கு சேலை கட்டத் தெரியாதுதான்.. வெண்ணிலாவின் தயவோடு அப்படி இப்படியென்று சேலையைச் சுற்றிச் சற்று நேரம் உலா வந்து விட்டு அவிழ்த்துக் கடாசி விட்டு சுடிதாரில் புகுந்து கொள்வாள்..

'இந்த ரகசியம் இவனுக்கு எப்படித் தெரியும்..?' மனம் நமநமத்தது.. அவன்தான் எல்லாம் தெரிந்த வல்லாள கண்டனாய் இருக்கிறானே.. இதையும் தெரிந்து வைத்திருப்பான்.. இதற்கு மேலேயும் தெரிந்து வைத்திருப்பான்..

"சேலை கட்டத் தெரியாதுன்னா வேலையை விட்டு அனுப்பிருவீங்களா பாஸ்..?" வெகு பவ்யமாக இவள் பதிலுக்கு கேட்டு வைத்து அவனது சலம்பலுக்கு இவளது சலம்பல் குறைந்தது இல்லை என்பதை வெளிப்படுத்தினாள்.. மறுமுனை மௌனமானதில் இவள் மனம்..

'வாஹ்ரே.. வா..' என்று குதூகலித்தது.. அத்துடன் நிறுத்தாமல்..

"நீங்க கொடுக்கப் போகிற வேலைக்கும், சேலைக்கும் என்ன சம்பந்தம் பாஸ்..? என்ஜினியர் படிப்பையே மதிக்காம பெர்சனல் மேனேஜரை பெர்சனல் செக்கரட்டரின்னு ஊருபூரா

சொல்லிக்கிட்டு இருக்கீங்க.. மத்தவங்ககிட்டச் சொல்கிறதைக் கூட, போனாப் போகுது.. சொல்கிறது யாரு..? நம்ம பாஸ்தானேன்னு மனதைச் சமாதானப் படுத்திக்கலாம்.. ஆனா அந்த ஜொள்ளழகி ரோஸிகிட்டப் போய் சொன்னீங்க பாருங்க.. அதைத்தான் என் மனசால ஏத்துக்க முடியலை.. என்ஜினியரிங் படிப்பை விட சேலை கட்டப் படிச்சிருக்கிறது உசத்தியா சார்..?"

மறுமுனையின் மௌனம் நீடித்ததில்..

"பாஸ் சார்..?" என்று சந்தேகமாக அழைத்தாள்..

'லைனில இருக்கானா.. இல்லை கட் பண்ணிப் ஃபோனைத் தூக்கிக் கடாசிட்டானா..?'

அப்படியெல்லாம் இல்லை என்பதை அவனது அமர்த்தலான குரல் அறிவித்தது..

"ஒன்று பாஸ்ன்னு கூப்பிடு.. இல்லேன்னா சார்ன்னு கூப்பிடு.. இரண்டையும் கலந்து அடிக்காதே.."

"அடியா..? நானா..? உங்களையா..? சேச்சே.."

"வாய் நீளுது நந்தினி.. மைண்ட் யுவர் டங்.. போனாப் போகுதுன்னு உனக்கு வேலை கொடுத்து கூப்பிட்டுக்கிட்டு

வந்தா நீ அடி கை வைப்பியா.. ஜாக்கிரதை.. ஐ ஆம் யுவர் பாஸ்.."

"அதனாலதானே சாரே ஞான் நிங்களை பாஸுன்னு விளிச்சது.."

நந்தினி பவ்யமாக.. ரவிச்சந்திரனின் முகத்தில் மந்தஹாசம் படர்ந்தது.. அது குரலிலும் வெளிப்பட..

"உன் வாயைத் தைக்கனும்.." என்றான்.

"அதுக்கான ஊசி நூல் கிடைக்கலையாம்.."

"யாருக்கு..?"

"என் அம்மாவுக்கு.."

"அவங்களும் தேடிட்டாங்களா..?"

"பார்த்து இன்னும் முழுசா மூணு நாளாகலை.. அதுக்குள்ள நீங்க என் வாயைத் தைக்க ஊசி நூலைத் தேடறப்ப என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கின என் அம்மா இத்தனை வருஷமா எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருப்பாங்கன்னு நீங்களே யோசிச்சுப் பாருங்க.."

"யோசிக்கவே முடியலை.. ஷி இஸ் ஸோ கிரேட்.. அவங்களுக்கு அவர்டு தரனும்.."

“என்ன பாஸ்.. அவார்டு தர்றேன்ங்கிற சாக்கில நான் இங்கேதான் இருக்கேன்னு என் அம்மாகிட்டக் காட்டிக் கொடுத்துடலாம்ன்னு ஐடியா பண்ணியிருக்கீங்களா..?”

“உன் புத்தி வேற எப்படி யோசிக்கும்..? இப்படித்தான் யோசிக்கும்.. நான் கேட்டதுக்கு ஆன்சர் பண்ணு..”

“நீங்க ஒன்றைக் கேட்டிருந்தா பரவாயில்லை.. ஓராயிரத்தைக் கேட்டு வைச்சிருக்கீங்க.. இதில நான் கேட்டதுக்கு ஆன்சர் பண்ணுன்னு கம்மாண்ட் பண்ணினா என்னத்துக்குன்னு ஆன்சர் பண்றது..?”

“உனக்கு சேலை கட்டத் தெரியுமில்ல..?”

“கொஞ்சம், கொஞ்சம் தெரியும்..”

“கஷ்டம்.. ம்ஹூம்.. சேலையிருக்கா.. இல்ல.. புதுசா வாங்கனுமா..?”

“ரெண்டு மூணு டிசைனரி ஸாரிஸ் இருக்கு.. உத்ரா வீட்டு ஃபங்ஷன்ங்கிறதினால அவ அம்மாகிட்டக் கேட்டுக் கட்டிக்கச் சொல்லி எங்கம்மா கொடுத்து விட்டாங்க..”

“குட்.. அதில ஒண்ணைக் கட்டிக்கிட்டு ரெடியாகி கீழே வா..”

“ஏன் பாஸ்.. என்னை நீங்க மேரேஜ் கீரேஜ் பண்ணிக்கப் போறிங்களா..?”

விளையாட்டுத்தனமாகக் கேட்டு விட்டு அவன் என்ன நினைத்துக் கொள்வானோ என்ற பதட்டத்துடன் நாக்கை கடித்துக் கொண்டாள் நந்தினி..

“அப்படிப்பட்ட விபரீத முடிவை பெல்ட் மன்னன்தான் எடுப்பார்.. நான் எடுக்க மாட்டேன்..” கரகரப்பான குரலில் சொன்னான் ரவிச்சந்திரன்..

ஏன் அவன் குரல் இப்படி கரகரக்கிறது..? அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறானா என்ற ஒற்றைக் கேள்விக்கு இத்தனை துயரமா..?

‘நந்தினி.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கனும்னாலே அவனவன் அலறிக்கிட்டு துயரப் படறானுகடி..’

ரவிச்சந்திரன் சொல்வதைப் போல அசாத்திய மனோ தைரியம் கொண்ட பெல்ட் மன்னனுக்கு சிலை வைக்க வேண்டும் என்ற நன்றியுணர்வு நந்தினியின் மனதில் சுரந்தது..

‘போட்டோவைப் பார்த்தே ஓ.கே பண்ணிட்டானே..’ போட்டோவை மட்டும் பார்த்ததினால்தான் ஓகே பண்ணினான்.. நேரில் பார்த்துப் பேசியிருந்தால் தலை தெறிக்க ஓடியிருப்பான் என்று அடித்துச் சொன்னான் ரவிச்சந்திரன்..

“ஐ திங்க்.. அப்படி அவர் தலை தெறிக்க ஓடிடுவார்ன்னு பயந்துதான் உன் அப்பா அவரை உன் கண்ணில் காட்டாமலே கல்யாணத்தைப் பண்ணி வைச்சிரனும்னு அவசரப் பட்டாரோ என்னவோ.. நீ என்ன நினைக்கிற..?”

அவளிடம் அபிப்ராயம் கேட்டவனை இமைக்காமல் பார்த்து வைத்தாள் நந்தினி.. ரவிச்சந்திரனுக்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது.. கேரளத்தில் இருப்பதால் கேரள பாணியில் ஜரிகை வேலைப்பாடு செய்த எழுமிச்சை மஞ்சளில் புடவையும், ரவிக்கையும் அணிந்திருந்தாள்.. காதுகளில் கல்ஜிமிக்கி.. கழுத்தில் நீண்ட ஆரம்.. கைகளில் தங்க வளையல்கள்..

“காதலன்கூட ஓடிப் போகிறவங்கதான் வீட்டில இருக்கிற ஜ்வல்ஸ் மொத்தத்தையும் அள்ளிக்கிட்டு ஓடிப் போவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்..” அவளைச் சீண்டினான்..

“ஃபிரண்டோட மேரேஜ் எங்கேஜ்மெண்ட் ஃபங்ஷனுக்குப் போகிறவளும் கொஞ்சம் ஜ்வல்ஸை எடுத்துக்கிட்டுப் போவா..” என்ற நந்தினி..

“வெறும் ரெண்டு செட் ஜ்வல்ஸுக்கே இத்தனை பேச்சா..? இதையும் எடுத்துக்க மாட்டேன்னு ஒற்றைச் செயினோடுதான் கிளம்பினேன்.. அம்மாதான் தலையிலே ஒண்ணு போட்டிருவேன்னு மிரட்டி ஹேண்ட் பேகில் திணிச்சு விட்டாங்க..” என்று கொதித்தாள்..

“ஆமாமாம்.. செஞ்சிக் கோட்டையில இருந்து குதிக்க இருந்தவளுக்கு ஜ்வல்ஸ் தேவையில்லைதான்..” மீண்டும் சீண்டினான் அவன்..

“அதென்ன பேச்சு வாக்கில அவ, இவன்னு சொல்றீங்க..?”

சண்டைக்கு கிளம்பி விட்டாள் நந்தினி..

“நீயே பேச்சு வாக்கிலன்னு சொல்லிட்ட.. இதுக்கு மேலேயும் விளக்கம் வேணுமா..? இறங்கு..”

ரவிச்சந்திரன் காரை நிறுத்திய இடம் மணி மண்டபம் போல வெண்மை நிறக் கோபுரத்துடன் கடலருகில்

கட்டப்பட்டிருந்தது.. அதன் வாசலில் இருபக்கமும் கார்கள் அணிவகுத்திருந்தன..

“மேரேஜ் ரிசப்ஷனா..?” காரிலிருந்து இறங்கியபடி கேட்டாள் நந்தினி..

“காலையிலே ரிசப்சஷஷன் வைப்பாங்களா..? அறிவு ஜீவி..!” காரை லாக் பண்ணிச் சாவியை கோட் பாக்கெட்டில் போட்டபடி கேட்டான் ரவிச்சந்திரன்.. கோழிக்கோடுக்கு வந்து இறங்கிய பின்னிரவுப் பொழுதில் காரில் அவர்களுக்காக காத்திருந்த டிரைவரை ஹோட்டலில் இறங்கிய பின்னால் பார்க்கவே முடியவில்லை.. கண்ணில் படாமல் காணாமல் போய்விட்டான்.. ரவிச்சந்திரன்தான் காரை ஓட்டினான்.. அவனும் அவளும் மட்டுமாக வாயாடியபடி ஊர் சுற்றுவது நன்றாகத்தான் இருந்தது.. இருந்தாலும்..

“டிரைவர் எங்கே..?” என்று நந்தினி கேட்கத்தான் செய்தாள்..

“வேற வொர்க் கொடுத்திருக்கேன்..” ரத்தின சுருக்கமாக கத்தரித்து விட்டான் ரவிச்சந்திரன்..

அதற்கு மேல் டிரைவரைப் பற்றிச் சிந்திக்க முடி யாமல் கேரளத்தின் இயற்கையழகு நந்தினியை ஈர்த்துக் கொண்டதில் அவளும் டிரைவரை மறந்தே போனாள்..

“இதில அறிவு ஜீவித்தனமா நினைக்க என்ன இருக்கு..? கல்யாண மண்டபத்துக்குக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கீங்க.. ஸோ, ரிசப்சஷனான்னு கேட்டேன்.. ஒருவேளை கல்யாணமேதானோ..?”

“மக்கு..! முதலில் இது கல்யாண மண்டபமில்லை.. இங்கே கேரளத்தின் கலாச்சாரத் திருவிழா நடந்துக்கிட்டு இருக்கு.. வி.ஐ.பிங்கிற முறையில என்னை இன்வைட் பண்ணியிருக்காங்க.. நீ இண்ட்ரெஸ்டா ரசிப்பியேன்னு கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்..”

“ஈஸிட்..? உள்ளே என்னென்ன புரோகிராம் இருக்கும்..”

“நீயே வந்து பாரு..”

முன்வரிசையில் அரசர்களுக்கு போடப்படும் சிம்மாசனம் போல அலங்கார வேலைப்பாடுகளுடன் இருந்த நாற்காலிகளில் இரண்டு ரவிச்சந்திரனுக்காக காத்திருந்தது.. விழாவின் பிரதிநிதிகள் வாசலுக்கே வந்து ரவிச்சந்திரனுக்கு மரியாதை செய்து அழைத்துக் கொண்டு போனார்கள்..

நந்தினிக்கும் அந்த மரியாதையில் பங்கு கிடைத்ததில் அவள் சன்னமாக…

“நெல்லுக்குப் பாயும் தண்ணீர் புல்லுக்கும் பாய்கிறது..” என்று ரவிச்சந்திரனின் காதுகளில் மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள்..

“பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுகிறதுன்னும் சொல்லலாம்..” மிதப்பாக கோட் காலரை உயர்த்தி விட்டுக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“இதில் பூ யார்..? நாரு யார்..?” தெரியாதவள் போல இமை கொட்டினாள் நந்தினி..

“இதுக்கான ஆன்சரை இந்த விழாவை ஆர்கனைஸ் பண்ணி என்னை சீஃப் கெஸ்டாக் கூப்பிட்டிருக்கவங்களிடம் கேட்டு விடலாமா..?” நிதானமாக கேட்டு அவளை அலற வைத்தான் அவன்..

‘இவன் இருக்கானே..’

அசைந்து கொடுக்காத அவனது ஆளுமையின் மீது அவளுக்குள் ஓர் ஆதர்சம் உண்டானது.. பக்கவாட்டில் தெரிந்த அவனது எடுப்பான முகத்தோற்றத்தை ரசித்தாள்..

ரோமானியச் சிற்பம் போல இருந்தான்.. அவனுடன் இணைந்து நடப்பதில் ஓர் சுகத்தை உணர்ந்தாள்.. பிரம்மாண்டமான பெரிய மேடையின் இருபக்கமும் அன்னப் பட்ஷியின் உருவம் கொண்ட முகப்புடன் கூடிய கனத்த குத்து விளக்குகள் சுடர் விட்டுக் கொண்டிருந்தன.. திரை விலகியது.. மைக்கின் முன்னால் ஆணும், பெண்ணுமாக

இருவர் உட்கார்ந்திருந்தார்கள்.. வெள்ளை நிற வேட்டி

சட்டையில் ஆண் இருந்தார்.. கேரளத்துப் பாணியில் சேலையுடுத்தி.. தலைமுடியை ஆண்டாள் போலக் கொண்டையிட்டு அந்தப் பெண் இருந்தாள்.. பக்க வாத்தியக்காரர்கள் அருகிலிருக்க அவர்கள் பாட ஆரம்பித்தார்கள்..

“ஆஹா..” வாய் விட்டுச் சொல்லியபடி கண்களை மூடி பாடலில் லயித்து விட்டாள் நந்தினி..

சுருதி பிசகாத இசை சிறு.. நெருடல்கூட இல்லாமல் மனதை மயக்கும் மதுர கானமாக அந்த அரங்கை நிறைத்தது.. மலையாளத்தில் அவர்கள் பாடிய அத்தனை பாடல்களும் அருமையாக இருந்தன..

“பிடிச்சிருக்கா..?”

நந்தினியின் காதோரமாக சரிந்து அமர்ந்து கேட்டான் ரவிச்சந்திரன்.. அவள் தலைமீது அவன் தலை சாய்ந்ததில் பட்டென்று கண் விழித்தவள்..

“என்ன..?” என்று திகைத்தாள்..

“பிடிச்சிருக்கான்னு கேட்டேன்..”

என்னவோ அவனைப் பிடித்திருக்கிறதா என்று வினவுவதைப் போல அவன் கேட்டதில் அவள் மனம் படபடத்தது..

“புரியலை..” மென்று விழுங்கினாள்..

“பாட்டுப் பிடிச்சிருக்கான்னு கேட்டேன்..” அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்தான்..

‘அதை ஒழுங்காச் சொல்லித் தொலைக்க வேண்டியதுதானேடா..?’ அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

“பிடிச்சிருக்கு..”

அவனைப் பார்த்தபடி முணுமுணுத்தாள்.. என்ன காரணத்திற்காக அவன் கண்கள் மின்னியது என்று ஒரு மண்ணும் பிடிபடாததில் குழம்பினாள்..

‘இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு கண்ணில பல்பை எரிய விடறான்..? பாட்டைத்தானே பிடிச்சிருக்குன்னு சொன்னேன்..? இவனையா பிடிச்சிருக்குன்னு சொன்னேன்..?’

“இந்தப் பாடல்களை ‘வடக்கன் பாட்டுக்கள்’ன்னு சொல்வாங்க.. கேரளாவோட நாட்டுப்புறப் பாடல்கள்..”

“ஓ..! எங்க பக்கத்தில புஷ்பவனம் குப்புசாமி, அனிதா இவங்க பாடற நாட்டுப்புறப் பாடல்கள் மாதிரியா..?”

அவன் பதில் சொல்லாமல் அவளைத் தீர்க்கமாக பார்த்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்... அவள் தலையோடு தலையுரச அவள் முகத்துக்கு வெகு அருகாமையில் முகம் வைத்துப் பேசிக் கொண்டிருந்தவன் விலகி உட்கார்ந்து விட்டதில் அவள் மனதில் ஏமாற்றம் வந்தது..

‘வடக்கன் பாட்டுக்கள்..’ முடிந்து நடனம் ஆரம்பித்தது.. இப்போது ரவிச்சந்திரன் அவள் பக்கமாக சாய்ந்து உட்கார அவளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது..

‘இவன் ஒருத்தன்.. எதுக்கெடுத்தாலும் என் தலைமேல தலையைச் சாய்ப்பான்.. எனக்குத்தான் ஜிவ்வுன்னு ஆகித்

தொலைக்குது.. இவன் என்ன மனிதனா, இல்லை கரண்ட் கம்பியா..? இப்படியா ஜெர்க் ஆக வைப்பான்..?'

"இப்ப என்ன..?" என்றாள்..

"இப்ப ஒரு டான்ஸ் புரோகிராம் வரப் போகுது.. 'ஒப்பன்னா' அப்படிங்கிற டான்ஸ் வகை அது.."

"இந்த பரதநாட்டியம், குச்சிப்புடி கோலவா..?"

அவன் அதற்கும் பதில் பேசாமல் அவளை ஆழ்ந்து பார்த்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.. என்ன பார்வை..? உந்தன் பார்வை..? என்று பெருமூச்சுடன் நடனத்தைப் பார்க்க ஆரம்பித்தாள் நந்தினி..

மூன்றாவதாக 'கஜல்' இசை வந்தது.. வடக்கத்திய பாடல்கள்.. "இங்கே கஜல் பிரசித்தம்.."

அவள் தலைமீது தலை கவிழ்ந்து சொன்னான் ரவிச்சந்திரன்..

கிறக்கத்துடன் கண் மூடினாள் நந்தினி.. அந்தக் கிறக்கம் கஜல் இசையினால் வந்ததா.. இல்லை.. அவனது நெருக்கத்தினால் வந்ததா என்று அவளால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை..

ஒன்று மட்டும் அவளுக்குப் புரிந்தது.. அது அவளாக அவளில்லை என்பது..

# அத்தியாயம் 44

**நீ**லம் கலந்த பச்சை நிறத்தில் கடல்நீர் இருந்ததை அதிசயமாகப் பார்த்துப் பிரமித்தாள் நந்தினி.. பிரமிப்பில் பேச்சு வராத அவளது மோனநிலையை புரிந்து கொண்டவனாய் எதையும் பேசாமல் அவளை அவள் போக்கில் பார்வையிட விட்டு விட்டு போட்டை ஓட்டிக் கொண்டிருந்தவனிடம் சன்னக் குரலில் உரையாடிக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

“இன்னைக்காவது வயநாடு கிளம்புகிறோமோ இல்லை ல ஊர் சுற்றுகிறோமா..?”

காலையில் எழுந்ததும் ரெடியாகி டைனிங் ஹாலுக்கு வந்தவள் படு தீவிரமான முகபாவனையுடன் கேட்டவுடன் அவளை உற்றுப் பார்த்து வைத்தான் ரவிச்சந்திரன்.. அதில் பேச்சை நிறுத்தி விட்ட நந்தினி..

‘இவன் பார்க்கிற விதமே சரியில்லையே..’ என்று யோசனையானாள்.. அவள் சந்தேகித்ததுதான் சரியாக இருந்தது..

“இப்படி சீரியஸா முகத்தை வைச்சுக்கிட்டுக் கேட்டா நீ வேலை செய்கிறதில சின்சியர் சிகாமணின்னு நான்

நம்பிருவேனா..? என்னவோ டூரிஸ்ட் வந்ததைப் போல ஒவ்வொரு இடத்தையும் மொச்சை கொட்டை கண்களை விரிச்சு முழித்து முழித்துப் பார்க்கிறது என்ன..? ஆங்காங்கே கூட வருகிறவனை விட்டு விட்டு தன்னந்தனியா ஓரமாய் போய் நின்று ஷெல்பி எடுக்கிறதென்ன..? மணிக்கொருதரம் கண்ணில தென்படற ரெஸ்டாரெண்டுகளில வளைச்சுக் கட்டி அடிக்கிறதென்னன்னு தூள் கிளப்பிக்கிட்டு இருக்கிற வுமன் நீ.. வேலையில ஞாபகம் வந்துட்டதைப் போல ஆக்டிங்கா கொடுக்கிற..?” ரவிச்சந்திரன் பாயிண்ட் பாயிண்டாக கேட்டு வைத்தான்..

“இது அநியாயம் பாஸ்.. ஊரைச் சுத்தினா பசிக்கத்தான் செய்யும்.. பசிச்சா கண்ணில படற ரெஸ்ட்டாரெண்டில நுழைஞ்சு கிடைக்கிற சாப்பாட்ட ஒருவாய் சாப்பிடத்தான் தோணும்.. இதையெல்லாம் சொல்லிக் காட்டுவீங்களா..?”

“நீ எதை வேணும்னாலும் சொல்லு.. கேட்டுக்கறேன்.. ஆனா ஒரு வாய்தான் சாப்பிடறன்னு சொல்ற பாரு.. அதைத்தான் கேட்டுக்க முடியல.. நீயாவது.. ஒரு வாயோடு நிறுத்திக்கிறதாவது..?”

“சும்மா கண்ணு வைக்காதீங்க பாஸ்.. கோழிக்கோடில இவ்வளவு ருசியான ஃபுட் அயிட்டம் கிடைச்சா ஒரு வாய் சாப்பிட்டதோட நிறுத்திக்க முடியுமா..? இந்த ஊர் ஃபுட் அயிட்டங்களோட ருசி அப்படி.. அப்பப்பா.. சாப்பிட்டு முடிச்ச பின்னாலும் ரொம்ப நேரத்துக்கு நாக்கில ருசி தங்குதே..”

கண்களை மூடித் திறந்து ஓர் லயிப்போடு சொன்னவள் சாப்பாட்டைப் பற்றித்தான் சொல்கிறாள் என்றால் யாரும் நம்ப மாட்டார்கள்..

காணக் கிடைக்காத ஓவியத்தையோ.. மனதை வசப்படுத்தும் இசையைப் பற்றியோ சிலாகிக்கிறாள் என்றுதான் நினைப்பார்கள்..

அதை அவள் தலையில் ஒரு கொட்டை வைத்து ரவிச்சந்திரன் சொன்ன போது..

“ஆயகலை அறுபத்தி நாலில சமையல் கலையும் ஒண்ணு பாஸ்..” என்று நாக்கைச் சப்புக் கொட்டினாள்.

‘இவள் இருக்கிறாளே..’ தாங்க முடியாமல் அவள் காதைப் பிடித்துத் திருகினான் அவன்..

“வலிக்குது பாஸ்..”

கண்களை மூடி.. இமைகளைச் சுருக்கி.. அவள் அலறிய விதம் அழகானதாக இருந்தது.. துறுதுறுப்பு நிரம்பிய அவள் முகத்தைக் குறுகுறுவெனப் பார்த்தபடி காதை விடுவித்தான்..

“அரைக்கிலோ சதையை எடுத்துட்டிங்க..” கானதத் தடவியபடி குற்றப் பத்திரிக்கை வாசித்தாள் நந்தினி..

“காதிலேயே அரைக் கிலோ சதையிருந்தா டோட்டலா நூறு கே.ஜி வெயிட் இருப்ப போல இருக்கே.. குண்டம்மாவா நீ..?”

“என்னைப் பார்த்தா குண்டம்மா போலவா இருக்கு..?”

இடுப்பில் கை வைத்து அவள் சண்டைக்கு வந்ததால் அவள் எத்தனை கிலோ எடையில் இருப்பாள் என்று அவதானிக்கப் போவதாக அறிவித்து விட்டு அவளை பாதாதிகேசம் முதல் பார்வையிட்டான் ரவிச்சந்திரன்.. உடம்பெல்லாம் ஊர்ந்த அவனது மேய்சசல் பார்வையில் கிளர்ச்சி கொண்ட நந்தினியின் உடலில் ஜிவ்வென்று மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற ஓர் உணர்வு பாய்ந்தது.. தாள, முடியாத தவிப்போடு கீழுதட்டை மடித்துக் கடித்தாள்..

அவன் ஆழ்ந்து பார்த்தால் அப்படித்தான் ஆகிப் போகிறாள்.. சளசளத்துப் பேசும் போதோ.. செல்லச்

சண்டைகள் போடும் போதோ.. ஏன், அவன் அவளைத் தலையில் கொட்டிக் காதைப் பிடித்துத் திருகும் போது கூட அவளுக்கு இதுபோன்ற கிளர்ச்சி உண்டாவதில்லை.. அந்தப் பொழுதுகள் சுவராஸ்யம் நிரம்பியவையாக இருக்கும்..

அவன் அழகை கள்ளப் பார்வையுடன் இவள் ரசிப்பதுண்டு.. இவள் அழகை அவன் ரசிப்பதை அதே கள்ளப் பார்வையில் கண்டுணர்ந்து மனதுக்குள் ரகசிய சந்தோஷம் கொள்வதுண்டு.. இனம் புரியாத ரம்யம் நிரம்பிய கண்ணாமூச்சி விளையாட்டு அவனுக்கும் அவளுக்கும் இடையில் நிகழ்வதை ஓர்வித சிலிர்ப்புடன் அவள் அனுபவித்துக் கொண்டுதான் இருந்தாள்..

இளமையெனும் பூங்காற்று பாடி வரும் பாட்டை உணர்வு பூர்வமாக உணர்ந்து திளைத்தாலும் கிளர்ச்சி கொண்ட உணர்வுகளை அவனது மேய்ச்சல் பார் வையில் தான் உணர்ந்தாள் நந்தினி..

அதுபோன்ற தருணங்களில் பேச முடியாமல் தவித்துப் போய் விடுவாள்.. அவனது கம்பீரமான ஆண்மைத்தனம் நிரம்பிய அழகில் அவள் மனம் புயலில் சிக்கிய பட்டம் போலச் சிக்கி சின்னா பின்னமானது.. ஊடுறுவும் அவனது

பார்வையை நேருக்கு நேர் சந்திக்கும் தெம்பு அவளுக்கு வருவதில்லை.. அவன் விழிகளை நேருக்கு நேர் சந்திக்க அஞ்சி அவள் பார்வை தாழும் போது அவன் இதழ்களில் ஆண்மையின் கர்வப் புன்னகை உதிக்கும்..

அப்போதும் அந்தப் புன்னகை உதிக்க அவளையே பார்த்தான் அவன்.. ஒழுங்கில்லாமல் வாரப்பட்டிருந்த முடியும்.. சீரில்லாமல் போடப்பட்டிருந்த துப்பட்டாவுமாக தன் தோற்றத்தைக் குறித்துக் கிஞ்சித்தும் கவலைப்படாத அவளது இயல்பு அவனைக் கவர்ந்தது.. ஒப்பனையில்லாத இயற்கை அழகுடன் அவள் அவனை ஈர்த்தாள்..

படபடக்கும் இமைகள்.. நேருக்கு நேர் பார்க்கத் தயங்கும் பெண்மையின் நடுக்கம்.. நொடிக்கொருதரம் அவனை நோக்கி வீசும் கள்ளப்பார்வை என்று அவன் மனதை தன் வசப்படுத்திக் கொண்டிருந்தாள்..

அவனது பார்வையின் வேகத்தைத் தாள முடியாமல் அவள் தவித்த தவிப்பில்..

‘வாய் பேசறதெல்லாம் சும்மா.. உற்று ஓர் பார்வை பார்த்தா தாங்க மாட்டேங்கிறா..’ என்று மனதுக்குள் இளகிப் போனவன் ஏதும் நடக்காததைப் போல வெகு இயல்பாக..

“இன்றைக்கு கடலுண்டி பறவைகள் சரணாலயத்திற்குப் போகிறோம்..” என்றான்..

அவன் இயல்புக்குத் திரும்பி விட்டதில் இயல்பானவள் வழக்கமான துடுக்குத்தனத்துடன்..

“ஆக மொத்தம் வேலை பார்க்கப் போறதில்லை..” என்று கைகளை விரித்தாள்..

“அதனால நீ எனக்குக் கொடுக்கிற சம்பளம் எதுவும் வேஸ்டாகி விட்டதா..?” சிரிக்காமல் அவன் கேள்வி கேட்டதில் தன் திருவாயை இறுக்கமாக மூடிக் கொண்டாள் நந்தினி.. ஏதேனும் ஒரு நீர்நிலைக்கு அருகில் உள்ள கட்டிடத்திற்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறான் என்று அவனுடன் கதை பேசியபடி காரில் வந்தவள் அவன் கடலோரமாக காரை நிறுத்தவும் குழப்பமாக அவனைப் பார்த்தாள்..

“ஏதோ பறவைகள் சரணாலயத்திற்கு கூப்பிட்டுக் கிட்டுப் போகிறதாச் சொன்னீங்களே பாஸ்..”

“ஏதோ பறவைகள் சரணாலயமில்ல.. கடலுண்டி பறவைகள் சரணாலயம்..”

“என்ன பாஸ் இது...? எதுக்கெடுத்தாலும் தோட்டா தானா..? தமிழ்நாட்டுக்காரிக்கு கேரளத்துப் பேரெல்லாம் சட்டுன்னு வாய் நுழையுமான்னு யோசிச்சுத் திருத்தம் சொல்லனும்..”

“ஒரு சின்னப் பேரை ஞாபகம் வைத்துக்க முடியாதவ எப்படி கேரள மலைநாட்டில வேலை செய்யப் போகிற..?”

“எதுக்கெடுத்தாலும் இதைச் சொல்லியே அரட்டுங்க.. நானென்ன காலம்பூரா கேரளாவில இருக்கப் போகிறேனா என்ன..? எங்கப்பாம்மா மனது மாறி அந்தப் பெல்ட் மன்னனைவிட பெற்ற மகளே உயர்த்தின்னு முடிவுக்கு வந்து என்னைத் திருப்பி அழைச்சுக்கிற வரைக்கும் ஒளிந்திருக்க ஒரு இடம் தேடி வேலைக்கு வந்திருக்கேன்.. நாளைக்கு அவங்க மனசு மாறி.. ‘ரா, ரா.. தஞ்சாவூருக்கு ரா, ரா’ன்னுக் கூப்பிட்டா ஓடிப் போயிடப் போறேன்.. அதுக்குப் போய் அத்தனை பெயரையும் மனப்பாடம் பண்ணுன்னு ஆர்டர் போட்டிங்கன்னா என்னாவேன் சார்..?”

அவளது நீண்ட ஆதங்கத்தில் புருவங்கள் முடிச்சிட மௌனப் பார்வை பார்த்தான் அவன்..

‘திடிர்ன்னு மன்மதப் பார்வை பார்க்கிறான்.. திடிர்ன்னு மௌன குரு பார்வை பார்க்கிறான்.. இவன் எந்த நேரம் எப்படிப் பார்த்து வைப்பான்னே தெரியலையே..’ மனதுக்கு ள் அலுத்துக் கொண்டாள் நந்தினி..

கடலோரமாக இருந்த போட்டில் அவன் ஏறி அவளையும் ஏறச் சொல்லிக் கை கொடுத்ததும்..

“ஹை.. போட்..!” என்று காணாததைக் கண்டவளாய் துள்ளிக் குதித்து போட்டுக்குள் தாவினாள்..

போட்டின் நடு மையத்தில் மரக் கூரையிருந்தது.. அதன் உள்ளே இறங்கப் படிகள் இருந்தன.. படிகளின் முடிவில் வரிசையாக மர நாற்காலிகள் பொருத்தப் பட்டிருந்தன.. உற்சாகத்துடன் இறங்கிய நந்தினி ஜன்னலோரமாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கடலைப் பார்த்தாள்..

நீலம் கலந்த பச்சை நிறக் கடல் நீர் அவளை அதிசயத்தில் ஆழ்த்தியது.. இயற்கையின் அழகோடு ஒன்றிப் போனவளாக அவள் பேச மறந்து சிலையானதில் ரவிச்சந்திரனின் மனம் கனிந்தது.. அவளது ரசிப்பிற்கு இடையூறு விளைவிக்காமல் அவன் போட்டைச் செழுத்திக் கொண்டிருந்த ஆளிடம் பேசப் போய் விட்டான்..

கரையோரமாக அடர்ந்திருந்த தென்னை மரங்களையும் பூச்செடிகளையும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை நந்தினிக்கு.. பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவள் சுற்றிலும் பாறைகள் கவிழ்ந்திருப்பதைப் போன்ற காட்சியைக் கண்டு விழிகளை விரித்தாள்..

அந்த இடம் அற்புதமான இயற்கையழகுடன் இருந்தது.. காணக் கிடைக்காத பொக்கிசத்தைப் பத்திரப் படுத்துவதைப் போல இமைக்காமல் அந்த இயற்கையழகைக் கண்டு சேகரித்து தன் இதயத்துக்குள் பத்திரப் படுத்திக் கொண்டாள் நந்தினி..

ஆழத்தை உணர்த்தும் பசுமை நிறக் கடல் நீரைச் சுற்றிப் பாறைகள் கவிந்திருந்தன.. அதனூடே போட்டில் பயணித்தால் தீவுத் திடலொன்று வந்தது.. நீர் அடர்ந்த பாறைகளின் மேல் பசுமை வண்ணப் பூஞ்சைகள் பூத்திருக்க அவை அரண் போல கடல்நீரையும் தீவுத் திடலையும் போர்த்தியிருப்பதைப் போலக் கவிந்திருந்தன..

“இறங்கலாமா..?”

அவளது ரசிப்பைக் கலைக்காத வண்ணம் மிருதுவாக அழைத்தான் ரவிச்சந்திரன்.. அவளை ஏறிட்டுப் பார்த்தவளின் விழிகளில் நிறைந்திருந்த பரவசத்தில் அவனுள் பரிவு வந்தது..

‘இவள் அதிகமாக வெளியுலகைச் சுற்றிப் பார்த்ததில்லை போல..’

அதைப் பற்றி எதுவும் கேட்காமல் அவள் எழுந்து கொள்ள கரம் நீட்டினான்.. வலிமையான அவனது கரத்தைப் பிடித்தபடி எழுந்து நின்றவளுக்கு அவன் கரத்தை விடத் தோன்றவில்லை.. அதில் அவனது கண்கள் மின்னின.. அவள் அதைக் கவனிக்கவில்லையென்பதில் குஷியானான்.. அவன் விரல்களோடு விரல் பிணைந்தவளின் விரல்களை விடாமல் இழுத்துப் பிடித்து விரல் கோர்த்துப் படிகளில் ஏறி போட்டின் மேல் தளத்திற்கு வந்தான்..

தீவுத் திடலெங்கும் பல வகையான பறவைகள் பல வண்ணத்தில் இருந்ததில் உற்சாகமானாள் நந்தினி.. அவளது உற்சாகத்தை சன்னச் சிரிப்புடன் பார்த்தபடி..

“இதுதான் கடலுண்டி பறவைகள் சரணாலயம்..” என்று சொன்னான்..

அங்கு போட்டில்தான் வரவேண்டுமா இல்லை வேறு வழிகள் இருக்கின்றனவா என்று கேட்க நினைத்ததைக் கேட்காமல் போட்டை விட்டு இறங்கினாள் நந்தினி..

வேறு வழிகள் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே.. அவளுக்கு கடலில் வந்ததுதான் பிடித்திருக்கிறது.. ரவிவர்மனின் விரல்களோடு விரல் கோர்த்தபடி விட்டுப் பிரியாமல் ஒட்டி நடந்தபடி..

“அங்கே பாருங்களேன்.. அந்தப் போர்ட் எத்தனை அழகு..! இங்கே பாருங்களேன்.. வால் நீட்டிக் குருவி..” என்று சந்தோஷத்துடன் ஆர்ப்பரித்தாள்..

“வால் நீட்டிக் குருவியா..?” கேலியாக அவன் சிரித்தான்..

“ஆமாமில்ல.. இதைக் குருவின்னு சொல்ல முடியாது.. வேணும்னா வால் நீட்டி மைனான்னு சொல்லலாமா..? ம்ஹூம்.. இதுவும் இல்லை.. இது வேறு விதமாய் இருக்கு.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.. இதுக்கொரு பெயரை வையுங்களேன்..” நந்தினி குழந்தை போல அவளிடம் கெஞ்ச ஆரம்பித்தாள்..

“நானென்ன அரசியல்வாதியா..? இல்லை அந்தப் பறவைதான் குழந்தையா..? அதுக்குப் போய் என்னை பெயர் வைக்கச் சொல்கிற..?”

அவள் பேசுவது, குதிப்பது என்று அத்தனையும் அவனுக்கு சுவராஸ்யம் நிரம்பிய வேடிக்கையாக இருந்தது.. அவள் போன்ற குண இயல்புகளுடன் கூடிய பெண்ணை அவன் சந்தித்ததேயில்லை.. அவனைக் கண்டாலே நாசுக்காய் நடந்து, பேசி, சிரித்து என்று பொய் முகமூடி யொன்றைப் பொருத்தி அதன் பின்னால் ஒளிந்து நின்று அவனைக் கவர முயன்ற பெண்களைத்தான் அவன் பார்த்திருக்கிறான்.. அவனைக் கவர்ந்த பெண் அவள் ஒருத்தி மட்டும்தான்.. அதை அறியாதவளாக பறவைகளுடன் பறவையாக குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தாள் நந்தினி.. அவளை அங்கிருந்து கிளப்பிக் கொண்டு வருவதற்குள் அவனுக்குப் போதும்.. போதும்.. என்று ஆகிவிட்டது..

பழசிராஜா மியூசியத்தைப் பார்த்து விட்டு, திக்கொட்டி லைட் ஹவுஸின் அருகே சுற்றி விட்டு தலி கோவிலுக்குப் போனார்கள்.. கேரள பாரம்பர்யத்துடன் கூடிய கூம்பு வடிவக் கோபுரத்துடன் இருந்தது கோவில்.. பிரகாரத்தில் உட்கார்ந்தபோது நந்தினியின் மனம் நிறைந்திருந்தது..

“தேங்க்ஸ்..” ஆழ்ந்த குரலில் சொன்னாள்..

ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. ஆழ்ந்த குரலுக்கும் நந்தினிக்கும் வெகு தொலைவாயிற்றே.. பேசுவது அவள்தானா..?

# அத்தியாயம் 45

**ந**ந்தினியின் விழிகளில் கண்ணீர் ததும்பியிருந்தது.. அவளது முகம் முழுவதும் உணர்வலைகள் நிரம்பியிருந்தன.. கோவிலின் உள்ளே ஒளிர்ந்து கொண்டிருந்த குத்து விளக்குகளின் சுடர் வெளிச்சத்தில் அவள் அலாதியான சோபையோடு இருந்தாள்.. தேவதையைப் போல அவன் மனதை அவள் ஆட் கொண்டாள்.. தழுதழுத்த குரலில் நன்றி கூறியவளிடம்..

“எதுக்கு..?” என்று புருவங்களை உயர்த்தினான் ரவிச்சந்திரன்..

“எல்லாத்துக்கும்..” மெல்லிய குரலில் பதிலளித்தாள் அவள்..

“எல்லாத்துக்கும்ன்னா..?”

“நான் அதிகமா வெளியூர் போனதில்லை.. தஞ்சாவூர்.. அதை விட்டா எங்க பூர்விக கிராமம்.. சின்ன வயசில இந்த ரெண்டு ஊரை மட்டும்தான் பார்த்திருக்கேன்.. சொந்தக்காரங்க விசேஷத்துக்கெல்லாம் எங்க அப்பாம்மா மட்டும்தான் போவாங்க.. என்னைக் கூப்பிட்டுக்கிட்டுப் போக

மாட்டாங்க.. பெண் பிள்ளையை சொந்தக்காரங்க கண்ணில காட்டக் கூடாதும்பாங்க.. குமார் மட்டும் அவங்ககூட அட்டை போல ஒட்டிக்கிட்டு போய் வந்துருவான்.. என்னால அது முடியாது.. ஸ்கூல் டூரிலும் அப்படித்தான்.. அவனுக்குப் பெர்மிஷன் கிடைக்கும்.. எனக்குக் கிடைக்காது.. அதனாலேயே சென்னையிலே படிக்கப் போகிறேன்னு பிய்த்துக் கிட்டு ஓடினேன்.. ஆனாலும் பாருங்க.. கட்டி வைக்கப்பட்ட யானையின் காலில் கட்டை அவிழ்த்து விட்டாலும் அது நகராமல் நிற்குமாம்.. கட்டப் பட்டிருந்த கட்டு அதன் மனதில் பதிந்திருக்குமாம்.. அந்தக் கதையாய் என் கதை ஆகிப் போச்சு.. காலேஜில் சுதந்திரம் கிடைத்தாலும் அதை மிஸ்யூஸ் பண்ணி ஊரைச் சுத்தற தைரியம் எனக்கு வரலை..”

வியப்பாக இருந்தது ரவிச்சந்திரனுக்கு.. ஒரு பெண்ணின் வாழ்வில் இப்படிப்பட்டக் கட்டுப்பாடுகள் திணிக்கப் பட்டிருக்குமா..?

“பாவம்தான் நீ..” அனுதாபத்துடன் சொன்னான்..

“பாவம்ன்னு என்மேல நான் பரிதாபப் பட்டுக் கிட்டதில்லை பாஸ்.. கிடைக்கிற சுதந்திரமே எனக்குப்

போதுமானதா இருந்தது.. ஹாலிடேஸில நானும் உத்ராவும் சென்னையை சுற்றிப் பார்ப்போம்.. அதுவே எனக்கு அப்படியொரு சந்தோஷத்தைக் கொடுக்கும்.. இந்த மூன்று நாளில திகட்டத் திகட்ட ஊரைச் சுற்றிப் பார்த்திருக்கேன்.. அதுவும் கேரளத்தோட கோழிக்கோடு.. எவ்வளவு இயற்கையழகு... பார்க்கப் பார்க்கத் தெவிட்டலை.. மனசு ரொம்பியிருக்கு.. நீங்க யாரோ.. நான் யாரோ.. வேலை பார்க்க வந்தவளுக்கு ஊரைச் சுற்றிக் காட்டியிருக்கீங்க.. இதுக்கு தேங்க்ஸுன்னு ஒற்றை வார்த்தையில் நன்றி சொல்லற முடியாது..”

“பின்னே..? பத்து வார்த்தையில நன்றி சொல்வியா..?” உணர்ச்சிப் பெருக்கில் தழுதழுத்தவளிடம் நிதானமாக கேள்வி கேட்டு உணர்வலைகளில் இருந்து அவளை வெளிக் கொணர்ந்தான் ரவிச்சந்திரன்..

“உங்களுக்குப் போய் நன்றி சொன்னேன் பாருங்க.. என்னைச் சொல்லனும்..” மூக்கை விடைத்தாள் நந்தினி..

“உன்னை யாரு நன்றி சொல்லச் சொன்னது..? நான் கேட்டேனா..? ஏற்ற இறக்கத்தோடு கதை வேற சொல்ற..

இந்த சீரியஸ் முகபாவம் உனக்கு செட்டே ஆகலை தெரியுமா..?”

“தெரியுது.. தெரியுது..”

“என்னத்தைத் தெரியுது..?”

“உங்க ஆம்பளைப் புத்தியைத் தெரியுது.. யாரு நீங்க..?”

“ரவிச்சந்திரன்னுதான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. எல்லோரும் அதைத்தான் சொல்கிறாங்க.. நீ புதுசா எதையாச்சும் சொல்லப் போறியா..?”

“பெல்ட் மன்னனைப் போல நீங்களும் ஒரு மேல் சாவனிஸ்ட் தானே..?”

ஆத்திரத்தில் மூச்சு வாங்கியது நந்தினிக்கு.. கோவிலின் உள்ளே பரவியிருந்த இதமான வெளிச்சத்தில் நந்தினியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவன் எதையோ சொல்ல நினைப்பதைப் போலத் தோன்றியதில்..

“சொல்ல நினைக்கிறதைச் சொல்லுங்க.. நீங்கதான் நினைக்கிறதையெல்லாம் யோசிக்காம பேசிடற டைப்பாச்சே..

அதுக்கப்புறமும் எதுக்காக யோசிக்கனும்..?” என்று படபடத்தாள்..

“அங்கே மட்டும் என்னவாம்..? அமைதியின் சிகரமா..? வாயில் வருவதை வைத்துத் தள்ளுகிற டைப்தானே நீயும்..” பதிலுக்கு அவனும் சொல்லிக் காட்டினான்..

“நான் பேச நினைக்கிறதை பேசிருவேன்.. இப்படி யோசிக்க மாட்டேன்...”

“யோசிக்கிற விஷயத்துக்கு யோசித்துத்தானே ஆகனும்..?”

“அப்படி எதைப் பத்தி யோசிக்கிறீங்களாம்..?”

“பெல்ட் மன்னனைப் பத்தித்தான்..”

நந்தினியின் விழிகளுக்குள் பார்த்தபடி மெதுவான குரலில் சொன்னான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் முகம் மாறிவிட்டது..

“அவனைப் பத்தி நீங்க ஏன் யோசிக்கனும்..? உங்களுக்கும் அவனுக்குமா மேரேஜ் பிக்ஸ் பண்ணியிருக்காங்க..?” எரிச்சலுடன் கேட்டாள்..

“அந்த சம்பந்தம் இருந்தாத்தான் அவரைப் பற்றி நான் யோசிச்சுப் பார்க்கனுமா..? அவரும் நானும் மேல்

சாவனிஸ்ட்ங்கிற சம்பந்தம் போதாதா..?” ரவிச்சந்திரனின் புருவங்கள் உயர்ந்தன..

அவளது சந்தோஷமான மனநிலையைக் கெடுப்பதைப் போல ரவிச்சந்திரன் பேசி வைத்ததில் மனத்தாங்கலுக்கு ஆளான நந்தினி அவனது புருவ உயர்த்துதலின் வசீகரத்தைப் பார்க்காமல் வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தாள்..

“நீ கோவிச்சுக்கிட்டாலும் பரவாயில்லை.. நான் சொல்ல நினைக்கிறதைச் சொல்லிடறேன்..”

“என் கோபத்துக்கு எந்த விதமான வேல்யூவும் இல்லை பாஸ்.. ஆஃப்டர் ஆல் நான் உங்களிடம் வேலை பார்க்க வந்தவள்..” நந்தினி கண் கலங்கி விட்டாள்..

“பார்த்தியா.. அவசரப் படறியே.. இதே அவசரத்தைத்தான் உன் வுட்-பி விஷயத்திலயும் காட்டியிருக்க.. நீ அவரிடம் பேசியிருக்குனும் நந்தினி.. உன்னைப் பத்தி.. உன்னோட இந்த ரசனைகளைப் பற்றி.. உன் மனதிலிருக்கிற இந்த ஏக்கங்களைப் பத்தின்னு எல்லாத்தையும் சொல்லியிருக்கனும்..”

“சொல்லியிருந்தா..?”

“சொல்லியிருந்தா அவர் உன் உணர்வுகளைக் கன்சிடர் பண்ணியிருப்பார்.. உனக்கான சுதந்திரத்தை அவரிடம் நீ கேட்டிருந்தா கட்டாயம் கொடுத்திருப்பார்..”

“என்ன சொன்னீங்க..?”

கோபத்தில் நந்தினியின் முகம் ஜிவுஜிவுவென ஆகிவிட்டது..

“அவனிடம் எனக்குச் சுதந்திரம் கொடுன்னு கேட்டிருக்கனுமா..? அவன் என்ன வெள்ளைக்காரனா..? அந்த வெள்ளைக்காரனையே வெளியே போன்னு கை காட்டி விரட்டி விட்டது நம்ம நாடு.. அந்த நாட்டில பிறந்துட்டு நான் என் சுதந்திரத்தை அவனிடம் யாசகமா கேட்டு வாங்கிக்கனுமா..? ஏன் கேட்கனும்..? எதுக்குக் கேட்கனும்..? இது என்னோட சுதந்திரம் பாஸ்.. இன்னொருத்தன் கொடுத்து நான் வாங்கிக்க வேண்டியதில்லை..” நெருப்புப் பொறியெனப் பொரிந்தாள்..

“அடேங்கப்பா.. பெல்ட் மன்னன் பெயரைச் சொன்னாலே நீ வீராங்கனையாகி விடற..?” சமாதானப் படுத்தும் வகையில் சமரசமாகப் பேசிச் சிரித்தான் ரவிச்சந்திரன்..

ஒருவழியாக மலையிறங்கிய நந்தினி.. கோவிலின் அழகை வியந்து பேசியபடி ரவிச்சந்திரனுடன் நடந்தாள்.. சடுதியில் கோபம் மறந்த அவளது குழந்தைத் தனத்தை மனதுக்குள் வியந்து ரசித்தபடி கூட நடந்த ரவிச்சந்திரனுக்கு அவள் மீதான பிரியம் அதிகரித்தது.. மெழுகுவர்த்தியின் மெல்லிய ஒளியில் ‘யாழ்..’ நட்சத்திர ஹோட்டலின் பிரத்யேக டைனிங் ஹாலில் ரவிச்சந்திரனுடன் இரவு உணவு உண்டபோது அடிக்கடி அவனைப் பார்ப்பதும் அவன் பார்க்கும் போது வேறு பக்கம் பார்ப்பதுமாக இருந்தாள் நந்தினி.. சட்டென அவன் பார்த்து அவள் பார்வையோடு பார்வை சந்தித்து விட்டால் தடுமாறினாள்.. ரவிச்சந்திரனுக்கு அந்தக் கண்ணாமூச்சி விளையாட்டைப் பிடித்திருந்தது.. லிஃப்டிலிருந்து வெளிப்பட்டு அவரவர் அறைகளுக்குப் பிரியும் போது..

“குட்நைட்..” என்றான் ரவிச்சந்திரன்..

ஆழ்ந்த அவனது குரலில் எதுவும் பேச முடியாதவளாக மௌனமாக தலையை மட்டும் அசைத்தாள் நந்தினி.. சுடுநீரில் அலுப்பு நீங்க குளித்து விட்டு நைட்டிக்கு மாறி படுக்கையில் விழுந்து தலையணையில் முகத்தைப் புதைத்துக்

கொண்டவளுக்கு இந்த நாள், இனிய நாள் என்று தோன்றியது..

ரவிச்சந்திரனைப் பற்றிய இதமான நினைவுகளுடன் கண்ணயர்ந்து விட்டாள்.. மறுநாள் எழுந்து கொள்ளும் போதே மனதுக்குள் அன்றுதான் புதிதாய் பிறந்ததைப் போல உற்சாகமாக இருந்தது.. பால்கனிக்குச் சென்று கண்ணாடி ஜன்னல் கதவின் திரையை விலக்கி வெளியே பார்த்தாள்..

கேரளத்து கோழிக்கோடின் அழகு மனதை மயக்கியது..

அந்த நான்கு நாள்களுக்குள் கோழிக்கோடு அவளுக்குப் பரிச்சயமான ஊராக மாறி விட்டிருந்தது.. குளித்து முடித்து நைட்டியுடன் வந்து மாற்றுடையை தேர்வு செய்யத் துணிகளைப் புரட்டியவளுக்குச் சேலை அணிந்தால் என்ன என்று தோன்றியது..

முதல்நாளுக்கு முந்தின நாள் அவள் சேலை அணிந்திருந்தபோது ரவிச்சந்திரன் அவளை அடிக்கடிப் பார்த்ததைப் போல நினைவு வந்ததில் அவள் அன்று சேலையைத்தான் உடுத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள்..

‘சும்மாவா பார்த்தான்.. தின்று விடுவதைப் போலயில்ல பார்த்தான்.. ராஸ்கல்.. அடிக்கிறதெல்லாம் சைட்.. பேச்சுன்னு வந்தா பெல்ட்மேன்.. இவன் ஜென்டில்மேனாம்.. சின்னப் பெண்ணுக்குப் புத்தி சொல்கிறானாம்.. நான் நம்பிரனுமாம்.. யாருகிட்ட..?’

மை ஊதா வண்ணத்தில் சின்னச் சின்ன வெள்ளைப் புள்ளிகள் கொண்ட எம்பிராயிடரி சேலையும், ரவிக்கையும் அணிந்து காதுகளில் பெரிதான முத்தக் கம்மலை அணிந்தாள்.. கழுத்தில் முத்து மாலை.. கைகளில் முத்து வளையல்கள்.. கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டவளுக்குத் திருப்தியாக இருந்தது.. அரிதாகத்தான் அவள் ஒப்பனை செய்து கொள்வாள்.. அன்று ஏனோ பலமாக ஒப்பனை செய்து கொள்ள வேண்டும் போல இருந்தது.. காலை உணவுக்காக டைனிங் ஹாலை நோக்கி நடந்தாள்.. இப்போதெல்லாம் அவன் ரிசப்சஷனில் காத்திருப்பதில்லை.. டைனிங் ஹாலில் லேப் டாப்பில் ஆழ்ந்திருப்பான்..

“இப்பக் கூட வேலையா..?” பயத்துடன்தான் கேட்பாள்.. அதுதான் சாக்கென்று நீயும் வேலையைப் பார் என்று அவள் தலையில் ஏதேனும் ஓர் வேலையைக் கட்டி விட்டால் என்ன செய்வது..? ஊர் சுற்றிக் காட்டுகிறேன் என்று ஆசை

காட்டிவிட்டு வேலை செய்யச் சொல்கிறாயே என்று அவனிடம் நியாயம் கேட்க முடியுமா..?

“ஒவ்வொரு செகண்டும் வேல்யூவானதும்மா.. வேஸ்ட்டாக்கக் கூடாது.. உன்கிட்ட மாட்டிக்கிட்டதினால இந்த நாள்களை வேஸ்ட் பண்ணிக்கிட்டு இருக்கேன்..” என்பான் அவன்.. அதற்கு மேல் கேள்வி கேட்காமல் வாயை மூடிக் கொள்வாள்..

அவன் லேப்டாப்பை நோண்டிக் கொண்டிருந்தால் அவளுக்கு என்ன..? வெட்டியாக காலை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால்தான் அவளுக்கு என்ன..?

‘மகராஜன்..! வேலை கொடுக்கன்னு கூப்பிட்டுக் கிட்டு வந்தவன் ஓசியிலே ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில தங்க வைச்சு நேரா நேரத்துக்கு வகை தொகையா சாப்பாட்டையும் போட்டு ஊரையும் சுத்திக் காட்டிக் கிட்டிருக்கான்.. இதை கொஸ்டின் பண்ணிக் கெடுத்துக்கனுமா..?’

அன்று லேப்டாப்பில்லாமல் செல்ஃபோனை காதுக்குக் கொடுத்து யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.. அவளைக் கண்டதும் எதிர்சீட்டைக் காட்டினான்.. அவள் உட்காருவதற்கு இடத்தைக் காட்டுகிறானாம்..

‘நீ சொல்லாவிட்டால் எனக்குத் தெரியாதாக்கும்..’

மனதின் நினைவை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் இருக்கப் பிரயத்தனங்களை மேற்கொண்டாள்.. அவள் சும்மா இருந்தாலாவது அவன் ஃபோன் பேச்சில் கவனமாக இருந்திருப்பான்.. அவள் காட்டிய அதீத பெர்பெக்ஷன் அவளது குட்டை உடைத்து வெளிச்சம் போட்டுக் காட்டியதில் புருவங்கள் சுருங்க அவளையே பார்த்தான்.. பார்த்தவனின் கண்களில் பல்ப் எரிந்தது.. அவள் ஒப்பனையில்லாமல் வந்தாலே கள் குடித்த சிங்கம் போல பருகு.. பருகு எனப் பார்ப்பான்.. பார்த்துப் பார்த்து ஒப்பனை செய்து கொண்டு வந்திருந்தால் அவளை விட்டுப் பார்வையை அகற்ற அவனால் முடியுமா..?

வைத்த பார்வையை விலக்காமல் அவன் பார்த்ததில் அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது.. ஃபோனில் பேசி முடித்தவன் ஃபோனை அனைத்து டேபிளில் வைத்தபடி அவளை ரசனையாக ஊன்றிப் பார்த்தபடி..

“யு லுக் ஸோ.. பியூட்டி புல்.. டுடே..” என்றான்..

அவளுக்கு என்னவோ போல இருந்தது.. இதுபோன்ற நேரடியான பாராட்டுக்கு என்ன பதிலைச் சொல்வது..? எதையாவது பேச வேண்டுமென்பதற்காக..

“ஏன்..? நீங்களும்தான் பியூட்டி புல்லா இருக்கீங்க.. இன்றைக்குன்னு இல்லை.. எப்பவுமே நீங்க ஹேண்ட்சம் தான்..” என்று மனதில் இருப்பதை மறைக்காமல் சொல்லி விட்டாள்..

“ஈஸிட்..?” அவன் குஷியாகி விட்டான்..

“யெஸ்.. பாஸ்..” அவள் முகச் சிகப்பை மெனு கார்டில் மறைக்க முயன்றாள்..

“அப்படின்னா உனக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லு..”

அவள் தூக்கிவாரிப் போட மெனு கார்டை நழுவ விட்டு விட்டு அவனைப் பார்த்தாள்.. அவள் பார்வையிலிருந்த திகைப்பில் அவன் புருவங்களை உயர்த்தி அவளைக் கிறங்கடித்தான்.. “ஆமாம் பாஸ்.. எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு.. அதுக்கு

இப்ப என்னஙங்கறீங்க..? ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கலாமா..?”

துடுக்குத்தனமான அவளது கோபத்தில் அவன் கடகடவென உரக்கச் சிரித்தான்.. உணவு வகைகளை

கொண்டு வந்திருந்த பேரர்கள் தங்களுக்குள் அர்த்தமுள்ள பார்வைகளை பரிமாறிக் கொண்டார்கள்..

'இவங்க என்னன்னு நினைச்சுக்குவாங்க..?' நந்தினிக்கு சங்கடமாக இருந்தது..

"அப்பவும் ஓடிப் போய்த்தான் மேரேஜ் பண்ணிக்கனுமா..? நடந்து போய் மேரேஜ் பண்ணிக்கிட்டா ஆகாதா..? ஓடிப் போகிறதுன்னா உனக்கு அவ்வளவு பிடித்தம்.. ஊம்..?"

கிண்டலாக அவன் கேட்டதும் நந்தினியின் கோபம் அதிகரித்தது..

# அத்தியாயம் 46

**ந**ந்தினி ‘உர்’ ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருக்க ஆன மட்டும் முயன்று கொண்டிருந்தாள்.. அவளது கோபத்தை வெளிப்படுத்த முடியாமல் கேரளத்தின் பசுமை அவளை சோதித்துக் கொண்டிருந்தது.. காரை ஓட்டிக் கொண்டே அவளை நொடிக்கொருதரம் பார்வையிட்டுக் கொண்டிருந்த ரவிச்சந்திரனைப் பார்க்காமல் காருக்கு முன்னால் தெரிந்த சாலையின் இருபக்கமும் அடர்ந்திருந்த மரம், செடி, கொடிகளில் கண்ணும் கருத்துமாக இருந்தாள்..

பின்னிப் பிணைந்திருந்த பசுங்கொடிகளின் அழகு அவளது கோபத்தை விரட்டி விட்டது.. முகத்தின் கடினம் மறைந்து அங்கே பிரகாசம் குடி கொள்ள ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தாள்.. அடர்ந்ததிருந்த மரங்களின் ஊடே சூரியனின் வெளிச்சம் புக வழி கிடைக்காததால் ஓட்டைக் கூரையின் இடுக்குகள் வழி தெரியும் சூரிய வெளிச்சம் போல ஆங்காங்கே கிடைத்த இடுக்குகளின் வழியே வெளிச்சப் புள்ளிகளாய் சூரியனின் கதிர்கள் மின்னின..

பாதைகூட பச்சைநிறப் பூஞ்சையுடன் பச்சை வண்ண ரத்தினக் கம்பளம் போல நீண்டிருந்ததில் உற்சாகமானாள் நந்தினி.. அவளது முகத்தில் தெரிந்த மாற்றங்களை அவதானித்துக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்த ரவிச்சந்திரனுக்கு இவளுக்குத்தான் எப்பேற்பட்ட குழந்தை மனது என்ற வியப்பு வந்தது..

நந்தினியின் இயற்கையான வனப்பும்.. எளிதில் கோபத்தை மறந்து விடும் குழந்தை குணமும்.. வசீகரமான பெண்மையின் நளினமும் அவனைக் காந்தமென கவர்ந்து வளைத்து இழுத்து ஆகர்ஷித்தது.. அவளுடன் கழிக்கும் மணித்துளிகள் சுவராஸ்யம் கொண்டவையாக இருப்பதை அவன் உணர்ந்து ரசித்தான்..

“அங்கே பாருங்களேன்.. அந்தக் கொடிகள் அடர்ந்து வளைந்திருக்கிறதைப் பார்த்தா கொடிவீடு போலவே இருக்கில்ல..”

அவனிடம் அவள் கோபமாக இருக்கிறாள் என்பதை மறந்து அவனைத் திரும்பிப் பார்த்துக் குதூகலித்தாள் நந்தினி..

“கேரளத்தில எங்கே பார்த்தாலும் கொடி வீடு இருக்கும்..” என்றபடி காரை நிறுத்தினான் ரவிச்சந்திரன்..

“ஏன் காரை நிறுத்திட்டிங்க..?”

“இங்கேதான் வரனும்னு வந்திருக்கோம்.. வர வேண்டிய இடம் வந்தாச்சு.. ஸோ.. என் காரும் நின்னாச்சு..”

“ஓ.. இந்த மரம் செடி கொடிகளைப் பார்க்கலாம்ன்னு வந்திருக்கோமா..?”

கேட்டுக் கொண்டே இறங்கிய நந்தினி எதிரே ‘சோ’ வென்ற பேரிரைச்சலுடன் கொட்டிக் கொண்டிருந்த அருவியைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டாள்..

வெண்மையான நுரையுடன் கூடிய சோப்புக் குமிழ்கள் மொத்தமாக மேலிருந்து கீழே கொட்டுவதைப் போலச் சாரல் தெறிக்க.. நீர் புகையெழுப்ப.. அருவி கொட்டிக் கொண்டிருந்தது..

“இது துஷாகிரி அருவி..”

அவளது முகத்தில் தெரிந்த பரவசத்தைப் பார்த்தபடி சொன்னான் ரவிச்சந்திரன்.. அருவியிலிருந்து தெறித்த சாரல் மழையில் முகத்தை நீட்டிய நந்தினி குளிர் சாரலின் நீர் தெளிப்பில்..

“ஹ..!” என்று சிலிர்த்தாள்..

பனியில் நனையும் மலரின் முகம் போல அவள் முகம் இருந்ததில் இவளுக்கு ‘பூ முகம்..’ என்று நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. அருவியின் அருகே ஓடிய நந்தினி உடை நனைவதையும் பொருட்படுத்தாமல் அருவியில் கைகளை நீட்டி ஆர்ப்பரித்தாள்.. ரவிச்சந்திரனுக்கு என்னவோ அவள் வேறு அந்த அருவி வேறு என்று பிரித்துப் பார்க்கத் தோன்றவில்லை..

கொட்டும் அருவியிலிருந்த அத்தனை குண நலன்களும் நந்தினியிடமும் இருந்தன.. குழந்தை பே ால குதியாட்டம் போட்டாள்.. இவளை நான்கு சுவர்களுக்குள் சிறை பிடிக்க முடியாது என்று நினைத்தான் ரவிச்சந்திரன்.. அப்படி சிறை பிடிக்க நினைத்ததினால்தான் அவளைப் பெற்றவர்களைப் பிரிந்து ஓடி வந்திருக்கிறாள்..

“பிடித்திருக்கா..?” கண் சிமிட்டினான்..

“பிடித்திருக்கு.. அருவியை.. உங்களையில்லை..” உதட்டைச் சுழித்தாள் நந்தினி..

சுழித்த உதடுகளின் மீது அவனது பார்வை பதிந்து தடவி இறங்கியதில் அவளுக்குள் சிரிப்பு உண்டானது..

“பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடறப்ப என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்ன..?” அவன் விடவில்லை..

“தெரியாம சொல்லிட்டேன் பாஸ்.. சொன்ன வார்த்தையை வாபஸ் வாங்கிக்கறேன்.. போதுமா..?” பொய் கோபத்துடன் சிடுசிடுத்தாள்..

“ஸோ.. யு ஹேட் மீ..” ரவிச்சந்திரன் தொடர்ந்து வம்பைக் கட்டி இழுத்தான்..

அவன் படுத்திய பாட்டில்.. ‘யெஸ் பாஸ்.. ஐ ஹேட் யு..’ என்று சொல்லத்தான் நினைத்தாள்.. அதைச் சொல்ல முடியாமல் நாக்கு புரள மறுத்து அடம் பிடித்தது..

“என்ன பதிலைக் காணோம்..?”

அவன் வசீகரமாக புருவங்களை உயர்த்தி அவள் மனதைக் கொய்தான்.. என்னடா இது என்றிருந்தது அவளுக்கு.. இப்படியா அவள் மனது வெட்கம் கெட்டு அலைபாயும்..?

‘செஞ்சிக் கோட்டையில் மீட் பண்ணியவனும் இவனைப் போலதான் புருவத்தை புருவத்தை உயர்த்தினான்.. அவனைப் பார்த்தபோதும் இந்த மனது அலைபாய்ந்தது..

சைட் அடிக்கிறதைப் போலதான் இருக்கான்னு ஜொள் விட்டது.. மயங்கித் தொலைத்தது.. இப்ப இவனிடமும் மயக்கம் வருது.. இரண்டு மயக்கத்தில் எந்த மயக்கம் நிஜமான மயக்கம்..?'

நந்தினி தடுமாறினாள்.. ஒரிஜினல் ரவிச்சந்திரனைப் போலவே டூப்ளிகேட் ரவிச்சந்திரனும் அழகன்தான் என்பதை த அவளது மனம் நினைவு படுத்தியது..

'என்கூடப் பேசறதுக்காக அவன்தான் ரவிச்சந்திரன்னு டூப் விட்டிருப்பான்..'

அவனது பொய்க்காக அவன் சார்பில் வக்காலத்து வாங்கியது அவள் மனம்.. டூப்ளிகேட் ரவிச்சந்திரன் எதிரிலிருக்கும் ஒரிஜினல் ரவிச்சந்திரனைப் போலக் கோடிஸ்வரன் இல்லையென்பதால் அவன் பக்கம் சாய்கிறதோ அவள் மனம்..?

எட்டாக் கனிக்கு ஆசைப்பட்டு ஆகப் போவதென்ன.?

'நந்தினி.. நீ கூட பிலாசபி பேசறடி.. அடி தூள்..' மனதுக்குள் தன்னைத் தானே அவள் பாராட்டிக் கொண்டிருந்தபோது..

“இன்று வந்த இந்த மயக்கம் என்னை எங்கெங்கோ கொண்டு செல்லுதம்மா..” என்று ரவிச்சந்திரனின் செல்ஃபோன் பாடி வைத்தது..

‘இப்படியொரு ரிங் டோனா..? அதுவும் இவனிடமா..?’

நந்தினி ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவன் படு அமைதியாக அவளைப் புத்தரைப் போல பார்த்து விட்டு செல்ஃபோனை காதுக்கு கொடுத்தான்..

“நோ..”

“ம்ம்ம்...”

“மனசிலாயி..”

“மனசிலாயி..?”

என்பதைப் போன்ற ஒற்றையெழுத்து, ஒற்றை வார்த்தைகளைப் பதிலாக கொடுத்து ஒரு நிமிடம் பேசிவிட்டு நந்தினியைப் பார்த்தவன்..

“ரோஸி..” என்றான்..

“பொருத்தமான ரிங் டோன்தான்..” நந்தினி நொடித்தாள்.. அவன் கண்களில் சிரிப்புடன் அவளைக் கடிந்து கொள்வதைப் போலப் பார்த்து விட்டு..

“அரட்டை..” என்றபடி வாய் விட்டுச் சிரித்தான்..

“அது இருக்கட்டும்.. உங்க ஃபோனோட ரிங்டோன் வேறயாச்சே..” விசாரித்தாள் அவள்..

“மற்றதுக்கு வேறதான்.. ரோஸிக்கு மட்டும் இந்த ரிங்டோன்..” விஷமமாக சிரித்தான் அவன்..

“அப்ப என்ன பொருத்தம், இந்தப் பொருத்தம்ன்னு நான் அட்மைர் பண்ணினதில தப்பில் லைன்னு சொல்லுங்க.. ஆமாம்.. மயக்கம் உங்களுக்கா இல்லை அவளுக்கா..?”

இயல்பாக வினவுவதைப் போல வினவினாலும் அவள் கண்களில் சடுதியில் வந்து மறைந்த பொறாமையின் சாயலில் அவன் விழிகள் மின்னின.. அவன் கண்டு கொண்டதை அறியாத அறியாமையுடன்..

“இது எதுக்கு..?” என்று வாய் விட்டே கேட்டு விட்டாள் நந்தினி..

“எதுக்கோ..” அவன் உல்லாசமாகச் சிரித்தான்..

‘எப்படியோ போ..’ அவள் உதட்டைப் பிதுக்கி விட்டு அருவியை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

“இந்த அருவியில் குளிக்கலாம்தானே..?” சந்தேகம் கேட்டாள்..

“சில்லுன்னு இருக்கும்.. அது உனக்குப் பிராப்ளமா இல்லைன்னா குளிக்கலாம்.. பட்.. நீ மாத்து டிரஸ் எடுத்துட்டு வரலையே..” என்றான் அவன்..

“ஸோ வாட்..?”

சட்டென அருவிக்குள் புகுந்தவள் அவன் கையையும் பிடித்து இழுத்து அருவியில் நுழைந்து விட்டாள்.. எதிர்பாராத அந்தச் செயலில் திகைத்தாலும் அந்த நொடிகளை மனமார ரசித்து விரும்பி அனுபவித்தான் ரவிச்சந்திரன்.. ‘சோ’ வெனக் கொட்டிய அருவி நீரில் அவளோடு நனைவது சுகமான ஒன்றாக இருந்தது..

அருவியை விட்டு விலக மனமின்றி அதில் குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தவளை அருவியை விட்டு வெளியே இழுத்துக் கொண்டு வருவதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்று ஆகி விட்டது..

‘இவள் பண்ணுகிற அழிச்சாட்டியத்துக்கு எப்பவுமே போதும், போதும்ன்னுதான் ஆகிருது..’ செல்லமாக அலுத்துக் கொண்டான்..

சிறு குழந்தையின் சேஷ்டை நிரம்பிய அந்தக் குமரிப் பெண்ணின் சொட்டச் சொட்ட நனைந்திருந்த சேலை மேனியுடன் ஒட்டிப் படிந்து கவர்ச்சிகரமான பேரழகை வெளிப்படுத்தியது.. ரவிச்சந்திரனுக்குள் ஏதோ நிகழ்ந்தது.. அவனது மேய்ச்சல் பார் வையை கம்மங்காடு பச்சைப் பசேலென்ற கதிர்களுடன் தலையாட்டி வரவேற்றதில் செம குஷியாகி மேய ஆரம்பித்து விட்டது..

ஈரச் சேலை கால்களை பிணைத்துத் தடுக்கியதில் குனிந்து அதைப் பிழிந்தபடி அவனைப் பார்த்த நந்தினிக்குத் திக்கென்று ஆகிவிட்டது.. அவசரமாக சேலையை இழுத்து விட்டுக் கொண்டாள்..

அவனது பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவள் பார்வை நடுங்கியது.. இப்படிப் பார்க்காதே என்று எப்படி அவள் சொல்வது..? சொன்னால் எப்படிப் பார்த்தேன் என்று விளக்கம் கேட்பான்.. என்னவென்று விளக்கம் சொல்வாள்..?

அவனது பார்வை மேய்ச்சல் பார்வையாக இருந்தாலும் காமப் பார்வையாக இல்லை.. அவளை ஊடுறிவிய அந்தப் பார்வையில் அவள் சிலிர்த்து நனைந்தாள்.. அந்த நொடிகளை அவளது மனம் சேகரித்துப் பத்திரப் படுத்திக் கொண்டது..

பூக்கள் பூக்கும் தருணம் போன்றவை அந்த நொடிகள்.. வானத்தில் கோடானுகோடி நட்சத்திரங்களைப் பார்க்கும் அரிய நொடிகள் போன்றவை அந்த நொடிகள்.. மழைச் சாரல் முகம் நனைக்க, வெயிலின் வெம்மை நீங்குவதை உணர்த்தும் கோடைக்கால மழையின் குதூகலம் நிரம்பியவை அந்த நொடிகள்.. கன்னத்தில் குழி விழச் சிரிக்கும் குழந்தையின் கன்னத்தில் முத்தமிடும் பொழுது ஒரு பரவசம் உதிக்குமே, அதே பரவசத்தை உணர்த்தும் நொடிகள் அந்த நொடிகள்..

இந்த வாழ்க்கைதான் எத்துனை அற்புதமானது என்று வியந்து போனாள் நந்தினி.. காலத்தின் ஓட்டத்தில் எதிர்பாராத தருணங்களில் பூங்கொத்தை நீட்டுகிறதே.. ஓடி ஒளிய வேண்டிய விதி நேர்ந்து விட்டதே என்று மனம் பதற அவள் வந்த இடத்தில் பூஞ்சோலை காத்திருக்கும் அதிசயத்தை அவள் என்னவென்று சொல்லுவாள்..?

அவளையே பார்த்துக் கொண்டிருந்த அவனது பார்வை அவளைச் சலனப் படுத்தியது.. இதுபோன்ற ஆழ்ந்த சலனத்தை அவள் டூப்ளிகேட் ரவிச்சந்திரனிடம் உணர்ந்ததில்லை என்பதை அந்த நொடியில் அவள் உணர்ந்தாள்..

அன்று வந்த அந்த மயக்கம்தான் உண்மையான மயக்கம்.. செஞ்சிக் கோட்டையில் உண்டான மயக்கம் பருவ வயதில் எதிர்பாலினத்தவரிடம் உண்டாகும் இனம் புரியாத ஈர்ப்பின் மயக்கம் என்பதை அவளது மனம் சார்ந்த அறிவு வரையறுத்து பதிவு செய்து கொண்டது..

அந்த நொடியில் உறைந்து விடத்தான் அவள் விரும்பினாள்.. அவள் வளர்க்கப்பட்ட விதம் அப்படி உறைந்து நின்றுவிட அனுமதிக்கவில்லை.. ஒரு பெருமூச்சுடன் பார்வையை விலக்கிக் கொண்டு.. வெயில் படிந்திருந்த பாறையின் மீது உட்கார்ந்து விட்டாள்..

பக்கத்தில் அவனும் உட்கார்ந்தான்.. இது என்னடா வம்பாப் போச்சு என்ற கலவரத்தீ அவளுக்குள் பற்றிக் கொண்டது..

“இப்படியா என்னையும் அருவிக்குள்ள இழுத்து விடுவ..? உனக்காவது வெயிட்லெஸ் ஸாரி.. சட்டுன்னு உலர்ந்திரும்.. என்னோட முரட்டு ஜீன்ஸும், சர்ட்டும் அப்படியா..? துவைத்து உலர்த்தினாலே காய்வதற்கு மூன்று நாள்களாகும்..”

அவன் புலம்பிய புலம்பலைத் தாள மாட்டாமல் பதில் சொல்ல அவனைப் பார்த்த நந்தினி அரண்டு போனாள்..

அவளிருப்பதை லட்சியமே பண்ணாமல் அவன் ஹா யாக ஜீன்ஸையும், சட்டையையும் கழட்டிக் கொண்டிருந்தான்..

“என்.. என்.. என்ன செய்கிறீங்க..?”

மருண்டு போன நந்தினி கூவலுடன் எழுந்து நின்றாள்.. அவள் விழிகள் சுற்று முற்றும் சுழன்றது.. இருள் படிந்த அடர்ந்த காட்டில் அங்கொருவரும் இங்கொருவருமாக இருந்தார்கள்.. அருவியின் பக்கமாக எவரும் வரவில்லை..

“இவ்வளவு சீக்கிரமா அருவியைப் பார்க்க யாரும் வரமாட்டாங்க..”

சாவதானமாக அவன் விளக்கம் கொடுத்ததில் அவளுக்கு ‘பகீர்’ என்று இருந்தது.. அந்தப் பக்கமாக அப்போதைக்கு ஆள் வரமாட்டார்கள் என்பதை உணர்த்துக்கிறானா..?

“நீங்.. நீங்.. நீங்க..”

அவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை.. எதற்காக ஜீன்ஸ் பேண்டையும், சட்டையையும் கழட்டுகிறாய் என்று லஜ்ஜையில்லாமல் எப்படிக் கேட்டுத் தொலைப்பாள்..?

“அதான் சொன்னேனே.. ஜீன்ஸும் சர்ட்டும் ஈரமாயிருக்குன்னு.. காயட்டும்.. போகலாம்..”

அவன் நிதானமாக பக்கத்துப் பாறையின் மீது வெயில் படுவதைப் போல ஜீன்ஸையும், சட்டையையும் விரித்து உலர்த்திவிட்டு ஜட்டியும், பனியனுமாக படு கவர்ச்சிகரமான தோற்றத்துடன் அவள் முன்னால் உலாத்தினான்..

“சூடேறின பாறை பாரு.. சீக்கிரத்தில உலர்ந்திரும்..” என்று அவளுக்கு விளக்கம் வேறு சொன்னான்..

அவளால் அவனை ஏறெடுத்தும் பார்க்க முடியவில்லை.. ரோமம் அடர்ந்த அவனது சிவந்த மார்பு அவளை மருட்டியது.. உருண்டு திரண்ட புஜங்கள் அவளை மயக்கி ஈர்த்ததில் நந்தினி பயந்து போனாள்..

# அத்தியாயம் 47

**ந**ந்தினி பாவம்.. கட்டுக் கோப்பான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.. கிராமத்திற்குப் போகும் போது காவேரி ஆற்றில் குளிக்கப் போவதுண்டு.. அங்கே பெண்களுக்கான தனிப் படித்துறை உண்டு.. ஆண்கள் அந்தப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்க மாட்டார்கள்.. அதனால் இதுபோன்ற கவர்ச்சிகரமான அரைகுறை ஆடையுடன் குளித்து முடித்த தோற்றத்தில் இருக்கும் ஆணைப் பார்க்கும் நெருக்கடி நிலைமை நந்தினிக்கு ஏற்பட்டதேயில்லை.. அதிலும் ரவிச்சந்திரன் வெகு அழகாக இருந்து தொலைத்தான்.. பணக்காரத்தனம் கொண்ட கவர்ச்சிகரமான அழகு.. ரோஸிக்கு அவனது பணக்காரத் தனத்திலும் ராஜ பாரம் பர்ய பின்புலத்திலும் மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்.. அவளுக்கு அப்படியில்லையே.. அவனது பணக்காரத்தனம் அவளுக்கு ஒரு பொருட்டேயில்லை.. அவனுடைய ராஜ பாரம்பர்யம் அவளைப் பொறுத்தவரை ஓர் ஆர்வமான கதை மட்டுமே.. அவளுடைய பிரச்னை அவளை அலைக்கழிக்கும் அவனுடைய கம்பீரமான கவர்ச்சி நிரம்பிய அழகு மட்டும்தான்..

கைகளைப் பிசைந்தபடி அவன் பக்கம் பார்வையைத் திருப்பாமல் விரோதி போல முகம் திருப்பியபடி நின்றிருந்தவளுக்கு முன்னால் குனிந்து சொடக்குப் போட்டு அவளது கவனத்தை ஈர்த்தான் ரவிச்சந்திரன் உடல் உலுக்கிப் போட அச்சத்துடன் ஓரடி பின்னால் எட்டு வைத்தவளை விசித்திரமாக பார்த்து விட்டு..

"வாட்'ஸ் யுவர் பிராப்ளம்..?" என்று கையைக் குவித்துக் கேட்டு வைத்தான்..

'நீதாண்டா பிராப்ளம்..' அவளுக்கு அங்கேயிருந்து ஓடி விட்டால் தேவலை போல இருந்தது..

ஈரத்தில் முடி நனைந்து பிசிறு பிசிறான பின்னல் அவள் முதுகில் ஒட்டியிருக்க.. காதோரமும் நெற்றியிலும் கூந்தல் இழைகள் பிரிந்து படிந்திருந்தன.. நனைந்திருந்த சேலை உடலோடு ஒட்டியிருக்க அவளது அழகு பன்மடங்கு பெருகியிருப்பதைப் போல ரவிச்சந்திரனுக்குத் தோன்றியது..

"இப்போ நீ எப்படியிருக்க தெரியுமா..?" விழுங்கி விடுவதைப் போலத் தாகத்துடன் அவளைப் பார்த்த படி கேட்டான்..

‘முதல்ல நீ எப்படியிருக்கன்னு நினைச்சுப் பாருடா..’

அவளது உடல் நடுங்கியது குளிரிலா என்று நிச்சயமாக அவளுக்குத் தெரியவில்லை..

“அப்சரஸ் போல இருக்கே..” போதையுடன் அவன் சொன்னான்..

அவன் கந்தர்வனைப் போல இருந்தான்.. அவனைப் பார்க்கக் கூடாது என்று மனம் தடுத்தாலும் அவளையும் மீறி அவளது கண்கள் கவர்ச்சிகரமான அவனது தோற்றத்தை நடுக்கத்துடன் பார்த்து வைத்தன.. பளிச்சென்று வரிசைப் பற்கள் தெரியும்படி புன்னகைத்து அவளை மயக்கினான்.. மயக்கத்தில் விழிகள் செறுக நின்றிருந்தவளை வீழ்த்தி விடும் உத்தேசம் கொண்டவனாக..

“என்ன்ன்ன்..ன..?” என்று கேட்டு இமைகளைச் சிமிட்டினான். தப்பிக்க முடியாத புதை குழியில் மாட்டிக் கொண்டதைப் போலக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது நந்தினிக்கு.. அவன் அவளைத் தொட வேண்டு மென்ற அவசியமேயில்லை.. இதுபோன்ற கவர்ச்சியுடன் அவன் இரண்டொரு முறை இமைகளைச் சிமிட்டினாலே போதும்.. அவள் கரைந்து உருகி விடுவாள்..

‘தள்ளிப்போ நந்தினி.. இவனிடமிருந்து தள்ளிப் போய் விடு..’ உள்ளுணர்வின் உந்துதலில் நந்தனி சற்றுத் தொலைவிலிருந்த பாறையின் வெயிலில் குளிருக்குக் கதகதப்பாக உட்கார்ந்து விட்டாள்.

‘இப்படியா மாட்டித் தொலைப்பேன்..?’

பெருங்கவலையுடன் இருந்தவளின் பக்கத்தில் நிழல் விழுந்தது.. திரும்பாமலே அது ரவிச்சந்திரனின் நிழல்தான் என்பதை கண்டு கொண்ட நந்தினி நடுங்கும் விரல்களை இறுக்கமாக மடித்துக் கொண்டு.. ‘திரும்பி விடாதே நந்தினி..’ என்று மந்திரம் போல மனதுக்குள் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தாள்..

“ஹேய்..! என்ன ஆச்சு உனக்கு..? உன்னை அட்ராக்ட் பண்றதைத் திரும்பிப் பார்க்காத ஆளா நீ..? ஐ கான்’ட் பிலிவ் திஸ்..” என்ற அவனது உசுப்பி விடும் வார்த்தைகளில் கொதித்துப் போனவள்..

“என்னைப் பத்தி என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..?” என்று வேகத்துடன் பேசியபடி இடுப்பில் கை வைத்துச் சண்டைபோட வாகாக எழுந்து நின்றாள்.. அவனோ கையில்

ஆவி பறக்கும் மலபார் பிரியாணி கொண்ட காகிதத் தட்டுடன் நின்றிருந்தான்..

'இவன் பிரியாணியைச் சொல்லியிருக்கான்..' நொடியில் கோபம் பறந்து போக கமகமவென வந்த பிரியாணியின் வாசனையை முகர்ந்து..

"ம்ஹா.. என்னவொரு வாசனை..!" என்று சிலாகித்த நந்தினி..

"எப்படி பாஸ் அருவிக் கரையிலே மலபார் பிரியாணி வந்துச்சு..?" என்று குதூகலித்தாள்..

"ம்ம்ம்.. கால் முளைச்சு வந்துச்சு.. போவியா.. உன் வயிறைப் பற்றி எனக்குத் தெரியாதா..? நீ சும்மா நடந்தாலே நிமிஷத்துக்கு ஒருதரம் எதையாவது வயிற்றுக்குள்ளே போட்டுக்கிட்டே இருப்ப.. கேட்டாக் கல்லைத் தின்றாக்கூட ஜீரணம் செய்கிற வயசு உன் வயசுன்னு ஆர்கியு பண்ணுவ.. அதான்.. அருவிக்கரையிலே உன் வயிற்றுக்குள்ளே தள்ளத் தோதா காலையில் ஹோட்டலில் இருந்து கிளம்பும் போதே சம் ஃபுட் ஆயிட்டம்ஸை ஹாட் பாக்ஸில போட்டு நிரப்பிக் காரில வைக்கச் சொல்லிட்டேன்.. கூடவே பேப்பர் பிளேட், ஸ்பூன்

எக்ஸெட்ரா.. எக்ஸெட்ரான்னு வைச்சிருக்காங்க.. மனம் போல நீ மலபார் பிரியாணியை வெட்டு..”

அவளிடம் ஒரு பிளேட்டை நீட்டி விட்டு தானும் ஒரு பிளேட்டை கையில் எடுத்து ஸ்பூன் போட்டுச் சாப்பிட ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்..

பசிக்கு மலபார் பிரியாணியை மிகச் சரியான நேரத்தில் ஈந்து அவன் பசியாற்றியதில் நந்தினிக்குள் நன்றி வரத்தான் செய்தது.. கூடவே அவன் அவள் பக்கத்தில் உட்கார்ந்து விட்டதில் கிளர்ச்சியும் சேர்ந்து வந்து இம்சை செய்தது..

“செம டேஸ்ட்..! இல்ல..?”

அவன் அவள் பக்கமாக திரும்பி அபிப்ராயம் கேட்டான்.. அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் அவள் தலையைக் கவிழ்த்தபடி லஜ்ஜையுடன் தலையை ஆட்டி ‘ஆமாம்’ போட்டதில் அவளை உற்றுப் பார்த்தான்.. குங்குமமாக சிவந்திருந்த அவளது கன்னம் அவன் முகத்தில் மென்மையைப் பரப்பியது.. அவனிடம் அவள் மயங்குவதை புரிந்து கொண்டவனுக்கு அருவியின் சாரல் மனதினில் விழுந்தது..

முதன் முறையாக அவனுக்காகவே அவனிடம் ஒருத்தி மயக்கம் கொள்கிறாள்.. அவள் காட்டருவி போன்றவள்.. கட்டுக்குள் அடங்குவதை விரும்பாதவள்..

ஒப்பனைகளற்றவள்.. பாசாங்கு செய்யாமல் உள்ளதை உள்ளபடி பேசித் தள்ளும் வழக்கம் கொண்டவள்.. காணக் கிடைக்காதவள்.. அவனது பின்புலத்தை பெரிதாக எண்ணாதவள்.. அன்றுதான் பூத்த புதுமலர் போன்றவள்.. அப்பேற்பட்டவளின் கன்னி மனதை அவன் சலனப் படுத்தியிருக்கிறான்.. அவனது விழிகளை நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல் தடுமாறி தலை குனிந்து அவள் அமர்ந்திருக்கிறாள்..

தாமரையொன்று தலை கவிழ்ந்து அமர்ந்திருப் பதைப் போல தோன்றியதில் அவன் மெலிதாக விசிலடித்தான்.. அவளது விழிகள் உயர்ந்து அவனை ஆச்சரியத்துடன் பார்த்தன..

‘இவன் விசில் கூட அடிப்பானா..?’

**“தங்கத் தாமரை மலரே..!**

**வா அருகே... தத்தித் தாவுது மனமே..**

**வா அழகே..**

**வெள்ளம் மன்மத வெள்ளம் - சிறு**

**விரிசல் கண்டது உள்ளம்..**

**இது எல்லாம் பெண்ணே உன்னாலே...”**

விசில் மன்னன் சன்னக்குரலில் பாடினான்.. அந்தப் பாடல் நந்தினியின் மனதை ஏதோ செய்தது.. உயர்த்திய பார்வையை தாழ்த்திக் கொண்டாள்.. அவனைப் பாராத பே ாதும் அவளைத் துளைக்கும் அவனது கூர்மையான பார்வையை உணர்ந்தாள்.. எங்கிருந்தோ வந்த மயக்கம் அவளை ஆக்ரமித்து நெஞ்சில் கவிந்தது..

மயக்கம் நிரம்பிய அவள் விழிகளில் ரவிச்சந்திரன் சொல்லில் அடங்காத இன்பம் கொண்டான்..

ஆள்கள் வரும் சலசலப்பும் காரின் ஒலியும் கேட்டன.. அவர்கள் அருவியை விட்டுத் தள்ளி அமர்ந்திருந்ததால் வந்தவர்கள் அவர்களைப் பார்க்கவில்லை..

“விசிட்டர்ஸ் வர ஆரம்பிச்சுட்டாங்க..”

பிளாஸ்க்கில் இருந்த சூடான காபியை காகிதக் கப்பில் ஊற்றி அவளிடம் நீட்டியபடி சொன்னான் ரவிச்சந்திரன்..

“தேங்க்ஸ்..” அவன் முகம் பார்க்காமல் முணுமுணுத்தபடி அவள் வாங்கிக் கொண்டாள்..

“உலகத்திலேயே ‘பெர்சனல் செக்கரட்டரி’க்கு பணிவிடை செய்கிற பாஸ் நான் ஒருத்தனாத்தான் இருப்பேன்..”

வேண்டுமென்றே ‘பெர்சனல் செக்கரட்டரி’ என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து அவன் சொல்ல.. மயக்கம் மறந்து ரோஷம் நந்தினியை ஆக்ரமித்தது..

“பெர்சனல் மேனேஜர் பாஸ்..” என்று சண்டைக்கு கிளம்பினாள்..

“பெர்சனல் செகரட்டரி வேலையையே நீ ஒழுங்காப் பார்க்க மாட்டேங்கிற.. இதில பெர்சனல் மேனேஜரா வேலை பார்த்து என்னத்தைக் கிழிக்கப் போறியோ.. ம்ஹூம்.. நான் அவசரப்பட்டு வினித்துக்கு வாக்குக் கொடுத்திருக்கக் கூடாது..”

ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தபடி இறுக்கமான முகத்தை வைத்துக் கொண்டு மனதில் குறும்பு கூத்தாட அவளைச் சீண்டினான் அவன்..

“இப்போ என்ன கெட்டுப் போச்சு..? இவ்வளவு வருத்தப்பட்டுக்கிட்டு நீங்க ஒண்ணும் எனக்கு வேலை

கொடுக்க வேண்டாம்.. இருக்கவே இருக்கு மங்களூர் எக்ஸ்பிரஸ்..”

“எதுக்கு..?”

“நான் ரிட்டர்ன் ஆக..”

“ரிட்டர்ன ஆகி பெல்ட் மன்னனை மேரேஜ் பண்ணிக்கப் போறியா..? தட்’ஸ் குட் ஐடியா.. பெல்ட் மன்னனை நான் விசாரித்தேன்னு சொல்லு.. அவருக்காக நான் எந்த அளவுக்குச் சப்போர்ட் பண்ணினேன்னு எடுத்துச் சொல்லு.. மறக்காம உன் மேரேஜ் இன்விடேஷனை எனக்கு அனுப்பு.. என்ன..? உன் மேரேஜுக்கு என்னை இன்வைட் பண்ணுவல்ல..?”

அவன் சீண்டிய சீண்டலில் நந்தினிக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது.. அந்த ஆத்திரத்திலும் கையிலி ருந்த பேப்பர் கப்பிலிருந்த கள்ளிச்சொட்டுக் காப்பியை ஒரு சொட்டுக்கூட விடாமல் குடித்து முடித்தவள் கோபமாக காலி கப்பை வீசியெறிந்து விட்டு வேக நடையுடன் காருக்குப் பக்கத்தில் போய் விட்டாள்..

சற்றுப் பொறுத்து லேசான ஈரத்துடன் இருந்த ஜீன்ஸையும் சட்டையையும் மாட்டிக் கொண்டு..

“பரவாயில்லை.. முக்கால்வாசி ஈரம் உலர்ந்திருச்சு..” என்று திருப்தியுடன் சொல்லியபடி ரவிச்சந் திரன் வந்து சேர்ந்தான்..

‘ஹப்பாடி.. முழுசா டிரஸ்ஸை உடுத்தியிருக்கான்..’

அவனது கவர்ச்சியான உடலழகில் மூச்சுத் திணற வேண்டிய அவசியமில்லையென்று ஆசுவாசமானாள் நந்தினி..

“போகலாமா..?”

எதுவுமே நடக்காததைப் போல அவன் காரில் ஏறிக் கொள்ள நந்தினிக்கு ரத்த அழுத்தம் எகிறியது.. “டொம்..” எனக் கார்க் கதவைச் சாத்தியபடி அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்..

“இது என் கார்..” அவன் அறிவுறுத்தினான்..

“எங்க கிட்டயும் ஒன்றுக்கு மேலே கார் இருக்கு பாஸ்.. நான் புதிதா ஒண்ணும் காரைப் பார்த்துரல்ல..”

“இது என் கார்ன்னுதான் சொன்னேன்.. நீ கரையே பார்த்ததில்லைன்னு சொல்லலை.. கார்க் கதவை உடைக்கிறதா இருந்தா நீ உன் வீட்டுக் கார்களோட

கதவுகளை உடைக்கனும்.. என் கார்க் கதவு மேலே கை வைக்கக் கூடாது..”

“ஓகே பாஸ்.. உங்க ஆர்டரை நான் ஒபே பண்றேன்.. காரை நேரா ரயில்வே ஜங்ஷனுக்கு விடுங்க..”

“மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடிக்கவா..?”

“யெஸ் பாஸ்..”

“உனக்கு மங்களூர் எக்ஸ்பிரஸ்மேலே இத்தனை பிடித்தமா..? அப்புறம் எதுக்காக டி.டி.ஆர் கூட சண்டை போட்டுக்கிட்டே வந்த..?”

“நேர்த்திக் கடன் பாஸ்..”

“இப்ப உன்னை அழைத்துக்கிட்டு வந்து ஊரைச் சுற்றிக் காட்டி பணிவிடையும் சேர்த்துப் பண்றேனே.. இதை என்னன்னு சொல்கிறது.. என்னோட நேர்த்திக் கடன்னு சொல்லிக்கலாமா..?”

ஒரு பந்தைக் கூட அவள் பக்கம் விட்டு வைக்காமல் அவன் சிக்சராக அடித்து வீழ்த்தியதில் அவளுக்கு கண்ணீர் ததும்பி விட்டது..

உன்கூட டூ.. போ.. என்ற ரீதியில் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு பாராமுகம் காட்டித் திரும்பி உட்கார்ந்து கொண்டாள்..

‘கோபம் வந்துருச்சு..’

சின்னக் குழந்தையின் கோபம் கண்டு சிரிப்பு வருவதைப் போல பிரியமான புன்சிரிப்பு அவன் முகத்தில் வந்தது..

‘என் நிலைமையைப் பார்த்தா இவனுக்குச் சிரிப்புச் சிரிப்பா வருது போல..’ அவள் அதற்கும் காய்ந்தாள்..

அகன்ற ஆறின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணைக் கட்டு காரின் முன் பக்கம் தெரிந்ததில்..

‘எங்கே வந்திருக்கோம்..?’ என்று விழித்தாள்..

‘‘பெருவண்ணா முழி அணைக்கட்டுக்கு வந்தா இந்த முழி முழிக்கனுமா..? வா.. டேம் மேலே நடந்துட்டு வருவோம்..’’ என்றபடி காரை விட்டு இறங்கினான் ரவிச்சந்திரன்..

வர முடியாது.. போடா என்று சொல்லத்தான் நந்தினி ஆசைப்பட்டாள்.. ஆனால் கேரளத்துப் பசுமையுடன் கூடிய அணைக்கட்டின் அழகு அவளை மயக்கி விட்டதில் கனவில்

இறங்குபவளைப் போலக் காரை விட்டு இறங்கி ரவிச்சந்திரனை முந்திக் கொண்டு நடந்தாள்..

'இவ மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில சென்னைக்குத் திரும்பப் போகிறாளாம்..'

ரவிச்சந்திரனின் கண்களில் தெரிந்த சிரிப்பில்..

"என்ன்ன...ன..?" என்று அவனைப் போலவே ராகம் போட்டு கேட்டாள் நந்தினி..

"நத்திங்.." தலையாட்டியவனின் ஆழ்ந்த பார்வையில் தடுமாறினாள்..

அகன்று ஓடிய ஆறின் குறுக்கே கட்டப்பட்டிருந்த டேமின் மீது நடந்தபோது அவள் மனதில் இருந்த கோபமெல்லாம் பறந்து போய் மனது லேசானது.. ஈரக்காற்று முகத்தில் படிந்ததில் உண்டான சிலிர்ப்புடன்..

"ஹௌ ஸ்வீட்..!" என்று கண்மூடி அதை அனுபவித்தாள்..

"ம்ம்ம்.." என்ற அவனது முணுமுணுப்பில் இமை திறந்து அவனைப் பார்த்தவள் அணைக் கட்டைப் பற்றிக் கேட்க ஆரம்பித்து விட்டாள்..

அணைக்கட்டிலிருந்துது ஹோட்டலுக்குத் திரும்பிய போது மங்களூர் எக்ஸ்பிரஸை சுத்தமாக மறந்து விட்டாள்..

# அத்தியாயம் 48

“**வெ**ல்கம் மிஸ்டர் ரவிச்சந்திரன்..”

அவனுக்கு கை கொடுத்து வரவேற்ற நபர் கோட், சூட்டில் மலையாள சுப்ரீம் ஸ்டார் மம்முட்டியைப் போல இருந்தார்.. ரவிச்சந்திரனுடன் வந்திருந்த நந்தினியைப் பார்த்ததும் என்ன சொல்லி அவளை வரவேற்பது என்று புரியாமல் பொத்தாம் பொதுவாக..

“வெல்கம் மேம்..” என்றார்..

‘மேமா..?’ நந்தினியின் மனம் முரண்டியது..

அப்போதுதான் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வந்திருக்கிறாள்.. இன்னும் ரிசல்ட்கூட வரவில்லை.. அதற்குள் மேடமாகி விட்டாளா..?

அது ரவிச்சந்திரனுடன் வந்திருப்பதனால் கிடைக்கும் மரியாதை என்று புரிந்து கொள்ளாத சிறு பிள்ளைத் தனத்துடன்..

“என்னைக் கிழவியாக்கனும்னே இந்தப் பார்ட்டிக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்தீங்களா..?” என்று சன்னக் குரலில் ரவிச்சந்திரனிடம் சிடுசிடுத்தாள்..

“அவர் யாருன்னு தெரிஞ்சா இப்படிச் சைல்டிஷா பே ச மாட்ட..”

“உங்களுக்கு நான் எதைப் பேசினாலும் சைல்டிஷாத்தான் தெரியும் பாஸ்..”

“நீ பேசுகிற லட்சணம் அப்படி..”

“வேணும்ன்னா எப்படிப் பேசனும்னு நீங்க டியூஷன் எடுங்க..”

“தேவைதான் எனக்கு.. நான் சொல்லிக் கொடுத்து நீ கற்றுக்கிட்டு என்னிடம் வேலை பார்க்கிறதுக்குள்ள என் தாவு தீர்ந்திடும்.. இப்படிப்பட்ட ஆள்களை வேலைக்கு அழைத்துக்கிட்டேன் பாரு.. என்னைச் சொல்லனும்..”

“உங்களை நீங்களே சொல்லிக்க வேணாம் பாஸ்..”

“வேற வழி..?”

“வழியிருக்கே..”

“மங்களூர் எக்ஸ்பிரஸைத்தானே சொல்ற..?”

“சூப்பர் பாஸ்.. கண்டு பிடிச்சுட்டிங்களே..”

“அம்புலி மாமா படித்துக்கிட்டு கை விரலைச் சுவைத்துக்கிட்டு இருக்கிற சின்னப் பிள்ளை கூட இதைக் கண்டுபிடிச்சுரும்.. எதுக்கெடுத்தாலும் நீ மங்களூர் எக்ஸ்பிரஸ், மங்களூர் எக்ஸ்பிரஸ்ன்னுதானே புலம்பற..? வேற எதுவும் வாயில் வர மாட்டேங்குதே..”

“அப்படிப் படுத்தி வைக்கறீங்க..”

“அதை நீ சொல்றியா..?”

“வேற யார் சொல்லனும்..?”

“நான் சொல்லனும்..”

தாழ்ந்த குரலில் கிசுகிசுப்பாக அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்க பருமனான பெண்மணி ஒருத்தி வசீகரமான முக அழகுடன் அவர்களை சமீபித்து.. ரவிச்சந்திரனிடம் இமைகளைச் சிமிட்டி..

“எந்தா ரவிச்சந்திரா..! ஆரானு ஈ பெண் குட்டி..? நினக்கு பெந்து மனுஷியோ..? ரெண்டு பேரும் ரகசியமா சம்சாரிக்கனு..? ஞான் அறியக் கூடாதோ..” என்றாள். கேரளத்துப் பெண்களுக்கே உரிய சந்தன நிறத்தில் அடர்ந்த

கூந்தலை விரிய விட்டு நெற்றியில் சந்தனத் தீற்றுடன் நின்றவளின் அழகு நந்தினியை வசீகரித்தது.. பருமனான உடல் வாகுடன் இத்தனை அழகாக ஒரு பெண் இருக்க முடியும் என்பதை கேரளத்துப் பெண்களைப் பார்த்த பின்புதான் அவள் அறிந்து கொண்டாள்..

“அத்தைக்கு எப்பவுமே கேலிதான்.. நிங்கள் காதில் வேண்டுமெனில் ஞான் ரகசியம் பறயறேன்.. இவ்விடத்த ஏதும் ரகசியம் சம்சாரிக்கலா..” ரவிச்சந்திரன் வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான்..

“நிண்டகிட்ட சம்சாரிச்சு ஜெயிப்பதாரு..? வரனும் மருமகனே.. ரவிச்சந்திரன் வரலியோன்னு நிண்ட அம்மாவன் நீண்ட நேரமா வழி மேல விழி வைச்சு காத்துக்கிட் டு இருக்காரு..”

“அது எதுக்கு அத்தை..? ஞான் வரேன்டு பறஞ்ஞா வந்து நிப்பேன்தானே..”

அவர்கள் இருவரும் மலையாளத்தையும் தமிழையும் கலந்தடித்து பேசியபடி அங்கிருந்து அகன்று விட்டார்கள்.. அவள் கூட வந்திருக்கும் நினைவின்றி சென்று விட்டவன் மேல் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. அவளுக்கும்

அந்த பார்ட்டிக்கும் என்ன சம்பந்தம்..? எங்கோ ஊர் சுற்ற அழைத்துப் போகிறான் என்று நம்பி கூடவந்தால் மலர்களும் சீரியல் பல்புகளும் அலங்கரித்த ஒரு பங்களாவின் முன்னால் வந்து காரை நிறுத்துகிறான்.. சரி.. அன்று போல இன்றும் நடனம், பாட்டு, கஜல் என்று பல்சுவை விருந்தை உண்டு களிக்கப் போகிறோம் என்ற எதிர்பார்ப்போடு உள்ளே போனால் அங்கே குறுக்கும் நெடுக்குமாக மேல்தட்டு மக்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள்..

‘எங்கே கடத்திக்கிட்டு வந்திருக்கான்..?’

நந்தினி நின்று விட்டாள்.. அந்தச் சூழல் அவளுக்குப் புதிதாக இருந்தது.. மூச்சு முட்டியது.. தஞ்சையில் பிறந்து வளர்ந்தவளுக்குப் பார்ட்டிகளைப் பற்றி என்ன தெரியும்..?

“இங்கே ஏதும் ஃபங்ஷன் நடக்குதா..?”

“ம்ம்ம்.. பார்ட்டி நடக்குது..”

“பார்ட்டியா..?”

நந்தினி அஞ்சிப் பின் வாங்கினாள்.. அவள் விழிகளில் தெரிந்த பயத்தில் ரவிச்சந்திரன் முகம் சுளித்தான்..

“பார்ட்டின்னா ஏன் அலருகிற..? நீ பார்ட்டிகளுக்குப் போனதே இல்லையா..?”

போயிருக்கிறாள்.. அதெல்லாம் கல்லூரித் தோழிகளின் பிறந்தநாள் விழாவுக்கான பார்ட்டிகள்.. தஞ்சையில் அதெல்லாம் கிடையாது..

“பர்த்டே பார்ட்டியா..? இதென்ன புதுப் பழக்கம்.. பிறந்த நாளுன்னா தலைக்கு குளிச்சு.. புது டிரஸ் போட்டு.. இனிப்புச் சாப்பிட்டு.. கோவிலுக்குப் போய் வருவாங்கன்னு கண்டிருக்கோம்.. கேக்கை வெட்டி, ஊரைக் கூட்டின்னு கேட்கவே நல்லாவா இருக்கு..?”

ஒருமுறை நந்தகுமார் கூடப் படிக்கும் நண்பனின் பர்த்டே பார்ட்டிக்குப் போக வேண்டும் என்று சொல்லி விட்டு மேகநாதனிடமும் வெண்ணிலாவிடமும் செமத்தியாக வாங்கிக் கட்டிக் கொண்டாள்..

“அதுக்கப்புறம் எந்த பர்த்டே பார்ட்டிக்கும் போன தில்லையா..?” என்று நந்தினி கேட்டபோது..

“அப்பாம்மாகிட்ட சொல்லிட்டுப் போக மாட்டேன்.. சொல்லாம போயிட்டு வந்துருவேன்..” என்றான் நந்தகுமார்..

அப்படிப்பட்ட வீட்டில் பிறந்தவளை கேரளத்து கோழிக்கோடில் நடக்கும் பார்ட்டிக்கு சொல்லாமல் கொள்ளாமல் அழைத்துக் கொண்டு போனால் அவள் அலறாமல் என்ன செய்வாள்..?

“நோ பாஸ்.. காலேஜில கூடப் படிக்கிற ஃபிரண்ட்ஸோட பர்த்டே பார்ட்டிக்குப் போயிருக்கேன்.. அதுவும் சன்டேயா இருந்தாத்தான் போவேன்.. வீக் டேஸா இருந்தா நானும் உத்ராவும் வர முடியாதுன்னு கட் அண்ட் ரைட்டா சொல்லிருவோம்..”

“எல்.கே.ஜியைத் தாண்டாமலே இரு..”

“பார்ட்டிக்குப் போனாத்தான் பி.ஹெச்.டி பட்டம் கிடைக்கும்ன்னா அந்தப் பட்டமே எனக்கு வேணாம் பாஸ்..”

“இது பிஸினெஸ் பார்ட்டி.. கட்டாயமா நான் அட்டெண்ட் பண்ணித்தான் ஆகனும்..”

“அட்டெண்ட் பண்ணுங்களேன்.. யாரு வேண்டாம்ன்னு கையைப் பிடித்து இழுத்து நிறுத்தியது..? என்னை ஏன் ஜாயின் பண்ண வைக்கறீங்கன்னுதான் கேட்கிறேன்..”

மூச்சு வாங்கப் பேசியவள் எதிர் தரப்பிலிருந்து பதில் வராததில் என்னடா அதிசயம் இது என்று அவனைப் பார்த்தாள்.. அவனாவது அவள் பேச்சுக்கு எதிர்பேச்சுப் பேசி அவள் மூக்கை உடைக்காமல் இருக்கிறதாவது..

அவன் அதைச் செய்யாமல் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அந்தப் பார்வையில் அவள் வயிற்றில் படபடப்பு உருவானது.. அவள் மனது..

**'பார்க்காதே.. என்னைப் பார்க்காதே..**

**குத்தும் பார்வையாலே**

**எனைப் பார்க்காதே..'**

என்று பாடியது..

எதற்காக இந்தப் பார்வை என்று அவள் குழம்பித் தவித்தபோது அவன் திருவாயைத் திறந்து..

"என் கையைப் பிடித்து நீ இழுப்ப..?" என்று கேட்டு அவளைக் கலங்கடித்தான்..

"பாஸ்.. அது ஒரு பேச்சுக்குச் சொன்னது.." முகம் சிவக்க அவள் கைகளைப் பிசைந்தாள்..

“என்கூட நீ ஜாயின் பண்ணாம வேற யார் ஜாயின் பண்ணுவாங்க..?”

இதுவும் அவள் கேட்ட கேள்விக்கான பதில்தான்.. ஆனால் சொல்லப்படும் தொனிதான் மாறுபட்டு ஏதோ ஒன்று இடைச்செறுகலாய் திணிக்கப் பட்டிருப்பதைப் போல இடிக்கிறதே..

“ஐ கான்ட் அண்டர்ஸ்டாண்ட்..”

“யு ஆர் மை பெர்சனல் செக்கரட்டரி..”

“பெர்சனல் மேனேஜர்..”

“ஏதோ ஒன்று..”

“வாட் ஃபார் தட்..?”

“என்னுடைய பிஸினெஸ் பார்ட்டியை நீயும் அட்டெண்ட் பண்ணியாகனும்..”

இதென்ன ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் என்று தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது அவளுக்கு..

‘இவன் எங்கே போனாலும் பின்னாடியே போகிறதுக்கு நான் என்ன இவனோட பெண்டாட்டியா..?’

பல்லைக் கடித்தவளுக்கு அவன் பெண்டாட்டியாக இருந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும் என்று தோன்றி வைத்துத் தொலைத்தது..

'என்ன நினைப்பு இது..' பதட்டத்துடன் அதை அழித்தாள்.. அவளே பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பித்து வந்திருக்கிறாள்.. அவளுடைய பிரச்னை தீரவேண்டும் என்று நினைப்பதை விட்டுவிட்டு தேவையில்லாமல் எதையெதையோ நினைத்துக் கொண்டிருக்கிறாள்..

"எந்தா..?"

"ஞான் வரட்டே.."

"வல்லிய சம்பந்தமல்லா.."

"திவ்விய சொரூபம்.."

என்று காதில் விழுந்த பேச்சுக்குரல்கள் எல்லாம் திவ்விய மலையாள தேசத்தின் மொழியாகவே இருந்ததில் தான் அங்கே அன்னியப் பட்டுப் போனதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. அவனில்லாமல் தனித்து நிற்க அவளுக்குச் சங்கடமாக இருந்தது..

பட்டு வேட்டி சட்டையுடனும், கோட் சூட்டுடனும் ஆண்கள் வளைய வர.. பெண்கள் ஒன்று சொன்னதைப் போல கேரளத்துப் பாணி ஜரிகை புடவையில் தலைமுடியை விரிய விட்டு நெற்றியில் சந்தனக் கீற்றுடன் அதிரூப சுந்தரிகளாக வளைய வந்தார்கள்..

‘எங்கேதான் போய் தொலைஞ்சான்..?’

அவளது பார்வை அவனைத் தேடியலைந்தது..

**‘எங்கே நானென்று**

**தேடட்டும் என்னை..**

**சிந்தாத முத்தங்கள் சிந்த..’**

என்று அவன் ரயிலில் பாடிய பாடல் நினைவுக்கு வந்தது.. இந்தத் தேடலைத்தான் அப்படிப் பாடினானோ என்று நினைத்துக் கொண்டாள்.. அவன் தேடப்படுவதில் சுகம் கொள்பவன் போல என்று கோபம் வந்தது.. அதிக நேரம் அவளைத் தேட விடாமல்..

“யாரைத் தேடற..? பெல்ட் மன்னனையா..?” என்ற கேள்வியுடன் அவள் முன்னால் பிரசன்னமானான் அவன்..

“இந்தக் கொடுமைக்கு பேசாம பெல்ட் மன்னனைத் தேடியே போய் விடலாம்..” அவள் வெடித்தாள்..

“அப்படியா..? அவரைத் தேடிப் போகப் ே பாறியா..? ஆர் யு சீரியஸ்..?”

கன காரியமாக அவன் விசாரித்ததில் உண்மையிலேயே சீரியஸ் கண்டிஷனுக்குப் போய் மருத்துவ மணையில் படுத்து விடுவோமோ என்ற பயம் அவளை பீடித்துக் கொண்டது..

“உங்களுக்கு என்ன பாஸ் பிரப்ளம்..?” ஆற்ற மாட்டாமல் கேட்டு விட்டாள்..

“வொய்..?” அவன் புருவங்களை உயர்த்தி அவளை வதைத்தான்..

“உங்களுக்கே இது நல்லா இருக்கா சார்..?” அழ மாட்டாத குறையாக அவள் நியாயம் வைக்க அவன் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு..

“இந்த ரெட் கலர் ஸாரி ரொம்ப நல்லா இருக்கே.. உன் கலருக்கு பக்கவா ஸுட் ஆகுது..” என்று ஜொள்ளி வைத்தான்..

சிகப்பு வண்ண மைசூர் சில்க் சேலையும், ரவிக்கையும்.. செம்பவளத்தில் கல்ஜிமிக்கியும், அட்டிகையும் எனப் பார்ப்பவரை மயக்கத்தில் ஆழ்த்தும் உடையலங்காரத்தில் இருந்தவள்.

'உங்களுக்கே இது நல்லாயிருக்கான்னு இதையாடா கேட்டேன்..?' என்று தனக்குள் அங்கலாய்த்து தலைமீது கை வைத்தாள்..

எப்படிப் பேசினால் அவன் அவளது துன்பத்தை புரிந்து கொள்வான் என்று வகை, வகையாய் யோசித்து அதில் ஒரு வகையைத் தேர்ந்தெடுத்து சர்வ ஜாக்கிரதையாக வார்த்தைகளைப் போட்டு.. அவன் ஏடா கூடமாக எதையாவது புரிந்து வைத்துத் தொலைக்கக் கூடாதே என்ற கவலையுடன்..

"பாருங்க பாஸ்.." என்று ஆரம்பித்து விட்டு.. 'கடவுளே..! இவன் உடனே நீதானே பார்க்கச் சொன்னேன்னு சைட்டடிக்க ஆரம்பித்து விடுவானே..' என்று மனதுக்குள் அலறினாள்..

அதுதான் நடந்தது.. அவன் அவளை ஒரு மார்க்கமாக பார்க்க ஆரம்பித்து விட்டான்.. களைத்துப் போன நந்தினி..

"அக்கடான்னு ஹோட்டல் ரூமில ரெஸ்ட் எடுத்திருப்பேன்.. விடிகிறதுக்குள்ள ஃபோன் மேல் ஃபோனாப்

போட்டு எழுப்பிவிட்டு பிரேக்ஃபாஸ்டை ஒழுங்காய் சாப்பிட விடாமல் நேரமாச்சுன்னு அரக்கப் பறக்க கூப்பிட்டுக்கிட்டு வந்து தனியா நிறுத்திவிட்டு உங்க அத்தை, மாமா கூடக் கொஞ்சிக் குழாவ போயிட்டிங்களே... இது உங்களுக்கே நல்லாயிருக்கான்னு கேட்டா என் டிரெஸ் நல்லாயிருக்குன்னு சொல்கிறீங்க.. அதைச் சொல்லலைன்னு விளக்கம் சொல்லலாம்ன்னு பாருங்க பாஸ்ன்னு ஆரம்பிச்சு வைச்சா நீதானே பார்க்கச் சொன்னேன்னு சைட் அடிக்க ஆரம்பிக்கறீங்க... ஒரு முடிவோடதான் இருக்கீங்களா பாஸ்..?” என்று வெகுண்டாள்..

“ஹா.. ஹா..” அவளது கோபத்தை நகைச் சுவையாக்கி ரசித்துச் சிரித்தான் ரவிச்சந்திரன்..

அங்கிருந்தவர்கள் அவர்கள் இருவரையும் திரும்பிப் பார்த்த பார்வை காதலர்களைப் பார்ப்பதைப் போலவே இருந்ததில் நந்தினிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. .

‘இவன்தான் ஆகட்டும்.. முதலாளி போல நடந்து கொள்ளாமல் எதுக்கெடுத்தாலும் சிரிச்சு வைக்கிறான்.. பார்க்கிறவங்க என்னன்னு நினைப்பாங்க..’ கவலையுடன் அவள் மனதுக்குள் புலம்பித் தீர்த்தாள்..

அவளது கவலையை உண்மையாக்குவதைப் போல அவர்களையே பார்த்தபடி ஒருவன் அவர்கள் அருகில் வந்தான்.. ரவிச்சந்திரனுடன் கை குலுக்கியவனின் பார்வை நந்தினியை ஆராய்ந்தது.. நந்தினிக்கு அது பிடிக்கவில்லை..

# அத்தியாயம் 49

**அ**து என்ன.. அறிமுகமில்லாத பெண்ணை உற்று உற்று பார்ப்பது..?

நந்தினிக்குத்தான் அந்த கோபம்.. ரவிச்சந்திரனுக்கு எதுவுமே இல்லை.. அவன் கை குலுக்கியவனின் தோளோடு தோள் தழுவி நட்புப் பாராட்டினான்.. பெரிய ஆத்ம நண்பர்கள் என்று நந்தினி மனதுக்குள் அழகு காட்டிக் கொண்டாள்..

அந்த நண்பனாகப் பட்டவன் ரவிச்சந்திரனிடம் நந்தினியை விழிகளால் சுட்டிக் காட்டி..

“ஆராடோ ஈ சுந்தரி..?” என்றான்..

‘சுந்தரியா..?’

நந்தினி என்ற அழகான பெயர் சுந்தரியாக்கப் படுவதில் நந்தினிக்குத் துளிக்கூட விருப்பமில்லை..

அதுவும் அந்த நண்பன் ரவிச்சந்திரனிடம் ரகசியம் பேசியபடி நொடிக்கொருதரம் நந்தினியை பார்த்து வைத்ததில் ஏதோ ஒரு திரைப்படத்தில் கதாநாயகனுடன் கதாநாயகி பார்ட்டி ஒன்றிற்கு போகும் சீன் நந்தினியின் ஞாபகத்திற்கு

வந்து தொலைத்தது.. அந்தத் திரைப்படத்தின் நாயகனும் ரவிச்சந்திரனைப் போன்ற இளம் கோடீஸ்வரன்தான்.. உல்லாசப் பேர்வழிதான்.. அவனுடன் பார்ட்டிக்கு வந்த கதாநாயகியை அவனுடன் பழகிய வேறு சில பெண்கள் போல நினைத்துக் கொண்டு ஹீரோவின் நண்பன் பேசி விடுவான்.. ஹீரோவுக்கு கோபம் வந்து நண்பனின் சட்டையைப் பிடித்து விடுவான்..

இங்கே அப்படியேதும் ஆகவில்லை.. அதற்கு மாறாக ரவிச்சந்திரன் அந்த நண்பனிடம் ரகசியக் குரலில் எதையோ சொன்னான்.. அவர்கள் இருவரும் நந்தினி இருந்த திசையை அடிக்கடி திரும்பிப் பார்த்தபடி ரகசியம் பேசினார்கள்.. குபீரென்று சிரித்து வைத்தார்கள்..

அவர்களது அடாவடியை நந்தினி ரசிக்கவில்லை.. சகிக்கவில்லை என்பதை சமிக்ஞை மூலம் ரவிச்சந்திரனுக்குத் தெரியப் படுத்தினாள்.. அவன் கண்டு கொள்ளவில்லை..

‘ம்ப்ச்..’ என்ற சப்தம், ‘த்ச்சு’ என்ற அதிருப்தி ஒலி.. முகம் சுளித்தல், கால் மாற்றி நின்று காட்டுதல் என்று அனைத்து வகைகளிலும் அவளது அதிருப்தியை உணர்த்தியும் அவன்

அசையவில்லை.. அவளுக்கு அங்கிருந்து ஓடி விட்டால் தேவலையென்று ஆகி விட்டது..

இப்படியுமா ஒருவன் இம்சை செய்வான்..? முன்னால் போனால் கடிக்கிறான்.. பின்னால் போனால் உதைக்கிறான்.. சுற்றியாடும் பம்பரமாய் அவளை ஆட்டு வித்து அழ வைக்கிறான்... அவளை ஆட்டு, ஆட்டு என ஆட்டிப் படைக்கிறான்.. பதிலுக்கு அவனை ஆட்டுவிக்கும் நாள் வர வேண்டும் ஆண்டவனே என்று நந்தினி வேண்டிக் கொண்டாள்.. அவனுக்கு மட்டும் அவளது இந்த வேண்டுதல் பற்றிய விவரம் தெரிந்தால் அவளுக்கு வேலை கொடுத்து அடைக்கலம் கொடுத்ததற்கான பரிசு இதுதானா என்று கேட்டுவைப்பான்.

“ஞான் கேட்டதுக்கு நீ பதில் தரலையே.. ஆரா டோ ஈ சுந்தரி..?” அந்த நண்பன் நினைவூட்டினான்..

‘சுந்தரின்னு சொன்ன.. பல்லைக் கழட்டிருவேன்..’ நந்தினிக்கு கோபம் கொந்தளித்தது..

“என்டே பெர்சனல் செக்கரட்டரி..” நந்தினியைப் பார்த்தபடியே சொல்லி அவளது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் சவிச்சந்திரன்..

‘எல்லோரிடமும் பெர்னல் செக்கரட்டரின்னே சொல்றானே.. பெர்சனல் மேனேஜர்ன்னு சொல்ல வாய் வருதா..?’

“வல்லிய சுந்தரி நின்னிடத்தில் பணியாற்ற கொடுத்து வைச்சிருக்கன்னு..”

“ஹா.. ஹா..”

“இதிலும் நீ ராஜாவாடா..?”

“ஹா.. ஹா..”

“நினக்குன்னு இங்ஙனத்தே சுந்தரிகளே பணி செய்ய வரத்து ஞுள்ளு..”

அந்த நண்பன் பேசித் தீர்த்து விட்டான்.. அத்தனையும் பொறாமையின் சிதறல்கள் என்பதை அவனது முகபாவனை தெள்ளத் தெளிவாக்கியதில் நந்தினி திரும்பி வரும் போது ரவிச்சந்திரனுடன் சரி மல்லுக்கு நின்றாள்..

“யார் அது..?”

“எது..?”

“உங்களிடம் என் பெயரை சுந்தரியாக்கியவன்..”

“ஹா.. ஹா.. அவனா..? என் ஃபிரண்ட்..”

“உங்களுக்குப் ஃபிரண்டா இருந்தா உங்களை சுந்தர புருஷனாக்கனும்.. அதை விட்டுட்டு என்னை சொப்பன சுந்தரி ஆக்குவாரா..?”

“சொப்பன சுந்தரி..? ஹா.. ஹா.. உனக்கு இந்தப் பெயர் என்னமா ஸூட் ஆகுது தெரியுமா..?”

“போதும் பாஸ்.. ஐ டோன்ட் லைக் திஸ்..”

நந்தினி அவனுடன் பேசுவதைத் தவிர்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. எதற்கெடுத்தாலும் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாளே என்று அவனுக்கு எரிச்சலாக இருந்தது..

“காலேஜில படிச்சேன்னு சொல்ற.. என்னத்தைப் படிச்சுக் கிழிச்ச..? எதையும் ஸ்போர்ட்டிவ்வாய் எடுத்துக்கிற குணம் வேணும்.. அது இல்லாம என்ன வேலை செய்து கிழிக்கப் போகிற..?” என்று எரிந்து விழுந்தான்..

“என்ஜினியரிங் படிப்பைத்தான் படித்துக் கிழித்தேன் பாஸ்... வேற எதையும் அங்கே சொல்லத் தரலை... நான் படித்தது இன்ஜினியரிங் காலேஜ்.. ஸ்போர்ட்ஸ் காலேஜில்ல..”

“டோன்ட் ஆர்கியூ நந்தினி.. எதுக்கெடுத்தாலும் குறை கண்டு பிடிக்கிறது என்ன பழக்கம்..?”

“பாதிக்கப் படறது நான் பாஸ்.. நீங்க இல்லை.. என்னுடன் ஒரு பார்ட்டிக்கு நீங்க வர்றீங்கன்னு வைத்துக்கலாம்.. நான் உங்களை அம்போன்னு தனியா நிற்க விட்டுட்டு என் ரிலேடிவ்ஸ்கூடப் பேசப் போயிடறேன்.. திரும்பி வந்ததும் அதுக்காக சின்ன ஸாரி கூடச் சொல்லாம என் ஃபிரண்ட் ஒருத்திகூட ஜோடி போட்டுக்கிட்டு உங்களைப் பத்தி ரகசியம் பேசிச் சிரிக்கிறேன்.. உங்களுக்கு எப்படி இருக்கும்..”

“இண்ட்ரெஸ்டிங்கா இருக்கும்..”

“என்னது..?”

பேசுவதற்கு வார்த்தை வராமல் தடுமாறினாள் நந்தினி.. கோபம் அதிகமானதில் அவளுக்கு பேச்சு வரவில்லை..

“எதுக்கு அலட்டிக்கற..?” அலட்சியமாக கேட்டான் அவன்..

“அலட்டிக்கிறேனா..?” நந்தினிக்கு அழுகையே வந்து விட்டது..

“யெஸ்.. நீ அலட்டிக்கிறதான்.. நீ சொன்னதைப் போல உன் ஃபிரண்ட் என்னைப் பார்த்து வல்லிய சுந்தரன்னு ஜொள்ளினா அதைக் காம்ப்ளிமெண்டா நான் எடுத்துக்குவேன்..”

“நான் எடுத்துக்க மாட்டேன்.. என்னை டீஸ் பண்றதாத்தான் எடுத்துக்குவேன்..”

“டீஸ் பண்ணினோமா..? நானும் என் ஃபிரண்டுமா..? அவன் யாருன்னு தெரியுமா..?”

“யாரா வேணும்னாலும் இருக்கட்டும் பாஸ்.. என்னைப் பத்தித் தேவையில்லாம கமெண்ட் பண்ணக் கூடாது.. ஆமாம்.. சொல்லிட்டேன்.. நீங்களும் உங்க ஃபிரண்டும் கோடிஸ்வரங்க அப்படிங்கிறதினால நீங்க என்ன வேணும்னாலும் பேசுவீங்களா..? நீங்க எதைப் பேசினாலும் நான் கேட்டுக்கனுமா..?”

“அப்படியென்ன கேட்கக் கூடாததை அவன் கேட்டுட்டான்..? பேசச் கூடாததை நாங்க பேசிட்டோம்..? யார் இந்த அழகான பெண்ணுன்னு கேட்டான்..”

“அப்படிக் கேட்கலை.. சுந்தரின்னு கேட்டார்..”

“சுந்தரம்ன்னு அழகு.. இது கூடத் தெரியாம நானும் படிச்சுட்டேன்னு கிளம்பி வந்துட்ட... சுந்தரின்னா மலையாளத்தில அழகான பெண்ணுன்னு அர்த்தம்..”

“நினக்குன்னு இங்ஙனத்தே சுந்தரிகளே பணி செய்ய வரத்து ஞள்ளுன்னு சொன்னாரே.. அதுக்கு என்ன அர்த்தம்..?”

பதில் பேசாமல் நந்தினியைப் பார்த்த ரவிச்சந்திரனின் கண்களில் தெரிந்த கோபத்தில் நந்தினி பயந்து போனாள்.. எதற்காக இத்தனை கோபம்..?

“நான் பேசற அத்தனை வார்த்தைகளுக்கும் உனக்கு அர்த்தம் சொல்லனுமுன்னு அவசியமில்லை.. இங்கே நான்தான் உனக்கு பாஸ்... அடிக்கடி உனக்கு இதை ரிமைண்ட் பண்ண வேண்டியிருக்கு.. உன்மீது தப்பில்லை.. என் மீதுதான் தப்பு.. உன் லிமிட் என்னன்னு உனக்குத் தெரியப் படுத்தியிருக்கனும்.. என்னிடம் வேலை செய்கிற ஸ்டாஃப்ன்னு உன்னைத் தள்ளி நிறுத்தியிருக்கனும்..”

நந்தினி விக்கித்துப் போய் விட்டாள்.. அவன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சாட்டையடிகளாய் அவளது இதயத்தில் விழுந்து ரணமாக்கின... அவனது

இணக்கத்தையும் தோழமையையும் அவன் கேட்க வில்லையே.. அவன் தானே கொடுத்தான்..? அவனது ஹோட்டலில் அவனது குடும்பத்தினருக்கான பிரத்யேக டைனிங் ஹாலில் அவளோடு உணவருந்தினான்.. ஊரைச் சுற்றிக் காட்டினான்.. கோவிலுக்கு அழைத்துச் சென்றான்.. பார்ட்டிக்கும் அவன்தான் அழைத்துச் சென்றான்.. செய்வதையெல்லாம் அவன் செய்து விட்டு இப்போது அவளைத் தள்ளி நிறுத்தியிருக்க வேண்டும் என்கிறான்.. நந்தினி என்ன அந்த அளவுக்கு இளப்பமாகி விட்டாளா..? அவள் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள்.. வீடு முழுவதும் வேலையாள்கள் நிறைந்திருக்க இளவரசியாய் வளர்ந்தவள்.. அவளைப் பார்த்து ஒருவன் சொல்கிறான்.. அவளைத் தள்ளி நிறுத்தியிருக்க வேண்டுமென்று..

நந்தினிக்கு அழுகை வந்தது.. மனதின் வலியைக் கண்ணீரில் கொட்டித் தீர்த்து விட வேண்டும் போல இருந்தது.. அவன் குரூரமானவன் என்று துடித்தாள்.. அவளது மனதின் வலியை அவளது விழிகளில் கண்ட ரவிச்சந்திரனுக்குள் குற்ற உணர்வு எழுந்தது..

“நந்தினி..” என்றான்..

“ப்ளீஸ் பாஸ்.. நான் எதையும் பேச விரும்பலை.. டயர்டா ஃபீல் பண்றேன்.. ஐ வான்ட் டு டேக் ரெஸ்ட்..”

அவன் மௌனமாகி விட்டான்.. காரை ஓட்டுவதில் கவனமாய் இருந்தவனைப் பார்க்கப் பார்க்க நந்தினிக்குள் துக்கம் பொங்கியது..

‘எப்படியெல்லாம் பேசிட்டான்..’ என்று மனம் புழுங்கினாள்.. முள்ளாய் குத்திவிட்ட அவனது வார்த்தைகளால் காயப் பட்டிருந்த மனது ரணமாக இருந்தது.. ஒற்றை வார்த்தையைக் கூட உதிர்க்க முடியாமல் நா வறண்டிருந்ததில் காரிலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துத் தொண்டையில் கவிழ்த்தாள்..

‘மடக், மடக்’ எனத் தண்ணீரை ஒரே மூச்சில் காலி செய்வதவளை எப்படிச் சமாதானம் செய்வது என்று தெரியாமல் திகைத்தான் ரவிச்சந்திரன்..

அப்படி அவனுடைய நண்பன் ஒன்றும் நந்தினியைக் குறைவாக பேசி விடவில்லையே.. கொடுத்து வைத்தவன்டா நீ.. இவ்வளவு அழகான பெண் உன்னிடம் வேலை செய்கிறாள்.. இதிலும் நீ அரசன்தான் என்பது ஆண்கள் பரிமாறிக் கொள்ளும் சகஜமான வார்த்தைகள் தான்.. சுந்தரி

என்று சொன்னதற்கே கோபப்பட்டுப் பொங்கிக் கொண்டிருப்பவளிடம் மேற்கொண்டு அவன் என்ன சொன்னான் என்பதை ரவிச்சந்திரன் சொன்னால் நந்தினி சும்மா விட்டு விடுவாளா..?

ரவிச்சந்திரனுக்கு இப்போதும் கோபம்தான்.. எடுத்ததற்கெல்லாம் நந்தினி சண்டைக்கு வருவதை அவன் விரும்பவில்லை.. சிலவற்றை அவள் பெரிது படுத்தக் கூடாது என்று அவன் நினைத்தான்.. ஆண்களின் உலகம் வேறானது.. அதில் அவள் மூக்கை நுழைக்கக் கூடாது.. ஒன்று புரிந்து கொள்ள வேண்டும்.. முடியவில்லையெனில் கண்டு கொள்ளாமல் விட்டு விட வேண்டும்..

நந்தினியின் மூக்கு நுனி சிவந்திருந்தது.. கண்கள் கலங்கியிருந்தன.. மூக்கை உறிஞ்சியபடி பிடிவாதமாக அவன் பக்கம் பார்க்காமல் சண்டித்தனம் செய்தாள்.. ஹோட்டலின் வாசலில் கார் நின்றதும் சடுதியில் இறங்கி லிஃப்ட்டிற்குள் புகுந்து விட்டாள்.. காரை டிரைவர் வசம் ஒப்படைத்து விட்டு டைனிங் ஹாலுக்கு வந்த ரவிச்சந்திரன் அவளுக்கு ஃபோன் போட்டான்.. எடுத்தவள்..

“என்ன..?” என்று எவரோ ஒருவரிடம் கேட்பதைப் போல ஒட்டுதலில்லாமல் கேட்டாள்..

“டின்னர் சாப்பிடாம ரூமுக்கு போயிட்டயே.. டைனிங் ஹாலுக்கு வா.. உனக்காக வெயிட் பண்ணிக்கிட்டிருக்கேன்..”

“வாட் ஃபார் சார்..?”

அவளது கேள்வியில் ‘பாஸ்’ இடம் மாறி ‘சார்’ வந்து விட்டதை மிகத் துல்லியமாக கவனித்தான்.. புருவங்களைச் சுளித்தான்..

“வாட் ஃபார்ன்னா..? புரியலை.. வாட் டு யு மீன்..?”

“அது உங்க ஃஃபேமிலிக்கான ஸ்பெஷல் டைனிங் ஹால்சார்.. அதில் உங்க ஸ்டாபுக்கு இடமில்லை..”

“அப்படி நான் சொன்னேனா..?”

“இன்னைக்குச் சொல்லலை.. பட்.. இனிமே சொல்லுவீங்க.. உன் லெவல் இது இல்லைன்னு என் லெவலைச் சொல்லிக் காட்டுவீங்க.. வேணாம் சார்.. சமபந்தி போஜனம் எனக்கு சரிப்பட்டு வராது.. என் லெவல் எதுன்னு நீங்க புரிய வைச்சுட்டிங்க.. நான் லிமிட்டைக் கிராஸ்

பண்ணாம என் லெவலில் இருந்து பழகிக்கறேன்.. அதுதான் எனக்கு நல்லது..”

“ம்ப்ச்.. இது குழந்தைத்தனமான பிடிவாதம் நந்தினி..”

“நீங்க சொல்கிறது ஹண்ட்ரெட் பெர்சென்ட் உண்மைதான் சார்.. நான் குழந்தையாத்தான் இருந்திருக்கேன்.. எனக்கு விவரம் புரியலைதான்.. நீங்க அதைப் புரிய வைச்சுட்டிங்க.. அதுக்கு உங்களுக்கு எத்தனை தேங்க்ஸ் சொன்னாலும் பத்தாது..”

நந்தினி ஃபோனை அணைத்து விடத் தலையில் கை வைத்துக் கொண்ட ரவிச்சந்திரன் அவளுக்கான உணவு வகைகளை அவளது அறைக்கே அனுப்பி வைத்தான்.. அவள் பசியில்லை என்று உணவு வகைகளைத் திருப்பி அனுப்பி விட்டாள்.. ரவிச்சந்திரன் துணுக்குற்றான்.

மனம் விட்டுக் கலகலத்துச் சிரிக்கும் நந்தினியின் சிரித்த முகம் அவன் மனதில் எழுந்தது.. அந்த மனதை அவன் காயப் படுத்திவிட்டானே..

# அத்தியாயம் 50

**க**ட்டிலில் குப்புறப் படுத்து அழுத நந்தினியின் உடல் குலுங்கியது.. அவள் விட்ட கண்ணீர் ஆறாகப் பெருகி தலையணையை நனைத்தது.. ஈரத்தலையணை அவள் கொண்டிருந்த துயரத்தின் அளவைக் காட்டியது.. நிற்காமல் வழிந்தோடியக் கண்ணீரைத் துடைக்கும் நினைவின்றி நிராதரவாகத் தேம்பினாள் நந்தினி..

‘அம்மா..’ அவள் மனம் அரற்றியது..

இந்தப் பேச்செல்லாம் தேவைதானா என்று அவ ள் மனம் துடித்தது.. இனி ஒரு நொடி கூடத் தாமதிக்கக் கூடாது.. கோழிக்கோடையும் ரவிச்சந்திரனின் நிழலையும் விட்டு ஓடிவிட வேண்டுமென்று அவள் துடித்தாள்.. அவன் என்ன அவளைத் தள்ளி நிறுத்துவது..? அவள் அவனிடமிருந்து தள்ளி ரொம்பத் தூரத்திற்கு அப்பால் போய் விடுவாள்.. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்த நந்தினி அவளது லெதர் பேகை எடுத்தாள்.. அறையின் சுவர் அலமாரியில் அடுக்கியிருந்த துணிகளை சேகரித்து லெதர் பேக்கில் அடுக்கினாள்.. டிரஸ்ஸிங் டேபிள், பாத்ரூம் என்று அனைத்து இடங்களிலும்

பரத்தியிருந்த அவளது பொருள்களை தேடியெடுத்து ஹேண்ட்பேகில் போட்டுக் கொண்டாள்.. செல்ஃபோனை கையிலெடுத்து தீபாவை அழைத்தாள்..

தீபா..! உத்ராவைப் போல மற்றொரு தோழி.. அவளும் நந்தினியும் உத்ராவும் ஒரே குரூப்பில்தான் படித்தார்கள்.. உத்ரா, நந்தினியுடன் ஹாஸ்டல் ரூமில் தங்கியிருந்ததால் நெருக்கமான தோழியானாள்.. தீபா சென்னையைச் சேர்ந்த டேஸ்காலர் என்பதால் அவள் உத்ராவிற்கு அடுத்த நிலையில் இருக்கும் தோழியாக ஆனாள்..

மற்றபடி உத்ராவைப் போலவே தீபாவும் நந்தினியின் மீது அக்கறையும், அன்பும் கொண்டவள்தான்... தற்போதைய நிலையில் நந்தினி உத்ராவிடம் திரும்பிப் போக முடியாது.. தஞ்சைக்குப் போகலாம் என்ற ால் பெல்ட் மன்னனைப் பற்றிய பயம் மிரட்டியது.. வேறு வழியின்றி தீபாவின் உதவியை நாடினாள் நந்தினி..

“தீபா..”

“ஹாய் நந்தினி.. எப்படியிருக்க..? தஞ்சாவூருக்குப் போயிட்டா ஃபிரண்ட்ஸை யெல்லாம் மறந்துடனும்னு இருக்கா என்ன..? ஒரு ஃபோன் கால் கூட இல்ல.. நான் ஃபோன்

பண்ணினாலும் அட்டெண்ட் பண்ண மாட்டேங்கிற.. வாட்'ஸ் ராங் வித் யு..?"

"சம் பிராப்பளம் தீபா.. நேரில சொல்றேனே.. இப்ப எனக்குத் தங்க ஓர் இடமும் வேலையும் வேணும்.."

"என்னடி.. என்னென்னவோ சொல்கிற..? இன்னும் ரிசல்ட்கூட வரலையே.. நீ கேம்பஸ் இண்டர்வியூவும் அட்டெண்ட் பண்ணலை.. உனக்கு என்ன வேலை கிடைக்கும்..?"

'அவன் சொல்கிறதையே இவளும் சொல்கிறாளே..' நந்தினியின் கண்களில் நின்றிருந்த கண்ணீர் பெருக் கெடுக்க ஆரம்பித்தது..

"ப்ளீஸ் தீபா.. எனக்கு இப்ப கட்டாயமா ஒரு வேலை வேணும்டி.."

"உங்க அப்பா பிக் மேனாச்சே நந்தினி.. எவ்வளவு பெரிய கோடிஸ்வரர்..! எத்தனை பேருக்கு வேலை கொடுத்து சம்பளம் கொடுக்கிறார்ன்னு நீ சொல்லியிருக்கயேடி.. அவரோட பொண்ணு நீ.. வேலை வேணும்னு கெஞ்சறியேடி.. வாட் ஹேப்பன்ட் நந்தினி..?"

“விதி..! வேறென்ன சொல்ல..?”

நந்தினி அழுகையை அடக்கிக் கொண்டாள்.. இப்படியும் ஓர் காலம் வரும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லையே.. தெளிவாக ஓடிய வாழ்க்கை நீரோட்டத்தில் கல்விட்டு கலங்கடித்தது யார்..?

‘அந்த பெல்ட் மன்னன்..!’ வெறுப்புடன் பல்லைக் கடித்தாள் நந்தினி..

அவன் மட்டும் அவள் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இத்தனை அவதியும் இல்லையே.. தீபா சொல்வதைப் போல எத்தனையோ பேருக்கு இருக்க இடம் கொடுத்து, வேலை கொடுத்து, வாழ்க்கை கொடுத்திருக்கும் மேக நாதனின் மகள் இருக்க இடம் தேடி நிற்க நிழலில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறாள் என்றால் இவை அத்தனையும் அந்த பெல்ட் மன்னனின் கைங்கர்யம்தானே..

“என்னன்னு தெரியலைன்னாலும் நான் இருக்கிறப்ப நீ கலங்க வேணாம்.. இப்ப எங்கே இருக்கிற..?”

‘கோழிக்கோடு..’ என்று வாய்வரை வந்து விட்ட வார்த்தையை தடுத்து நிறுத்தினாள் நந்தினி..

வேண்டாம்.. அவள் கேரளாவுக்கு வந்து திரும்புவதைப் பற்றி தீபாவுக்கு எதுவுமே தெரிய வேண்டாம்.. இங்கு கழித்த இந்த ஆறு நாள்களில் நந்தினி வீட்டின் நினைவு வராமல் சந்தோஷமாக இருந்தாள்.. ரவிச்சந்திரன் அவளைக் கவனமாக பாதுகாத்தான்.. தன் வீட்டில் படுத்துறங்கும் நிம்மதியோடு 'யாழ்' ஹோட்டலின் அறையில் அவள் படுத்துறங்கினாள்.. அவள் சென்ற இடங்களிலெல்லாம் ரவிச்சந்திரனுக்கு கிடைத்த மரியாதை கொசுறாக அவளுக்கும் கிடைத்தது.. இந்த இனிய நாள்களின் நினைவுகள் நெருஞ்சி முள்ளான நிகழ்காலத்தின் மன ரணத்தால் கசடாக வேண்டாம்..

எது எப்படியானாலும் ரவிச்சந்திரன் அவள் அளவில் கண்ணியவானாக நடந்து கொண்டான்... அத்து மீறவில்லை.. அது போதும் அவளுக்கு..

"அதை அங்கே வந்த பின்னால் சொல்கிறேனே.." என்றாள்.. சென்னைக்குப் போய் சேர்வதற்குள் தீபாவிடம் சொல்ல வேண்டிய காரணத்தை யோசித்துக் கொள்ளலாம்.

"ஓகே.. நீ எங்கேயிருந்தாலும் சரி.. ஏதோ பிராப்ளத்தில இருக்கன்னு புரியுது.. சென்னைக்கு கிளம்பி வந்திரு..

தங்கறதுக்கு தனியா ஏன் இடம் பார்க்கனும்..? எங்க வீட்டிலேயே ஸ்டே பண்ணிக்க..”

“இல்லை தீபா.. அது சரிப்பட்டு வராது..”

“ஏண்டி..?”

“நான் வருவதைப் பற்றி உன் வீட்டுக்குத் தெரிய வேணாம் தீபா.. ஏன்னா என் வீட்டுக்குத் தெரியாமத்தான் நான் கிளம்பி வர்றேன்..”

“வீட்டுக்குத் தெரியாம வர்றயா..? யாரையாவது லவ் பண்றியா..? உன் பேரண்ட்ஸ் உன் லவ்வை அக்செப்ட் பண்ணிக்கலையா..?”

“லவ்வா..?”

அந்த நிலையிலும் நந்தினிக்குச் சிரிப்புத்தான் வந்தது.. அவள் யாரையும் காதலிக்கவில்லை.. ஆனால் காதலில் விழுந்தவர்கள் செய்யும் அத்தனை காரியங்களையும் செய்கிறாள்.. வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறாள்.. அதுவும் தனியாக வரவில்லை.. ரவிச்சந்திரனுடன் ரயிலில் பயணித்து வந்து இறங்கியிருக்கிறாள்.. ஒளிந்து மறைந்திருக்கிறாள்..

ஏனோ தீபாவின் ‘லவ்வா..?’ என்ற கேள்விக்கும்.. ரவிச்சந்திரனுக்கும் முடிச்சுப் போட்டுப் பார்த்தது அவள் மனம்..

‘ம்ப்ச்.. அவதான் ஏதோ சொல்கிறான்னா நானும் அறிவு கெட்டத்தனமா அவனைப் பத்தி நினைத்து வைக்கிறேனே..’ துயரத்துடன் அவன் நினைவைத் தவிர்த்தாள்.. இதோ இப்போது அவள் கிளம்பப் போகிறாள்.. அதன் பின்னால் அவன் யாரோ.. அவள் யாரோ.. எதிர்காலத்தில் அவனைப் பற்றிய நினைவு நந்தினியின் மனதில் வரலாம்.. நந்தினியைப் பற்றிய நினைவு அவன் மனதில் வரவே வராது.. அவன் சந்தித்த எத்தனையோ பெண்களில் அவளும் ஒருத்தி.. அவ்வளவுதான்.. என்ன ஒன்று.. மற்றவர்கள் அவனிடம் பழகிய விதம்வேறு.. நந்தினி பழகிய விதம் வேறு..

‘‘இல்லை தீபா.. அப்படியேதும் இல்லை.. நேரில் விவரமா சொல்கிறேனே.. இப்போதைக்கு நான் சென்னைக்கு வருகிறதை உன் பேரண்ட்ஸிடம் சொல்ல வேண்டாம்.. ப்ளீஸ்..’’

‘‘ஓகே.. லீவ் இட்.. என் கஸின் ஒருத்தியோட ஃபிரண்ட் சென்னையிலே பிளாட் எடுத்து தங்கியிருக்காங்க..ஐ.டி பீல்டில வேலை பார்க்கிறாங்க.. அவங்களுக்கு ஃபோன் பண்ணிச்

சொல்லிடறேன்.. நீ அவங்ககூட ஸ்டே பண்ணிக்க.. வேலையைப் பத்தி நிதானமா யோசிக்கலாம்..”

“தேங்க்ஸ் தீபா..”

“அடிதாண்டி வாங்கப் போற.. ஆபத்தில உதவறதுக்குத்தானே ஃபிரண்ட்ஸுன்னு இருக்கிறோம்..? உத்ராவுக்கு மேரேஜ்.. தெரியுமில்ல..”

‘எனக்குத் தெரியாமலா..? அவளோட மேரேஜ் எங்கேஜ்மென்டுக்கு போகிறேன்ங்கிற பெயரில்தானே வீட்டை விட்டு எஸ்கேப் ஆனேன்..’

“என்னடி.. பதிலைக் காணோம்..”

“தெரியும் தீபா.. இப்ப நானிருக்கிற சிச்சுவேஷனில அதைப் பத்தியெல்லாம் நினைக்க முடியலை.. பை தி வே.. நான் சென்னைக்கு வருகிறதைப் பத்தி உத்ராவிடம் எதையும் சொல்ல வேணாம்..”

“ஆர் யு ஷ்யூர்..? நீயும் அவளும் பெஸ்ட் ஃபிரண்டாச்சே..”

"இப்பவும் அவ எனக்கு பெஸ்ட் ஃபிரண்ட்தான்.. கல்யாணப் பெண்ணா இருக்கிறவகிட்ட என் பிரப்ளத்தைச் சொல்ல வேண்டாம்ன்னு நினைக்கிறேன் தீபா.."

"யூ ஆர் ரைட் நந்தினி.. நீ வா.. நாம பார்த்துக்கலாம்."

தீபாவுக்கு இரவு வணக்கம் சொல்லி விட்டு செல்ஃபோனை அணைத்த நந்தினிக்கு சற்று ஆறுதலாக இருந்தது.. என்ன செய்யப் போகிறோம் என்ற பதட்டம் தணிந்து ஏதோ ஒரு வழி கிடைத்து விட்டதே என்றிருந்தது..

பைகளைத் தூக்கியபடி அறையைச் சுற்றிப் பார்த்தாள்... 'ரிசப்சஷனில் இருக்கிறவன் என்னன்னு கேட்பானே..' லேசாக தயங்கினாள்..

'கேட்டால் ஊருக்குப் போகிறேன்னு சொல்லிட வேண்டியதுதானே.. இதிலென்ன பயம்..?' நிமிர்வு வந்தது. அறையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு நீண்டிருந்த வராந்தாவில் நடந்தாள்.. கண்ணாடி ஜன்னல் கதவுகளுக்கு அப்பால் தெரிந்த கோழிக்கோடின் அழகு கண்சிமிட்டியது..

'கேரளத்தின் அழகை அதிகமாக ரசித்து விட்டேன் போல.. யார் கண் பட்டதோ.. ஆறே நாளில் திரும்பிப் போகிறேன்..'

மனதில் துயரம் சுமையாக அழுந்தியது.. பாரம் சுமக்கும் வலி உண்டானது.. நிம்மதிக்கு உத்தரவாதமற்ற சோகம் துணையாக வந்து சேர்ந்ததில் கண் கலங்க லிப்டை அணுகினாள் நந்தினி.. பட்டனை அழுத்தி விட்டுக் காத்திருந்தாள்.. அவள் நின்றிருந்த தளத்திற்கு லிஃப்ட் வந்து சேர்ந்தது.. கதவு திறந்தது.. பைகளுடன் உள்ளே நுழைந்தவள் திகைப்புக் கலந்த அதிர்ச்சியுடன் பின் வாங்கினாள்..

அங்கே கைகளை மடித்துக் கட்டி.. ஒற்றைக் காலை மடித்து லிஃப்டின் சுவரில் பதித்து சாய்ந்து நின்றிருந்தான் ரவிச்சந்திரன்..

“நினைத்தேன்..” என்றவனின் பார்வை அவளைத் துளைத்தது..

நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டு நிமிர்ந்து நிற்க முயன்றாள்.. முடியவில்லை.. அவளது உடல் தொய்ந்து சரிந்தது.. இரவில் சாப்பிடாதது.. தொடர்ந்து அ ழுது கொண்டே இருந்தது.. இத்யாதி, இத்யாதி போன்ற காரணங்களால் நிற்க முடியாமல் தள்ளாடினாள்..

“இப்படி வா..” ரவிச்சந்திரன் அவளை இழுத்து சாய்வாக நிறுத்தினான்.. லிஃப்ட்டில் மேல் தளத்திற்குச் செல்லும் பட்டனை அழுத்தினான்... தடுக்கும் சக்தியில்லாமல் வெறித்துப் பார்த்த நந்தினியின் நிராதரவான பார்வை அவன் மனதை பிசைந்தது.. அவன் எதையோ சொல்லத் துடித்தான்.. அவன் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று நந்தினியை வசப் படுத்தியது.. அவள் பேசச் சக்தியற்று நகர முடியாமல் கால்கள் பின்ன சாய்ந்து நின்றாள்..

“இதைத்தான் செய்வேன்னு நினைத்தேன்... நான் நினைத்ததையேதான் நீயும் செய்து வைக்கிற.. என்னிடம் சொல்லாம போகனும்னு நினைச்சிட்டேல்ல.. இவ்வளவுதானா நீ..? வாய் வார்த்தைக்கு எல்லாவற்றையும் தூக்கிக் கடாசிட்டுக் கிளம்பிருவியா..?”

ரவிச்சந்திரனின் வார்த்தைகளில் வெளிப்பட்டக் குற்றச்சாட்டிற்கு அவள் பதில் சொல்லவில்லை..

பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தவளின் பிடிவாதம் அவனை ஈர்த்தது.. அந்தக் குழந்தைத்தனமான பிடிவாதத்தில் மனம் கனிந்தான்.. சிறுபிள்ளைத்தனமான கோபத்துடன் மூக்கை உறிஞ்சிக் கொண்டிருந்த அந்த வசீகரி

அவனை அவள் வசீகரித்துக் கொண்டிருந்ததை அறியாமல் துயரப்பட்டுக் கொண்டிருந்தாள்.. அதை ரசிக்கும் முறுவல் அவன் இதழ்களில் வந்தது.. அதை சீற்றத்துடன் பார்த்தாள்.. அவளது உதடுகள் துடித்தன..

“என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படித் தோணுது..?” அவனுக்குத் தோன்றுவது என்னவென்பதை அறியாமல் அவள் தேம்பினாள்..

“இல்லையில்ல..”

அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.. அவன் பகையாளி.. அவளது இந்தத் துயரத்துக்கு அவன் பேசிய வார்த்தைகள் தான் காரணம் என்பதை மறந்து குழந்தையாக அவன் மார்பில் சாய்ந்து விசும்பினாள் நந்தினி..

லிஃப்ட் மேல்தளத்தில் நின்றிருந்தது.. திறந்த கதவுகளின் ஊடே நந்தினியின் லெதர் பேகை வைத்து விட்டான் ரவிச்சந்திரன்.. லிஃப்டின் கதவு மூட முடியாமல் அடித்துக் கொண்டிருந்ததில் லிஃப்ட் நகராமல் அங்கேயே நின்று விட்டது..

“வேண்டாம்டா.. சமத்துல்ல.. அழக் கூடாது..”

ரவிச்சந்திரன் அவளது தலை கோதி சமாதானப் படுத்தினான்..

“என்னவெல்லாம் பேசினீங்க.. எங்க அப்பாகூட இந்த அளவுக்குப் பேசினதில்லை.. லிமிட், லெவல், அது இதுன்னு பேசிட்டு இப்ப என் மேலதான் அத்தனை தப்பும்ன்னு பிளேட்டைத் திருப்பிப் போடறீங்களே... உங்களை யாரும் கேள்வி கேட்க முடியாதுங்கிற தைரியம்தானே..?”

“ஏன் கேட்க முடியாது..? நீ கேட்காத கேள்விகளா..?”

“ஆக்சுவலா உங்களிடம் வேலை பார்க்க வரனும்ங்கிற ஐடியாவே எனக்கு இல்லை.. சூசைட் பண்ணிக்கலாம்ங்கிற முடிவோடதான் இருந்தேன்.. இந்த உத்ரா இண்டர்பியர் ஆகி என்னை இந்த நிலைமையிலே கொண்டு வந்து நிறுத்திட்டா..”

“சூசைடா..? என்ன பேச்சுப் பேசற..”

ரவிச்சந்திரன் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.. அவன் மார்பில் முகம் புதைத்து கைகளுக்குள் அடங்கியிருந்ததில் நந்தினியின் மனதிலிருந்த நிராதரவான மனநிலை மாறி நிம்மதி வந்து சேர்ந்தது.. இரும்புக் கோட்டையின் உள்ளே பத்திரமாக இருப்பதைப் போன்ற பாதுகாப்புணர்வு ஏற்பட்டது..

அவளது கூந்தலில் முகம் புதைத்திருந்த ரவிச்சந்திரனுக்கு பேச வார்த்தைகளே வரவில்லை.. இந்த ஆறு நாள்களில் நந்தினியைப் பற்றித் தெள்ளத் தெளிவாக அவன் புரிந்து வைத்திருந்தான்..

நந்தினி ரோஷக்காரி..! சுயமரியாதையைப் பெரிதாக நினைப்பவள்.. அவளது சுயமரியாதையை ரவிச்சந்திரன் காயப் படுத்தி விட்டான்.. அவளைக் குறைவாக பேசி விட்டான்..

‘மனது தாங்காம இவ சூசைட் பண்ற முடிவுக்குப் போயிருந்தா என்ன ஆகிறது..?’ அவன் மனம் நடுங்கியது..

# அத்தியாயம் 51

**அ**வன் அவளை இறுக்கமாக அணைத்திருந்தான்.. அவளும் அவனது இறுக்கமான அணைப்பில் அடங்கி அவன் மார்பில் முகம் புதைத்திருந்தாள்.. ஆனால் அவர்கள் காதலர்கள் இல்லை.. அவர்களது மனதில் எந்தக் கிளர்ச்சியும் ஏற்படவில்லை..

அது விந்தையான ஓர்நிலை.. அவளுக்கும் அவனுக்கும் இடையில் நிலவும் உறவு சிநேகிதத்திற்கு அப்பாற்பட்டது.. அதைக் காதலென்று சொல்ல முடியாது.. அவனுக்கும் அவளுக்கும் இடையே ஈர்ப்பு உண்டு.. அதற்கு காதலென்ற பெயரிடலாமா என்ற ஆலோசனையை அவர்கள் இருவருமே மேற்கொள்ளவில்லை..

அவன் அவளுக்கு அடைக்கலம் கொடுத்தான்.. அவள் அவன்மீது நம்பிக்கை வைத்து பின்பற்றி வந்தாள்.. அவள் தனது பொறுப்பு என்ற உணர்வு அவனுக்கிருந்தது.. அவன் அவளது பாதுகாவலன் என்ற உணர்வு அவளுக்கிருந்தது.. மெல்லிய உணர்வுகளால் நெய்யப்பட்ட நூலிலை போன்ற இந்த பந்தம்தான் இரும்புச் சங்கிலியாக இருவரையும்

பிணைத்திருந்தது.. அறுக்க முடியாத பிணைப்பு அது என்பதை அவர்கள் இருவருமே உணர்ந்திருந்தார்கள்.. ரவிச்சந்திரனின் கைகளுக்குள் குலுங்கி அழுது கொண்டிருந்த நந்தினியின் தேம்பல்கள் ஓய்ந்து நின்றன.. அவளது முதுகைத் தட்டிக் கொடுத்தபடி கூந்தலில் முகம் புதைத்து நின்றிருந்த ரவிச்சந்திரனின் முகத்தை அண்ணாந்து பார்த்தாள்.. கலங்கிச் சிவந்திருந்த அவளது கண்களில் வழிந்து கொண்டிருந்த கண்ணீர் அவளது கன்னங்களில் இறங்கி அவனது சட்டையை நனைத்துக் கொண்டிருந்தது..

“ஐ ஆம் ஸாரி..”

ரவிச்சந்திரன் அவளது கன்னங்களில் இருந்த கண்ணீர் தாரையைத் துடைத்து விட்டான்.. அவனா மன்னிப்புக் கேட்கிறான் என்று நம்ப முடியாத பிரமிப்புடன் விழி அகல அவனைப் பார்த்தாள் அவள்.. அவனுடைய உயரம் எத்தகையது என்பதை அவள் நின்று கொண்டிருக்கும் ‘யாழ்..’ நட்சத்திர ஹோட்டலே சொல்லுமே..

கேரளத்தின் கோடிஸ்வரன்.. ராஜகுடும்பத்து இளைஞன்.. உலகம் சுற்றும் தொழிலதிபன் ..! அவனது உயரத்திலிருந்து இறங்கி பேதமைத்தனம் கொண்ட சிறு பெண்ணான

நந்தினியிடம் மன்னிப்புக் கேட்கிறான்என்றால் அது உலக அதிசயமல்லவா..?

“யோசிக்காம பேசிட்டேன்.. உன் மனதைக் காயப்படுத்திட்டேன்.. ஐ ஆம் ஸாரி.. பட்.. நந்தினி.. அதையெல்லாம் பேசனும்னு பிளான் பண்ணிப் பேசலை.. கோபத்தில் வார்த்தைகள் கொட்டிருச்சு.. சின்னக் கேலியைக் கூடத் தாங்கிக்காம நீ டார்ச்சர் பண்றேன்னு ஆத்திரப் பட்டுட்டேன்..”

“சின்னக் கேலியோ.. பெரிய கேலியோ.. நீங்க கேலி பண்ணினா பொறுத்துக்கலாம்.. அந்த தொங்கு மீசை யார் என்னைக் கேலி பேச..? சொப்பன சுந்தரியாம்.. சொப்பன சுந்தரி..”

“தொங்கு மீசையா..? ஹா.. ஹா..”

ரவிச்சந்திரனின் நண்பனின் மீசை வளைந்து இறங்கி நாடியைத் தொட்டுக் கொண்டிருக்கும்.. அதை ரவிச்சந்திரன் கூட உன்னிப்பாக கவனித்ததில்லை.. ஒரே பார்வையில் நந்தினி அவனை வர்ணிக்கிறாள்..

“நீ இருக்கியே..”

அவனுக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது.. துடுக்குத்தனம் நிறைந்த குழந்தை மனம் கொண்ட அந்த குமரியின் கன்னம் தட்டினான்.. அவன் என்ன வேண்டுமானாலும் கேலி பேசலாம் என்று அவள் அளித்த உரிமையின் நெருக்கத்தில் அவள்மீது அவன் மனம் சொந்தம் கொண்டாடியது..

“நீயும் சண்டை போட்ட... நானும் சத்தம் போட்டேன்.. அதுக்காக பொசுக்குன்னு கோவிச்சுக்கிட்டுப் பேக்கைத் தூக்கிக்கிட்டு கிளம்பிடுவியா..?”

உரிமை கலந்த அவனது கோபம் அவளைத் தாலாட்டியது.. “வேற என்ன செய்கிறதாம்..?” அவள் மூக்கை உறிஞ்சியபடி தேம்பினாள்..

“ம்ப்ச்.. அழுகக் கூடாது.. எங்கே போகிறதா பிளான் பண்ணியிருந்த..? நிச்சயமா உத்ராவிடம் போகனும்னு நினைத்திருக்க மாட்ட.. அவங்களுக்கு மேரேஜ்..”

“ம்ம்ம்.. தீபாகிட்டப் போகலாம்னு நினைத்தேன்..”

“தீபா யாரு..?”

“எனக்கும் உத்ராவுக்கும் ஃபிரண்ட்.. நாங்க ஹாஸ்டல்.. அவ டேஸ்காலர்.. சென்னையில இருக்கிறா..”

“அங்கே போயி..? என்ன பண்றதா பிளான்..?”

“தெரியலை..”

நந்தினி மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.. அவளை அணைத்துக் கொண்ட ரவிச்சந்திரன்..

“முட்டாள் மாதிரிக் கிளம்பப் பார்த்தியே.. இன்னும் உன் படிப்புக்கான ரிசல்ட் வரலை.. உனக்கு என்ன வேலை கிடைக்கும்..? செலவுக்கு பணத்துக்கு என்ன பண்ணுவ..? சென்னையிலே உன் பேரண்ட்ஸ் கண்ணிலே படாம எத்தனை நாள் ஒளிந்திருப்பன்னு கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தியா..?” என்று கடிந்து கொண்டான்..

“தீபாவோட கசினோட ஃபிரண்ட் சென்னையிலே ஃபிளாட் பிடித்து தங்கியிருக்காங்களாம்.. அவங்க கூட ஸ்டே பண்ணிக்கன்னு தீபா சொன்னா.. வேலையைப் பத்தி அப்புறமா யோசிக்கலாம்ன்னா...” தேம்பியபடியே சொன்னாள் நந்தினி..

“கெட்டிக்காரிதான் போ.. இங்கே கோபத்தில் ஒன்றிரண்டு வார்த்தைகள் நான் கூடுதலாப் பேசினதையே உன்னால தாங்கிக்க முடியலை... அங்கே உன் ஃபிரண்டோட கசினோட ஃபிரண்ட் கூடத் தங்கப் போறேன்னு கிளம்பிட்டியே.. இவ்வளவு நெருக்கமான ஃபிரண்ட் உனக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பான்னு என்ன நிச்சயம்..? ம்ம்ம்..?” ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தினான்..

“ஏன் அப்படிச் சொல்கிறீங்க..? அவங்க என்ன செய்வாங்க..?” புரியாமல் கேட்டாள் நந்தினி..

“மக்கு..! பிளாட்டுக்கு வாடகை அவ கொடுக்கிறா.. கூட வந்து தங்கியிருக்கிற உன்னை வீட்டை சுத்தம் செய்து சமைத்து வைன்னு சொல்லிட்டா என்ன செய்வ..?”

“என்னது..? அப்படியும் சொல்வாங்களா..?”

“சொல்கிறதுக்கான சான்ஸ் இருக்கா இல்லையா..?”

“இருக்கு.. என் நிலைமையைப் பார்த்திங்களா..? இப்படி ஆகிருச்சே..”

‘கோ’ எனக் கதற ஆரம்பித்த நந்தினியைத் தேற்றினான் ரவிச்சந்திரன்.. ஒரு குழந்தைக்குத் தைரியம் சொல்வதைப் போல அவளுக்குத் தைரியம் சொன்னான்..

“உன் நிலைமைக்கு ஒரு குறைவும் இல்லை.. நானிருக்கேன் உனக்கு..”

“நீங்கதான் திட்டறீங்களே..”

“காரணமில்லாமல் திட்டினேனா..?”

“காரணமிருந்தா இப்படித்தான் திட்டுவீங்களா..?”

“அதான்.. ஸாரி சொல்லிட்டேன்ல்ல.. இனித் திட்ட மாட்டேன்னு என்னால உத்தரவாதம் கொடுக்க முடியாது நந்தினி.. கோபம் வந்தாத் திட்டத்தான் செய்வேன்.. அதை நீ பெரிதா எடுத்துக்கக் கூடாது.. பதிலுக்கு சண்டை போடு.. பேசாமக் கூட இருந்திரு.. ஆனா இப்படிச் ெ சால்லாமல் பெட்டியைத் தூக்கிக்கிட்டு மட்டும் கிளம்பி விடாதே.. உன்னைத் திட்ட எனக்கு உரிமையில்லையா நந்தினி..?” அவளது முகத்தைத் கைகளில் ஏந்தி வெகு பிரியத்துடன் விழிகளை உற்றுப் பார்த்துக் கேட்டவனிடம் ‘இல்லை’ என்று சொல்ல முடியாமல் ஆமோதிப்பாக தலையை அசைத்து விட்டு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் மனம் நிறைந்து விட்டது.. அவளது முடி கோதியபடி இதமாக எடுத்துச் சொன்னான்..

“இந்த உலகம் பொல்லாதது நந்தினி.. உன்னைப் போலவே எல்லோரும் நல்லவங்களா இருப்பாங்கன்னு நம்பி விடக்கூடாது.. தீபா உன் ஃபிரண்டா இருக்கலாம்.. நல்ல பெண்ணா இருக்கலாம்.. ஏன்.. அவளோட கசின் கூட நல்ல டைப்பா இருக்கலாம்.. அந்தக் கசினோட ஃபிரண்ட் நல்ல டைப்பா இருப்பான்னு எப்படிச் சொல்ல முடியும்..? இப்படி முன் பின் தெரியாத பெண்கூட ஒரே பிளாட்டில் தங்கப் போறேன்னு கிளம்பறியே.. ஏதாச்சும் ஆபத்தில் மாட்டிக்கிட்டா என்ன செய்வ..?”

ரவிச்சந்திரன் விவரித்ததில் பயந்து போன நந்தினி..

“என்ன ஆபத்து வரும்..?” என்று மிரட்சியுடன் கேட்டாள்..

‘இது கூடத் தெரியாத குழந்தையாய் இருக்கிறாளே..’ அவளது கன்னம் தட்டிப் புன்னகைத்தான் ரவிச்சந்திரன்..

“எது வேண்டும்ன்னாலும் வரலாம்.. நானும் உனக்கு முன் பின் அறிமுகமில்லாதவன்தான் நந்தினி.. உன் ஃபிரண்டோட வுட்பியோட ஃபிரண்டோட ஃபிரண்டுக்குத்

தெரிந்தவன்தான்.. பார்ட்டிகளில் குடிப்பவன்தான்.. பெண்களுடன் உல்லாசமாக இருப்பவன்தான்.. பட்.. என்னை நம்பி வருகிற பெண்ணுக்கு என்னால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது நந்தினி..''

''ப்ளீஸ்.. இந்த விளக்கம் வேண்டாமே.. உங்கள் மேல் நம்பிக்கையில்லைன்னு நான் சொன்னேனா. .? இந்த உலகத்தில் யாரை நம்புகிறேனோ இல்லையோ.. உங்களை நம்புகிறேன்..''

குழந்தைத்தனமான அவளது வார்த்தைகளில் உருகிப் போனான் ரவிச்சந்திரன்.. அவள் உதிர்த்த வார்தைகள் வைரங்களுக்கு நிகரானவை என்பதை அறியாத அறியாமையோடு அவன் முகம் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

''சம் டைம்ஸ் குடிப்பேன்.. லேடிஸ் பழக்கம் உண்டு.. இதையெல்லாம் தெரிந்த பின்பும் என் மேல் நம்பிக்கை வைக்கறியா..?''

''யெஸ் பாஸ்.. இந்தப் பழக்கமெல்லாம் உங்களுக்கு இருக்குங்கிறது நீங்க சொல்லித்தானே எனக்குத் தெரியும்..?

நீங்க நினைத்திருந்தா இதைச் சொல்லாம மறைத்திருக்கலாமே..? ஐ அட்மைர் யு பாஸ்..”

அவள் ‘ஐ லவ் யு’ என்று சொல்லவில்லை.. ‘ஐ அட்மைர் யு’ என்றுதான் சொன்னாள்.. அதுவே ரவிச்சந்திரனின் மனதில் இதமான உணர்வை ஏற்படுத்தியது..

“ஓடுகிறதுதான் ஓடுகிற.. புது வருஷம் பிறக்கிறப்ப ஓடுவியா..? மக்குன்னு சொன்னா மட்டும் மூக்குக்கு மேலே கோபம் வந்து உட்கார்ந்துருது..” இயல்பு நிலைக்கு மாறினவனாக அவள் தலையில் கொட்டினான்..

“உங்களுக்கு கொட்டுவதற்கு சான்ஸ் வேணும்.. சான்ஸ் கிடைக்கலேன்னாலும் நீங்களா உண்டு பண்ணிக்குவீங்க.. உங்களைப் போல கள்ளாட்டம் ஆடுகிற ஆளை நான் பார்த்ததே இல்லை..” நந்தினியும் இயல்பு நிலைக்கு மாறியவளாக நாக்கைத் துருத்தி அவனுக்கு அழகு காட்டி விட்டு..

“புது வருஷம் பிறக்கப் போகுதா..? இன்னைக்கா..?” என்று விழி விரித்தாள்..

“மெல்ல.. கண்ணில வலி வரப் போகுது.. டிசம்பர் முப்பத்தி ஒண்ணாந்தேதி நைட்டில பெட்டியத் தூக்கறியே..

வருஷம் பூராவும் பெட்டியைத் தூக்கிக்கிட்டு ஓட வேண்டி வந்திட்டா என்ன செய்வ..?” அவன் கேலி செய்தான்..

“வருஷம் பூராவும் உங்களைத் துரத்திக்கிட்டு வர வைப்பேன்... நான் ஓடினா நீங்க துரத்தி வர மாட்டிங்களா..?” இலகுவாக சொன்னாள் நந்தினி..

“கெட்டிக்காரிதான்.. எப்படியெல்லாம் திட்டம் போடற.. எது என்னவோ.. இந்த ஓடிப் போகிறதுன்னா உனக்கு கோழிக்கோடு அல்வா சாப்பிடற மாதிரி ஆகிருச்சு..”

“நீங்க கண்டிங்க..”

“இப்பக் கண்டுட்டேனே..”

அவளது லெதர் பேக்கை அவன் சுட்டிக் காட்டினான்.. லிஃப்டின் வாசலுக்கு நடுவில் மாட்டிக் கொண்டு இரு பக்கமும் அடி வாங்கி கிழிந்து விடும் நிலையில் இருந்தது அந்த லெதர் பேக்..

“ஹைய்யோ.. என் பேக்..”

நந்தினி அவசரமாக பேக்கைத் தூக்கிக் கொண்டாள்.. லிஃப்டின் கதவு மூடியது..

“புது வருஷத்திலே புது பேக் வாங்கித் தரேன்.. கவலைப்படாதே..” என்றான் ரவிச்சந்திரன்..

“லிஃப்ட் வாசலுக்கு மத்தியிலே எதையாவது போட்டு வைச்சா லிஃப்ட் ஒரே இடத்தில நின்னுரும்ங்கிற ஐடியா சூப்பர்.. ரூமில் உட்கார்ந்து இதைத்தான் யோசிப்பீங்களா..?”

“எனக்கு வேற வேலையே இல்லை பாரு.. ஒரு சினிமாவில் இதுபோல ஒரு சீன் வரும்.. அதைப் பார்த்துட்டு காபி அடிச்சேன்.. தட்ஸ் ஆல்..”

“ஆஹா.. ஆஹா.. நீங்க சகலகலா வல்லவன்தான் போங்க..”

“இப்ப உன் ரூமுக்கு நீ போய் பிரஷ் ஆகிட்டு ரிசப்சஷனுக்கு வந்திரு..”

“வொய்..?”

“சும்மா நை நைன்னு வொய் போடாதே.. இது ஸ்டார் ஹோட்டல்.. தெரியுமில்ல..”

“ஸோ வாட்..?”

“மக்கு.. மக்கு.. இது டிசம்பர் முப்பத்தி ஒன்றாம் தேதியோட நைட்.. மிட் நைட் வந்ததும் நியு இயர் பிறந்திரும்ல்ல..”

“அட..! ஆமாம்..”

“சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு என்னை ‘டா’ போடற..?”

“சேச்சே..! யாரு நீங்க..?”

“உன் பக்கத்தில் இருக்கிறப்ப நான் யாருங்கிற விவரமே மறந்து போயிருது நந்தினி.. நான் யாருன்னு நீயே சொல்லிரு..”

“என்னோட பாஸ்..!”

“இது உன் நினைவில் இருக்கா..? பிழைத்தேன் போ.. ஹோட்டலில் நியு இயர் செலபரேஷன் நடந்துக்கிட்டு இருக்கு.. வா.. நாமும் போய் ஜாயின் பண்ணிக்கலாம்..”

“ஹை.. செம ஜாலி..!”

குழந்தை போலக் குதித்தவள்தான் சற்று முன் நிராதரவான மனநிலையோடு அவன் மார்பில் முகம் புதைத்து தேம்பி அழுது கொண்டிருந்தாள் என்பதில் மனம் நெகிழ்ந்தான் ரவிச்சந்திரன்..

‘இவளை விட்டு இந்தக் குழந்தைத்தனமும் சந்தோஷமும் விலகவே கூடாது.. இறைவனே..!’ அவன் மனம் பிராா்த்தித்தது..

# அத்தியாயம் 52

**லி**ஃப்டில் நந்தினி இறங்க வேண்டிய தளத்துக்கான எண்ணை அழுத்தினான் ரவிச்சந்திரன்.. லிஃப்ட் கீழே இறங்கியது.. நந்தினி இறங்க வேண்டிய தளத்தில் நின்றது.. கதவு திறந்தது.. நந்தினி பைகளை அள்ளிக் கொண்டு வெளியேறினாள்.. திரும்பிப் பார்த்தாள்.. மூடிக் கொண்டிருந்த லிஃப்டின் கதவுகளுக்கிடையே ரவிச்சந்திரன் தெரிந்தான்.. கட்டை விரலை உயர்த்திக் காட்டினான்..

“சீக்கிரமா வந்திரு..” என்று குரல் கொடுத்தான்..

லிஃப்ட் கீழே இறங்கி விட்டது.. உற்சாகத் துள்ளலோடு நடந்தாள் நந்தினி.. ‘லா லா லா.. லா..லா..’ என்று பாட வேண்டும் போல இருந்தது.. பைகளை பிரித்துத் துணிகளை பழையபடி அலமாரியில் அடுக்கிய போது மனதில் சந்தோஷம் நிரம்பியிருந்தது.. டிரஸ்ஸிங் டேபிள், பாத்ரூம் போன்றவற்றில் வைக்க வேண்டிய பவுடர், சோப் இத்யாதி, இத்யாதி வகைகளை வைத்தாள்.. காலையில் அணிந்திருந்த சேலையில்தான் இன்னும் இருக்கிறாள் என்ற நினைவு வர அவசரமாக துணிகளை ஆராய்ந்து வெந்தய நிறத்தில் கற்கள்

பதித்து வேலைப்பாடுகள் செய்த விலையுயர்ந்த சுடிதாரை அணிந்து கொண்டாள்.. அதன் கைப்பகுதி முழங்கை வரை நீண்டிருப்பதால் குளிருக்கு இதமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.. தலைமுடியை வாரி.. லேசான ஒப்பனைகளை செய்து முடித்து கண்ணாடி பார்த்தவளுக்குத் தான் அழகுதான் என்று தோன்றியது..

‘இல்லேன்னாலும் என்னவாம்..? கக போ..’

தலையைச் சிலுப்பிக் கொண்டவள் அறையை மூடிவிட்டு லிப்டை நோக்கி விரைந்தாள்.. அவள் ரிசப்சஷனை அணுகிய போது அங்கே கூட்டம் நிரம்பியிருந்தது.. புத்தாண்டின் கொண்டாட்டம் ஒவ்வொருவரின் முகங்களிலும் தெரிந்தது.. ரவிச்சந்திரன் எங்கேயென்று தேடினாள்..

‘என்னை வரச் சொல்லிட்டு இவன் எங்கே தொலைந்துட்டான்..? இவனுக்கு இதே பிழைப்பாய் ஆகி விட்டது..’

“வருஷம் பிறக்கிறப்ப என்னைத் திட்டாதே..”

அவளது காதோரம் கேட்ட குரலில் சந்தோஷத் துள்ளலுடன் திரும்பினாள்.. பிஸ்கெட் வண்ண கோட் சூட்டில் அயர வைத்தான்..

“வாவ்..” என்றாள்..

“அவ்வளவு அழகாவா இருக்கேன்..?” என்றான் அவன்..

“செம ஹேண்ட்சம் தெரியுமா.. தூள்..”

“ஆர் யு ஷ்யூர்..?”

“ஹண்ட்ரெண்ட் பெர்செண்ட் ஷ்யூர்..”

“அப்ப என்னைக் கல்யாணம் பண்ணிக்கறயா..?” கண்சிமிட்டி அவன் சிரித்தபோது மயங்கிப் போனாள்..

“கலாட்டா பண்ண உங்களுக்கு வேற நேரமே கிடைக்கலியா..?” என்று செல்லமாக கோபித்தாள்..

“கம் வித் மி..”

அவன் டைனிங் ஹால் பக்கம் போனான்.. கூடவே நடந்த நந்தினி..

“இங்கேயா நியு இயர் செலபரேஷன் நடக்குது..?” என்று அப்பாவியாக கேட்டாள்..

அவனும் அவளும் மட்டுமே இருந்த அவனுக்கான பிரத்யேக டைனிங் ஹால் நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது..

நேந்திரம் பழம்.. மலபார் பிரியாணி.. கோழிக்கோடு அல்வா என ருசியான உணவு வகைகள் ஆவி பறக்கும் சூட்டுடன் டேபிளில் பரத்தப்பட்டன..

“பசியோடு நியு இயரை வெல்கம் பண்ணச் சொல்றியா..? எனக்கு செம பசி..” ரவிச்சந்திரன் சேரை இழுத் துப் போட்டு உட்கார்ந்தான்..

“நீங்க சாப்பிடலையா..?” வியப்புடன் கேட்டாள் நந்தினி..

“நீ சாப்பிடாம நான் மட்டும் எப்படிச் சாப்பிடறதாம்.. உட்காரு..”

ரவிச்சந்திரன் அவள் பக்கமாக தட்டை நகர்த்தி வைத்தான்.. நந்தினிக்கு கண்கள் கலங்கி விட்டன..

‘என்ன மாதிரியான ஆள் இவன்.. கேரளாவிலேயே பெரிய கோடிஸ்வரன்.. எனக்காக சாப்பிடாமல் இருந்திருக்கிறான்..’ நந்தினி இமைகளைச் சிமிட்டியபடி தட்டுக்களைக் காலி செய்தாள்..

“இது.. இதுதான் நீ..”

காலியாகியிருந்த தட்டுக்களைப் பார்த்துச் சிரித்தான் ரவிச்சந்திரன்.. புதுவருடக் கொண்டாட்டம் நடந்து

கொண்டிருந்த ஹாலில் அவர்கள் நுழைந்த போது.. “வெல்கம்..” என்று சொல்லி மலர்கொத்தை வழங்கிய அழகிய கேரளத்துப் பெண்ணின் மையிட்ட விழிகளில் ரவிச்சந்திரனைக் குறித்த மையலும், நந்தினியைக் குறித்த பொறாமையும் இருந்தன..

நந்தினியுடன் நடந்த ரவிச்சந்திரனைப் பார்க்க அனைவரும் ஆர்வமாகத் திரும்பினார்கள்.. அங்கிருந்த மேடையில் மெல்லிசைக் குழு ஒன்று மலையாளப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தது.. ஆண்டாள் கொண்டையும், கேரளப் பாரம்பரிய நடன உடையுமாக பெண்கள் மோகினியாட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள்.. கூடவே கதகளி.. தமிழ், மலையாளம், கன்னடம், உருது என பலமொழிக் கலவையில் பேச்சுக்குரல்கள் கேட்டன.. மேடையின் முன்னால் ரவிச்சந்திரனுக்காக போடப் பட்டிருந்த பிரத்யேக பெரிய சோஃபாவில் ரவிச்சந்திரன் உட்கார்ந்தான்.. அருகில் அமரத் தயங்கி நின்ற நந்தினியைப் பார்த்தவன் புருவங்களை உயர்த்தினான்.. ஒன்றுமில்லையென்ற பாவனையில் அவள் தலையை அசைத்தாள்..

“தென்..? சிட்டவுன்..”

அவன் அதட்டியதில் அவசரமாக அவன் பக் கத்தில் உட்கார்ந்தாள்.. சற்று நேரத்தில் அங்கே நடந்து கொண்டிருந்த ஆடல், பாடல் நிகழ்ச்சிகளில் ஆழ்ந்து ரசிக்க ஆரம்பித்து விட்டாள்.. மேடையில் கவனமாக இருந்தவள் பக்கத்தில் அமர்ந்திருந்த ரவிச்சந்திரன் மேடையை நோக்கிப் போவதைக் கவனிக்கவில்லை.. திடிரென்று மைக்கைக் கையில் பிடித்தபடி மேடையில் அவன் தோன்றவும் ஆர்வமானாள்..

**"பேசுகிறேன்.. பேசுகிறேன்..**

**உன் இதயம் பேசுகிறேன்..**

**புயலடித்தால் கலங்காதே - நான்**

**பூக்கள் நீட்டுகிறேன்..**

**எதை நீ தொலைத்தாலும்**

**மனதைத் தொலைக்காதே..**

**அடங்காமலே அலைபாய்வதே..**

**மனமல்லவா..?"**

நந்தினியின் முகத்திலிருந்த குறுகுறுப்பு அகன்று ஆழ்ந்த உணர்வலைகள் தோன்றின.. பிசிரற்ற குரலில் ஸ்வரம்

பிசகாமல் அவன் பாடிய பாடல் வரிகள் அவள் இதயத்தைத் தொட்டன..

**"கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்..**

**இளைப்பாற மரங்கள் இல்லை..**

**கலங்காமலே கண்டம் தாண்டுதே..**

**முற்றுப்புள்ளி அருகில் நீயும்**

**மீண்டும் சின்னப் புள்ளிகள் வைத்தால்**

**முடிவென்பதும் ஆரம்பமே.."**

நந்தினி வலது முழங்கையை சோஃபாவின் கைப்பகுதியில் ஊன்றி உள்ளங்கையில் கன்னம் தாங்கி பாடலில் மூழ்கிப் போனாள்.. அவளுக்காகவே அவன் பாடுகிறான் என்பதில் அவன் தோள் சாய்ந்து ஆறுதல் கொள்ளும் உணர்வு அவளுக்கு ஏற்பட்டது..

"வளைவில்லாத மலை கிடையாது.. வலியில்லாத மனம் கிடையாது.. வருந்தாதே.. வா..."

அவன் இரு கரங்களையும் விரித்து அழைத்தான்.. நந்தினிக்கு ஓடிப்போய் அவனது விரிந்த கைகளுக்குள் புகுந்து

பரந்த அவன் மார்பில் முகம் புதைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. அவளது உள்ளம் நெகிழ்ச்சியில் விம்மியது..

**"காட்டில் உள்ள செடிகளுக்கெல்லாம்..**

**தண்ணீர் ஊற்ற ஆளே இல்லை..**

**தன்னைக் காக்கவே,**

**தானாய் வளருமே..**

**பெண்கள் நெஞ்சின் பாரமெல்லாம்**

**பெண்ணே கொஞ்ச நேரம்தானே..**

**உன்னைத் தோண்டினால்**

**இன்பம் தோன்றுமே.."**

அவளையே பார்த்தபடி பாடிக் கொண்டிருந்த அவனது பார்வையில் உருகிக் கரைந்து காணாமல் போய் விட்டதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. என்ன மாதிரியான உணர்வு இது.. உடலும் மனமும் லேசாக காற்றில் பறக்கும் உணர்வு..

காதல் இல்லாத காதல் கொண்ட பேதைக்கு கண்ணீர் விடத் தோன்றியது..

“விடியாமல்தான் ஓர் இரவேது..? வடியாமல்தான் வெள்ளம் கிடையாது.. வருந்தாதே.. வா..”

ரவிச்சந்திரனின் குரல் நந்தினியை அழைத்துக் கொண்டிருந்த போது வெளியே வெடிச் சப்தம் கேட்டது.. ஹாலுக்குள் வண்ண வண்ண மத்தாப்பூ ஒளிச்சிதறல்கள் தோன்றின..

“விஷ் யு ஹேப்பி நியு இயர்..”

மைக்கில் பாடகர்கள் சப்தம் எழுப்பினார்கள்.. டிரம்ங்களின் சப்தத்தில் ஹாலே அதிர்ந்தது.. ஆங்காங்கே ஆண்களும் பெண்களும் நடனமாட ஆரம்பித்தார்கள்.. குடும்பமாக வந்திருந்தவர்களும் குதூகலமாக ஆடலில் கலந்து கொள்ள ரவிச்சந்திரன் மேடையை விட்டு இறங்கி நந்தினியின் அருகே வந்து வலது கரத்தை நீட்டி நடனமாட அழைத்தான்.. மறுக்கும் திராணியில்லாமல் அவன் கைபற்றி எழுந்த நந்தினியின் இடையைச் சுற்றி வளைத்து மறு கையால் அவளைச் சுற்றி விட்டு ஆட ஆரம்பித்தான்..

அவளது முதுகில் பரவிப் படர்ந்த கைகளின் அழுத்தத்தில் அவன் மார்பில் புதைந்தாள்.. ஆண்மையின் கம்பீரமான அழகுடன் அவளைத் தாகத்துடன் பார்த்தபடி அவன்

இசைக்கேற்ப ஆட அவள் மேகத்தில் மிதப்பதைப் போல உணர்ந்தாள்.. இணைந்தும் பிரிந்தும் அவர்கள் ஆடினார்கள்.. அவளிடமிருந்து தள்ளி நின்று ஆடும் போதும் அவளைத் துளைத்த அவனது பார்வையில் அவளது தேகமெங்கும் பிரவாகமாய் உணர்வலைகள் பொங்கி எழுந்தன.. அவளது விழிகளில் தெரிந்த மயக்கத்தை அவதானித்தபடியே அவன்

புருவங்களை உயர்த்தி இறக்கி அவளை மயக்கத்தில் மூழ்கடித்தான்..

விரல் தொடாமலே அப்படியொர் கிளர்ச்சியை வெறும் புருவ உயர்த்தலின் மூலம் செய்து கொண்டிருந்தவனை இயலாமையுடன் நோக்கினாள் நந்தினி.. அதை உணர்ந்து கொண்டவனாக புன்னகையுடன் அவளை அணுகி அவள் முகத்தருகே குனிந்தான்..

அவளது உதடுகளும் அவனது உதடுகளும் வெகு அண்மையில் இருந்தன.. அவளது உதடுகளை அவனது உதடுகள் நெருங்கத் துடிப்பதை அவனது விழிகளின் வேட்கை அறிவித்தது.. அவளது கன்னத்தில் குறுகுறுத்த அவனது

மீசையின் ரோமங்களின் உராய்வில் அவள் கிளர்ச்சி கொண்டாள்..

சற்று முன்பும் அவள் அவனது இறுக்கமான அணைப்பில் அடங்கியிருந்தாள்தான்... அவள் முதுகில் கரம் பதித்து அவள் கூந்தலில் முகம் புதைத்து அவன் நின்றிருந்தான்தான்.. அப்போது இது போல அவளது உணர்வுகள் கிளர்ந்து எழவில்லையே.. அவனது விழிகளில் இதுபோன்ற வேட்கை தென்படவில்லை..

‘இப்போது என்ன ஆனது..?’

இருவரின் இதழ்களுக்கும் இடையே நூலளவு இடைவெளி இருந்தபோது சட்டென முகம் விலக்கி அவள் விலகினாள்.. அவளது விழிகளில் மன்றாடல் இருந்தது.. மற்றவர்களுக்கு கேட்காத வண்ணம் மெல்லிய குரலில்..

“வேண்டாம்..” என்று பலவீனமாக மறுத்தாள்..

அவளது மறுப்பில் இருந்த பலவீனம் அவனுக்குப் புரிந்தது.. அவன் நினைத்தால் வெகு இலகுவாக அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி அவளது மறுப்பை உடைத்து அவளது உதடுகளில் முத்தமிட்டு விடலாம்..

ரவிச்சந்திரன் அதைச் செய்யவில்லை... மன்றாடலுடன் மிரண்டு விழித்தவளின் கன்னத்தில் செல்லமாகத் தட்டி..

“ஓகே..! கூல்..!” என்று கண் சிமிட்டினான்..

நந்தினியின் விழிகள் பிரகாசித்தன.. எல்லையற்ற நன்றியுடன் அவனை நெருங்கி அவளது கரங்களை மாலையாக்கி அவன் கழுத்தை வளைத்துத் தோளில் சாய்ந்தாள்..

தானாக சிக்கினால்தான் மனம் சிக்கும்.. அதை யாராலும் சிக்க வைத்து விட முடியாது.. அதன் சூட்சு மத்தை அறிந்தவன் அவன்.. அந்தக் குழந்தை மனசுக்காரியை பிரியமுடன் சீராட்டித் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்..

புதுவருடக் கேக்கை வெட்டினார்கள்.. ரவிச்சந்திரன் நந்தினியின் வாயில் கேக் துண்டை ஊட்டுவதை கேமராக்கள் சிறை பிடித்தன..

“நோ..” விரல் உயர்த்தி எச்சரித்தான் அவன்..

அவனது கடுமையில் கேமராக்கள் இறங்குவதை வியப்புடன் பார்த்தாள் நந்தினி.. ஒட்டு மொத்த மீடியாவும் அவனது ஒற்றை விரலுக்குக் கட்டுப் படுமா..?

கொண்டாட்டங்கள் முடிந்து அவர்கள் அறைகளுக்குத் திரும்பும்போது நேரம் விடியலைத் தொட்டுக் கொண்டிருந்தது.. கை கோர்த்தபடி லிஃப்ட்டில் நுழைந்தார்கள்.. லிஃப்ட் நின்றது.. அவளுடன் கூட நடந்து வந்தான்.. ஏன் என்று தவித்துப் போனாள் நந்தினி.. அவளுடைய அறைக்கு அவன் வர நினைக்கிறானா..?

அவளது விழிகளில் தெரிந்த அச்சத்தில் அவன் நிதானித்தான்..

“குட் நைட்..” என்றான்..

வெளிறியிருந்த நந்தினியின் முகம் தெளிந்தது.. முகம் மலர தலையை அசைத்தாள்.. அவளது கன்னத்தைப் புன்சிரிப்புடன் தட்டியவன்..

“என்னை விட்டுப் போக நினைத்தாயே.. ஏன்..?” என்றான்.. நந்தினி அவன் விரல்களுடன் விரல் கோர்த்தாள்.. ஏதும் சொல்லாமல் அவனையே பார்த்தபடி நின்றாள்..

“சொல்.. என்னை விட்டுப் போய் விடுவியா..?”

‘எப்படி முடியும்..?’

மனம் கேட்ட கேள்வியை நந்தினி கேட்கவில்லை.. அவள் போக வேண்டியவள்தானே என்று அவளது மனம் கேட்டது.. பெல்ட் மன்னனுடனான அவளது திருமணத்தைப் பற்றிய பேச்சு நின்று விட்டால் அவள் தஞ்சாவூருக்குத் திரும்பி விடுவாளே..

# அத்தியாயம் 53

**ம**லைப் பாதைக்கே உரித்தான சில்லென்ற பூங்காற்று அவர்களின் முகங்களின் மீது முட்டி மோதித் தழுவியது.. எதிர் காற்றில் அவன்முடி அலை பாய்ந்தது..

பேச முடியாத பேச்சுக்கள் தேவையில்லாத மௌனம் காருக்குள் நிலவியது.. நந்தினியின் மனம் நிரம்பியிருந்தது.. அது எதனால் என்று அவளுக்குத் தெரியவில்லை.. என்னை விட்டுப் போய் விடுவாயா என்று எதற்காக அவன் கேட்டான் என்று தெரியாவிட்டாலும் அந்தக் கேள்வியில் ஏதோ ஒரு வகையில் அவளது மனம் குளிர்வதை வியப்புடன் உணர்ந்தாள் நந்தினி..

அவன் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை.. அதை அவன் பொருட்படுத்தவும் இல்லை.. புரியாத புதிர் போன்ற பார்வையோடு அவளிடமிருந்து விடை பெற்றுத் தூங்கப் போய் விட்டான்..

அவளது அறைக்குள் சென்று கதவைப் பூட்டிப் படுக்கையில் விழுந்த நந்தினிக்கு ஆழ்ந்த தூக்கம் வந்தது..

மனம் முழுவதும் திருப்தியுடன் எந்தவிதக் கவலையுமில்லாமல் நிச்சிந்தையாக உறங்கி விட்டாள்.. பதினொரு மணியளவில்..

“ஹேய்.. தூங்கு மூஞ்சி.. இப்பவாவது எழுந்துக்கப் போறியா.. இல்லை.. இன்னைக்கு முழுவதும் தூங்கப் போறியா..? வருஷம் பிறந்திருக்கிற இந்த முதல்நாளில நாள் முழுக்கத் தூங்கினா நல்லாத்தான் இருக்கும்..” என்ற ரவிச்சந்திரனின் குரல் செல்ஃபோனில் ஒலித்து அவளது தூக்கத்தை விரட்டி விட்டது..

“குட் மார்னிங்..” விழுந்தடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்..

“குட் ஆப்டர் நூன்னு சொல்கிற நேரம் நெருங்கிக்கிட்டு இருக்கு.. கமான்.. க்விக்.. பேக் அப்..”

“நானென்ன குதிரையா..?”

“ஹா.. ஹா.. ரேஸ் குதிரை மாதிரித்தான் நாம் ஓடியாகனும்..”

“எங்கே..?”

“வயநாட்டுக்கு..”

அங்குதான் அவனது எஸ்டேட் இருக்கிறது என்ற நினைவில் அவள் கையை உதறினாள்.. வயநாட்டு சேரளம் எஸ்டேட்டில் வேலை பார்க்கத்தான் அவள் வந்திருக்கிறாள் என்பதை எப்படி அவள் மறந்தாள்..?

“இப்பவே போயாகனுமா..?”

“குளித்து ரெடியாகி பிரேக்ஃபாஸ்ட் சாப்பிட்ட பின்னாலே போகலாம்.. நீ ரூமை வெகேட் பண்ணத் தோதா உன் திங்ஸை பேக் பண்ணிரு..”

‘இப்படின்னு தெரிந்திருந்தா டிரஸ்ஸையும் திங்ஸையும் பேக் பண்ணினதைப் போல அப்படியே இருக்கட்டும்ன்னு விட்டிருப்பேன்.. இப்ப ரெட்டை வேலை..’

மனதுக்குள் அலுத்துக் கொண்டபடி வெளியே.. “யெஸ் பாஸ்..” என்றாள் நந்தினி..

“பாஸ்..?”

கேள்வியுடன் ஃபோனை வைத்து விட்டான்.. அவள் திணறிப் போனாள்..

‘நீ எனக்குப் பாஸ்தானே..?’

அப்படியே கண்மூடி அமர்ந்து விட்டாள்.. இரவில் ஆடிய நடனம் அவள் மனதில் ஆடியது.. அவனது பேச்சு, பார்வை, தொடுகை என்று அத்தனையும் மனதில் சுழன்று அவளை அலைக்கழித்தது.. புரியாத புதிரான அவனது பார்வையை

நினைத்தபடியே உட்கார்ந்திருந்தவள் ஒரு பெருமூச்சுடன் எழுந்து சுவர் அலமாரியைத் திறந்தாள்.. காலிங் பெல் ஒலித்தது.. திறந்த அலமாரிக் கதவை மூடிவிட்டு அறையின் கதவைத் திறந்தாள்.. ஒரு கையில் காபிக் கோப்பையும் மறு கையில் சக்கரம் வைத்து நீண்ட இரும்புக் கைப்பிடியுடன் இருந்த பெட்டியுமாக ரூம் பாய் நின்றிருந்தான்..

“என்ன இது..?”

“பெட்டியானு..”

“யார் கொடுத்து விட்டது..?”

“சாரானு..”

அதற்கு மேலும் அவனை ‘னு’ போட விடாமல் பெட்டியை வாங்கிக் கொண்டாள்.. முதல்நாள் இரவில் லிஃப்டில் சேதாரமான அவளது லெதர் பேக்கிற்குப் பதிலாக புதிய

பெட்டியை வாங்கி அனுப்பி வைத்திருக்கும் அவனது அக்கறையில் அவள் மனதில் தென்றலடித்தது..

‘பார்த்துப் பார்த்துச் செய்யறான்..’

பெட்டியை வருடினாள்.. அவனையே வருடுவதைப் போல அவள் மனம் இதமானது.. அலமாரியைத் திறந்து துணிகளை பெட்டியில் அடுக்கினாள்.. பெரிய பெட்டியென்பதால் அவள் கொண்டு வந்திருந்த துணிகள் அதில் கால்வாசிதான் நிரம்பியது..

‘போகுது போ..’ உதட்டைச் சுழித்துத் தனக்குத் தானே அழகு காட்டி விட்டு குளிக்கப் போனாள்.. பச்சை வண்ணச் சுரிதாருக்கு மாறியவள் ஒப்பனைகளை முடித்தவுடன் டிரஸ்ஸிங் டேபிள் முதல்.. பாத்ரூம் வரை.. அவள் பரத்திப் போட்டிருந்த அனைத்துப் பொருள்களையும் சேகரித் து ஒரு பையில் போட்டு பெட்டிக்குள் போட்டு மூடினாள்..

‘இது ரொம்பவும் கம்ஃபர்டபிள்.. அத்தனையையும் ஒரே பெட்டியில் போட்டு மூடிரலாம்..’

ஹேண்ட்பேகுடன் ரோலர் சக்கரம் பதித்த பெட்டியின் கைபிடியை பிடித்து உருட்டியபடி அவள் கிளம்பிய போது ரூம் பாய் வந்து பெட்டியைக் கைப்பற்றி உருட்டிக் கொண்டு

போனான்.. நந்தினி ஹாயாக ஹேண்ட் பேகை மட்டும் தோளில் மாட்டிக் கொண்டு கை வீசியபடி டைனிங் ஹாலுக்குப் போனாள்.. அங்கே காத்திருந்த ரவிச்சந்திரனின் ஆழ்ந்த பார்வையில் அவளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.. முகம் சிவக்கத் தலை குனிந்தபடி அவனுக்கு எதிரில் உட்கார்ந்தாள்.. துளைக்கும் பார்வையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

‘இப்படிப் பார்க்காதே..’ தவித்துப் போனாள் நந்தினி..

அவளது விரல்களின் நடுக்கத்தில் லேசான புன்சி ரிப்புடன் பார்வையை விலக்கிக் கொண்டு அவள் பக்கமாக உணவு வகைகளை நகர்த்தி விட்டு சாப்பிட ஆரம்பித்தான்..

‘அப்பாடி..’ என்று தோன்றிய போதும் அவளால் நிம்மதியாக சாப்பிட முடியவில்லை..

நொடிக்கொரு முறை புதிர் போடும் பார்வையுடன் அவளைத் துளைப்பதைப் போலப் பார்த்துக் கொண்டிருப்பவனை முன்னால் வைத்துக் கொண்டு எப்படி இயல்பாக அவள் சாப்பிடுவாள்..?

சங்கடத்துடன் உணவைக் கொறித்தவளிடம் வெகு அக்கறையாக..

“பசிக்கலையா..? ஃபுட் அப்படியே இருக்கே..?” என்று விசாரித்தான்..

‘நீ சாப்பிட விட்டால்தானே..’ நந்தினி பெருமூச்சு விட்டாள்..

“வாட் ஹேப்பன்ட்..? எனி திங் ராங்..?” அதற்கும் கேள்வி வந்தது..

‘என்ன ஆச்சா..? நீ பார்க்கிற பார்வையிலே எனக்கு என்னென்னவோ ஆகித் தொலைக்குதுடா.. நீ ரைட் பெர்சனா இல்லை ராங் பெர்சனான்னு முடிவெடுக்க முடியாம தலை முடியைப் பிய்த்துக்கலாம் போல இருக்கு..’

அதை அவனிடம் சொல்லியிருந்தால்..

‘ஆல்ரெடி உன்முடி பிய்ந்துதான் தொங்குது..’ என்று சொல்லியிருப்பான்..

அந்த லட்சணத்தில் அவள் தலையை வாரிப் பின்னல் போட்டிருந்தாள்.. முகத்தில் விழுந்த முடிக்கற்றையை ஒதுக்கி விட்டபடி திருட்டுப் பூனை போல அவனை கள்ளப் பார்வை பார்த்தாள்..

அவனைப் பார்ப்பதும்.. அவன் பார்த்து விட்டால் பதறிப் போய் உணவைப் பார்ப்பதுமாக இருந்தவளின் சேட்டையைத் தாங்க முடியாமல் அவன் அவள் தலையில் ஒரு கொட்டை வைத்து.. “சைட்டைக் கூட ஒழுங்காய் அடிக்கத் தெரியலை.. வாய் மட்டும் இந்தியாவைத் தாண்டி எல்லா நாட்டுக்கும் கேட்கிறதைப் போல கிழியுது..” என்றான்..

“யார் யாரை சைட் அடித்தது..?”

“நீ என்னை சைட் அடித்த..”

“இல்லை..”

“இல்லையா..? எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லு..” அவன் சவால்விட்டான்.. அவனது அறை கூவலை ஏற்று அவன் முகத்தைப் பார்த்து விட வேண்டும் என்ற ரோஷத்துடன் நந்தினி விழிகளை உயர்த்தத்தான் செய்தாள்.. அவன் விழிகளைச் சந்தித்ததும் ஜிவ்வென்ற மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானவள் வெற்றிகரமாகத் தோல்வியைத் தழுவி பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்..

“என்ன்ன்…ன..? முடியலையா..?” அவன் குரலில் வெற்றிக் களிப்பிருந்தது..

“இப்படி மிரட்டினீங்கன்னா நான் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸைப் பிடித்து சென்னைக்கு ஓடிருவேன்..” தாள முடியாமல் அவள் எகிறினாள்..

“ஓடறதிலேயே குறியாய் இரு..”

அவன் முகம் கடினமானது.. நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்... முதல்நாள் இரவில் அவள் சென்னைக்கு கிளம்ப முயன்றதை அவன் விரும்பவில்லையென்பதில் ஒரு பக்கம் சந்தோஷமாகவும் மறுபக்கம் குற்றவுணர்வாகவும் இருந்தது..

‘இவன்தானே நான் கிளம்பிப் போயிடலாம்ன்னு நினைக்கிற அளவுக்குத் திட்டினான்.. கிளம்பினா மட்டும் கோவிச்சுக்கிறான்..’ அவளுக்குத் துயரமாக இருந்தது..

சிறு குழந்தை போல அழுதவளை அணைத்து அவன் சமாதானப் படுத்தியதை நினைத்துக் கொண்டவளுக்கு.. ‘அடிக்கிற கைதான் அணைக்கும்..’ என்ற பாட்டி சொன்ன பழமொழி நினைவுக்கு வந்து அரட்டியது..

‘எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடறேன்.. இவன் என் பாஸ்.. நான் இவனிடம் வேலை பார்க்க வந்தவள்..’ நெட்டுரு போல மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.. ஹோட்டலை

விட்டுக் கிளம்பும் போது அண்ணாந்து அந்த பலமாடிக் கட்டிடத்தைப் பார்த்தாள்..

அதனுள் நிரம்பியிருந்த நினைவலைகளில் இருந்து மீளவே முடியாது போலத் தோன்றியது.. இருந்திருந்து ஒரு ஹோட்டல்.. ஒரு வாரம் அங்கே தங்கியிருக்கிறாள்.. அதைத் தவிர்த்து அதற்கும் நந்தினிக்கும் இடையே யாதொரு பந்தமுமில்லை.. இருந்தும் ஏன் புதிரான ஒரு சோகம் அவள் மனதைப் பிழிந்து கசக்குகிறது..?

கனத்த மனதுடன் காரில் ஏறியவளைப் பார்த்த ரவிச்சந்திரனின் பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் நந்தினியின் மனம் அசைந்தது.. இதுபோன்ற ஏதோ ஒன்றினால் ஏற்படும் 'ஓர் இது' புதிதான புதிராக இப்போதுதான் அச்சுறுத்துகிறது.. இதற்கு முன்னர் இது போன்ற புதிர் உணர்வுகள் நந்தினியின் மனதை ஆக்ரமித்ததே இல்லை..

சென்னையில் படித்துக் கொண்டிருந்தவரை நிம்மதியாக இருந்தாள்.. நந்தினியின் அழகிலும், மேகநாதனின் வசதியிலும் ஈர்க்கப்பட்ட முறை மாப்பிள்ளைகளை வைத்திருக்கும் உறவினர்கள் நந்தினியைப் பெண் கேட்டு மேகநாதனின் வீட்டை முற்றுகையிட்டபோது.. சென்னையில்

அவள் படித்துக் கொண்டிருந்த படிப்புத்தான் அவளைக் காப்பாற்றியது..

“பொண்ணு படிச்சுக்கிட்டு இருக்கு.. படிப்பு முடியட்டும்..”

மந்திர உச்சாடனம் போல இந்த வார்த்தைகளை ஒப்பித்து முறை மாப்பிள்ளைகளை வைத்திருக்கும் உறவினர்களை காத்திருப்புக் கணக்கில் வைத்தார் மேகநாதன்..

“வெயிட்டிங் லிஸ்டோட எண்ணிக்கை கூடிக்கிட்டே போகுது.. போகிற போக்கைப் பார்த்தா உனக்கு சுயம்வரத்தை அனௌன்ஸ் பண்ணி நடத்த வேணும் போல இருக்கு.. உன் கூடத்தான் நானும் பிறந்திருக்கேன்.. எனக்குப் பெண் கொடுக்கறேன்னு எவனாவது வர்றானான்னு பாரு..”

நந்தகுமார் ஏகத்துக்கும் பொறாமைப் படுவான்.. அப்படியொரு சுயம்வரம் நடக்கவேயில்லையே.. அவளுக்குப் பிடித்த மாப்பிள்ளையைத் தேர்வு செய்யும் உரிமை அவளுக்கு மறுக்கப்பட்டு விட்டதே.. எவனோ ஒரு பெல்ட் மன்னனை, அவள் கண்ணில் கூடக் காட்டாமல் மாப்பிள்ளையாக தேர்ந்தெடுத்து விட்டார்களே..

“நீயெல்லாம் சீரியஸா திங் பண்ண ஆரம்பிச்சுட்டா இந்த உலகம் என்னத்துக்கு ஆகிறது..?”

ரவிச்சந்திரனின் கிண்டலில் சிந்தனை கலைந்தவளாக அவனைப் பார்த்தாள் நந்தினி.. அவள் பார்வையை கவ்வியது அவன் பார்வை.. புரிபடாத உணர்வுகளுக்குள் மூழ்கடிக்கும் அப்பார்வையிலே இருந்த தூண்டிலில் மாட்டிக் கொ ள்ளாமல் பார்வையை விலக்கிக் கொண்டாள் நந்தினி.. அவள் மனம் படபடத்தது..

வளைந்து நெளிந்து சென்ற மலைப்பாதை பச்சைப் பசேலென்ற செடி கொடிகளின் நடுவே அவர்களை அழைத்துச் சென்றது.. நந்தினியின் மனதில் ரம்யம் நிம்பியது.. பசுமையின் சூழலில் லயித்த அவள் மனதில் பாரம் கொஞ்சம் இறங்கியதைப் போல இருந்தது..

விழிகளில் சன்னமான சோகத்தோடு கதவோரமாக தலையைச் சரித்து சாய்ந்து கேரளத்தின் இயற்கையழகில் லயித்திருப்பவளைப் பார்த்தபடி மலைப்பாதையில் அவன் காரை ஓட்டியதில் அவள் கிளர்ச்சியடைந்தாள்.. அவனிடம் இயல்பாக பேசிவிட்டால் மனதில் உள்ள குறுகுறுப்பு மறைந்து விடுமோ என்ற எண்ணத்தில்..

“இது மலைப்பாதை சாரே.. ஒருகையில் காரை ஓட்டி வித்தை காண்பிக்க இது ஒண்ணும் சர்க்கஸ் இல்லா.. மனசிலாயி..?” என்றாள்..

அவன் அப்போது காரில் ஏதாவது பாடலை ஒலிக்க விடும் எண்ணத்தில் ஒரு கையால் காரை ஓட்டியபடி மறுகையால் டேஷ் போர்டை திறந்து சி.டிக்களை புரட்டிக் கொண்டிருந்தான்.. அவளது சீண்டலில் விழிகளை உயர்த்தி அவளை குறுகுறுவெனப் பார்த்து வைத்தான்.. வெட்கத்தில் சிவந்த முகத்துடன் லஜ்ஜை மிகுந்தவளாக உதட்டை மடித்துக் கடித்தாள்..

அவன் வேண்டுமென்றே காரை ஒடித்து வளைத்து குலுங்க வைக்க.. அலறியடித்துக் கொண்டு அவன் மேல் பசை போடாமல் ஒட்டிக் கொண்டாள்..

உராய்ந்த உடல்களில் உணர்வுகளின் தீ பற்றிக் கொண்டது.. நந்தினியின் மனதில் முதல் நாள் இரவின் நினைவுகள் மையம் கொண்டன.. தவிப்புடன் விலகிக் கொண்டவள்..

“எந்தா சாரே.. கார் ஓட்டத் தெரியுமில்லா..?” என்று கேட்டு வைத்தாள்..

“ஏய் அரட்டை.. வாயை மூடிக்கிட்டு வா.. இல்லேன்னா மலைப்பாதையில் உருட்டி விட்டிருவேன்..”

அவன் மறுபடியும் காரை ஒடித்து வளைத்துக் குலுங்க வைக்க அவள் கண்களை இறுக மூடி சீட்டில் குப்புற விழுந்து விட்டாள்..

“வெறும் வாய்தான்..”

கேலி போல அவன் பார்த்த பார்வையில் அவள் நெஞ்சம் தட்டுத் தடுமாறியது.. புரிபடாத உணர்வுகளை அவளுக்குள் விதைத்த அவன் பார்வையுடன் அவள் பார்வை பிணைந்து இறுகி மருகியது.. இது என்ன புது பந்தம் என்று அவள் மனம் திகைத்து மருண்டது..

# அத்தியாயம் 54

**ஆ**ங்கில எழுத்தான 'று' போல வளைந்து நெளிந்து சென்றது வயநாட்டுக்குச் செல்லும் மலைப்பாதை.. வறண்ட பூமியாக இல்லாமல் பச்சைப் பசேலென்ற புல்வெளிகளும் செடிகொடிகளுமாக கேரளத்தின் இயற்கை பாதையின் இருப்பக்கமும் கண்ணுக்குக் குளிர்ச்சியான பசுமையுடன் இருக்க நடுவே ஓடிய சாலையில் கார் ஓடிக் கொண்டிருந்தது.. பாதையின் ஒருபக்கம் அடர்ந்திருக்கும் மூங்கில் செடிகள்.. மறுபக்க சரிவில் தேயிலை பாத்திகள் எனக் காணக் காணத் தெவிட்டாத இயற்கையழகுடன் பாதை இணைந்திருந்தது.. சில இடங்களில் பாதையின் இருபுறமும் பச்சைப் பசேலென ஓங்கி வளர்ந்திருந்த மூங்கில் செடிகள் அடர்ந்து மேற்புறமாக வளைந்து ஒன்றொடொன்று ஒட்டிப் பிணைந்திருக்க அதன் நடுவே போகும் பாதையில் காரில் பயணித்த நந்தினிக்கு பசுமைக் குகைக்குள் கார் செல்வதைப் போல பிரமிப்பாக இருந்தது..

'கோபுர வாசல் போலவே இருக்கு..'

பசுமைக் குகை போல காட்சியளித்த மூங்கில் செடிகளின் ஊடே சென்ற சாலை கோபுரவாசலில் முடிவடைந்ததைப் போல இருந்ததை ரசித்துப் பார்த்த நந்தினிக்கு சிலிர்ப்பாக இருந்தது..

தஞ்சையில் பிறந்தவள் பசுமைக் குகை நடுவில் செல்லும் பாதையில் வயநாட்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறாள்.. அவளுக்கும் வயநாட்டுக்கும் என்ன சம்பந்தம்..? இப்படியொரு பயணத்தை மேற்கொள்ள நேரிடும் என்று அவள் நினைத்துப் பார்த்திருப்பாளா..?

காருக்கு முன்னே ஆளை மறைக்கும் சாம்பல் வண்ணப் பனிப் புகை சூழ்ந்து கண்ணுக்குத் தெரியாமல் காட்சிகளை மறைத்தது.. அடர்ந்திருந்த பனிப்புகை சுழல் போல எழுந்து சுற்றுப் புறத்தை மறைத்துக் கவிந்ததில் நந்தினியின் மனம் இனம் புரியாத ஓர் சோகத்தை அனுபவித்தது.. பாதை மாறி புது வாழ்விற்குப் போய் கொண்டிருப்பதைப் போல மனம் கலங்கியது.. தேம்பி அழ வேண்டும் போல இருந்ததில் அவள் சோர்வாக சீட்டில் சரிந்து இமைகளை மூடினாள்.. மூடிய இமைக்குள் இருந்து இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தன.. ஏன் இந்த சோகம் என்று தெரியாமல் சிறு குழந்தையாக மனம்

திகைத்தாள்.. அவளது மன திடம் குறைவதைப் போலவே இருந்ததில் மருண்டாள்..

**“பூங்காற்று.. புதிரானது..**

**புது வாழ்வு.. சதிராடுது..**

**இரண்டு உயிரை**

**இணைத்து விளையாடும்**

**உயிரை இணைத்து விளையாடும்**

**பூங்காற்று.. புதிரானது..”**

சிடியில் ஒலித்த பாடலில் இருவர் மனங்களும் சிறைபட்டன.. ரவிச்சந்திரனின் புருவங்கள் சுருங்கி முகத்தில் ஓர் தீவிரம் படர்ந்தது.. பாடலுடன் அவனும் சேர்ந்து பாடியபடி அவளைப் பார்த்தான்.. அவனே பாடுவதைப் போல இருந்து வைத்ததில் நந்தினியின் மனது அலைபாய்ந்தது..

**“வருகின்ற காற்றும்**

**சிறு பிள்ளையாகும்..**

**மரகதக் கிள்ளை**

**மொழி பேசும்..**

**பூவானில் பொன்மேகமும்**

**உன் போலே..**

**நாளெல்லாம் விளையாடும்..**

**பூங்காற்று புதிரானது..”**

மனதை உருக்கிய கானத்தை மனமுருக அவன் பாடியதில் நந்தினியும் உருகிப் போனாள்.. இதழ்கள் பேசாமல் இதயங்கள் பேசும் உணர்வை அவர்கள் அனுபவித்தார்கள்.. ரவிச்சந்திரனின் விழிகளில் வழிந்த பிரியத்தில் நந்தினியின் மனம் ஊசலாடியது.. அந்தப் பிரியத்துக்கு எந்த விதமான எதிர்காலமும் இல்லையே என்று தவித்தது.. அவள் மனதின் தவிப்பை அவள் விழிகளில் கண்டவனின் புருவங்கள் உயர்ந்ததில் நந்தினியின் அலைபாய்தல் அதிகமானது..

‘என்னை வசீகரிக்காதே வசீகரா..’ என்று அவள் மனம் அரற்றியது..

‘நான் வீடு திரும்பும்போது நானாக நானிருக்க வேண்டும்..’ மருகினாள் நந்தினி..

என்னை விட்டுப் போய் விடுவாயா என்று முதல் நாள் இரவில் அவன் கேட்ட கேள்வி நினைவுக்கு வந்து இம்சித்தது..

ஏன் அப்படிக் கேட்டான்..? அவனைத்தேடி அவள் வரவில்லையே.. ஓர் அடைக்கலத்தைத் தேடித்தானே வந்திருக்கிறாள்..? அவனிடம் ஓர் வேலையைத் தேடித்தானே வந்திருக்கிறாள்..? தேடுதல் என்றால் என்னவென்று தெரியாத பேதை அவள்.. அவளிடம் தேடுதலைப் பற்றிய இனம் புரியாத உணர்வுகளை விதைத்து அவளது அந்த உணர்வுகளுடன் அவன் விளையாடி தேடுதலை உணர்த்துகிறானே.. இது நியாயமா..?

**"நதியெங்கு செல்லும்..?**

**கடல்தன்னைத் தேடி..**

**பொன் வண்டோடும்.. மலர் தேடி..**

**என் வாழ்வில் நீ வந்தது**

**விதியென்றால்..**

**நீ எந்தன் உயிரன்றோ..**

**பூங்காற்று.. புதிரானது.."**

கன்னத்தில் வழிந்து கொண்டிருக்கும் கண்ணீர் கோடுகளைப் பற்றிய சிந்தையில்லாமல் அவன் தோள்மீது தலை சாய்த்தாள் நந்தினி.. சிடியின் பாடல் வரிகளோடு கலந்து

ஒலித்த அவன் குரலில் வெளிப்பட்ட உணர்ச்சிப் பிரவாகம் அவளை மூழ்கடித்து மூச்சுத் திணறச் செய்து கொண்டிருந்தது.. அவனைப் பார்த்த பின்புதான் இது போன்ற மூச்சுத் திணறல்கள் அதிகமாக வருகின்றன என்பதை அவளது அறிவு அறிவுறுத்தியது.. சொந்தமில்லாத சொந்தமொன்று அவன்மீது உண்டாகி யிருப்பதை அவள் மனதால் மறுக்க முடியவில்லை..

சாலையின் இருபக்கமும் அடர்ந்திருந்த மரங்கள் கூட பனிப் புகையில் மூழ்கி கோட்டோவியங்கள் போலக் காணப்பட்டன.. ஓங்கி உயர்ந்திருந்த மலைத் தொடர்களை அவள் பார்ப்பதைக் கண்ட ரவிச்சந்திரன்..

“அதுதான் மேற்கு தொடர்ச்சி மலைகள்..” என்றான்..

ஓங்கி உயர்ந்திருந்த மேற்கு தொடர்ச்சி மலைகளை நீல வண்ணப் பனிப்புகை போர்வை போலப் போர்த்தியிருந்தது.. வானம் வேறு மலைத்தொடர்கள் வேறு என்று பிரித்து காட்சியளிக்காமல் வானோடு வானாக கலந்து விட்டதைப் போல அவை காட்சியளித்தன..

காரின் ஜன்னல் கண்ணாடி கதவின் வழியாக பார்த்த போது நிலப்பரப்பு வெகு அடியில் பள்ளத்தாக்கு போல

தெரிந்ததில் பயந்து போன நந்தினி ரவிச்சந்திரனுடன் ஒன்றிக் கொண்டாள்..

பயந்து போன முயல்குட்டியைப் போல அவள் ஒடுங்கி அவனோடு ஒன்றி ஒட்டிக் கொண்டதில்..

“நானிருக்கேனில்ல.. பயப்படக்கூடாது..” என்று அவன் தைரியம் சொன்னான்..

“கேரளான்னா அழகா இருக்கும்ன்னுதான் கேள்விப் பட்டிருக்கேன்.. இப்படி பயமாயிருக்கும்ன்னு நினைத்துக் கூடப் பார்க்கலை..”

அவளது பற்கள் கிடுகிடுத்தன.. இவ்வளவுதானா இவளது தைரியம் என்று அவனுக்கு சிரிப்பு வந்தது.. பயந்து நடுங்கும் சுபாவம் கொண்டவளிடம் இருக்கும் வீம்பும் வீறாப்பும் அவனது புன்னகையை அதிகரித்தன..

“என்னவோ ஜான்சி ராணி போல பில்ட்-அப் கொடுப்ப.. மலை நாட்டைப் பார்த்து பயந்து ஒளியற..?” கேலி செய்தான்..

“மலைநாடா..? இது கேரளாதானே..?”

“கேரளான்னாலே மலை நாடுதான்.. கேள்விப் பட்டதில்லையா..?”

கேள்விப்பட்டதைப் போலதான் இருந்தது.. யாரோ, எப்போதோ சொன்ன ஞாபகம்.. யார் சொன்னார்கள், எப்போது சொன்னார்கள் என்பதுதான் மறந்து விட்டது.. மற்ற சம்பவங்களின் தாக்கத்தில் மலையாள தேசம் என்பது மலைகள் சூழ்ந்த தேசம் என்பதை அவள் மறந்தே போனாள்.. அடுக்கடுக்கான படிவங்களைக் கொண்ட மலைத் தொடரில் அவள் அதிசயப் பட்ட போது அதைச் சுட்டிக் காட்டிய ரவிச்சந்திரன்..

“சுல்தான் பத்தேரிக்கு வந்திருக்கோம்.. இதையடுத்துத்தான் வயநாட்டுக்குப் போயாகனும்..” என்றான்..

“சுல்தான் பத்தேரியா..? பெயரே வித்தியாசமா இருக்கே..” கதை கேட்டு சுற்றுச் சூழலின் இயற்கையழகை வேடிக்கை பார்க்கும் ஆர்வத்தோடு நகர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள் நந்தினி..

“ஏன்..? அப்படியே இருக்க வேண்டியதுதானே..?”

அவள் நகர்ந்து விட்ட ஏமாற்றத்தை அப்பட்டமாக பிரதிபலித்தன அவனது விழிகள்.. முலம் சிவந்தாள் நந்தினி..

“எனக்கு வசதியா இல்லை..” என்றாள்..

“எனக்கு வசதியா இருந்ததே..” அவன் ஜொள்ளினான்..

“போதும் சாரே.. வயநாடு எஸ்டேட்டில் வேலை பார்க்கன்னு வரவழைத்துட்டு மலைமேல கடத்திக்கிட்டுப் போகிறதும் இல்லாம ரோட்டைப் பார்த்துக் காரை ஓட்டவும் மாட்டேங்கறீங்க.. உங்க வசதியைப் பத்தி மட்டும் யோசிச்சாப் போதாது சாரே.. உங்களை நம்பி உங்க காருக்குள்ளே ஏறி வந்திருக்கிறவங்க பாதுகாப்பைப் பத்தியும் கொஞ்சம் யோசிக்கனும்..”

“ஊஹும்..?”

அவன் வசீகரமாய் புருவங்களை உயர்த்த அவள் க்ளீன் போல்டாகி..

“சுல்தான் பத்தேரியைப் பத்தின விளக்கத்தை மட்டும் சொல்கிறீங்களா ப்ளீஸ்.. மத்ததை ஜொள்ள வேண்டாமே..” என்று பவ்யத்துடன் வேண்டிக் கொண்டாள்.

“ஜொள்..?” அவன் கடகடவென சிரித்து அவளை பயமுறுத்தி விட்டு சுல்தான் பத்தேரியைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்..

“இந்த ஊரோட ஆரம்பப் பெயர் சுல்தான் பத்தேரியில்ல..”

“பின்னே..?”

“கணபதி வட்டம்ங்கிறதுதான் இந்த ஊரோட முதல் பெயர்..”

“கணபதி வட்டமா..?”

அவளுக்கு ஆச்சரியமாகி விட்டது.. சுல்தான் பத்தேரி என்ற இஸ்லாமியப் பெயருக்கும் கணபதி வட்டம் என்ற இந்துப் பெயருக்கும் எப்படிப் பொருந்தி வந்தது..?

“கணபதி வட்டம்ங்கிற இந்த ஊரில் திப்பு சுல்தான் ஆயுதக் கிடங்கை வைத்தான்.. அதனால் இந்த ஊரை ‘சுல்தான் பாட்டரி..’ன்னு சொல்வாங்க.. நாளடைவில் இந்தப் பெயர் ‘சுல்தான் பத்தேரி’ன்னு ஆகிருச்சு.. இதுதான் ‘கணபதி வட்டம்’ ‘சுல்தான் பத்தேரி..’யா பெயர் மாறின கதை..”

“ஓ...”

அவள் உதட்டைச் சுழித்து ‘ஓ’ போட்டாள்.. சுழித்த உதடுகளை அவன் ஒரு மார்க்கமாகப் பார்த்து வைத்ததில் அரண்டு போய் சாலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.. வழியில் தென்பட்ட மக்களில் பெரும்பாலான மக்களின் உடைகள் வித்தியாசமாக இருந்ததில் அதைப் பற்றிக் கேட்டாள்..

“வயநாட்டில் பழங்குடி மக்கள்தான் அதிகமாக வாழ்கிறார்கள்..”

அவன் சொன்ன விவரத்தில் அவள் மறுபடியும் உதட்டைச் சுழித்து ‘ஓ’ போடப் போனாள்.. அவனது மார்க்கப் பார்வை ஞாபகத்தில் வந்ததில் அவசரமாக ‘ஓ’ வைத் தடுத்து நிறுத்தி.. “ம்ம்ம்..” என்று முணுமுணுத்து வைத்தாள்..

“சுல்தான் பத்தேரிதான் சட்டசபைத் தொகுதி.. இங்கே பழங்குடி மக்களைத்தான் எலக்சனில நிறுத்துவாங்க..”

“ஏன்..?”

“ஏன்னா.. இது பழங்குடி மக்களுக்கான ரிசர்வேஷன் தொகுதி..”

“இந்தியாவில அதிக படிப்பறிவு உள்ள மக்கள் வாழும் ஸ்டேட் கேரளா மட்டும்தான்..”

“பழங்குடி மக்களா இருந்தா படிப்பறிவு இல்லாதவங்களாத்தான் இருக்கனுமா..? இவங்களிடம் சொந்த நிலமும் படிப்பறிவும் இருக்கு..”

“அழகான ஊர்..”

“இப்போ வீட்டுக்குப் போயாகனும்.. இல்லேன்னா சுற்றிக் காட்டறேன் வான்னு காரைத் திருப்பிருவேன்..”

“இங்கே சுற்றிப் பார்க்கிற மாதிரி சீனரிஸ் நிறைய இருக்கா..?”

“என்ன இப்படிக் கேட்டுட்ட..?”

அவன் கேட்ட விதத்தில் அப்படிக் கேட்கக் கூடாத கேள்வியைத் தான் கேட்டு விட்டோமோ என்று யோசிக்க ஆரம்பித்தாள் நந்தினி..

“ரொம்பவும் யோசிக்காதே..” என்றான் ரவிச்சந்திரன்.

“அது எனக்கு ஸூட் ஆகலைன்னு சொல்லுவீங்க..”

“எப்படிக் கண்டு பிடிச்ச..?”

“இதுக்குன்னு உங்க ஊரில சோழியை உருட்டி ஜோசியம் சொல்கிற ஜோசியரையாக் கூப்பிட்டுக் குறி கேட்க முடியும்..? அதைத் தவிர வேற எதை நீங்க சொல்லப்

போறீங்க. .? நான் யோசிச்சாலே உங்களுக்கு ஆகாதே.. நீங்கன்னு இல்ல.. மெஜாரிட்டி பீப்புள் இப்படித்தான் நினைக்கறிங்க..”

“என்னன்னு..?”

“லேடிஸ் யோசிக்கக் கூடாதுன்னு..”

“ஷ்யூர்.. ஷ்யூர்.. நீங்கள்ளாம் யோசிச்சா நாடு தாங்காது..”

“உங்க வீடு தாங்காதுன்னு சொல்லுங்க.. ஸெல்ஃபிஷ் பீப்புள்..”

“பாருடா.. தாய்க்குலத்தைச் சொன்னவுடனே ரோஷம் பொத்துக்கிட்டு வந்துருச்சு..”

“ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?”

பேச்சின் வேகத்தில் நந்தினி வலது உள்ளங்கையைக் குவித்து உயர்த்தி சண்டையிடுவதைப் போலக் கேட்டதில் அவன் ரசனையாகி..

“ஊஹூம்..?” என்று புருவங்களை உயர்த்தினான்..

நந்தினியின் யுத்த அறை கூவல் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொள்ள அவள் தனது மயக்கத்தை ஒளித்து வைக்கும் வழி தேடி திண்டாடினாள்..

ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின.. அவளது மயக்கத்தில் அவன் கிளர்ந்தான்.. கூர்ந்து அவளை பார்வையிட்டபடி.. பேச்சை மாற்றினான்..

“இங்கே சுத்திப் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கு.. எடக்கல் குகை, காராப் புழை அணை, சூசிப்பாறை அருவி.. குறுவதீவு, பட்ஷி பாதாளம், பைத்ருகா மியுசியம், சங்கலாமரம் அப்புறம் மீன் முட்டி அருவி..”

கடைசி வார்த்தையைச் சொல்லும் போது அவளைத் தின்று விடுவதைப் போலப் பார்த்து வைத்தான்.. நந்தினிக்கு கோழிக்கோடு அருவியின் ஞாபகம் வந்து விட்டது..

‘இவன் கூட அருவியைப் பார்க்கப் போனா இவன் அரை குறையா டிரஸ் பண்ணிக்கிட்டு கவர்ச்சி காட்டி ஆளைத் திணற வைப்பானே..’

அந்த உத்தேசத்தில்தான் மீன்முட்டி அருவியைப் பற்றிச் சொல்கிறானோ என்ற சந்தேகம் நந்தினியின் தலைக்குள் வண்டாகக் குடைந்தது.. அவனது விழிகளில் தெரிந்த

பிரகாசம் ஏதோ ஒன்று அவன் மனதுக்குள் இருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது..

# அத்தியாயம் 55

**ம**லைநாடு என்பதால் அங்கு பேசப்படும் மொழி மலையாளம் என்று அழைக்கப் பட்டதாம்.. பண்டைய காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தை ஆண்டதாக வரலாறு சொல்கிறது.. அவர்களை மூவேந்தர்கள் என்று அழைக்கிறார்கள்..

அந்த மூவேந்தர்களில் ஒருவரான சேர மன்னர் ஆட்சி செய்த சேர நாடு கேரளம் ஆகும்.. சேரநாடு சேரளமாக மருவி கேரளம் என்று மாறி விட்டதாக வரலாற்றுக் குறிப்பு சொல்கிறது.. மேற்கு தொடர்ச்சி மலைகளைக் கொண்ட கேரளம் இயற்கையழகின் அடையாளம்..!

மண் மணம் கொண்ட கேரளத்துப் பெண்கள் இயற்கையழகில் முன்னணி வகிப்பவர்கள்.. ஒப்பனை யில்லாத சந்தனக் கீற்றுடன் கூடிய முகம் மாசு மறுவில்லாமல் பளபளக்கும்... தினமும் தேங்காய் எண்ணையைத் தலைக்குத் தடவி தண்ணீர் ஊற்றிக் குளித்தால்தான் அவர்களுக்கு குளித்தைப் போலவே இருக்குமாம்.. ஈரத் தலைமுடியை விரிய விட்டுக் காதோரங்களில் சிறு கீற்றாக

கூந்தல் இழைகளை எடுத்து மத்தியில் ஒன்று சேர்த்து சிறு பின்னலிட்டு அவர்கள் அசைந்தாடி வரும் போது தங்கத் தேரொன்று அசைந்தாடி வருவதைப் போலவே இருக்கும்..

குளிர் நிரம்பிய கேரள தேசத்தில் இயற்கையின் அழகை ச் சிதைக்காமல் மரங்களுக்கிடையே தனித்தனியாய் அவரவரின் சக்திக்கேற்ப வீடுகளைக் கட்டி.. ஓலை கொண்டோ பலத்த காம்பவுண்டு சுவர் கொண்டோ வீடுகளைச் சுற்றி வேலி கட்டி.. வீட்டைச் சுற்றி மரங்களை நட்டு வளர்ப்பார்கள்.. வீட்டுக்கொரு பலா மரமும், நேந்திர வாழை மரமும்

இருக்கும்.. நெருக்கமாக இல்லாமல் இடைவெளி விட்டு வீடு கட்டி அவரவரின் வீடுகளில் தோட்டம் போட்டிருப் பார்கள்.. திருவனந்தபுரம், கொச்சி, கோட்டயம், திருச்சூர் போன்ற அதி முக்கிய நகரங்களிலும் ரவிச்சந்திரனின் யாழ் ஹோட்டல் இருப்பதாக அவன் சொன்னான்..

“நாங்க எல்லாத்திலயும் வித்தியாசமானவங்க.. நடனம்ன்னா கதகளி, மோகினியாட்டம்.. சண்டையில களரின்னு தூள் பரப்பற ஆளுக..” ரவிச்சந்திரன் காரை ஓட்டியபடி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்..

“ஓ...”

நந்தினி உதட்டைக் குவித்ததில் கிளர்ந்து காரைக் குலுக்கி ஆட்டம் காட்டி அவளை பயமுறுத்தினான்..

‘நகர்ந்துக்கடான்னு சொல்லிட்டுக் காரைக் கைப்பற்றி நானே ஓட்டினாத்தான் தப்பிப்பேன் போல இருக்கு.. இவன் ஊஹூம்ன்னு புருவத்தைத் தூக்கி என்னை மயக்கினாலும் எனக்குத்தான் டேன்ஜராகுது.. பதிலுக்கு இவனை பழிவாங்கலாம்ன்னு நான் ‘ஓ’ போட்டு இவனை மயக்க டிரை பண்ணினாலும் எனக்குத்தான் டேன்ஜராகு து.. மயக்கினாலும் மயங்கினாலும் என்னைத்தான் ஒரு வழியாக்கறான்.. காரை ஓட்டறதைப் போலவா ஓட்டறான்..?’

நந்தினிக்கு கார் ஓட்டத்தெரியும்.. அவள் சிறுவயதாக இருக்கும் போதே அவளுக்கு கார் ஓட்டக் கற்றுக் கொடுத்து விட்டார் மேகநாதன்.. நந்தகுமார் நடைபயிலும் போதே காரை ஓட்டவும் பயின்று கொண்டான் என்பது வேறு விவரம்.. “காரை நான் ஓட்டவா..?”

“ஏன்..? என் டிரைவிங் சரியில்லையா..?”

ஆமாம் என்று சொல்லிவிட்டு அதலபாதாளத்தில் உருள்வதற்கு நந்தினி தயாராக இல்லை.. மலை தேசத்தில் இடக்கு முடக்கான மலைப் பாதையில் காரை ஓட்டிக்

கொண்டிருப்பவனிடம் வம்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அவளது ஆறாவது அறிவு எச்சரித்தது..

“ஹி.. ஹி.. அப்படி யார் சொன்னது..? உங்க கார் அழகான கார்.. வெளிநாட்டுக் கார்..”

“அதுக்கு..?”

“ஓட்டிப் பார்க்கலாம்ன்னு ஆசையா இருந்துச்சு.. அதான் கேட்டேன்.. வேற ஒண்ணுமில்லையே.. ஒன்ன்ன்..னுமே இல்லை..”

அவன் நம்பாத பார்வை பார்த்து அவளை சோதித்தான்.. கண்டுபிடித்து விடுவானோ என்று அவள் டென்ஷன் ஆனாள்..

“வயநாட்டு மலைப்பாதையிலே கார் ஓட்டிப் பார்க்க ஆசைப்படற தமிழ்நாட்டுப் பெண் நீதான்.. கொஞ்சம் ஜன்னல் பக்கமா சாய்ந்து பாரு..”

அவன் சொன்னானே என்று யதார்த்தமாக திரும்பி விட்டு கிடுகிடுவென அவள் நடுங்கிப் போனாள்..

பக்கவாட்டில் கிடுகிடு பாதாளம்..! லேசாக பாதையை விட்டுக் கார் விலகினாலும் அவ்வளவுதான்..

“நீயெல்லாம் தஞ்சாவூர் ரோட்டில.. ஃபோர் வேஸில பத்திரமா கார் ஓட்டத்தான் லாயக்கு.. கேரளா மலைப் பாதைன்னா உனக்கு அவ்வளவு ஈஸியாப் போச்சா..?”

“தெரியுதில்ல..?” எரிச்சலானாள் நந்தினி..

“ஒரு கையால் ஸ்டிரியங்கைப் பிடித்துக்கிட்டு ஓட்டறது.. பாதையை விட்டுட்டு பக்கத்தில உட்கார்ந்திருக்கவளைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறதுன்னு இம்சையைக் கிளப்பிக்கிட்டு காரை ஓட்டறது நீங்கதான்..”

“ஹ..! நான் இங்கேயே பிறந்து வளர்ந்தவன்.. எப்படி ஆழக்கடலில தள்ளி விட்டாலும் அநாசியமா மீனவன் நீச்சலடிச்சு கரைக்கத் திரும்பிருவானோ.. அதைப் போல.. எப்பேற்பட்ட ஹேர்பின் வளைவிலயும் இம்மிகூட பாதையை விட்டு நகராம எங்களால காரை ஓட்ட முடியும்..”

“எங்களாலன்னா..?”

“கேரளாவில பிறந்து வளர்ந்தவங்க..”

“தமிழ் மட்டும் நல்லாப் பேசறிங்க..”

“தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களில எங்க சேர மன்னரும் ஒருத்தராச்சே.. தமிழும், மலையாளமும் இரட்டை மொழிகள்..”

“தமிழ் இலக்கணத்தில இரட்டைக் கிழவிகன்னு உண்டு..”

“உன்கூட இன்னொரு கிழவி கூட்டுச் சேர்ந்த பின்னாலே அதைச் சொல்லலாம்..”

“அப்ப என்னைக் கிழவின்னு சொல்றீங்களா..?”

நந்தினி மூக்கு நுனி சிவக்க ரோஷத்துடன் சண்டைக்குத் தயாரானதில் அவன்..

“ஹா.. ஹா..” என்று சிரித்தான்..

“சிரிக்காதீங்க..”

“ஈஸி நந்தினி.. நீயென்ன தொட்டாச் சிணுங்கியா..?”

“இதையொன்னைச் சொல்லிருங்க..”

“இன்னொன்னையும் சொல்வேனே..”

“வேற என்ன..?”

நந்தினி திருதிருத்து ஒற்றை விரலை நெற்றிப் பொட்டில் தட்டி யோசிக்க ஆரம்பித்தாள்.. ரவிச்சந்திரனுக்கு வேடிக்கையாக இருந்தது..

“ரொம்பத்தான் யோசிக்கிற.. உன் பெயரைப் பத்தி உனக்கே தெரியாதா..?”

“என் பெயர் நந்தினி..”

“அது உன் வீட்டில வைத்தது.. நான் வைத்த பெயர் வேற..”

“எனக்குப் பெயர் வைக்க நீங்க யாருங்க..?”

“உன் பாஸ்..”

“பாஸ்ன்னா நிக் நேம் வைப்பீங்களா..?”

“நல்ல கதையாய் இருக்கே.. உன்னை மேரேஜ் பண்ணிக்க நினைத்த பாவத்திற்காக உன் வுட்-பிக்கு நீ பெல்ட் மன்னன்னு பெயர் வைக்கலை..?”

“அது.. அது.. அது..” தடுமாறிய நந்தினி வேறு ஒன்று நினைவுக்கு வந்தவளாக..

“அவன் ஒன்றும் என் வுட்-பி யில்லை..” என்று மூக்கை விடைத்தாள்..

“அது இல்லைதான்.. பட்.. அவருக்கு நீ பெல்ட் மன்னன்னு பெயர் வைத்திருக்கிறது உண்மையா.. இல்லையா..?”

அவன் மடக்கியதில் அவள் பல்லைக் கடித்தபடி..

“அவனுக்கு மட்டுமில்லை பாஸ்.. உங்களுக்கும் தான் பெயர் வைத்திருக்கிறேன்..” என்றாள்..

“எனக்கும் நிக் நேமா..? ஹா.. ஹா.. என்னன்னு சொல்லுவ..?”

“ஏற்கனெவே சொல்லியிருக்கிறதா ஞாபகம்..”

“எனக்கு ஞாபகமில்லை.. சொல்லு.. சொல்லு..”

“கம்மாண்டர்..!”

“கம்மாண்டர்..? யு மீன் மிலிடிரி கம்மாண்டர்..? ஐ லைக் இட்.. நான் உனக்கு வைத்திருக்கிற இன்னொரு நிக் நேம் ‘சிட்டுக் குருவி..’”

அவன் கண்களைச் சிமிட்டினான்.. அவள் போடா என்று முகத்தை அஷ்ட கோணலாக்கிப் பழிப்புக் காட்டி விட்டுத் திரும்பி உட்கார்ந்து கொண்டாள்.. தொட்டாச் சிணுங்கி, சிட்டுக்குருவி என்று பல்வேறு உப பெயர்களால் அவள்

அழைக்கப் படுவதை விரும்பாமல் அவனு க்கு இன்னும் என்னென்ன இடுகுறி பெயர்களை இடலாம் என்று பலத்த யோசனையில் இருந்தாள்.. அதை கண்டு பிடித்தவனாக..

“என்ன..? வேற என்னென்ன நிக் நேம்களை வைக்கலாம்ங்கிற யோசனையில் இருக்கிறயா..” என்று அவன் கேட்டான்..

நந்தினி பதில் சொல்லவில்லை.. உம்மென்று இருந்தாள்..

“முதன் முதலா என் வீட்டுக்கு வரப் போற.. சிரித்த முகமா வராம இப்படி உம்முன்னு முகத்தை வைத்துக்கிட்டு வந்தா என் ஃபேமிலியில என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க..? நான் உன்னைக் கடத்திக்கிட்டு வந்திருக்கேன்னு நினைத்து விட மாட்டாங்களா..?”

அவன் கேட்ட கேள்வியில் தூக்கி வாரிப் போட்டவளாக.. கோபத்தை மறந்து..

“என்னது..?” என்று விழிவிரித்தாள் நந்தினி..

“எதுக்கு இந்த ஷாக்...? வீட்டுக்குத்தானே கூப்பிட்டுக்கிட்டுப் போகிறதாச் சொன்னேன்..? நீலிமலை பாயிண்டில இருக்கிற எங்க கெஸ்ட் ஹவுஸுக்குக்

கூப்பிட்டுக்கிட்டுப் போகிறதாவா சொன்னேன்..?” இலகுவாக கேட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“நீலி மலை பாயிண்ட் கெஸ்ட் ஹவுஸா..?”

“யெஸ்.. அங்கேதான் மீன்முட்டி அருவி இருக்கு..”

“வேற ஒண்ணும் இருக்கிறதா இப்போச் சொன்னீங்களே..”

“ம்ம்ம்.. எங்க கெஸ்ட் ஹவுஸ்..! உன்னை அங்கே அழைத்துக்கிட்டுப் போகலைன்னும் சொன்னேனே..”

‘இவன் என்ன என்னென்னத்தையோ சொல்றான்.. கெஸ்ட் ஹவுஸ் அது இதுங்கிறான்.. உன்னை அங்கேயா கூப்பிட்டேன்னு நியாயம் பேசறான்.. இவன் வேற லேடிஸ் பழக்கம் வைச்சிருக்கிறவனா இருந்து தொலைக்கிறான்.. பெண்களோடு சந்தோஷமா இருக்க அந்த கெஸ்ட் ஹவுஸுக்குத்தான் போவானோ என்னவோ..’

நந்தினிக்கு கலக்கமாக இருந்தது.. கேரளத்து எஸ்டேட்டில் வேலை என்றவுடன் அவள் என்னென்ன வோ நினைத்திருந்தாள்.. அவளுக்கென்று ஒரு ஆபிஸ் அறை.. சுழல் நாற்காலி.. கண்ணாடி போல வழவழப்பான கிரானைட்

பதித்த டேபிள்.. அதில் கம்யூட்டர்.. லேப்டாப்.. அவளுக்கென்று ஒரு பெர்சனல் செக்கரட்டரி..

‘இவன் என்னை இவனோட பெர்சனல் செக்கரட்டரிங் கிறான்..’ நந்தினிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.. தண்ணீர் பாட்டிலைக் கவிழ்த்து அடைப்பை நீக்கி ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்..

‘எனக்குன்னு ஒரு குவார்ட்டர்ஸ் கொடுப்பான்.. அதில வேலை செய்ய ஆள் இருப்பாங்க.. இல்லேன்னா.. வயநாட்டில இருக்கிற லேடிஸ் ஹாஸ்டல் எதிலேயாது தங்கிக்கலாம்ன்னு கற்பனை செய்துக்கிட்டு வந்தா இவன் வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு போகிறேங்கிறானே.. அங்கே எனக்கு என்ன வேலையைக் கொடுக்கப் போகிறான்..?’

பேசாமல் கார்கதவைத் திறந்து குதித்து விடலாமா என் று யோசித்தாள்.. பக்கவாட்டில் தெரிந்த கிடுகிடு பாதாளம் செஞ்சிக் கோட்டையின் உச்சியிலிருந்து பார்த்த பாதாளத்தை விட படுபாதாளமாக இருந்ததில் அவசரமாக அந்த யோசனையை கைவிட்டாள்..

“இங்கே லேடிஸ் ஹாஸ்டலெல்லாம் இல்லையா..?” உமிழ்நீரை விழுங்கிக் கொண்டு பயந்தபடி கேட்டாள்..

“எதுக்கு..?” புருவங்களை சுருக்கினான் அவன்..

“நான் தங்கிக்கத்தான்..”

அவன் திரும்பி அவளைப் பார்த்த பார்வையில் கோபமிருந்தது..

“இது சென்னையில்லை.. வயநாடு.. நீ தங்கிக்கிற மாதிரி தோதான இடம் இங்கு இல்லை..”

“உங்க எஸ்டேட்டில் வேலை பார்க்கிறவங்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்திருப்பீங்கதானே..”

“ஆமாம்.. அதுக்கென்ன..?”

அவன் எரிந்து விழுந்தான்.. எதற்காக இந்த அளவுக்கு கோபப்படுகிறான் என்று புரியாமல் அவள் நகம் கடித்தாள்..

‘இவனுடைய எஸ்டேட்டில் வேலை பார்க்க வந்தவளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவதை அவனுடைய வீட்டினரும் விரும்ப மாட்டார்கள்தானே..’

எதற்காக அவளை அவனுடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போகிறான் என்று அறியாவிட்டால் அவளுக்கு தலை வெடித்து விடும்போல டென்ஷனாகிப் போனாள் நந்தினி..

“தமிழ் நாட்டின் சேர நாடாய் கேரளா இருந்ததாலே மலையாளமும் தமிழும் பேச்சு மொழியில் நிறைய ஒற்றுமையோடு இருக்கும்.. கேரளாவில் தமிழர்கள் நிறைய இருக்கிறாங்க.. வய நாட்டில் தமிழர்கள்தான் அதிகம்.. மலையாளம், தமிழ், கன்னடம், உருது, கொங்கனின்னு நிறைய மொழிகள் பேசுவாங்க.. எங்க வீட்டிலே நாங்க தமிழ், மலையாளம் இரண்டுமே பேசுவோம்..”

‘இதையெல்லாம் நான் கேட்டேனா..?’

அவள் கேட்க நினைத்ததே வேறு..

“அந்தக் குவார்ட்டர்ஸ்களில ஒண்ணை எனக்காக அலாட் செய்யலாமே..” பயந்தபடி அதைக் கேட்டபோது அவள் நினைத்தபடியே அவன் அவளை உறுத்துப் பார்த்தான்.. அவள் பார்வையைத் தாழ்த்தி விரல்களைப் பார்த்ததில் கோபம் கொண்டான்..

“ஏன்..? என் வீட்டுக்கு வர்றதில் உனக்கென்ன பிராப்ளம்..?” என்று பல்லைக் கடித்தான்..

“எனக்கொன்னும் பிராப்ளமில்லை.. உங்களுக்குத் தான் பிராப்ளம்..” அவள் நகம் கடித்தாள்..

“எனக்கென்ன பிராப்ளம்..?”

“உங்க எஸ்டேட்டில வேலை பார்க்க வந்தவளை உங்க வீட்டுக்கு அழைத்துக்கிட்டுப் போனா பிராப்ளம் வராதா..?”

“அதெல்லாம் வராது..” அவன் அமர்த்தலாகச் சொன்னான்..

‘எக்கேடோ கெட்டுத் தொலை..’

அறியாதவர்களின் வீட்டில் வேண்டாத விருந்தாளியாகப் போய் இறங்க வேண்டியிருக்கிறதே என்ற தலைவலியுடன் தலையைப் பிடித்துக் கொண்டாள்..

‘இந்த ஒரு வாரமும் கோழிக்கோடில் நிம்மதியா இருந்தேன்..’ அதுவும் ரவிச்சந்திரனின் ஹோட்டல்தான் என்றாலும் அங்கு எந்தவிதமான மனக்கிலேசமும் இல்லாமல் அவளால் தங்க முடிந்தது.. அதுவே அவனுடைய வீடு எனும்போது ஏன் மனதில் சங்கட உணர்வு உண்டாகிறது..?

நந்தினி உறவினர்களின் வீடுகளில் கூடத் தங்கிய தில்லை.. ஹாஸ்டலிலும் மற்ற அறைகளுக்குச் சென்று அரட்டை அடிக்க மாட்டாள்.. அப்படியொரு பழக்கம் அவளுக்கு.. உத்ராவின் திருமண நிச்சயதார்த்தத்திற்காக

உத்ராவின் வீட்டில் தங்கியது தஞ்சாவூரை விட்டுக் கிளம்ப அதை ஒரு காரணமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக.. அவள் எப்படி ரவிச்சந்திரனின் வீட்டில் தங்குவாள்..?

# அத்தியாயம் 56

**கா**ட்டுக்குள் தன்னந் தனியாக மாட்டிக் கொண்டதைப் போல கலவரமானாள் நந்தினி.. எதையோ யோசித்து அதைப் பற்றிச் சொல்ல ரவிச்சந்திரனின் பக்கம் திரும்புவதும்.. அதற்குள் அந்த யோசனை வேண்டாமென்று தோன்றிவிட தன் தலையில் தானே குட்டிக் கொண்டு மறுபடியும் காற்றில் விரலால் கோலமிட்டு யோசிக்க ஆரம்பித்து விடுவதுமாக அட்டூழியம் பண்ணிக் கொண்டிருந்தாள்..

அவள் பண்ணிய அழிச்சாட்டியத்தைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருந்து ரவிச்சந்திரனுக்கு..

“ஏய்ய் வாலு.. அடங்கி உட்கார மாட்டியா..?” குறுநகையுடன் அவள் தலையில் கொட்டப் போனான்..

“பேச்சோடு ஸ்டாப் பண்ணிக்கங்க பாஸ்.. கொட்ட வேணாம்.. ஏற்கனெவே என் தலையில் நானே கொட்டு வைச்சுப் புண்ணாக்கியிருக்கேன்.. நீங்களும் அந்தப் புண்ணியத்தைத் தேடிக்க வேணாம்..”

நந்தினி வேண்டிக் கேட்டுக் கொண்டதில் விழுந்து விழுந்து சிரித்தான்..

‘ம்ஹூம்.. என் பிழைப்பு இப்படியாகிருச்சு..’ நொந்து போனாள்.. நந்தினி..

ரப்பர் மரங்களுக்கு ஊடே கார் விரைந்ததில் சுவராஸ்யமாகி..

“இது என்ன மரம்..?” என்று ஆர்வமாக கேட்டாள்..

“ரப்பர் மரம்..”

“ரப்பர் மரமா..!!!”

“அதுக்கேன் இத்தனை ஆச்சரியக் குறி..? ரப்பர் உற்பத்தியில் இந்தியாவிலேயே ஃபர்ஸ்டிலே இருக்கிற ஸ்டேட் கேரளாதான்.. தெரியுமில்ல..”

நந்தினிக்கு அது தெரியாது.. அதை மறைத்து தெரிந்ததைப் போலப் பாசாங்கு செய்ய அவளுக்குத் தெரியவில்லை..

“ஹி.. ஹி.. படித்தவங்க அதிகமா இருக்கிற ஸ்டேட் கேரளான்னு மட்டும்தான் தெரியும்..” என்றாள்..

“இந்த லட்சணத்தில நீ என்ஜினியரிங் படிச்சு முடிச்சிட்டேன்னு வேற சொல்லிக்கற..” ரவிச்சந்திரன் சீண்டினான்..

“சந்தேகமா இருந்தா என் காலேஜில கேட்டுச் செக் பண்ணிக்கங்க பாஸ்..” நந்தினி ரோஷமானாள்..

“செக் பண்ணலாம்.. அதே போல நீ காலேஜ் பக்கம் வந்தியான்னு உன் அப்பாவும் செக் பண்ணுவாரில்ல..? அவர் செக்கும், என் செக்கும் கிராஸ் செக்காகிருச்சுன்னா என்ன செய்கிறது..?” ஓரக் கண்ணால் நந்தினியைப் பார்த்துக் கொண்டான்..

“வேண்டாம்.. வேண்டாம்..” அவள் பதறினாள்..

“இதுக்குத்தான்.. எதைப் பேசறதா இருந்தாலும் யோசித்துப் பேசனும்னு சொல்கிறது.. அவசரப்பட்டு வாய் விட்டா இப்படித்தான்.. அவசரத்தைப் பற்றி உன்னிடம் சொல்கிறேன் பார்.. அவசரத்தோட மொத்த உருவமே நீதான்.. எதுக்கெடுத்தாலும் அவசரம்..”

“தாளிச்சது போதும் சாரே.. காலேஜ் படிப்பில இன்ஜினியரிங் பற்றித்தான் சொல்லித் தருவாங்க.. ரப்பர் உற்பத்தியில எந்த ஸ்டேட் ஃபர்ஸ்டில இருக்கிறதுங்கிறதைச் சொல்லித் தரமாட்டாங்க.. இதுகூடத் தெரியலை.. எனக்கு நீங்க பாஸ்.. ம்ஹும்..”

“வேண்டும்ன்னா பாஸை மாத்திரேன்..”

சிரிக்காமல் யோசனை சொன்னான் அவன்.. அவளுடைய இக்கட்டான நிலையைச் சொல்லிக் காட்டுகிறானா என்று கொதித்தாள் அவள்.. ரவிச்சந்திரன் மௌனப் பார்வை பார்க்க, நந்தினி உதட்டைக் கோணி அழகு காட்டி விட்டு கோபமாக சாலையை வெறிக்க ஆரம்பித்து விட்டாள்..

“நாலு வார்த்தை பேசினா ஐந்தாவது வார்த்தையில சண்டை ஸ்டார்ட் ஆகிருது.. இந்த லட்சணத்தில இருந்தா எப்படி உன்னிடம் வேலை வாங்கறது..?” கடினமான முகத்துடன் பேசினான் ரவிச்சந்திரன்..

“இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை..” இறுகின முகத்துடன் சொன்னாள் நந்தினி..

“மங்களூர் எக்ஸ்பிரஸில உன்னை சென்னைக்கு அனுப்பி வைச்சிரச் சொல்லுவ.. அதுதானே. .”

“அதுவேதான்.. பரவாயில்லையே.. கண்டு பிடிச்சுட்டீங்களே..”

“இதை விட்டா நீ வேற என்னத்தைச் சொல்லப் போற..? எப்படித்தான் ஒரே ஸ்டேட்மென்டை திரும்பத் திரும்ப ரீபீட் பண்றயோ.. அலுப்பா இல்லையா..?”

“இல்லை.. போதுமா..?”

“போதாது..”

விடாமல் வம்பை வளர்த்தவனை இமைக்காமல் பார்த்தாள் நந்தினி..

“அனல் பறக்குது...” அவள் பார்வையை விமரிசித்தான் ரவிச்சந்திரன்..

ஆற்ற மாட்டாதவளாக அவனுக்கு புறமுதுகு காட்டித் தலையை முற்றிலுமாக அவனுக்கு எதிர்திசையில் திருப்பி வெளியில் பார்த்தவளை அடுக்கடுக்காய் தெரிந்த மேற்கு தொடர்ச்சி மலை கவர்ந்தது..

“கேரளாக் கடல்களும் அழகா இருக்கு.. மலைகளும் அழகா இருக்கு..” லயிப்புடன் சொன்னாள்..

நொடிப் பொழுதில் சண்டையை மறந்து சமாதானமாகும் குழந்தையின் இயல்பினைக் கொண்டவளை சிநேகித்தான் ரவிச்சந்திரன்..

‘இதுபோன்ற மனது எத்தனை பேருக்கு வாய்க்கும்..?’ என்ற நினைவுடன்..

“கேரளாவோட எல்லைகள் அப்படி..” என்றான் ரவிச்சந்திரன்..

“அப்படின்னா எப்படி..?” உள்ளங்கையை விரித்து வசீகரமாக கேள்வி கேட்டாள் நந்தினி..

“கேரளாவுக்கு கிழக்கே மேற்கு தொடர்ச்சிமலை, மேற்கே அரபிக்கடல், தென்கிழக்கில் தமிழ்நாடு, வடகிழக்கில் கர்நாடகம்ன்னு சுற்றம் சூழ இருக்கிற மலையாள தேசம் எங்கள் கேரளதேசம்..”

“பெருமைதான் போங்க..”

“போய்கிட்டுத்தானே இருக்கேன்..”

“எங்கே..?”

“என் வீட்டுக்கு..”

சளசளத்த நந்தினி சட்டென்று ஊமையாகிப் போனாள்.. புருவங்கள் முடிச்சிட அவளையே பார்த்த ரவிச்சந்திரன்..

“நந்தினி..” என்று அழைத்தான்..

“ம்ம்ம்..?” அவள் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவளது விழிகளில் ஆழ்ந்த கலக்கம் இருந்தது.. ரவிச்சந்திரன் உருகிப் போனான்.. சட்டென காரை ஓரம் கட்டி

நிறுத்தி விட்டுக் கை நீட்டினான்.. நந்தினி விகல்பமாக அதை நினைத்து ஒதுங்காமல் குழந்தையாக நகர்ந்து அவன் தோளில் தலைசாய்த்தாள்..

முன்தினம் போல அங்கே காமமும், காதலும் தவிர்த்த ஒன்றுதல் நிகழ்ந்தது.. தவிப்புடன் தோளில் சாய்ந்திருந்தவளைத் தாய்மையுடன் அரவனைத்து முடி கோதி தைரியம் சொன்னான் ரவிச்சந்திரன்..

“நீ பயப்படனும்ங்கிற அவசியமேயில்லை.. என் வீட்டில் நீ தனியாவா இருக்கப் போகிற..? கூடவே நானும் இருப்பேண்டா..”

“பிராமிஸ்..?”

“பிராமிஸ்..”

நந்தினி நீட்டிய உள்ளங்கையில் தன் கையை வைத்து அவள் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.. அந்த இறுக்கத்தில் நந்தினியின் மனதிலிருந்த தனிமை அகன்றது.. தைரியம் வரப் பெற்றவளாக இமைகளை மூடினாள்..

‘இவள் குழந்தை..’ ரவிச்சந்திரனுக்குள் பிரியம் பொங்கியது.. “நீங்க பெரிய பிஸினெஸ் மேன்..” இமை திறக்காமல் பேசினாள்..

“இதை நீ நினைவில் வைத்துக்கிட்டாத் தேவலை.. எங்கே..? அதை செகண்டுக்கு ஒருதரம் நான் நினைவு படுத்த வேண்டியிருக்கு..” போலியாக மனத்தாங்கல் பட்டான் ரவிச்சந்திரன்..

“பிஸினெஸ் விஷயமா உலகம் சுற்ற வேண்டியிருக்கும்..”

“உலகத்தை விடு... வருஷத்துக்கு ஒரு தரம் போய்க்கலாம்.. இந்தியாவைச் சுத்தியாகனுமே..”

“அப்படி நீங்க வயநாட்டை விட்டுப் போகிறப்ப உங்க வீட்டில நான் தனியா இருக்க வேண்டியிருக்குமே..”

நந்தினியின் கை ரவிச்சந்திரனின் சட்டையை இறுக்கிப்பிடித்துக் கொண்டது.. ரவிச்சந்திரன் சிலிர்த்துப் போய் விட்டான்.. அவனுடைய அம்மாவான வீணா அடிக்கடி சொல்வாள்..

“குழந்தையா இருக்கிறப்ப இந்தப் போக்கிரித்தனமெல்லாம் உன்கிட்ட இல்லைடா.. உன்னைத் தூக்கி வைத்துக்கிட்டே இருக்கனும்னு அடம் பிடிப்ப.. என் மடியில படுத்திருக்கிறப்ப உன்னை தொட்டிலில் விட்டு விட்டு நான் நகர்ந்திரக் கூடாதுன்னு என் சேலையை இறுக்கமா பிடிச்சுக்கிட்டு இருப்ப.. அப்படியிருந்தவன்தான் இப்ப அம்மா முகத்தையே மறந்துட்டு ஒரு இடத்தில நிலை கொள்ளாம காலில சக்கரத்தை கட்டி விட்டிருக்கிறதைப் போல உலகத்தை சுத்திக்கிட்டு இருக்கிற..”

அன்று குழந்தையாக இருந்த போது அவன் செய்ததாகச் சொல்லப்பட்ட செயலைத்தான் இன்று நந்தினி செய்து கொண்டிருந்தாள்.. விட்டு விட்டால் எங்கே அவன் அவளைத் தனித்து விட்டுவிட்டுச் சென்று விடுவானோ என்ற பயத்துடன் அவனது சட்டையை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள்... அவளது நடுக்கத்தை அவனது உடல் உணர்ந்ததில் அவன் அவளது உச்சந்தலையில் முகத்தைப் பதித்தான்..

அனைத்தும் நீயே என்ற அவளது ஒன்றுதலில் அவனது மனம் நெக்குருகியது.. தாயிடம் ஒன்றும் சேயாக அவனிடம் அடைக்கலமாகியிருந்த நந்தினியின் முகத்தை விரல் கொண்டு உயர்த்தினான்.. அண்ணாந்து அவன் முகம் பார்த்த

நந்தினியின் விழிகளில் அவளை அவன் தனித்து விட்டு விட்டு வெளியூர் சென்று விடுவானோ என்ற அச்சம் அப்பியிருந்தது..

“நல்லாக் கேட்டுக்க நந்தினி.. உன் பிராப்ளமெல்லாம் சால்வாகி நீ நிம்மதியா உன் வாழ்வை வாழ ஆரம்பிக்கும் வரை நான் உன்னைத் தனியே விட்டு எங்கேயும் போக மாட்டேன்.. அப்படிப் போகிறதைப் போல இருந்தால் உன்னையும் என்னுடன் அழைத்துக் கொண்டுதான் போவேன்.. இது பிராமிஸ்..”

நான் உன்னைக் கைவிட மாட்டேன் என்று அந்த ஆண்டவனே அடைக்கலம் கொடுப்பதைப் போல உணர்ந்தாள் நந்தினி..

நந்தினி அவன் தோளில் இருந்து விலகி உட்கார்ந்தாள்.. அவளது முடிகோதி கன்னத்தைத் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்தி விட்டுக் காரைக் கிளப்பினான் ரவிச்சந்திரன்.. அவனையே பார்த்துக் கொண்டிருந்த நந்தினியின் மனதில் நன்றியுடன் கூடிய அன்பு சுரந்தது..

அறியாத ஊரில் தெரியாதவர்களின் வீட்டில் தங்கப் போகிறோமே என்ற பயம் குறைந்து ரவிச்சந்திரன் அவளருகிலேயே இருப்பான் என்ற தைரியம் வரப்

பெற்றவளாக சீட்டில் சாய்ந்து அமர்ந்து பக்கவாட்டில் தெரிந்த பள்ளத்தாக்கைப் பார்த்தாள்.. அடிவாரத்தில் இருக்கும் கோட்டைகளும் வீடுகளும் வானத்தில் பறக்கும் விமானத்திலிருந்து பார்ப்பதைப் போல வெகு அழகாக தெரிந்தது.. கூரைகளற்ற கோட்டை தெரிந்ததில் கண்களைச் சுருக்கி..

“அது என்ன கோட்டை..?” என்று ஆர்வமாக கேட்டாள்.. அரட்டையை மறந்து அமைதியின் சிகரமாக ஆறுதல் தேடி அவன் தோளில் சாய்ந்திருந்த நந்தினியை பழைய இயல்பு நிலைக்கு மாற்ற இந்த உரையாடல் பயன்படும் என்ற நினைவில் உரையாடலை வளர்த்தினான் ரவிச்சந்திரன்..

“அதுதான் சரித்திரப் பிரசித்தி பெற்ற பேகல் ஃபோர்ட்..” என்றான்..

“ஓஹோ..” நந்தினிக்கு சுவராஸ்யம் போய் விட்டது..

“ஹிஸ்டரின்னாலே உனக்குப் போர் அடிக்க ஆரம்பிச்சுருமே..” சீண்டினான்..

“நான் என்ஜினியரிங் படிச்சவ பாஸ்..” அவள் ரோஷமானாள்..

“என்ஜினியரிங் படிச்சா மத்த சப்ஜெக்டைப் பத்தித் தெரிந்துக்காம இருக்கனும்னு சட்டமேதும் இருக்கா..?”

“இப்ப எதைப் பத்தி நான் தெரிந்துக்கனும்னு சொல்கிறீங்க..?”

“மற்ற சரித்திரத்தைப் பற்றிச் சொன்னாத்தான் உனக்கு போர் அடிக்குமே.. ஓஹோன்னு தலையை ஆட்டி வாய்க்கு நேரா விரல் சொடுக்கி கொட்டாவி விடுவியே..”

‘அப்படியும் நீங்க விட மாட்டேங்கரிங்களே..’ மனதுக்குள் நினைத்துக் கொண்ட நந்தினி..

“ஹலோ பாஸ்.. யாரும் இங்கே விரல் சொடுக்கி கொட்டாவி விடலை..” என்று புளுகினாள்..

“நானும் அதைத்தான் சொன்னேன்.. மத்ததைத்தான் நான் சொல்லலையே... சொன்னாத்தானே விரல் சொடுக்கலும் கொட்டாவியும் வரும்..? அதைப் பத்தி நான் சொல்கிறதாவே இல்லை.. சொன்னாக் கடனேன்னு ஊம் கொட்டாம கொட்டாவி விட்டுக் கேட்டுட்டுட்டு அதுக்கும் உன்னோட இன்ஜினியரிங் படிப்புக்கும் என்ன சம்பந்தம்னு கேட்டு வைப்ப.. அதனால உனக்குப் போரடிக்காம

இண்ட்ரெஸ்ட் வர்ற மாதிரி ஒரு ஹிஸ்டோரிக்கல் இன்ஃபர்மேஷனைச் சொல்றேன்.. கேட்டுக்க..”

“கேட்க மாட்டேன்னா விடவா போறிங்க..? சொல்லுங்க..”

‘விடாம இவ கையைப் பிடித்தா இழுத்துக்கிட்டு இருக்கேன்..’ நந்தினி சொல்வதைப் போலவே நினைத்துப் பார்த்த ரவிச்சந்திரன் அவள் கையைப் பிடித்து இழுத்தால் அவள் எப்படிக் கூவுவாள் என்று நினைத்துப் பார்த்தான்..

‘விடுங்க.. என் கையை விடுங்கன்னு சத்தம் போடுவா..’ அவன் இதழ்களில் புன்னகை விரிந்ததை விசித்திரமாகப் பார்த்தாள் நந்தினி..

‘இப்ப நான் என்ன சொன்னேன்னு இவனா சிரிச்சுக்கிறான்..?’ அவளது பார்வையில் சுதாரித்துக் கொண்ட ரவிச்சந்திரன்..

“என்ன்..ன..?” என்றான்..

“என்ன்ன..வா..? என்ன பாஸ் இன்ஃபர்மேஷனைக் சொல்றேன்னு சொல்லிட்டு மௌனியாகிட்டிங்க.. கப்சா விட்டிங்களா..?”

“இது கப்சா இல்லை யங் லேடி.. உண்மை..”

“ஸோ.. நீங்க உண்மை விளம்பி..? வாஹ்ரே வாஹ்..”

“போதும்.. அடங்கறியா.. இந்த பேகல் போர்ட் கோட்டையிலதான் மணிரத்னம் சாரோட பம்பாய்.. படத்தில வரும் ‘உயிரே.. உயிரே’ பாட்டை ஷீட் பண்ணியிருக்காங்க..”

“ரியலி..?”

நந்தினி சரிவில்.. அடியில்.. தெரிந்த அந்தக் கோட்டையைப் பார்த்தாள்.. சுற்றிலும் அலையடிக்கும் கடல்நீர்.. பக்கத்தில் ஈரச் சுவர்.. அதில் பசுமைநிறப் பூஞ்சைகள் முளைத்திருக்க அரவிந்தசாமி ஏக்கத்துடன் நின்று கைகளை விரித்து..

**“உயிரே.. உயிரே..**

**வந்து என்னோடு கலந்துவிடு..”**

என்று பாடுவதைப் போலவே இருந்தது.. சட்டென திரும்பி ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவன் சிரிப்பு அரவிந்தசாமியின் சிரிப்பைப் போலவே இருந்தது..

# அத்தியாயம் 57

**வெ**ளிப்பார்வைக்குச் சிரிப்பும், கலகலப்புமாக இருக்கும் நந்தினி மனதளவில் வெகு மென்மையானவள்.. மிருதுவான குணம் படைத்தவள்.. குழந்தையின் இயல்பைக் கொண்டவள்.. உணர்ச்சி பூர்வமானவள்.. சிறு துன்பத்திற்கும் மனதில் நோவை ஏற்கும் குணத்தைக் கொண்டவள்..

அவள் போன்ற குணாதிசியங்களைக் கொண்ட பெண்களைப் பார்ப்பது அரிது.. அதை.. நன்கு உணர்ந்திருந்தான் ரவிச்சந்திரன்.. கனவுப் பார்வையுடன் அவனைப் பார்த்த நந்தினியை கேள்வியாக பார்த்தவன்..

“உனக்கு பம்பாய் படம் பிடிக்குமா..?” என்று கேட்டான்..

“பிடிக்கும்.. அதைவிட ‘உயிரே’ங்கிற பாட்டை ரொம்பப் பிடிக்கும்.. அதைப் பத்தி நினைச்சாக்கூட உருகிருவேன்..”

அதை அவள் மனதின் பலவீனம் என்று ரவிச்சந்திரனால் நினைக்க முடியவில்லை.. உணர்வு பூர்வமானவள் என்றுதான் நினைக்கத் தோன்றியது..

“சுல்தான் பத்தேரியில் இருக்கும் ஜைனர் கோவில் அழகா இருக்கும்..”

பேச்சை மாற்றுவதை அவள் உணராத வண்ணம் பேச்சை மாற்றினான்.. அவளும் கேரளத்தின் முக்கிய இடங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் பேகல் போர்ட் கோட்டையை மறந்து விட்டாள்..

“ஓர்நாள் சுல்தான் பத்தேரியை சுத்திப் பார்க்க வரலாம்.. ஓங்கி உயர்ந்திருக்கும் பாறைகளுக்கு இடையில் ஒருவர் மட்டும் நடக்கும் அளவுக்கான குறுகிய இடைவெளியையெல்லாம் நீ பார்த்தா அசந்து போயிருவ..”

“உங்க கேரளத்தில எல்லா இடங்களும் அசந்து போகிற மாதிரிதான் இருக்கு.. வயநாடு இத்தனை அழகான இடமா இருக்கும்ன்னு நான் நினைத்தே பார்க்கலை..”

“எங்க வயநாட்டைக் ‘கேரளாவின் கடவுளின் தோட்டம்’ன்னு

சொல்லுவாங்க..”

“கரெக்டாத்தான் சொல்லியிருக்காங்க..”

பச்சைக் கம்பளம் விரித்ததைப் போன்ற கேரளத்தின் பசுமை நிறந்த அழகைக் கண்களால் அள்ளிப் படுகியபடி

சொன்னாள் நந்தினி.. அவனுடைய ஊரை அவள் புகழ்ந்ததில் அவளை நட்புடன் பார்த்து வைத்த ரவிச்சந்திரன்..

“இது மலை பிரதேச மாவட்டம்..” என்றான்..

“ஓ..” இதழ் குவித்து அவனை ஈர் த்தாள் நந்தினி..

“சிரபுஞ்சிக்கு அடுத்ததா அதிகமா மழை கொட்டற இடம் வயநாடுதான்..” அவள் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றினான்..

“உத்ரா இதைப் பத்திச் சொல்லியிருக்கா..” கவலையானாள் நந்தினி..

“எதுக்கு இந்தக் கவலை..?”

“எனக்கு ஜலதோஷம் பிடித்துக்கிட்டா சட்டுன்னு விட்டுத் தொலைக்காது.. விடாது கருப்புங்கிறதைப் போல பாடாப் படுத்தி எடுத்து விடும்..”

“கஷ்டம்தான்.. இங்கே வருஷத்தில் ஆறுமாதங்கள் மழை பெய்துகிட்டே இருக்கும்.. ஜலதோஷம் பிடிக்காம பார்த்துக்கனும்.. பிடித்தா விட்டு விலக சில பல மாதங்கள் கூட ஆகலாம்..”

“என்ன பாஸ்.. பயமுறுத்தறீங்க..?”

பயந்து போனாள் நந்தினி.. இவளையும் பயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது என ரசனையுடன் நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்... அச்சம் கூடச் சில பெண்களுக்கு அழ குதான்.. நந்தினி மருள விழிக்கும் போது அவளது அழகு பன்மடங்கு பெருகித் தெரிந்தது..

“இதுக்கெல்லாம் பயப்படறதை வெளியில் சொல்லிராதே..”

“ஏன் பாஸ்..?”

“சிரித்துருவாங்க.. கேரளாவுக்கு டூரிஸ்ட் வர்றவங்க இந்த கிளைமேட்டை ரசித்து என்ஜாய் பண்ணிட்டுப் போறாங்க.. நீ என்னடான்னா வராத ஜலதோஷத்தை நினைத்து இந்த பயம் பயப்படற.. எப்பேற்பட்ட ஆள் எனக்கு வேலைக்கு கிடைச்சிருக்குன்னு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன்னு உன் ஃபிரண்டோட வுட் பி வினீத் கிட்டச் சொல்லியே ஆகனும்..”

நந்தினிக்கு வெட்கமாகி விட்டது.. அவள் உதட்டை மடித்துக் கடித்தபடி சாலையை வேடிக்கை பார்த்தாள்.. வயநாட்டின் இயற்கையழகு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.. மிதமான வெயில்.. முகத்தைத் தொட்டுப் போகும்

குளிர் காற்று.. சுற்றிலும் பச்சைப் பசேல்ன்னு செடி கொடிகள்.. பனிப்புகை படர்ந்த மலை முகடுகள்.. என பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகோடு வயநாடு அவளை வரவேற்றது.. மெல்ல வயநாட்டின் அழகில் நந்தினியின் மனம் லயிக்க ஆரம்பித்தது.. இயற்கையை அதன்போக்கிலேயே விட்டு விடுவதுதான் அழகாக இருக்கும்.. வயநாட்டில் வசித்தவர்கள் அதை உணர்ந்தவர்களாக இருந்தார்கள்.. செடி கொடி புல்வெளிகளை அதன் போக்கிலேயே இடம் மாற்றாமல் வளர விட்டு அவற்றின் நடுவில் வீடுகளைக் கட்டிக் குடியிருந்தார்கள்..

தொலைவில் அரண்மனை போன்ற பங்களா ஒன்று தென்பட்டது.. வயநாட்டின் பசுமையான மரம் செடிகளுக்கு நடுவே சீனப் பெருச்சுவர் போல எழும்பி நின்ற அதன் காம்பவுண்டு சுவர் நந்தினியை பிரமிக்க வைத்தது.. மேட்டுப் பகுதியில் இருந்த அரண்மனைக்குப் போகும் மலைப்பாதை சரிவில் இருந்து பங்களாவை நோக்கி ஏறிக் கொண்டிருந்தது..

“அந்த அரண்மனை அழகாய் இருக்கில்ல..” ரவிச்சந்திரனுக்கு அதைச் சுட்டிக் காட்டினாள்..

அவன் முகத்தில் ஏதோ ஒன்று வந்தது.. அது என்ன வென்று புரியாமல் 'இவன் ஒருத்தன்.. எதுக்கெடுத்தாலும் முகத்தை மர்மமாகவே வைத்துக்குவான்..' என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டாள் நந்தினி..

"எதை வைத்து அதை அரண்மனைன்னு சொல்கிற..?"

"ஏன் பாஸ்..? இதுவே வயநாடு.. மலைப்பிரதேசம்.. அந்த அரண்மனை ஏற்றத்திலே இருக்கு.. இங்கேயிருந்து பார்த்தா உயரத்திலே வியுவெல்லாம் பிரமாதமா தெரியுது.. கோட்டை மதில் போல அதோட காம்பவுண்டு சுவர் சுத்தி வளைத்து நிற்கிறது அப்படியே டயாக்ரம் மாதிரி நம்ம கண் முன்னாலே தெரியுதே.."

"இதை வைத்து அதை அரண்மனைன்னு டிசைட் பண்ணிட்டியாக்கும்.. புத்திசாலிதான்.." சிலாகித்தான் ரவிச்சந்திரன்..

"உங்களுக்கு பொறாமை பாஸ்.." என்றாள் நந்தினி.

"எதை வைச்சு இந்த முடிவுக்கு வந்த..?"

"வேற எதை வைச்சு முடிவுக்கு வருவேனாம்..? கேரளாவிலேயே நீங்க பெரிய ஆள்ன்னா இந்த வயநாட்டில

நம்பர் ஒன் பணக்காரரா நீங்கதானே இருப்பீங்க.. உங்க வீட்டைத்தான் அரண்மனை போல இருக்கும்ன்னு மத்தவங்க சொல்லனும்னு நினைப்பீங்க.. வேற ஒரு அரண்மனையை அரண்மனைன்னு சொன்னதை உங்களாலே தாங்கிக்க முடியலை..”

“நீ சொன்னதும்தான் தெரியுது.. அந்த அரண்மனை அழகுன்னு நீ சொன்னதைத் தாங்கிக்க முடியாம எனக்கு நெஞ்சுவலி வந்திருச்சுன்னு..”

அவன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வலிப்பதைப் போல நடித்ததில் நந்தினிக்கு கோபம் வந்து விட்டது.. அது என்ன.. அவள் எதைச் சொன்னாலும் சின்னப் பப்பா சொன்னதைப் போல அவன் கேலி பண்ணுவது..?

‘போடா’ என்று உதட்டைச் சுழித்து விட்டு மேட்டுப் பகுதியில் தெரிந்த அந்த அரண்மனையைப் பார்த்தாள்.. அதன் அழகு அவளை மயக்கி ஈர்த்தது.. ‘ஆ’வென வாய் பிளந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்த போதே கார் அந்த வீட்டை நெருங்கி விட்டது.. கோட்டைச் சுவரின் மையத்தில் அந்தச் சுவருக்கு இணையான உயரத்தில் அகன்ற பெரிய இரும்பு கேட் கரும் பச்சை வண்ணத்தில் பளபளத்தது..

கேட்டின் மேற்பகுதி குத்தூட்டிகளைப் போன்ற கூர்மையான முனைகளுடன் வடிவமைக்கப் பட்டிருந்தது.. அந்த ஈட்டி முனைகள் தங்க முலாமுடன் தகதகத்தன..

“என்னமா தகதகக்குது.. நிஜத் தங்கமாய் இருக்குமோ..?” ரவிச்சந்திரனிடம் ‘டூ’ விட்டிருப்பதை மறந்து சந்தேகம் கேட்டாள் நந்தினி..

“இருந்தாலும் இருக்கலாம்.. யாருக்குத் தெரியும்..?” அவனைப் போலவே வியப்புடன் முகத்தை வைத்து க் கொண்டான் ரவிச்சந்திரன்..

“நீங்க இந்த ஊர்க்காரர்தானே..”

“எஸ்டேட்டே இருக்கு.. நீயென்ன இத்தனை சந்தேகமா கேட்கிற..?”

“உங்களுக்கு இந்த அரண்மனையைப் பற்றித் தெரியாதா..?”

“அடுத்த வீட்டைப் பத்தி நமக்கென்ன வந்தது..?” அசுவராஸ்யமாக சூள் கொட்டினான் ரவிச்சந்திரன்.. அவனை வெட்டும் பார்வை பார்த்து நொடித்து நந்தினி..

“உங்களுக்கென்ன வந்ததுன்னு சொல்லுங்க.. என்னையும் உங்களுடன் கூட்டுச் சேர்த்துக்காதீங்க..” என்றாள்..

“அடேங்கப்பா.. உனக்கு வேலை கொடுத்திருக்கிற பாஸை விட இந்த வீடு உனக்கு அத்தனை உயர்வாக ஆகி விட்டதா..?”

“இல்லையா பின்னே..? இவ்வளவு பெரிய அரண்மனை மாதிரி இருக்கிற வீட்டை நான் பார்த்ததே இல்லை தெரியுமா..”

“அப்படிங்கறே..?”

“ஆமாம்ங்கிறேன்..”

“நீ இத்தனை ஆசைப்படறதாலே ஒண்ணு செய்யலாம்..”

“என்ன..?”

“பேசாமல் இந்த வீட்டுக்குள்ளே போய் எப்படித்தான் இந்த வீடு இருக்குன்னு சுற்றிப் பார்த்துட்டு வந்துரலாம்..”

“ஹை.. நிஜமாவா சொல்கிறீங்க..?”

“நிஜமேதான்..”

காரை அந்தக் கேட்டின் முன்னால் நிறுத்தி ஹாரனை அழுத்தினான் ரவிச்சந்திரன்.. கேட்டிற்குப் பக்கத்தில் காவலாளிக்கென கட்டப்பட்டிருந்த கூண்டு போன்ற கண்ணாடி ஜன்னல் கதவுகளைக் கொண்ட சிறிய அறையில் அமர்ந்திருந்த காவலாளி ஹாரன் சப்தத்தைக் கேடடதும் எட்டிப் பார்த்தான்.. ரவிச்சந்திரனின் காரைக் கண்டதும் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தான்..

“என்ன பாஸ்.. உங்க காரைப் பார்த்ததும் இந்த வீட்டின் செக்யூரிட்டி இப்படி ஓடி வர்றான்..?” நந்தினி வியந்தாள்..

“இப்பவாவது ஒப்புக்கறியா..? இந்த ஊரோட வி.ஐ.பி. நான்தான்னு..” ரவிச்சந்திரன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்..

நந்தினி உதட்டைப் பிதுக்கி வலது கையின் பெருவிரலையும் ஆள்காட்டி விரலையும் ஒன்று சேர்த்து வளையமாக்கி பாராட்டினாள்..

“இதுக்கு நீ அட்மைர் பண்ணாம சும்மாவே இருந்திருக்கலாம்..” என்றான் ரவிச்சந்திரன்..

காவலாளி கேட்டைத் திறந்து விட்டான்.. நந்தினிக்கு அரண்மனையின் கோட்டைக் கதவுகள் திறந்ததைப் போல இருந்தது.. எங்கேயோ தொலைதூரத்தில்..

'ராஜாதிராஜ, ராஜ பராக்கிரம, ராஜ கம்பீர ரவிச்சந்திர சக்கரவர்த்தி வருகிறார்.. பராக்.. பராக்.. பராக்..' என்ற சப்தம் கேட்பதைப் போல இருந்தது..

'இவன் சக்கரவர்த்தின்னா கூட வருகிற நான் யார்..?

இளவரசியா..?' நந்தினிக்குள் சுகமான கற்பனை எழுந்தது..

'தஞ்சையின் இளவரசி..' மனதுக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.. கேட்பதற்கு நன்றாகத்தான் இருந்தது. .. அதை ரவிச்சந்திரன் ஒப்புக் கொள்ள வேண்டுமே..

'இவனைக் கேட்டா இவனுக்கு நான் சேடிப் பெண்ணுன்னு சொல்வான்..'

ரவிச்சந்திரனை விரோதமாக பார்த்தாள்.. அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளது முறைப்பில்..

“இப்ப என்ன்ன்..ன..?” என்றான்..

“ஒன்றுமில்லை..” வாயை இறுக மூடிக் கொண்டாள் நந்தினி.. மனதில் இருப்பதைச் சொல்லி விட்டு அவனுடைய கேலிக்கும் கிண்டலுக்கும் யார் ஆளாவது..? அவனே அவளைக் கேலி செய்ய சிறு வாய்ப்புக் கிடைத்தாலும் நழுவ விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வாரு, வாரு என வாரி விடுகிறானே..

‘இவனுக்கு இத்தனூண்டு சான்ஸைக் கூடக் குடுத்து விடக் கூடாது.. யாரு இவன்..?’

அந்த இவன் தான் பெரிய கில்லாடி என்பதைப் போல அவளைப் பார்த்து புருவங்களை உயர்த்தி இறக்கிக் கிறங்கடித்தான்..

‘மன்மதன்..!’ அவளுக்குள் மயக்கம் வந்தது..

கோட்டைச் சுவர் போன்ற காம்பவுண்டுக்கும் அரண்மனை போன்ற அந்த பங்களாவிற்கும் இடையே நீண்டிருந்த பாதையில் மெரூன் வண்ண சிமிண்டுக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.. பாதையின் இருபக்கமும் அணை கட்டியதைப் போல சிறிய அளவிலான தடுப்புச் சுவரிருக்க.. சுவருக்கு அப்பால் பாத்தி கட்டியது போல குரோட்டன்ஸ் செடிகளும் பூச்செடிகளும் வரிசை கட்டி நின்றிருந்தன..

செடிகளுக்கு இடையே சீரான இடைவெளியில் மெர்க்குரி விளக்குகளின் கம்பங்கள் தங்க நிறத்தில் தகதகத்தன..

“கேட்டிலும் தங்கம்.. இங்கேயும் தங்கமா..?” நந்தினி தெரியாத்தனமாக வாய் விட்டு விட...

“அறிவு ஜீவிதான்.. எங்கேயாவது விளக்குக் கம்பங்களை தங்கத்தில் செய்திருப்பாங்களா..?” என்று ஷொட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

‘இவனிடம் பல்ப் வாங்கறதே பொழைப்பாய் ஆகிருச்சு..’

மூக்கின் நுனியை தடவிக் கொண்ட நந்தினி இரவில் அந்த விளக்குகளின் பிரகாசத்தில் அந்தப் பாதையின் அழகு எப்பேற்பட்டதாக இருக்கும் என்று பார்த்து விட வேண்டும் என்று ஆர்வம் கொண்டாள்..

“ப்ளீஸ்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்..”

“எதுக்கு இத்தனை ப்ளீஸ்..?”

“நைட்ல ஒரு டைம் இந்தப் பக்கமா வந்து போகலாமா..?”

“வயநாட்டில நைட்ல வெளியே வருவியா.. குளிரில உடம்பு விறைச்சுரும்.. உங்க தஞ்சாவூரைப் போலன்னு நினைத்தியா..?”

“ஸ்வெட்டர் போட்டுக் காருக்குள்ளேயே உட்கார்ந்துக்கலாமே..”

“இத்தனை மெனக்கெட்டு இங்கே எதுக்காக வரணும்னு நினைக்கிற..? வி.ஜ.பிங்கிறதுக்காக ஒரு தரம் வீட்டைச் சுற்றிப் பார்க்க வரலாம்.. இன்னொரு தரமும் வந்தா நல்லாவா இருக்கும்..?”

“நைட் டயத்தில இந்த லைட்டுகள் எரியறப்ப இந்த பாதை எப்படியிருக்கும்ன்னு பார்க்க ஆசையாய் இருக்கு..”

குழந்தையாக கெஞ்சியவளை அதே மர்மப் பார்வை பார்த்து வைத்தான் அவன்.. அவனிடம் பேசினால் வேலைக்கு ஆகாது என்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு வெகு நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்த தோட்டத்தை ஆவலுடன் பார்த்தாள் நந்தினி..

அது தோட்டம் போலவே இல்லை.. வயநாட்டின் அழகிய பூங்காவைப் போலவே இருந்தது.. கொடிகளால் அமைக்கப்பட்டிருந்த வளைவுகளும், புல்வெளிகளின் ஓரமாக

ஆங்காங்கே போடப்பட்டிருந்த வேலைப்பாடுகள் மிகுந்த சாய்வான மர பெஞ்சுகளும், பல வண்ண மலர்ச்செடிகளும் என்று தோட்டம் ஒரு அழகான ராஜகுமாரியைப் போலக் கண்களைச் சிமிட்டி அவளைக் கவர முயன்றது.. தோட்டத்திற்கு இந்தப் பக்கம் ஓங்கி வளர்ந்திருந்த செடிகளுக்கு மத்தியில் ஓவல் வடிவில் அமைந்திருந்த நீச்சல் குளத்தைச் சுற்றி விளக்குக் கம்பங்களும் சாய்வான நாற்காலிகளும் காணப்பட்டன.. அவற்றில் ஒன்றில் அமர்ந்திருந்த முதியவர் ஒருவர் ரவிச்சந்திரனைக் கண்டதும்..

“எந்தா ரவிச்சந்திரா.. என்ட கொச்சு மோனே.. வரியோ..” என்றவாறு எழுந்து வந்தார்..

# அத்தியாயம் 58

**‘பே**ரனா..?’

அருகில் நின்றிருந்தவனை அப்போதுதான் புதிதாகப் பார்ப்பதைப் போல ஏற இறங்கப் பார்த்தாள் நந்தினி..

‘ஒருவேளை.. வயதானவர்ங்கிறதினால சும்மா ஒரு பேச்சுக்குப் பேரன்னு சொல்கிறாரோ என்னவோ..’ அவளது திருதிருப்பில் அவள் பக்கமாகக் குனிந்த ரவிச்சந்திரன்..

“ஸ்ஸ்ஸ்.. அடக்கி வாசி.. தாத்தாவின் முன்னாலே சைட் அடிக்காதே..” என்று எச்சரித்தான்..

“சைட் அடிக்கிறேனா..?” பல்லைக் கடித்தாலும் அதை மறந்து விட்டு..

“அவர் உங்க தாத்தாவா..?” என்று விசாரித்தாள் நந்தினி.. ரவிச்சந்திரன் ஆமாம் என்றும் சொல்லாமல் இல்லையென்றும் சொல்லாமல் பொத்தாம் பொதுவாக புன்னகை பூத்து வைத்ததில் நந்தினியின் குழப்பம் அதிகமானது..

‘ஆமாங்கிறானா.. இல்லேங்கிறானா..?’

அதற்குள் அவர்களைச் சமீபித்துவிட்ட பெரியவர் ரவிச்சந்திரனைப் போலவே உயரமாக களை பொருந்திய சிவந்த நிறத்துடன் கம்பீரமான முகத் தோற்றத்துடன் இருந்தார்..

‘இந்த வயசிலேயே இப்படி இருக்காரே.. யங் ஏஜில எப்படி இருந்திருப்பார்..!’

ரவிச்சந்திரனைப் போலவே இருந்திருப்பார் என்று தோன்றியது நந்தினிக்கு.. முதியவரிடம் ரவிச்சந்திரனின் சாயல் இருந்ததில் அவர் ரவிச்சந்திரனின் தாத்தாவாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள் நந்தினி.. அந்த தீர்மானத்தை உறுதி செய்து கொள்ள பெரியவரிடமே..

“நீங்க எங்க பாஸின் சொந்தத் தாத்தாவா..?” என்று கேட்டு வைத்தாள்..

“ஏய்ய்..” ரவிச்சந்திரன் தலையில் கை வைத்துக் கொண்டு..

“ஸாரி தாத்தா..” என்று பெரியவரிடம் மன்னிப்புக் கேட்டான்.. நந்தினியை கூர்மையான பார்வையுடன் கண்ணாடியை சரிசெய்து கொண்டு உற்றுப் பார்த்த

பெரியவரின் பார்வையில் இருந்த கண்டிப்பில் நடுநடுங்கிப் போன நந்தினி..

'இந்த ஆள் நிச்சயமா இவனோட தாத்தாவேதான்..' என்று உறுதி செய்து கொண்டாள்..

"யாருடா இந்தப் பெண்குட்டி..?" என்று நந்தினியை கோபம் கொள்ள வைக்கும் கேள்வியைக் கேட்டார் அந்தத் தாத்தா..

"பெண் குட்டியா..?" நந்தினி சிலுப்பிக் கொண்டு சண்டைக்குத் தயாராக ஊடே புகுந்த ரவிச்சந்திரன்..

"தாத்தா.. இது நந்தினி.. தமிழ்நாட்டிலே தஞ்சாவூரில பிறந்து வளர்ந்த பொண்ணு.. சென்னையிலே இன்ஜினியரிங் படிச்சிருக்கு.. நம்ம எஸ்டேட்டில வேலை பார்க்கன்னு வந்திருக்கு.. நான் என்னோட பெர்சனல் செக்கரட்டரியா அப்பாயிண்ட் பண்ணியிருக்கேன்.." என்று அறிமுகம் செய்து வைத்தான்..

"பெர்சனல் செக்கரட்டரியில்ல.. பெர்சனல் மேனேஜர்.." தாத்தாவை மறந்து பேரனிடம் சண்டை போடக் கிளம்பினாள் நந்தினி..

“நான் பி.டெக் படிச்சவளாக்கும்..”

கோபத்தில் முகம் சிவக்க நின்றிருந்தவளை ஊன்றிப் பார்த்த பெரியவர் ரவிச்சந்திரனிடம்..

“ஈ பெண்குட்டி எந்து பறயுன்னு..?” என்று கேட்டு வைத்தார்..

“குட்டின்னு பறய வேணாம்..” அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள் நந்தினி..

“குட்டியை குட்டின்னு பறயாம எங்ஙன விளிக்கிறது..? எந்தா ரவிச்சந்திரா.. ஈ பெண்குட்டிக்கு எதனால இத்தினி கோபம்..?”

“அது ஒண்ணுமில்ல தாத்தா.. அவங்க ஊரில பெண்களை குட்டின்னு அழைக்க மாட்டாங்க.. இந்த ஆடு, மாடு போடுகிற குட்டிகளைத்தான் ஆட்டுக்குட்டி, கன்றுக்குட்டின்னு அழைப்பாங்க..”

“இத ஞான் அறிஞ் ..? போடா.. போடா..”

“வா.. போயிரலாம்..”

நந்தினியின் கையைப் பிடித்து இழுத்தபடி அரண்மனை போன்ற அந்த பங்களாவின் போர்டிகோவில் நடந்தான் ரவிச்சந்திரன்..

போர்டிகோவே நூறு கார்களை நிறுத்தும் அளவிற்கு பரப்பளவு கொண்டதாக இருந்தது.. வயநாட்டு மலையையே வளைத்துக் கட்டியதைப் போல இருந்த அந்த அரண்மனையில் கார்களை நிறுத்துவதற்காக பக்கவாட்டில் குதிரை லாயங்களைப் போல வரிசை கட்டிய போர்டிகோக்கள் இருந்தன..

“இது வீடா இல்லை ஸ்டார் ஹோட்டலா..?” பிரமிப்பு தாங்காமல் கேட்டு விட்டாள் நந்தினி..

“வீடேதான்..” என்ற ரவிச்சந்திரன்..

“வருஷத்தில பாதிநாள் இங்கே மழை கொட்டிக்கிட்டு இருக்கும்.. கார்களை நனைய விட முடியாது.. எல்லாம் வெளிநாட்டுக் கார்கள் வேற.. வேலை வைத்துட்டா ஸ்பேர் பார்ட்டுகளுக்கு அலைந்தாகனும்.. அத்தனை சுலபத்தில கிடைத்து விடாது.. அதனாலதான் கார்களுக்கு தனித்தனி போர்டிகோ ரூம்ஸ்..” என்று விளக்கம் சொன்னான்..

“அவர் உங்க தாத்தாவா..?”

“யெஸ்.. ராஜா அருள்மொழிவர்மன்.. பாட்டி பேரு யாழினிதேவி..”

“இந்த ராஜா, தேவிங்கிறதெல்லாம் ராஜவம்சங்கிறதினால வர்ற அடைமொழிகளா..?”

“கண்டுபிடிச்சுட்டியே.. கிரேட்தான்.. போ..”

“கிரேட்டுமில்ல.. ஒண்ணுமில்ல.. எத்தனை சினிமாக்களில பார்த்திருப்பேன்..? எத்தனை கதைகளில படிச்சிருப்பேன்..? இதுவாகத்தான் இருக்கும்ங்கிற கெஸ்ஸிங்கில எடுத்து விட்டதுதான்..”

“ஆஹா.. உன்னோட அறிவோட லெவலை அப்பப்ப காட்டி என்னை அசத்தற பாரு.. அங்கே நிற்கிற நீ.. இந்த வினித் மட்டும் என் கையில் கிடைச்சா..”

“என்ன செய்வீங்க..?”

“என்ன செய்ய முடியும்..? நன்றி தான் சொல்லித் தொலைக்கனும்..”

“இது உங்க வீடுதானே..?”

“அவர் என் தாத்தாதான்னு ஒப்புக்கிட்ட பின்னாலும் இப்படி சந்தேகம் கேட்டு உன் அறிவை நீ புரூவ் பண்ணக் கூடாது நந்தினி..”

‘மறுபடியும் பல்பா..?’

நந்தினி வாயை இறுக மூடிக் கொண்டு அரண்மனை போன்ற அந்த பங்களாவைப் பார்த்தாள்.. போர்டிகோவிலிருந்து உயர்ந்த படிகள் நீண்டு அமைந்திருந்தன.. காம்பவுண்டு கேட்டைப் போலவே பெரிய நிலை வாசல்.. தங்கப் பூண்கள் பதித்த அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய தேக்கு மரக்கதவு.. படிகளின் முடிவில் நிலை வாசலுக்கு முன்னால் கரும்பச்சை கிரானைட் கல் பதித்தி பெரிய வராந்தா.. அதில் வரிசையாகப் போடப்பட்டிருந்த விலையுயர்ந்த மர சோஃபாக்கள்.. அதில் பரப்பப் பட்டிருந்த குஷன்கள்..

“அதிகமா மழை பெய்கிற ஊர்ங்கிறதினால மரங்களில செய்யப்பட்ட பர்னிச்சரை வெளியே போட்டிருப்பாங்க..

ஈரப்பசைக்கு மர சோஃபா பெட்டர்..” என்றான் ரவிச்சந்திரன்.. நிலைவாசலைத் தாண்டி பங்களாவுக்குள்

பிரவேசித்தால் அகலமான மைதானம் போன்ற ஹால் அவளை அயர வைத்தது..

மூல குழுக்கள் பிரிந்து அமர்ந்து விவாதிக்கத் தோதாக இருக்க வேண்டும் என்று அமைக்கப் பட்டதைப் போல ஆங்காங்கே வட்ட வடிவத்தில் சோஃபாக்கள் போடப் பட்டிருந்தன.. ஹாலின் நடு மையத்தில் சிகப்பு வண்ண கார்பெட் பரப்பப் பட்டதைப் போன்ற வடிவமைப்புடன் மாடிப்படிகள் உயர்ந்து நடு மையத்தில் இரண்டாகப் பிரிந்து மாடியின் இருபக்கமும் சென்றடைந்தன.. இருபக்க மாடியிலும் மரப் பூண்களைக் கொண்ட தடுப்புச் சுவர் இருந்தன.. அங்கே நின்று பார்த்தால் ஹாலைப் பார்க்க முடியும்.. ஹாலின் மேற் கூரையில் அலங்கார லஸ்தர் விளக்குகள் கொத்துக் கொத்தான அலங்கார வேலைப் பாடுகளுடன் தொங்கிக் கொண்டிருந்தன.. மாடிப் படிகள் இரண்டாகப் பிரிந்த இடத்தில்.. சுவரில்.. வரிசை கட்டி மேலிருந்து கீழாக அழகுடன் ராஜவம்சத்தினரின் உருவப் படங்கள் மாட்டப் பட்டிருந்தன.. ஒவ்வொரு படத்திற்கும் மேலே அலங்கார குழல் விளக்கு..

உண்மையாகவே ‘ஆ’ வென வாய் பிளந்து ஆச்சரியமாக அவைகளைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள் நந்தினி.. அந்த வீட்டின் அழகு அவளை மயக்கி மருள வைத்தது.. இதுபோன்ற

அரண்மனைக்கு சொந்தக்காரனாய் இருப்பவனுக்கு திமிரும், தெனா வெட்டும் இருக்கத்தானே செய்யும் என்று அவள் நினைத்துக்கொண்டாள்..

“இப்படி வாய் பிளக்காதே..” சன்னக் குரலில் முணுமுணுத்தான் ரவிச்சந்திரன்..

“இது உங்க வீடுன்னு சொல்லாம ஏமாத்திட்டிங்க பார்த்தீங்களா.. என்னை சின்னப் பப்பா போலவே ட்ரீட் பண்றீங்க பாஸ்..” நந்தினி குறைபட்டுக் கொண்டாள்..

“பப்பாவை பப்பாவா ட்ரீட் பண்ணம பாட்டி போலவா ட்ரீட் பண்ணுவாங்க..?” ரவிச்சந்திரன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே..

“ரவி.. எண்ட கொச்சு மோனே.. இவிடத்த வர இப்பத்தான் நினக்கு வழி தெரிஞ்சதோ..”

அழகான மூதாட்டி ஒருத்தி வாத்சல்யத்துடன் ரவிச்சந்திரனின் முகம் தொட்டு கன்னம் வழித்து முத்தமிட்டாள்.. நந்தினிக்கு பொறாமையாக இருந்தது..

‘யார் இந்த வல்லிய சுந்தரி..? திவ்ய சொரூப பெண்குட்டி..!’ மனதுக்குள் மலையாளம் தோன்ற

மானசீகமாக தன் பிடறியில் அடித்துப் பிழை திருத்தம் செய்தாள் நந்தினி.. அடிவாங்கிய மனது தெளிவான செந்தமிழில்..

‘யார் இந்த அழகுப் பாட்டி..?’ என்று கேட்டு வைத்தது..

“இப்படி முறைக்காதே.. இவங்கதான் என்னோட பாட்டி..” முணுமுணுத்தான் ரவிச்சந்திரன்..

“யு மீன்.. யாழினி தேவி..?” நந்தினியும் முணுமுணுத்தாள்..

“பெயரைச் சொன்னாப் பல்லைக் கழட்டிருவேன்..” சிரித்த முகம் மாறாமல் முணுமுணுப்பாக எச்சரித்தான் அவன்..

“யு மீன் யாழினி தேவிப் பாட்டி..? ஆம் ஐ கரெக்ட்..” நந்தினியும் பதில் முணுமுணுப்பைத் தந்தாள்..

“உன்னைத் திருத்தவே முடியாது..” என்ற ரவிச்சந்திரனின் காதைப் பிடித்துத் திருகிய யாழினி தேவி..

“யாரைடா திருத்த முடியாது..? என்னையா..?” என்று மிரட்டினாள்..

ரவிச்சந்திரனின் காதைப் பிடித்துத் திருகியதாலேயே யாழினி தேவியை நந்தினிக்கு மிகவும் பிடித்து விட்டது.. அதனால்..

“ஈ பெண்குட்டி யாரானு..?” என்று கேட்ட பாட்டியின் ‘பெண்குட்டி’ யை பொருட் படுத்தாமல் குனிந்து அவள் காலைத் தொட்டு வணங்கி நிமிர்ந்தாள்..

“உனக்கு இந்த மரியாதையெல்லாம் தெரியுமா..?”

ரவிச்சந்திரன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

“சுகமானு இருக்கோணும் கொச்சு மோளே.. எந்திரி..” பிரியத்துடன் நந்தினியை அனைத்துக் கொண்டாள் யாழினி..

“பாருடா.. பார்த்த செகண்டில எங்க பாட்டிக்கு பேத்தியாகிட்ட..” ரவிச்சந்திரன் கேலி செய்தான்..

“கொச்சு மோளேன்னு சொன்னா பேத்தின்னு மீனிங்கா..?”

“யெஸ்..”

“பாட்டி தமிழும் பேசறாங்களே..”

“நாங்க தமிழ் பேசற மலையாளிகள்.. ராஜா ரவிவர்மனின் தமிழ் மனைவியோட வம்சா வழியில

வந்தவங்க.. எங்க வீட்டில செந்தமிழ்தான் மெயினா இருக்கும்.. மலையாளம் அடிஷனல்தான்..”

“வல்லிய சந்தோஷம்..”

“அசடு வழியுது துடைத்துக்க.. இங்கே அரைகுறை மலையாளம் பேசிக் காலத்தைக் கழித்துரலாம்ன்னு பிளான் பண்ணிட்ட போல..”

“நான் என்ன காலம் பூராவும் வயநாட்டிலா இருக்கப் போகிறேன்..? எங்க அப்பாம்மா மனசு மாறினவுடனே தஞ்சாவூருக்குப் பறந்து போயிற மாட்டேனா..?”

நந்தினிக்கு பிறந்த ஊரைப் பற்றிய ஏக்கம் வந்து விட்டுது..

‘எப்ப எங்க ஊருக்குத் திரும்பிப் போவேன்..?’

ரவிச்சந்திரனின் முகம் மாறிவிட்டது.. லேசான கடினம் முகத்தில் பரவ அவள் கேட்டதுக்குப் பதில் சொல்லாமல் யாழினிக்கு அவளை அறிமுகப் படுத்தி வைத்தான்..

“பாட்டி.. இது நந்தினி..”

“நம்ப பேரனோட பெர்சனல் செக்கரட்டரி..”

வாசலில் இருந்து குரல் வந்தது.. குரலைத் தொடர்ந்து கம்பீரமான அருள்மொழி வர்மன் வந்தார்.. காதலுடன் மனைவியைப் பார்த்தார்.. பதிலுக்கு அதே ஆசை குறையாமல் யாழினியும் பார்த்து வைக்க.. அங்கிருக்கும் இளஞ்ஜோடி அவர்களா இல்லைத் தாங்களா என்று நந்தினிக்கு சந்தேகம் வந்து விட்டது..

“நிங்க எங்ஙன அறிஞ் ..?” யாழினி கொஞ்சினாள்..

மஞ்சள் கலந்த சந்தன நிறத்திலிருந்தவளின் முகத்தில் இருந்த தேஜஸ் நந்தினியை ஈர்த்தது... கேரளத்து மகாராணியின் அழகை அவள் முகத்தில் கண்டாள் நந்தினி..

‘இவன் வீட்டிலே பாட்டியே இவ்வளவு அழகா இருந்தா பேத்தி எவ்வளவு அழகாய் இருப்பா..’

நந்தினி நினைத்து முடிப்பதற்குள்..

“அண்ணா..” என்ற துள்ளல் குரலுடன் மாடிப்படிகளில் புள்ளி மானைப் போலக் குதித்தோடி வந்து ரவிச்சந்திரனின் கழுத்தைக் கட்டித் தொங்கினாள் ஒரு இளம் பெண்..

“ரம்ய மாலினிக்கு சேட்டன்தான் உயிர்.. மத்தவங்கள்ளாம் அப்புறம்தான்..” யாழினி முறுவலித்தாள்..

‘இவள் இவனோட தங்கையா..?’

அப்படியொரு பேரழகை நந்தினி பார்த்ததே இல்லை.. வியக்கத்தகு பேரழகுடன் இருந்தாள் ரம்ய மாலினி.. மாசு மருவற்ற ரோஜா வண்ணச் சருமம்.. அகன்ற கருவிழிகள்.. அடர்ந்த கருமையான நீண்ட கூந்தல்.. அரிசிப்பல் வரிசை.. அப்பேற்ட்ட பேரழகியின் அண்ணன் நந்தினியைப் போன்ற பட்டப் பங்கரையிடம் மயங்குவதைப் போலப் பாவனைகள் செய்தானா..?

‘நானிருக்கேனே.. இவன் சொன்னதைப் போலக் கடைஞ்செடுத்த வடிகட்டின முட்டாள்.. பேரழகிகள் மத்தியிலே பிறந்தவனுக்கு நானெல்லாம் பொருட்டேயில்லை..’

அவனுடைய தங்கை என்ன.. பாட்டியின் பக்கத்தில் கூட நந்தினியால் நிற்க முடியாது எனும் போது அவன் அவளை சைட் அடிப்பதாக நந்தினி கிஞ்சித்தும் எண்ண முடியாது..

“ரம்யா.. ஷி இஸ் மை பெர்சனல் செக்கரட்டரி..”

நந்தினியை விஷமப் பார்வை பார்த்தபடி தங்கை கக்கு நந்தினியை அறிமுகம் செய்து வைத்தான் ரவிச்சந்திரன்..

‘இதுக்கு நான் பி.டெக் படித்தே இருக்க வேண்டாம்..’ வெறுத்துப் போனாள் நந்தினி..

‘‘வாட் எ பியூட்டிபுல் செக்கரட்டரி யு ஹேவ்..!’’

ரம்ய மாலினி வியந்தபோது இவள் யாரைச் சொல்கிறாள் என்று சுற்று முற்றும் பார்த்து வைத்தாள் நந்தினி..

‘‘மக்கு.. அவள் உன்னைத்தான் அழகுன்னு அட்மைர் பண்றா.. யாருன்னு தேடி என் மானத்தை வாங்காதே..’’

ரம்ய மாலினியிடம் சிரித்தபடி நந்தினியிடம் தாழ்ந்த குரலில் முணுமுணுத்தான் ரவிச்சந்திரன்..

‘இவ என்னையா பியுட்டிபுல்ன்னு சொல்றா..?’

இமைகொட்டி விழித்தாள் நந்தினி.. அவளால் நம்பவே முடியவில்லை.. இப்படிக்கூட அதிசயம் நடக்குமா என்று மயக்கமே வந்து விட்டது..

# அத்தியாயம் 59

“**கி**ளாட் டு மீட் யு..”

அவள் பெயர் என்னவென்று அறிவதற்காக ‘யு’ வில் ரம்ய மாலினி சற்று அழுத்தம் கொடுத்தபடி கையை நீட்டினாள்.. கனவில் மிதப்பவளைப் போல எதுவும் பேசாமல் பேஸ்தடித்தவளாய் பேந்தப் பேந்த விழித்தபடி ரோபோ போல ரம்ய மாலினியின் கைளைப் பிடித்துக் குலுக்கினாள் நந்தினி.. பெயரைச் சொல்வாள் என்ற எதிர்பார்ப்புடன் நந்தினியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ரம்ய மாலினி அவள் எதுவும் பேசாமல் கையை மட்டும் குலுக்கியதில் புருவங்கை ள உயர்த்தி ரவிச்சந்திரனைப் பார்த்தாள்..

சிரிப்பை வலுக்கட்டாயமாக இதழ்களில் ஒட்டிய படியே நந்தினியின் பக்கம் குனிந்த ரவிச்சந்திரன்..

“அவதான் உன் பெயரைக் கேட்கிறாளே.. சொல்ல வேண்டியதுதானே..” என்று சினந்தான்..

“எவ..?” நந்தினி திருதிருத்தாள்..

“என் தங்கை..” அவன் அறிவுறுத்தினான்..

“எப்போக் கேட்டாங்க..”

“இப்போத்தான்.. ‘யு’ன்னு சொல்லிக்கிட்டே உன் முகம் பார்த்தா உன் பெயரைக் கேட்கிறாங்கன்னு அர்த்தம்..”

“அப்படியா..? இது எனக்குத் தெரியாதே..”

“உனக்கு எதுதான் தெரிந்திருக்கு..? மக்கு.. இதில மேடத்தை என் பெர்சனல் செக்கரட்டரின்னு சொல்கிறது தப்பாம். பெர்சனல் மேனேஜர்ன்னு சொல்லனுமாம்.. ஏன்னா மேடம் ‘பி... டெக்..’ படித்திருக்காங்களாம்.. உனக்கெல்லாம் சீட் கொடுத்திருக்காங்க பாரு.. அவங்களைச் சொல்லனும்..”

ரம்ய மாலினியின் கண்கள் சுருங்கின.. தாழ்ந்த குரலில் வழக்கடித்துக் கொண்டிருந்த நந்தினியையும் ரவிச்சந்திரனையும் சுவராஸ்யத்துடன் வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்.. அதை கண்டு கொண்ட ரவிச்சந்திரன் மழுப்பலான சிரிப்புடன்..

“ச்சும்மா.. ஒரு ஸ்மால் டிஸ்கஷன்..” என்றான்..

“நான் எதுவும் கேட்கலையே..” என்ற ரம்ய மாலினி நந்தினியை ஆராய்ச்சியாக பார்த்தாள்..

அவளது ஆராயும் பார்வையில் நந்தினியின் இதயம் படபடத்தது..

‘ஏன் இப்படிப் பார்க்கிறா..?’

அறியாத ஊரில்.. தெரியாத மனிதர்களின் நடுவில் நிற்கும் நிலைமை கொடுமையானது என்று தோன்றியது நந்தினிக்கு..

“என் பெயர் நந்தினி..” தயக்கத்துடன் சொன்னாள்..

“சுந்தரமான பெயரானு..” என்றாள் யாழினி..

“உங்க பெயரை விடவா என் பெயர் அழகு..? யாழினி.. எவ்வளவு அழகான பெயர் தெரியுமா பாட்டி.. யாழ்ன்னா இசை கொடுக்கும் வீணை வகையைச் சேர்ந்தது.. யாழினீ.. இசையே வடிவானவங்க..” ரசித்துச் சொன்னாள் நந்தினி..

“வாவ்.. நீங்க இந்த அளவுக்குப் பேசுவீங்களா.. அமைதியா இருக்கவும் ‘ஷை’ டைப்போன்னு நினைத்தேன்..” கை தட்டினாள் ரம்ய மாலினி..

யாழினி பாசத்துடன் நந்தினியின் கன்னங்களைத் தடவிக் கொஞ்சியதில் நந்தினியின் முகம் சிவந்து விட்டது..

“நானும் அப்படித்தான் நினைத்தேன்..” என்று யாழினி பேத்தியுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ள..

“வெளித்தோற்றத்தைப் பார்த்து யாரையும் எடை போடக் கூடாதுன்னு நீங்கதானே சொல்வீங்க பாட்டி.. இப்ப நீங்களே ஏமாறப் பார்க்கறீங்களே..” என்று ஆதங்கப் பட்டான் ரவிச்சந்திரன்..

“எண்ட கொச்சுமோன் எந்தா பறயுனு..?” யாழினி கேட்க..

“பாட்டி.. இவங்களுக்கு மலையாளம் தெரியாது.. நமக்குத் தமிழ் தெரியும்.. பாவம்.. இவங்களைச் சோதிக்காம தமிழில பேசிருங்களேன்.. பிழைத்துப் போகட்டும்..” என்று ரம்ய மாலினி சிபாரிசுக்கு வந்தாள்..

“நான் என்ன சொல்கிறேன்னா.. இதோ இருக்கிறாளே.. நந்தினி.. இவ பார்க்கத்தான் ஸாஃப்ட் லேடி.. பழகிப் பார்த்தாத்தான் தெரியும்.. பக்கா கேடின்னு..” என்றான் ரவிச்சந்திரன்..

நந்தினிக்கு வந்த கடுப்பில் கையில் கிடைப்பதை அள்ளி அவன் மீது வீசி விட வேண்டும் போலதான் இருந்தது.. அப்படி வீசி அவன் சொன்னதை உண்மையென்று நிரூபணம் பண்ணிவிட வேண்டாமென்ற ஒரேயொரு காரணத்தினால் அமைதி காத்தாள்..

பேரன் சொன்னதை ஏற்றுக் கொள்ளாமல் தலையை ஆட்டி.. “சேச்சே..” என்று மறுத்த யாழினி..

“பாவம்.. இவ பச்சை மண்ணு...” என்றாள்..

“யாரு..? இவளா..? பச்சை மண்ணா..? நினைத்துக்கிட்டே இருங்க..” என்றான் ரவிச்சந்திரன்..

மற்றவர் அறியாமல் ரவிச்சந்திரனின் முழங்கையில்

‘நறுக்’கென்று கிள்ளி விட்டு ஏதும் அறியாதவள் போல் தள்ளி நின்று கொண்டு ஓரக் கண்ணால் அவனை முறைத்தாள் நந்தினி..

‘படவா ராஸ்கல்.. போட்டா கொடுக்கிற..?’

கிள்ளப்பட்ட முழங்கையைத் தடவியபடி அவளைப் பார்த்த ரவிச்சந்திரனின் விழிகளில் ரகசி ய சந்தோஷம் இருந்தது..

‘இவனென்ன இப்படிப் பார்க்கிறான்.. வலிக்கலையா..?’

அழுத்தமாகக் கிள்ளவில்லையோ என்ற மனச் சஞ்சலத்திற்கு அவள் ஆளானாள்.. நகம் பதியத்தானே கிள்ளினாள்.. வலியால் துடித்துப் போவதற்குப் பதில் அவன் ‘ஜில்’ லென்று இருப்பதைப் போல பற்களைக் காட்டுகிறானே..

“வேர் இஸ் மாம் அண்ட் டாட்..?”

“கோவிலுக்குப் போயிருக்காங்க சேட்டா.. இல்லையில்லை.. அண்ணா..”

“ஒண்ணு சேட்டான்னு விளி.. இல்லேன்னா அண்ணான்னு கூப்பிடு.. எதுவெண்டாலும் இந்தச் சேட்டனுக்கு இஷ்டம்தான்.. மனசிலாயி..?”

“அண்ணான்னே கூப்பிடறேன்.. நந்தினி மிரளக் கூடாது பாருங்க..”

“இவ மேல நீ வைக்கிற ஓவர் கான்ஃபிடென்ஸ் உடம்புக்கு ஆகாது ரம்யா.. சொல்லிட்டேன்.. இவ ஊரையே மிரள வைப்பா..”

“சேச்சே.. இவங்களைப் பார்த்தா சாது போல இருக்காங்க.. நீ ஏன் இவங்களை வாரிக்கிட்டே இருக்கே..?”

“ம்ம்ம்.. அப்படியொரு வேண்டுதல் எனக்கு..”

“எனக்கும் அப்படித்தான் தோணுது..”

ரம்ய மாலினி நந்தினியை தோழமையுடன் அணைத்துக் கொண்டாள்.. அவள் காட்டிய தோழமை நந்தினியின் மனதுக்கு இதமாக இருந்தது.. தெரியாதவர்கள் வீட்டில் தங்க

வேண்டி வந்து விட்டதே என்ற தவிப்பு மறைந்து ஓர்விதமான பாதுகாப்புணர்வு ஏற்பட்டது..

வாசலில் கார் சப்தம் கேட்டது..

“நிண்ட அச்சனும் அம்மையும் வருகிறாங்க போல..” என்றாள் யாழினி..

நந்தினியைப் பார்த்து சிநேகிதமாக சிரித்த ரம்ய மாலினி..

“பாட்டி இந்த அளவுக்கு தமிழ் பேசறதே பெரிது.. அவங்களாலே மலையாளக் கலப்பில்லாம பேச முடியாது..” என்றாள்..

“ஸோ வாட்..? அவங்களுக்கு எப்படிப் பேசப் பிடிக்குதோ அப்படியே பேசட்டும்.. நானென்ன கெஸ்ட்தானே..”

இணக்கமாக ரம்ய மாலினியிடம் பேசிக் கொண்டிருந்த நந்தினியை இணக்கமில்லாமல் முறைத்து வைத்தான் ரவிச்சந்திரன்..

‘என்ன தவறு செய்தேன்..? - அதுதான் எனக்கும் புரியவில்லை..’

நந்தினியின் மைண்ட் வாய்ஸ் சோக ரசகம் பிழிந்தது..

‘ஜிவுஜிவு’ என மிளகாய்ப்பழம் போல மாறிவிட்ட அவனது முகத்தைப் பார்க்க முடியாமல் வாசலைப் பார்த்தாள் நந்தினி.. அங்கே தம்பதி சமேதராக வந்து கொண்டிருந்த ரவிச்சந்திரனின் பெற்றோரைப் பார்த்ததும் அடுத்த விசாரணை ஆரம்பமா என்று மனது ‘பதக்.. பதக்..’ கென்று அடித்துக் கொண்டது..

அழகே உருவாக இருந்த ரவிச்சந்திரனின் அம்மா முகத்தில் தாய்மையின் பிரவாகம் ஒளிர்ந்தது.. கனிவுடன் அவள் நந்தினியைப் பார்த்துச் சிரித்த சிரிப்பு அறிமுகம் ஆகாத புதியவள் ஒருத்தி சிரிக்கின்ற சிரிப்பாக இல்லாமல் காலம் காலமாக பழகியவள் சிரிக்கும் வாத்சல்யச் சிரிப்பாக இருந்தது..

“வரனும் வீணா.. எந்தா இத்தினி மணிக்கறு மோளே..? கோவிலில் திவ்ய தரிசனம் கிட்டி..? வல்லிய கூட்டமோ..?” மருமகளிடம் கனிவாக விசாரித்தாள் யாழினி..

“புது வருஷமில்லா.. கோவிலில் நிறையக் கூட்டம்தான் அத்தை.. ஆனா திவ்யமா தரிசனம் கிட்டுச்சு..” என்ற வீணா நந்தினியைப் பார்வையால் வருடியபடி ..

“இந்தப் பெண் யார் ரவி..? உன்கூட வந்திருக்கிறான்னு ஓமனா சொன்னா..” என்று மகனிடம் கேட்டாள்..

‘அப்பாடி.. இவங்க ‘ஈ பெண்குட்டி ஆரானு’ன்னு கேட்டு என்னைக் குட்டியாக்கலை..’

அதனாலேயே நந்தினிக்கு வீணாவை மிகவும் பிடித்து விட்டது..

“என் பெர்சனல் செக்கரட்டரி அம்மா.. புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள்.. தனியாக தங்க வைக்க இஷ்டமில்லை..” ரவிச்சந்திரன் விளக்கம் சொல்வதற்குள்..

“வயதுப் பெண்ணைத் தனியாக தங்க வைக்கனுமா..? ஏன்..? நம்ம வீட்டில் இடமா இல்லை..?” என்று மகனைக் கடிந்து கொண்டாள் வீணா..

‘பார்த்தாயா..?’ நந்தினியிடம் விழிகளால் கேள்வி கேட்டபடி..

“உங்களிடம் திட்டு வாங்க முடியாதுன்னுதான் நம்ம வீட்டிலேயே தங்கிக்கட்டும்ன்னு அழைத்துக்கிட்டு வந்தேன்ம்மா..” என்றான் ரவிச்சந்திரன்..

“நல்ல வேலை செய்தாய்..”

மகனைப் பாராட்டிய வீணா கையிலிருந்த வெள்ளி பூஜைக் கூடையிலிருந்த குங்கும பிரசாதத்தை எடுத்து நந்தினியின் நெற்றியில் இட்டு விட்டாள்.. அதைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்திராத நந்தினியின் கண்கள் கலங்கி விட்டன..

“உனக்கு எந்த ஊர்ம்மா..?” பாசத்துடன் அவள் கேட்டதும்..

“எங்க ஊர் தஞ்சாவூர்ங்க.. படிச்சது சென்னை..” என்று ஒட்டுமொத்த ஜாதகத்தையும் கொட்டிக் கவிழ்க்கத் தயாராகி விட்டாள் நந்தினி..

“பாவம்.. கஷ்டப்படற ஃபேமிலிம்மா.. அப்பா சின்னதா பெட்டிக்கடை வைத்திருக்காராம்.. அம்மா இட்லிக் கடையாம்.. தம்பி சின்னவனாம்.. இந்தப் பெண் மெரிட்ல பி.டெக் சீட் கிடைத்து இப்பத்தான் படிச்சு முடிச்சிருக்கு.. ரிசல்ட்கூட வரலை.. குடும்பச் சூழ்நிலையினாலே உடனடியா வேலைக்குச் சேர வேண்டிய கட்டாயம்.. இவ படிப்புக்கு இவளோட அப்பா வாங்கியிருக்கிற கடனை அடைக்கனுமாம்.. அடமானத்தில இருக்கிற இவங்க வீட்டை மீட்கனுமாம்.. பிளாஸ் டூ படிச்சிருக்கிற தம்பியை மேலே படிக்க வைக்கனுமாம்..”

குரலை உயர்த்தி இறக்கி ஏற்ற இறக்கத்துடன் ரவிச்சந்திரன் கதை சொன்ன விதத்தில் பாவம் அந்த ஏழைப் பெண் என்று நந்தினியே உருகி விட்டாள்.. அதன் பின்னர்தான் அந்த ஏழைப்பெண் யாரென்று யோசித்துப் பார்த்தாள்.. அது அவள்தான் என்பது நினைவுக்கு வந்ததில்..

‘அடப்பாவி..!’ என்று விக்கித்துப் போய் நின்று விட்டாள்.. நந்தினியின் அப்பா பெட்டிக்கடை வைத்திருக்கிறாரா..? அம்மா இட்லிக்கடையா..? தம்பியை மேலே படிக்க வைக்க இவள் வேலைக்குப் போய் சம்பாதித்தாக வேண்டுமா..?

இவற்றை மட்டும் மேகநாதனும் வெண்ணிலாவும் கேட்டிருக்க வேண்டும்.. ருத்ர தாண்டவமே ஆடியிருப்பார்கள்.. நந்தகுமாரைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. வீடு கட்டிக் களம் புகுந்திருப்பான்..

‘வாயைத் திறக்காதே..’

ரவிச்சந்திரனின் விழிகளில் தெரிந்த எச்சரிக்கையில் அலைகடலாய் கொந்தளித்த மனதை அமைதிப் படுத்த முயன்றபடி பல்லைக் கடித்த வண்ணம் பொறுமை காத்தாள் நந்தினி..

“ஐயோ.. பாவம்..”

பரிதாபத்துடன் வீணா நந்தினியைப் பார்த்தாள்.. அக்கினிப் பிழம்பாய் நந்தினி ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவனோ புன்னகை மன்னனாக..

‘கூல்..’ என்று பார்த்தான்..

“இந்த வயதில் இத்தனை கஷ்டமா..? நீ கவலைப்படாதேம்மா.. இந்த வீட்டை உன் வீடா நினைத்துக்க.. சென்னைக்குத் திரும்பிப் போகிற வரைக்கும்.. நீயும் இந்த வீட்டில ஒருத்திதான்..”

வீணா சொன்னதை பரிவான புன்னகையுடன் அங்கீகரித்த ரவிச்சந்திரனின் அப்பா பெயர் ரவிவர்மனாம்.. நந்தினியிடம் ரம்ய மாலினி சொன்னாள்..

‘தாத்தா அருள்மொழி வர்மன்.. அப்பா ரவிவர்மன்.. நிஜமாவே சோழ, சேர மன்னர்கள் மத்தியிலே மாட்டிக் கிட்டதைப் போலதான் இருக்கு..’

“சாயா குடிச்சோ..?”

வீணா ரம்ய மாலினியிடம் கேட்க.. அவள்.. “இல்லை அம்மே..” என்றாள்..

“சாய் கொண்டு வரட்டே..”

அங்கே எட்டிப் பார்த்துக் கேள்வி கேட்ட இளம்பெண்தான் ஓமனாவாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. ரவிச்சந்திரனும் நந்தினியும் காரை விட்டு இறங்கும்போது அந்தப் பெண் தோட்டத்திலிருந்து வீட்டுக்குள் மின்னலைப் போல ஓடினாள்..

ஒரு நொடி ‘வாம்மா.. மின்னல்..’ என்று அழைக்கலாம் போல நந்தினிக்கு வாய் வரை வார்த்தைகள் வந்து விட்டன..

அங்கே அருள்மொழிவர்மனும், ரவிவர்மனும் நின்று கொண்டிருந்ததாலும்.. நந்தினியை ‘பச்சை மண்..’ என்று யாழினிப் பாட்டி நம்பிக் கொண்டிருப்பதாலும் வாயைத் திறக்காமல் அமைதிகாத்தாள்..

“சாய் கொண்டு வரட்டோன்னு பறயுனு..? ஓடு.. ஓடு.. ஆ நிமிஷத்துல சாய் இவ்விடத்தே வரனுமாக்கும்..” யாழினி ஓமனாவை ஓட ஓட விரட்டினாள்..

‘டீயை எதற்காக ‘சாய்..’ என்று சாய்க்கிறார்கள்..’ என்று நந்தினி விசனம் கொண்டாள்..

அந்த விசனம் ஒரு புறமிருக்க.. குடிப்பதற்கான சுடுபா னத்தை காபியாக கொடுக்காமல் ‘டீ’யாகவே

தந்தருள்கிறார்களே என்ற விசனம் இன்னொரு புறம் ஏற்பட்டது..

அவளுக்கு காபிதான் பிடிக்கும்.. அவள் கோழிக்கோடில் வந்து இறங்கியது முதல் ‘காபி’ என்ற பானம் காணாமல் போய் ‘சாய்’ எனும் ‘டீ’யே முன்னிலை வகித்தது..

“ஏன் உங்க கேரளாவில ‘டீ’யை மட்டும் கொண்டாடறீங்க..” என்று ரவிச்சந்திரனிடம் முணுமுணுத்தாள்..

“இது தேயிலை விளைகிற இடம்.. மலிவா தேயிலை கிடைக்கிறதினால இருக்கலாம்.. குளிருக்கு காபியை விட டீ பெட்டர்ங்கிறதினாலயும் இருக்கலாம்.. எங்களுக்கு ‘டீ’ தான் பழக்கம்.. உனக்கு வேண்டுமானால் காபி கொண்டு வரச் சொல்லட்டுமா..?” சன்னக் குரலில் ரவிச்சந்திரன் கேட்டான்..

“நோ.. நோ.. உங்க வீட்டில் யூஷுவலா எது பழக்கமோ அதையே நானும் பழகிக்கறேன்..” உடனடியாக மறுத்துவிட்டாள் நந்தினி..

‘குட்..’ என்று மெச்சிய ரவிச்சந்திரனின் விழிகளில் நிலவிய திருப்தியில் அவனை வினோதமாக பார்த்தாள் நந்தினி..

‘சின்ன விஷயத்துக்கு ஏன் இந்த அளவுக்கு ரியாக்ட் பண்றான்..?’

மணமான ‘சாய்’ வந்து சேர்ந்தது... குடித்து முடித்தவுடன் உடலில் ஒர்விதமான சுறுசுறுப்பு பரவுவதை உணர்ந்தாள் நந்தினி.. அதனால்தான் குளிர் பிரதேசங்களில் ‘டீ’ குடிப்பதை விரும்புகிறார்களோ..?

# அத்தியாயம் 60

**ப**னிப்புகை சாம்பல் வண்ணத்தில் மலை முகடுகளில் முகாமிட்டு அதை மறைத்துக் கொண்டிருந்தது.. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பச்சைப் பசேலென்ற தேயிலைப் பாத்திகளும் செடி கொடிகளும் தெரிந்தன... நுரை பொங்கும் பாலாறு போன்ற அருவி மலையுச்சியிலிருந்து குதித்து வழிந்து ஓடிக் கொண்டிருந்தது.. பூங்காவனம் போன்ற தோட்டம் சுற்றியிருக்க அதன் மத்தியில் அரண்மனை போன்ற பங்களாவும்.. அதையொட்டிய நீச்சல் குளமும் இருந்ததை மாடி பால்கனியில் இருந்து பார்த்த நந்தினிக்கு இதுவல்லவோ சொர்க்கம் என்று தோன்றியது..

மாடி ஹால் பரந்து விரிந்து பெரிதாக இருந்தது.. இங்கும் ஆங்காங்கே குழுவினராய் அமர்ந்து அரட்டையடிக்கவோ கலந்து பேசவோ தோதாக சோஃபாக்கள் போடப் பட்டிருந்தன.. பால்கனியிலும்.. ஹாலிலும் கண்ணாடி கதவுகள் இருந்தன.. நந்தினியும் ரவிச்சந்திரனும் வந்த சேரும்வரை வராத மழை அவர்கள் வந்து இறங்கிய கொஞ்ச நேரத்தில் சடசடத்து பொழிய ஆரம்பித்து விட்டது..

“இங்கே மழையில்லாம இருந்தாத்தான் அதிசயம்..” என்று சொன்னாள் வீணா..

“ஸ்வெட்டர் சால்வையெல்லாம் இருக்கில்ல.. இல்லைன்னா ரம்யாவிடம் வாங்கிக்க..” என்று அக்கறை காட்டினாள் யாழினி..

“எல்லாம் என்னிடம் இருக்கு பாட்டி..” நன்றியுணர்வுடன் கூடிய கூச்சத்துடன் மறுத்தாள் நந்தினி..

“இருக்கட்டும்.. எது வேண்டுமானாலும் நந்தினி தயக்கப்படாம கேட்டு வாங்கிக்கனும்.. மனசிலாயி..?” பரிவுடன் சொன்னாள் யாழினி..

“ஆகட்டும் பாட்டி..” என்று தலையை ஆட்டினாள் நந்தினி..

“நந்தினிக்கு மாடியில உள்ள கெஸ்ட் ரூமைக் காட்டு ஓமனா.. நந்தினியோட பொருள்களை அங்கன வைக்கனும்.. அறிஞ்சோ..”

“ஞான் அறியும் அம்மே..”

ஓமனா நந்தினியின் பெட்டியை உருட்டியபடி முன்னே செல்ல நந்தினி ரவிச்சந்திரனைப் பார்த்தபடி எழுந்து தயக்கத்துடன் ஓமனாவைப் பின் தொடர்ந்தாள்..

தாயைப் பிரிந்து செல்லும் குழந்தையின் தவிப்பு அவள் முகத்தில் தெரிந்தது.. படியில் ஏறும் போது திரும்பிப் பார்த்தாள்..

‘நீ போ.. நான் இப்போ அங்கே வந்து விடுவேன்..’

ரவிச்சந்திரன் சைகை செய்தான்..

நந்தினியின் முகத்தில் தைரியம் வந்தது.. தயக்கம் அகன்றவளாக அவள் ஓமனாவைப் பின் தொடர்ந்தாள்.. மாடி மற்றொரு மாளிகை போல் இருந்ததில் பிரமித்தாள்.. ஹாலின் கண்ணாடி கதவுகளுக்கு அப்பால் கொட்டிய மழையில் ஜில்லென ஆனாள்..

ஹாலுக்கு அடுத்து வரிசையாக இருந்த அறைகளில் ஒன்றை நந்தினிக்காக திறந்து விட்ட ஓமனா நந்தினியின் பெட்டியை உள்ளே உருட்டிக் கொண்டு போனாள்..

முன்புறம் வரவேற்பறை.. அடுத்து பெரிய படுக்கையறை.. அதில் நான்கு நபர்கள் படுத்து உருளும்

வகையில் போடப்பட்டிருந்த கட்டில்.. படுத்தால் அமிழ்ந்து விடுவதைப் போன்ற நுரை மெத்தை.. வரவேற்பறையிலும்,

படுக்கையறையிலும் இருந்த சோஃபாக்கள்.. படுக்கையறையை ஒட்டிய உடை மாற்றும் அறை.. அதில் இருபக்க சுவர் முழுவதும் பதிக்கப்பட்டிருந்த சுவர் அலமாரிகள்.. நடுவில் ஆள் உயரக் கண்ணாடியுடன் இருந்த டிரஸ்ஸிங் டேபிள்.. உடைமாற்றும் அறையை ஒட்டியிருந்த குளியலறை என்று 'யாழ்' ஹோட்டலின் அறையை விட அழகானதாக இருந்தது அந்த அறை..

"ஈ ரூம்தான் நந்தினி அம்மேயிண்ட ரூம்.." என்றாள் ஓமனா..

"தேங்க்ஸ் ஓமனா.." என்றாள் நந்தினி..

"எதுக்கானு நந்தினி அம்மே தேங்க்ஸ்ஸுன்னு பறயறது..?"

"என் பெட்டியை கொண்டு வந்தில்ல.. அதுக்கு.."

"அது எண்ட ஜோலி அம்மே.."

"அம்மேயா..?" நந்தினியின் முகம் அஷ்ட கோணலானது..

“அதானு அம்மே..”

“எனக்கென்னவோ ஆட்டுக்குட்டி ‘மே, மே’ன்னு சொல்றதைப் போலவே இருக்க.. உனக்குப் புண்ணியமாப் போகும் ஓமனா.. உன் மரியாதை மனதில் இருந்தால் போதும்.. இப்படி ‘அம்மே’ன்னு விளிக்கிறதை விட்டிரு..”

நந்தினியின் பேச்சில் ஓமனா சிரித்தாள்.. அவளுக்கு நந்தினியை பிடித்து விட்டது என்பது சுருக்கமில்லாமல் விரிக்கப் பட்டிருந்த படுக்கை விரிப்பை அவள் நீவி விட்டதிலிருந்தே தெரிந்தது..

“நீங்க வல்லிய சுந்தரி நந்தினி மேம்..”

“ஆரானு..? ஞானா..?”

“ஐ.. நந்தினி மேம் மலையாளத்தில சம்சாரிக்கானு..”

“வேற வழி..? தோ பாரு ஓமனாக்குட்டி..”

“ஓமனாக்குட்டி..? எண்ட முழுப்பேரும் நந்தினி மேம் அறியுமோ..?”

இதற்கு வெற்றிலையில் மை போட்டு பார்க்க வேண்டுமா என்றிருந்தது நந்தினிக்கு.. இந்த திவ்ய பிரபஞ்சத்தில் இருக்கும் மலையாள தேசத்தில் தடுக்கி விழுந்தால் ஓர் ஓமனாக் குட்டி

எழுப்பி விடுவாள் என்பதை சினிமாக்கள் செப்பியிருக்கின்றனவே..

“அறியும்.. இப்ப அது பேச்சில்லை ஓமனா.. என்னைவிட வல்லிய சுந்தரி நம்ம யாழினிப் பாட்டிதான்.. அதனால என்னை வல்லிய சுந்தரின்னு செப்பறதை நிப்பாட்டிக்க..”

நந்தினியின் பேச்சில் ஓமனா வாய் பொத்திச் சிரித்தாள்.. அடக்க மாட்டாமல் அவள் சிரிக்கும் அளவுக்கு தான் அப்படி என்ன வல்லிய ஜோக்கை சம்சாரித்து விட்டோம் என குழம்பிப் போனாள் நந்தினி..

“நந்தினி மேமுக்கு எந்தக் காரியம் ஆகனு மின்னாலும் இந்த ஓமனாக் குட்டியை விளிக்கனும்..”

“அதுக்கென்ன ஓமனா.. விளிச்சுட்டாப் போச்சு.. நேத்தில இருந்து புது வருஷம் பிறக்குதுன்னு நான் முழிச்சுட்டேனா.. தூக்கம் தூக்கமா வருது.. நாம அப்புறமா சம்சாரிக்கலாமா..?” ஓமனா அதற்கும் பொங்கிச் சிரித்தாள்..

‘என்னடா இது வம்பாப் போச்சு.. ஈ மலையாள பெண் குட்டி ஞான் எதைச் சம்சாரித்தாலும் விழுந்து விழுந்து சிரிக்குது.. நகர மாட்டேங்குது.. எண்டே மலையாள பகவதி..

ஈ பெண் குட்டியை இவ்விடத்தில இருந்து அகற்றி ஞான் குளித்து துணி மாற்ற வகை செய்ய வேண்டும் அம்மே..'

நந்தினியின் மனம் புலம்பிய புலம்பலில்.. தான் இந்த அளவுக்கு மலையாளத்தில் பாண்டித்யம் பெற்று விட்டோமா என்று புளகாங்கிதப் பட்டுப் போனாள் நந்தினி..

"ஓமனா.. நீ இங்கேயே நின்றுட்டாயா..?"

ரம்ய மாலினி வாசலில் இருந்து அழைத்தாள்.. திரும்பிப் பார்த்த நந்தினி.. அது ரம்ய மாலினியின் வீடு என்பதை மறந்து போனவளாக..

"அங்கேயே ஏன் நிற்கறீங்க.. உள்ளே வாங்க ரம்யா.." என்று உபசரனையாக அழைத்தாள்..

அழைத்த பின்புதான் அது ரம்ய மாலினியின் வீடு.. நந்தினி அங்கே விருந்தாளி என்ற விவரம் நந்தினியின் மனதில் உதித்தது.. ரம்ய மாலினி என்ன நினைத்துக் கொள்வாளோ என்று கவலை கொண்டாள்..

ரம்ய மாலினி எதையும் நினைத்துக் கொள்ள வில்லை..

"தேங்க்ஸ்.." என்றபடி உள்ளே வந்தாள்..

“பாட்டியும், அம்மாவும் உன்னைத் தேடறாங்க ஓமனா.. சீக்கிரம் போ..” என்று ஓமனாவைத் துரத்தி விட்டு நந்தினியிடம் சிநேகிதமாக சிரித்தாள்..

“ஓமனாவுக்கு வாய் பார்க்கிறதுன்னா ரொம்பவும் இஷ்டம்.. பேச்சுக் கிடைத்தால் போதும்.. அங்கேயே நின்றுடுவா.. பாட்டி சத்தம் போட்டுக்கிட்டே இருப்பாங்க..” என்றாள்.. நந்தினி புரிதலுடன் தலையை ஆட்டிச் சிரித்தாள்..

“டிராவல் பண்ணினதில டயர்டாகியிருப்பீங்க.. ரெஸ்ட் எடுங்க.. நைட் டின்னர் டயத்தில மீட் பண்ணலாம்..” நாசுக்காக கிளம்பி விட்டாள் ரம்ய மாலினி.

‘இங்கிதம் தெரிந்தவள்..’

நிம்மதியுடன் கதவை அடைத்துவிட்டு பெட்டியை உடைமாற்றும் அறைக்குள் உருட்டிக் கொண்டு போனாள் நந்தினி.. பெட்டியிலிருந்த துணிகளைப் பிரித்து அலமாரியில் அடுக்கி வைத்துவிட்டு பெட்டியை அலமாரியின்

அடிப்பகுதியில் வைத்து விட்டு நிமிர்ந்தாள்.. டிரஸ்ஸிங் டேபிளில் பவுடர், ஹேர் ஆயில் மேக் அப் பாக்ஸ் சீப்பு முதலானவைகளை வைத்துவிட்டு குளிக்க சோப், பேஸ்ட், பிரஷ் சகிதம் குளியலறைக்குள் புகுந்து அங்கிருந்த பாக்ஸைத்

திறந்து அவற்றை வைக்கப் போனாள்.. அங்கே புதிதாக உறை பிரிக்கப்படாத சோப், பேஸ்ட், பிரஷ் முதலியவை இருந்தன..

‘அரண்மனை வீட்டில இதெல்லாம் இல்லாம லிருந்தாத்தான் ஆச்சரியப்படனும்..’

குளித்து உடைமாற்றி அங்கிருந்த மூடி போட்ட பிளாஸ்டிக் கூடையில் அழுக்குத் துணிகளை போட்டு விட்டு அறையை விட்டு வெளியே வந்து ஹாலின் கண்ணாடிக் கதவுகளின் பக்கத்தில் நின்று வெளியே கொட்டிக் கொண்டிருக்கும் மழைத் தாரைகளை வேடிக்கை பார்த்தாள்..

‘நந்தவனத்தின் மத்தியில் உள்ள அரண்மனை..!’

இதுபோன்ற அரண்மனை பங்களாவில் மாடி ஹாலில் மூடப்பட்ட கண்ணாடி கதவுகளுக்கு உள்ளே இருந்தபடி வெளியே கொட்டிக் கொண்டிருக்கும் மழையை ரசிப்பதற்கு கொடுப்பினை இருக்க வேண்டும் என்று தோன்றியது நந்தினிக்கு..

அந்தக் கொடுப்பினையைப் பற்றி அவள் ஏன் கவலைப்பட வேண்டும்..? அவள்தான் தஞ்சைக்கு திரும்பிப் போக வேண்டியவளாயிற்றே.. தற்காலிகமாக ஒளிந்து மறைந்து தங்க ஓர் இடம் தேவையென்று கிளம்பி வந்திருக்கிறாள்..

அந்த இடம் அரண்மனையும் நந்தவனமுமாக இருப்பதில் மகிழ்ந்து போகலாம்.. அங்கேயே உறைந்து போய் விட முடியாது..

“இந்த வீட்டை உன் வீடா நினைத்துக்கன்னு அத்தை சொன்னதை நீங்க கணக்கிலேயே எடுத்துக்காதீங்க.. ஏன்னா இது என் வீடு..!”

அழுத்தம் திருத்தமாக காதில் வந்து விழுந்த வார்த்தைகளில் திடுக்கிட்டுப் போய் திரும்பினாள் நந்தினி.. எதிரே நின்றிருந்தவளைப் பார்த்ததும் விழி விரித்தாள்.. அப்பழுக்கற்ற தேவதையின் ரூபமாக நின்று கொண்டிருந்தவளை நந்தினி எங்கோ பார்த்திருக்கிறாள்..

‘எங்கே பார்த்திருப்பேன்..?’

மூளையைக் கசக்கி யோசித்தாள் நந்தினி.. பளிச்சென்று ஞாபகம் வந்து விட்டது.. மங்களூர் எக்ஸ்பிரஸில் இவளின் போட்டோ இருந்ததை நந்தினி பார்த்திருந்தாள்..

‘இவ போட்டோவை அவன் ஏன் வைத்திருந்தான்..?’ நந்தினியின் திடுக்கிடலையும், திகைப்பையும், யோசனையையும் அவதானித்தபடி நிதானமாக அந்தப் பெண் பேசினாள்..

“நான் அஜந்தா.. ரவி அத்தானின் அத்தை மகள்..”

“ஓ..”

“என் அம்மா அவந்திகா ரவி அத்தானின் அப்பாவுடைய கூடப் பிறந்த தங்கை.. மாமாவுக்கு தங்கை மீது.. அதாவது என் அம்மாமீது பாசம் அதிகம்.. அவந்திகா வாய் விட்டுக் கேட்டுட்டா இல்லேங்கிற பதிலே என் வாயிலிருந்து வராது என்பார்..”

“அவந்திகாவா.. யாரது..?”

நந்தினியின் கேள்வியில் அஜந்தாவின் அழகிய முகத்தில் கோபத்தின் ஜ்வாலை தெரிந்தது.. நொடிப் பொழுதில் அதை மறைத்துக் கொண்டு..

“சத்தமா பேசிராதீங்க..” என்று நந்தினிக்கு நல்லது சொல்வதைப் போல எச்சரித்தாள்..

“நான் மெதுவாத்தானே பேசினேன்..?” குழப்பத்துடன் கேட்டாள் நந்தினி..

“மெதுவாக்கூட என் அம்மாவை யார்ன்னு நீங்க கேட்கக் கூடாது..”

“உங்க அம்மாவை யார்ன்னு நான் கேட்கலையே..”

“இப்போக் கேட்டிங்களே..”

“அவந்திகா யாருன்னுதான் கேட்டேன்..”

“அது என் அம்மாவின் பெயர்..”

அஜந்தாவின் பார்வை நந்தனியை சுட்டெரித்தது.. தேவையற்ற பகைமையில் நந்தினி மருண்டாள்.. இப்போதுதான் அந்த வீட்டுக்குள் வந்திருக்கிறாள்.. அங்கே யார் யார் வசிக்கிறார்கள்..? அவர்களின் பெயர்களெல்லாம் என்னென்ன என்று எப்படி அவளுக்குத் தெரியும்..?

“இது கோடிஸ்வரர் ரவிவர்மாவின் வீடு மட்டுமல்ல.. ராஜகுடும்பத்து ராஜா ரவிவர்மா, அவங்க தங்கை அவந்திகா தேவி குடும்பத்தினர் இருக்கும் வீடு..”

“அப்ப.. இது எங்க பாஸோட வீடில்லையா..?”

நந்தினிக்கு சந்தேகம் வந்து விட்டது.. அவள் கேட்ட கேள்வியில் கொதித்துப் போனவளாக ‘தத்தி..’ என்பதைப் போல நந்தினியை ஏளனமாக முறைத்து வைத்தாள் அஜந்தா..

“அப்படித்தான் இவங்க சொல்லிக்கிறாங்க..” என்ற ரவிச்சந்திரனின் குரலில் அஜந்தாவின் முகத்திலிருந்த கோபம்,

ஏளனம் ஆகிய உணர்வுகள் ஓடி மறைந்து நொடிப்பொழுதில் அங்கே சாந்தம் குடிகொண்டது..

“அத்தான்..”

ஆசையும் காதலுமாக அழைத்தபடி அவள் திரும்பினாள்.. நந்தினிக்குத் தான் தனித்து விடப் பட்டதைப் போன்ற உணர்வு எழுந்தது.. எப்போது தஞ்சைக்குத் திரும்புவோம் என்று அவள் ஏங்கிப் போனாள்..

கொஞ்சலாகப் பேசிய அஜந்தாவை ஒட்டுதல் இல்லாமல் பார்த்த ரவிச்சந்திரன் நந் தினியிடம் திரும்பி..

“இது வம்சாவழியில் வந்த அரண்மனைதான்.. எங்க தாத்தா அருள்மொழிவர்மருக்குச் சொந்தமானதுதான்.. பட் இப்ப இந்த அரண்மனை இந்த ரவிச்சந்திரனுக்கு மட்டும் தான் சொந்தம்..” என்றான்..

அதில் அந்த அஜந்தாவின் அழகு முகம் கொடூரமாக மாறிப் போனது..

# அத்தியாயம் 61

**இ**து என்ன தலைவேதனை என்றிருந்து நந்தினிக்கு.. அந்த அரண்மனை போன்ற பங்களா யாருக்குச் சொந்தமாக இருந்தால் அவளுக்கென்ன வந்தது..?

வீணா வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளிப் பெண் மீது பாவப்பட்டு இதை உன் வீடாக நினைத்துக் கொள் என்று ஒரு பேச்சிற்கு சொல்லி விட்டால் அந்த வீடு நந்தினிக்குச் சொந்தமாகி விடுமா..? அதற்காகவா இந்தப் பஞ்சாயத்து..? அஜந்தா ஓவியத்தையும் மிஞ்சிய அழகோடு இருந்த அஜந்தாவின் அழகு முகத்திற்கும் கொடூர முகபாவனைக்கும் கொஞ்சம் கூட பொருந்திவரவில்லை.. அதை விட அவள் தன் முகபாவனையை சட்டென்று மாற்றி காருண்யத்தின் மொத்த உருவமாய் மென்மையே வடிவானவளாக மாறிப் போய் விடுவதைத்தான் நந்தினியால் நம்பவே முடியவில்லை..

“எந்தா பறயுனு அத்தான்.. எதிக்கி இத்தினி கோபம்..? ஞான் விளையாட்டுக்கல்லோ சம்சாரித்தது..? அதன இத்தினி வினயமா ஆலோச்சிக்கனுது..?”

“நீ சென்னையில் படித்தவள் அஜந்தா.. என்னைப் போலவே மலையாளம் கலக்காத தமிழில் பேசுபவள்..”

“அதனாலதான் அத்தானப் போல தூய தமிழில சம்சாரிக்கனும்னு ஆசைப்பட்டு ஞான் தமிழ்நாட்டுக்குப் படிக்கப் போயி…”

“ம்ப்ச்.. நீ எதுக்காக தமிழ்நாட்டுக்குப் படிக்கப் போனேன்னு எனக்கும் தெரியும்.. இங்க இருக்கிற அத்தனை பேருக்கும் தெரியும்.. உன் அப்பா அத்தனை சொத்தையும் கோட்டை விட்டுட்டு குடும்பத்தோட எங்க வீட்டில வந்து செட்டிலாகிட்டார்.. நீயும், உன் அண்ணனும் ஸ்கூலுக்குப் போனப்ப உங்க கூடப் படித்தவங்க அதைப் பத்தியே பேசினாங்கன்னு நீங்க ரெண்டு பேரும் வீட்டில வந்து அழுததினால எங்கப்பா உங்க ரெண்டு பேரையும் ஊட்டி கான்வெண்டில சேர்த்து விட்டார்.. காலேஜ் படிப்பை சென்னையில முடித்தீங்க.. அதனாலதான் மலையாளக் கலப்பில்லாத செந்தமிழ் உனக்கும், உன் அண்ணனுக்கும் வருது.. அதை மறைத்து எனக்காக நீ தமிழ் படிச்சேன்னு பொய் சொல்லாதே..”

“ஸ்டாப் திஸ் அத்தான்.. இங்கே நாம் மட்டும் இல்லை.. தேர்ட் பெர்சனா நம்மிடம் வேலை பார்க்கும் பெண்ணொருத்தியும் இருக்கிறா.. மனசிலாயி..”

நந்தினியின் முகம் சிறுத்து விட்டது.. ராஜ குடும்பத்தினர் பேசும் இடத்தில் சேடிப் பெண்ணுக்கு என்ன வேலை என்பதைப் போல படுதுச்சமாக அஜந்தா பார்த்த பார்வையில் குன்றிப் போய் விட்டாள்.. நந்தினி யார்.. அவளது பின்புலம் என்ன என்பதை அஜந்தா அறிந்திருந்தாள் இவ்வாறு பேசியிருப்பாளா..?

‘யாரும் இருக்கும் இடத்தில் இருந்து விட்டால் எல்லாம் சௌக்கியமே..’

நந்தினியின் மனதில் பாடல் வரிகள் ஓடின.. அவள் அங்கிருந்து நகரப் போனாள்..

“நில்..” அவள் கை பிடித்து தடுத்து தன் பக்கமாக இழுத்து நிறுத்திக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“இவள் என் பிஸினெஸ்களை நேரடியாக நிர்வகிக்கும் பெர்சனல் மேனேஜர்.. பி.டெக் டிகிரி ஹோல்டர்..”

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தன் காதுகளை நம்ப முடியாமல்..

‘என்னது..?’ என்று ஆச்சரியப்பட்டுப் போனாள் நந்தினி.. ரவிச்சந்திரனா தனது திருவாயைத் திறந்து நந்தினியை பெர்சனல் மேனேஜர் என்று சொல்கிறான்..? நந்தினியின் பி.டெக் படிப்பை பெரிதாகப் பேசுகிறான்..?

அஜந்தாவிடம் நந்தினியை விட்டுக் கொடுக்காமல் பெர்சனல் மேனேஜர் என்று சொன்ன ஒன்றுக்காகவே அவன் மற்ற தருணங்களில் நந்தினியைத் தனது பெர்சனல் செக்கரட்டரியாக்கிய வன் கொடுமையை மன்னித்து விட்டாள் நந்தினி..

‘இவளும்.. இவ பார்வையும்.. எனக்கு நீ இணையான்னுல்ல பார்த்து வைக்கிறா..? இவ அழகிதான்.. ராஜ குடும்பம்தான்.. என்னைவிட உயர்வுதான்.. இதையெல்லாம் நான் இல்லைன்னு சொன்னால்தானே இவ என்னிடம் வாதாடனும்..? தேவையில்லாம என்னை எதுக்காக மட்டம் தட்டனும்..?’

“இவளுக்குத் தெரியாம நான் எதையும் பேசறதா இல்லை..”

“அத்தான்.. இது நம்ம குடும்ப விஷயம்..”

“இல்லவே இல்லை.. இது என் சொத்து சம்பந்தமான விவரம்.. என் வீட்டில் தங்கிக்கச் சொல்லி இவளை நான் அழைத்து வந்திருக்கிறேன்.. நீ இவளிடம் இது தாத்தாவின் வீடு.. என் அப்பாவுக்கும் உன் அம்மாவுக்கும் உரிமையான வீடுன்னு சொல்லிக்கிட்டு இருக்கிற.. அப்ப இது என் பாஸின் வீடில்லையான்னு இவ கேட்கத்தானே செய்வா..? ஆரம்பித்து வைத்தது நீதான்.. நானில்லை.. மனசிலாயி..”

“அது.. அது.. அத்தான்.. நான்..”

“உன் நோக்கமென்ன அஜந்தா.. புதிதாக வந்திருக்கும் பெண்ணிடம் இது உன் வீடுன்னு சொல்லி உனக்கான உரிமையை ஏன் உறுதிபடுத்திக்கிற..?”

“ஏன் அத்தான்.. இது என் வீடில்லையா..?”

ரவிச்சந்திரனை மையலாகப் பார்த்து மோகனமாக விழிகளைச் சுழற்றினாள் அஜந்தா.. ஒயிலான அவளின் அந்தப் பார்வையில் நந்தினியே மயங்கிப் போனாள்..

‘பட்சே.. ஈ மனுஷன் மட்டும் எப்படி அசராமல் நின்று அவ முகத்தை நோக்கறான்..?’

கல்லுக் குண்டைப் போல நின்ற ரவிச்சந்திரனின் முகத்தில் இதற்கெல்லாம் நான் மயங்க மாட்டேன் என்ற கண்டிப்பு எழுதி ஒட்டப் பட்டிருந்தது..

‘இவகிட்ட மயங்க மாட்டேங்கிறான்.. என்னை மட்டும் உத்து உத்துப் பார்த்து வைத்தான்.. மயங்கிப் போனதைப் போல சொக்கினான்.. அப்படி இவளிடம் இல்லாத அழகா என்னிடம் இருக்கிறது..?’

அப்படியெல்லாம் அசாத்திய நம்பிக்கை வைக்க நந்தினி தயாராக இல்லை.. அவளுக்கு அவளைத் தெரியும்.. இதோ எதிரில் நிற்கும் அப்சரஸ் அஜந்தாவைப் போன்ற நேர்த்தியான வடிவழகு அவளிடம் இல்லை.. கூந்தல் இழையை சிறு பிசிறு கூட விடாமல் கவனமாக வாரிப் பின்னலிட்டிருக்கும் அஜந்தாவின் பொறுமையில் துளியளவு கூட நந்தினிக்கு வராது.. அவள் அவசர அவசரமாக ஒரு பின்னலைப் போட்டு விட்டு அதைக் கண்ணாடியில் கூடப் பார்த்துக் கொள்ளாமல் கவலையற்றிருப்பவள்.. பிசிறின்றி தலை வாரும் கலையெல்லாம் அவளுக்குச் சுட்டுப் போட்டாலும் வந்து தொலைக்காது.. ஒழுங்கற்ற வகிடு.. காதோரமாக பிய்ந்து தொங்கும் முடியென்று அசட்டையாக வாரி வைப்பாள்.. ஓர்முறை தலை வாரிய சீப்பைத் தலையில் செறுகிக் கொண்டு

அதைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் காலேஜிக்குப் போய் விட்டாள்..

“உனக்கெல்லாம் எதுக்குடி நீள முடி.. பேசாம முதுகு வரை கட் பண்ணிக்க.. இந்தத் தலைவாருகிற தொல்லையே இருக்காது.. பேசாமல் தலையைக் கோதிக்கிட்டு உலாவரலாம்..”

உத்ரா உட்பட அத்தனை தோழிகளும் ஒரு மனதாக இந்த யோசனையை அவள் முன்னால் வைத்துப் பார்த்தார்கள்..

“நானாடி மாட்டேங்கிறேன்..?” அழ மாட்டாத குறையாக தலையைப் பிடித்தாள் நந்தினி..

“என் அம்மாவைப் பெற்ற பாட்டிக்கு நீளமுடி.. என் அப்பாவைப் பெற்ற பாட்டிக்கும் நீள முடி.. எங்கம்மாவுக்கும் நீளமுடி.. எங்க அப்பாகூடப் பிறந்த அத்தைக்கும் நீள முடி.. இப்படி எங்க குடும்பத்துப் பெண்களுக்கெல்லாம் நீள முடிதானாம்.. அந்த நீள முடிப் பெருமை என்னாலே மறைந்திரக் கூடாதுன்னு என்னோட ஒட்டு மொத்தக் குடும்பமே ஸ்ட்ரிட்டா கண்டிஷன் போட்டிருக்குடி.. முடியை நான் வெட்டினா.. என்னை அவங்க வெட்டிருவாங்க..”

“த்ச்சு.. த்ச்சு.. இப்பேற்பட்ட டெர்ரர் ஃபேமிலியா உன் ஃபேமிலி..?”

தோழிகள் அனுதாபத்துடன் நீயாச்சு.. உன் முடியாச்சு என்று நந்தினியின் மீதும் அவளது நீண்ட கூந்தலின் மீதும் தண்ணீர் தெளித்து விட்டு விட்டார்கள்.. நந்தினியும் அழுது புலம்பியபடி அந்த நீண்ட கூந்தலை பிசிறும், பின்னலுமாக முன்பக்கம் முடி கற்றையாகத் தொங்கப் பராமரித்துக் கொண்டிருந்தாள்..

கூந்தல் விஷயம்தான் இப்படியென்றால் அஜந்தாவிடம் மிளிரும் நளினமும் லாவண்யமும் நந்தினியிடமும்.. இருக்கிறது என்ற நம்பிக்கை நந்தினிக்கே துளியளவு கூட இல்லை.. அதிர்ந்து நடக்காமல் அன்னம் போல நடந்து வரும் அஜந்தா எங்கே..? தரையை தாம், தூம் என உதைத்தபடி தரையில் கால் பாவாமல் குதித்து ஓடும் நந்தினி எங்கே..? இருவருக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது என்பதில் அஜந்தா ஓவியத்தை விட்டு விட்டு அடாவடி நந்தனியிடம் மயக்கப் பார்வை பார்க்கும் ரவிச்சந்திரனுக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தாள் நந்தினி..

அவளுடைய முடிவைப் பற்றிச் சற்றேனும் கவலை கொள்ளாமல் அப்சரஸ் அஜந்தாவிடம் சண்டையிடுவதிலேயே குறியாக இருந்தான் ரவிச்சந்திரன்..

“நோ அஜந்தா.. இது உன் வீடில்லை.. என் வீடு..” அழுத்தம் திருத்தமாக அறிவித்தான்..

“எப்படி..?” அஜந்தா வெகுண்டாள்..

“ஏன்.. ஏன்.. ஏன்.. எதுக்காக இந்த சவுண்டு..?”

“இது தாத்தாவோட வீடு அத்தான்.. பரம்பரை வீடு..”

“ஸோ வாட்..?”

“தாத்தாவோட சொத்தில மகன் வழிப் பேரனுக்கு உரிமையிருக்கிறப்ப மகள் வழிப் பேரனுக்கும், பேத்திக்கும் உரிமையிருக்காதா..?”

“ஐநோ.. ஐநோ.. ஐநோ..” ரவிச்சந்திரனின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்னகை வந்தது..

“ஐ நோ இட் வெரி வெல் அஜந்தா.. நீயும் உன்னைச் சேர்ந்தவங்களும் இப்படித்தான் உரிமை கொண்டாடிக் கிட்டு வருவீங்கன்னு அன்றைக்கே நான் இந்த வீட்டை என் பெயருக்கு ரெஜிஸ்டர் பண்ணிட்டேன்.. அதில் தாத்தா, பாட்டி,

அப்பா, அம்மா, ரம்யா, உன் அப்பாம்மா, அண்ணன், ஏன்.. நீயும் சைன் பண்ணினீங்க.. அஜந்தா.. மறந்துருச்சா..? என்றைக்குன்னு சொல்லட்டுமா..?"

அதுவரைக்கும் அசையாமல் மையல் பார்வை பார்த்துக் கொண்டிருந்த அஜந்தாவின் முகம் வெளிறி விட்டது.. அப்பட்டமாக கண்களில் தெரிந்த பயத்தை அவள் மறைக்க முயன்றாள்.. ரவிச்சந்திரன் சொன்ன வார்த்தைகளால் அவள் பாதிக்கப்படாததைப் போலக் காட்டிக் கொண்டாள்.. தடுமாற்றமில்லாமல் பேசினாள்..

"எப்போ எது நடந்திருந்தாலும் இது ராஜா அருள் மொழிவர்மரோட அரண்மனைங்கிறது மாறி விடுமா அத்தான்..? அவருக்கு மாமாவும், அம்மாவும் தான் பிள்ளைகள்ங்கிறது மாறி விடுமா..? மாமா, அம்மாவோட வாரிசுகள்தான் இந்த அரண்மனைக்கு உரிமை கொண்டாட முடியும்ங்கிறதுதான் மாறி விடுமா..?"

"நீயென்ன பைத்தியமா..?" நிதானமாக கேட்டான் ரவிச்சந்திரன்.

'என்னடா இது.. அழகான அத்தை மகளை வைத்துக் கொண்டு பங்கரையிலும் பங்கரையான என்னை சைட்

அடிக்கிறானேன்னு இவனை நான் பைத்தியக் காரன்ங்கிறேன்.. இவன் என்னடான்னா கடைந்தெடுத்த அறிவு ஜீவியான இந்த அஜந்தாவைப் பார்த்து நீ பைத்தியமான்னு கேட்கிறான்..'

அங்கிருந்து போய் விடலாமா என்று யோசித்தாள் நந்தினி.. ஆயிரம்தான் இருந்தாலும் இது ரவிச்சந்திரனின் குடும்ப விவகாரம்.. அஜந்தா அவனுடைய அத்தை மகள்.. அவர்களின் வாக்குவாதத்தை நந்தினி வேடிக்கை ப ார்க்கக் கூடாது.. ரவிச்சந்திரன் நில் என்று சொன்னான் என்பதற்காக அவள் அங்கே நின்றிருக்கக் கூடாது..

'நில்லென்று சொன்னால் மனம் நின்றா போகும்..?'

யாரோ வெற்றிலை பாக்கை வைத்து அழைத்ததைப் போல டகார் என்று ஒரு சிச்சுவேஷன் சாங் நந்தினியின் மனதில் ஒலித்தது.. அந்தப் பாடலுக்கும் ரவிச்சந்திரன் சொன்ன 'நில்..' என்ற வார்த்தைக்கும் என்ன சம்பந்தம் இருக்கக் கூடும் என்று நந்தினி யோசித்துப் பார்த்தாள்.. ஒரு மண்ணும் இல்லையென்று புலனானதில்..

'நந்தினி..! நீ 'தத்தி'டி..' என்று ஷொட்டு வைத்துக் கொண்டாள்.. ஒரு முறையாவது..

‘நந்தினி..! நீ எங்கேயோ போயிட்டடி..’ என்று புளகாங்கிதப் பட்டுப் போகும் அளவிற்கு யோசனை வந்து தொலைக்கிறதா..?

தனக்கு வாய்த்த அறிவு இவ்வளவுதான் என்ற பெருமூச்சுடன் அங்கிருந்து நகரப் போனாள் நந்தினி..

“உன்னை நகராதேன்னு சொன்னேன்...” ரவிச்சந்திரன் உறுமினான்..

‘அடித்து விடுவானோ..’ பயந்து போன நந்தினி எதற்கு வம்பு என்று அங்கேயே நின்று விட்டாள்..

அந்த மாடி ஹாலும்... கண்ணாடி கதவும்... அதையொட்டிப் பெய்த மழைத் தாரைகளும் பார்க்க நன்றாகத்தான் இருந்தன.. அத்தை மகள், மாமன்மகன் சண்டையை வேடிக்கை பார்ப்பதை விட, கொட்டும் மழையை வேடிக்கை பார்ப்பது சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்த நந்தினி கண்ணாடிக் கதவை உற்று நோக்கத் தொடங்கினாள்..

“இந்த அரண்மனைக்குச் சொந்தக்காரரான தாத்தாவும் அவரோட ஒட்டு மொத்த வாரிசுகளும் ஒன்றாய் சேர்ந்து பரம்பரையாய் வந்த சொத்துக்கள் அத்தனையையும்

அவரோட வாரிசுகளில் ஒருவனான என் பெயருக்கு மாற்றி எழுதிக் கொடுத்திட்டிங்க.. முறைப்படி அது ரெஜிஸ்டரும் ஆகியாச்சு.. அதுக்கு மேலே என்ன உரிமை உனக்கிருக்கு..?"

"அத்தான்.."

"பேசாதே... உன் அம்மாவை... அதாவது என் அத்தையை மேரேஜ் பண்ணிக் கொடுக்கிறப்ப.. இருக்கிற சொத்தில பாதியைக் கொடுத்துத்தான் தாத்தா மேரேஜ் பண்ணிக் கொடுத்தாரு.. அத்தனை சொத்தையும் உன் அப்பா அழித்துட்டு அதுக்கும் மேலே கடனை வாங்கி நின்னாரு... கடன் கொடுத்தவங்க கோர்ட்டுக்குப் போனாங்க... உன் அப்பாவுக்கு அரெஸ்ட் வாரண்ட் வந்திருச்சு... ஏற்கனெவே உன் அப்பா குடும்பத்தோட எங்க வீட்டிலே செட்டிலாகியிருந்தாரு.. உன்னையும் உன் அண்ணனையும் நாங்கதான் படிக்க வைத்துக்கிட்டு இருந்தோம்.. உன் அம்மாவுக்காக பிரித்துக் கொடுத்த அவங்க பங்கோடு உங்க உறவும் உரிமையும் முடிந்து போச்சுன்னு விலகி நிற்காம உங்க அத்தனை பேரோட பொறுப்பையும் ஏத்துக்கிட்டும் உங்களோட பிரச்னை முடியலை.. கண்ணுக்கு முன்னாலே மருமகனை அரெஸ்ட் பண்ண விடறதில தாத்தாவுக்கு உடன் பாடில்லை.. அதனால அவரோட கடனை அடைக்கனும்னு

கேட்டுக்கிட்டார்.. அந்தக் கடன் ஒரு கோடியோ.. இரண்டு கோடியோ இல்லை.. ஆயிரம் கோடிகள்.. அதை அன்றைக்கு அடைத்து விட்டாலும் உன் அப்பாவும், அண்ணனும் சும்மாவா இருப்பாங்க..? அடுத்து லட்சம் கோடிகளில் வந்து நிற்பாங்க.. ஸோ.. தாத்தா பேரில இருந்த பரம்பரைச் சொத்துக்களும், பாரம்பர்யமும் கடனில் மூழ்காம நிலைத்து நிற்கனும்னா எந்தச் சொத்தும் பரம்பரைச் சொத்தா இருக்கக் கூடாது.. அப்படியிருந்தா அதை மிச்சம் மீதியில்லாம நீங்க அழிச்சிருவீங்கன்னுதான் அப்படியொரு முடிவுக்கே நான் வந்தேன்..”

நந்தினியால் மழையை வேடிக்கை பார்க்க முடியவில்லை.. தோண்டத் தோண்டக் கிளம்பும் ஊற்றுப் போல அஜந்தாவின் உரிமைக் குரலின் பிண்ணனியில் அணி வகுத்து வந்த உண்மைகளில் அவள் ஆச்சரியமாகிப் போனாள்.. அவளும்தான் பெரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறாள் இதுபோன்ற கதைகள் அவள் குடும்பத்தில் இல்லையே..

# அத்தியாயம் 62

‘**ஒ**ரு கோடி.. இரண்டு கோடின்னாலே மயக்கம் வந்திரும்.. ஆயிரம் கோடியாம்.. ஹப்பா.. நினைத்தாலே மூச்சுத் திணறுதே.. இவ எப்படித்தான் இத்தனை திண்ணக்கமாய் நிற்கிறாளோ..’

அஜந்தா அப்படித்தான் நின்றாள்.. ரவிச்சந்திரன் சொல்லிக் கொண்டிருப்பது காதில் விழாதது போல நிஷ்டூரமாக அவனை முறைத்தாள்.. ரவிச்சந்திரனும் சளைத்தவனாக இல்லை.. அஜந்தாவை விடப் பன்மடங்கு அதிகமான நிஷ்டூரத்துடன் அவளை முறைத்துக் கொண்டு நின்றான்..

“உன் அப்பாவுடைய கடனை அடைக்கனும்னா பரம்பரைச் சொத்துக்களை என் பெயருக்கு எழுதிக் கொடுத்துடனும்னு கண்டிஷன் போட்டேன்.. சேரளம் எஸ்டேட், ரப்பர் ஃபேக்டரி, இந்த அரண்மனை, சணல் ஃபேக்டரி.. எல்லாம் என் பெயருக்கு ரிஜிஸ்டர் ஆகிருச்சு.. உன் குடும்பத்து ஆளுக முதற் கொண்டு அத்தனை பேரும் ரிஜிஸ்டர் ஆபிசுக்கே நேரில வந்து சைன் பண்ணினீங்க.. மறந்து போச்சா..? ரிமம்பர் இட்.. ‘யாழ்..’ ஹோட்டல் என் உழைப்பில்

உருவானது.. முதன் முதலாய் திருவனந்தபுரத்திலே தொடங்கிய ஹோட்டலை சங்கிலித் தொடராய் இந்தியாவில இருக்கிற அத்தனை சிட்டிகளிலும் ஆரம்பித்து விரிவு படுத்தினேன்.. உன் அப்பா கடனுக்காக நான் கொடுத்த ஆயிரம் கோடியும் என் சுய சம்பாத்தியம்.. இது என் அரண்மனை.. மனசிலாயி..”

அதற்கு மேலும் அங்கே நிற்க முடியாதவளாய் சீற்றத்துடன் விரைந்து விட்டாள் அஜந்தா.. அசையாமல் சிற்பம் போல நின்ற கொண்டிருந்த நந்தினியைப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவளது விழிகளில் தெரிந்த மிரட்சியில்..

“பயப்படாதே..” என்றான்..

“பயம்ன்னு இல்லை.. அன்ஈஸியா ஃபீல் பண்றேன்.. எனக்குன்னு குவார்ட்டர்ஸோ, லேடிஸ் ஹாஸ்டலோ அரேன்ஜ் பண்ணினாத் தேவலை..”

“இது வயநாடு நந்தினி..”

“நான் மட்டும் இது கொல்கத்தான்னா சொன்னேன்..?”

“ஹா.. ஹா..”

வரிசைப் பற்கள் தெரிய வாய் விட்டுச் சிரித்தவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் நந்தினி.. அஜந்தாவைப் போன்ற அத்தை மகள் இருக்கும் வீட்டில் எப்படித்தான் இவனால் இப்படிச் சிரிக்க முடிகின்றதோ..

"சிரிச்சது போதும் பாஸ்.. விஷயத்துக்கு வாங்க.."

"வயநாடு அதிகமா மக்கள் புழங்காத இடங்களைக் கொண்ட மலைபிரதேசம் நந்தினி.. அதிகமா மழை கொட்டிக்கிட்டு இருக்கும்.. உன்னைத் தனியா குவார்ட்டர்ஸில் தங்க வைக்க முடியாது.. இந்த கிளைமேட் பழகினவங்களுக்குத்தான் சரிப்பட்டு வரும்.. நீ பயந்துருவ.. லேடிஸ் ஹாஸ்டலும் அப்படித்தான்.. உன்னைப் பத்திரமா கவனித்துக்கறேன்னு வினீத்துக்கு வாக்குக் கொடுத்திருக்கேன்.. அதைக் காப்பாத்தியா கனும்னா நீ என் கண்பார்வையிலே என் வீட்டிலே இருந்தாகனும்.."

"பட்..."

"சட்..! எதுக்காக இந்த 'பட்..?' ம்ம்ம்..? இந்த வீட்டில அஜந்தா மட்டுமா இருக்கா..? என் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, ரம்யா நான் இப்படி எத்தனை பேர் இருக்கோம்..? அத்தனை பேரும் உன் மேலே பிரியமாத்தானே

இருக்கோம்..? நீ ஏன் உன்னை தேர்ட் பெர்சனா நினைத்துக்கற.. இந்த வீட்டிலே ஒருத்தியா நினைத்துக்க வேண்டியதுதானே..?” ரவிச்சந்திரனின் மோகப்பார்வை நந்தினியின் மீது படிந்து தீ மூட்ட முற்பட்டது.. குளிர் நிரம்பிய வயநாட்டில்.. மழை

பொழிந்து கொண்டிருந்த அந்த ஈரப் பொழுதில் அவன் பார்வை அவளுக்குள் கனல் மூட்டி கதகதப்பை உண்டாக்கியது.. அவன் ஓரடி முன்னால் வைத்து நந்தினியை நெருங்கி நின்றான்.. அவள் தோள் தொட்டு அணைத்து கன்னம் வருடினான்.. நந்தினி நடுங்கிப் போனவளாக விலகி விட்டாள்..

ரவிச்சந்திரன் நந்தினிக்கு தைரியம் கொடுக்கக் கூட நெருங்கி நின்று அணைத்திருக்கலாம்.. அதை அஜந்தா பார்த்து விட்டால் எசகு பிசகாய் நினைத்து விட மாட்டாளா..?

‘தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டாலும் போட்டு விடுவாள்..’

வயநாட்டில் கற்களுக்கா பஞ்சம்..? “ப்ளீஸ்..” நந்தினியின் கெஞ்சலில்..

“இட்ஸ் ஒகே..” என்று தோள்களைக் குலுக்கி விட்டுப் போய் விட்டான் ரவிச்சந்திரன்..

‘ஹப்பாடி.. தப்பித்தேன்..’ நந்தினி கண்களை இறுக்கமாக மூடி நிம்மதிப் பெருமூச்சு விட்டு ஓர்நொடி கூட ஆகியிருக்காது..

“ரொம்பத்தான் கனவு காணாதே..” என்ற கடுமையான குரல் நந்தினியின் காதுகளில் விழுந்து அவளது நிம்மதியை துரத்திவிட்டது..

‘இது அஜந்தாவோட வாய்ஸ் மாதிரி இருக்கே..’ நடுக்கத்துடன் இமைகளைத் திறந்தாள்..

சாட்சாத் அஜந்தாவேதான் எதிரில் நின்றிருந்தாள்..

‘இவளிடம் என்னத்தைப் பேசறது..?’ திருதிருத்த நந்தினி மெதுவாக அங்கிருந்து நழுவி விட நினைத்து நகர்ந்தாள்..

“நில்..” அஜந்தா கட்டளையிட்டாள்..

‘இவளுக்கும் இவளுடைய மாமன் மகனுக்கும் வேறு வேலையே இல்லை.. எதற்கெடுத்தாலும் இதை ஒன்றைச் சொல்லி விடுகிறார்கள்..’ நந்தினிக்கு எரிச்சல் மண்டியது.. வம்பு வேண்டாம் என்று பிய்த்துக் கொண்டு கிளம்புகிறவளை

‘நில்..’ என்ற ஒற்றை வார்த்தையில் நிறுத்தி வைத்துத் தொலைக்கிறார்களே.. எதற்காம்..?

அஜந்தாவின் கட்டளைக்கு அடிபணிய நந்தினிக்கு விருப்பமில்லை.. நீ என்ன சொல்வது.. நான் என்ன கேட்பது என்று முறைத்துக் கொண்டு போய் விடலாமா என்று யோசித்தாள்.. தேவையில்லாத பகைமையை அது உண்டு பண்ணிவிடக் கூடும் என்று பல்லைக் கடித்தபடி நின்றாள்..

“எனக்கும் என் அத்தானுக்கும் இடையே இதைப் போல செல்லச் சண்டைகள் வரும்..”

‘அடிப்பாவி..! இது செல்லச் சண்டையா..? உன் குடும்பத்தையே அவன் கழுவிக் கழுவி ஊத்தினான்.. இதைப் போய் செல்ல சண்டைன்னு சொல்றியே.. நிஜச் சண்டையா இருந்தா இதுக்கும் மேலே வீடு கட்டி அடிப்பானா..? அது எப்படிடீ மனச்சாட்சியை கழட்டி வைத்துட்டு பேசற..’

“அதைப் பார்த்துட்டு அத்தானுக்கும் எனக்கும் ஆகவே ஆகாதுன்னு முடிவுக்கு வந்து விடாதே..”

‘வேற என்ன முடிவுக்கு வர அஜந்தா ஓவியமே..? நீயென்றால் உன் அத்தானுக்கு உயிர் என்ற முடிவுக்கு வந்து விடவா..?’

அஜந்தா அதைத்தான் சொன்னாள்.. அவளென்றால் ரவிச்சந்திரனுக்கு ரொம்பப் பிடிக்கும் என்றாள்... வல்லிய நேசம் அவர்களது நேசம் என்றாள்.. அவளை மகரந்தப்பூ என்று ரவிச்சந்திரன் கொண்டாடுவான் என்று வெட்கினாள்..

“அத்தான் என்னைக் காதலிக்கிறார் நந்தினி.. நானும் அவர்மீது உயிரையே வைத்திருக்கிறேன்..”

‘அதை எதுக்கு என்னை நிறுத்தி வைத்து ஒப்பிக்கிற..?’ நந்தினிக்கு இருக்குமோ என்ற சந்தேகம் முளைத்தது.. அஜந்தாவின் போட்டோவை ரவிச்சந்திரன் வைத்திருக்கிறானே.. அதை ரயிலில் நந்தினி பார்த்தாளே..

‘இல்லாத ஒன்றை இவள் என்னிடம் ஏன் சொல்ல வேண்டும்..? அப்படியொன்றும் இவளைவிட நான் அழகியில்லையே..’

“என் அப்பா செய்து வைத்த வேலையினால் அத்தைக்கும் ரம்யாவுக்கும் எங்கள் குடும்பத்தைக் கண்டாலே பிடிக் காமல் போய்விட்டது.. தாத்தாவும் பாட்டியும் அவங்களோட பேத்தியான என்னைத்தான் ரவி அத்தான் விவாகம் செய்துக்கனும்னு இஷ்டப்படறாங்க.. மாமாவுக்கும் அதே எண்ணம்தான்.. பட்சே.. அத்தையோட மனசு வேறயா

இருக்கிறதாலே அத்தான் எங்க காதலை மறந்திரலாம்ன்னு சொல்கிறார் நந்தினி.. வயநாட்டிலே இருந்தால் என்னை மறக்க முடியாதுன்னு ஊர் ஊராச் சுத்திக்கிட்டு இருக்கார்.. உன்னிடம் சொல்வதற்கென்ன.. நந்தினி..”

அஜந்தா ஏதோ பரம ரகசியம் ஒன்றைப் பகிரப் போகிறவளைப் போலச் சுற்று முற்றும் பார்த்து வைத்தாள்.. அந்த அளவுக்கு அவளது நம்பிக்கைக்கு தான் பாத்திரமாகி விட்டோமா என்று நந்தினி திருதிருத்தாள்..

‘என்னத்தைச் சொல்லப் போறா..? இந்த அரண்மனையிலே பாதாள அறை இருக்கு.. அது நிறைய தங்கமும், வைரமுமா கொட்டிக் கிடக்குன்னு புதையல் ரகசியம் எதையும் சொல்லப் போகிறாளா..?’

ரவிச்சந்திரனை விடப் பெரிதான புதையல் எதுவும் இருக்க முடியுமா என்று ஜொள்ளியது நந்தினியின் மனம்..

‘ஆ ஆள் வல்லிய சுந்தரனல்லோ..!’

“கேள் நந்தினி..”

‘கேட்காமல் எங்கேடி போய் தொலைஞ்சேன்..? பேசாம ரூமுக்குள்ள போய் அடைந்துக்கலாம்ன்னு பம்மிப் பம்மி

நகர்ந்தவளை நில்லுங்கிற ஒற்றை வார்த்தையிலே கட்டிப் போட்டு நிறுத்தி வைச்சுட்டு கேள்ன்னு சொல்றியே.. இது உனக்கே அடுக்குமா அஜந்தா..?'

"என்னை மறக்க முடியாமா அத்தான் டிரிங்க் பண்ண ஆரம்பிச்சுட்டார்.. லேடிஸ் பழக்கமும் உண்டாகிருச்சு.. இதைக் கேள்விப்பட்டப்ப என் மனசு எப்படித் துடிச்சுப் போயிருச்சுன்னு தெரியுமா..?"

நந்தினியின் மனமும் துடிக்கத்தான் செய்தது.. அங்கிருந்து அகன்று விட்டால் நன்றாக இருக்குமென்று அவள் தவித்துக் கொண்டிருந்த போது இன்னொரு அதிரூப சுந்தரி அங்கே வருகை தந்து தன் அழகினால் நந்தினியை மயக்கமுறச் செய்தாள்..

'ஈ தேவகுமாரி யாரானு..?'

அந்த வீட்டில் உள்ள அனைத்துப் பெண்களும் தேவலோக அப்சரஸ்களை மிஞ்சும் அதிரூப சுந்தரிகளாக இருப்பதன் மர்மம் என்னவாக இருக்கக்கூடும் என்று ஆழ்ந்து யோசித்தாள் நந்தினி..

"எந்தா மோளே.. இத்தரயும் ஆலோசிக்கனு..?" ரம்யமாக முறுவலித்தாள் அந்த மாது..

‘பேசாம இந்தம்மாவுக்கு ரம்ய மாலினின்னு பெயர் வைத்திருக்கலாம்..’

“அம்மே.. ஈ பெண்குட்டி பேரு நந்தினி.. இவிட ரவி அத்தானிடம் ஜோலி பார்க்க வந்திருக்காங்க..”

“வரனும் மோளே..” என்று வரவேற்ற அந்தப் பெண்மணிதான் அஜந்தாவைப் பெற்றெடுத்த அவந்திகாவாம்..

“அவந்திகா தேவி..” என்று அழுத்தம் திருத்தமாக தங்களது ராஜ பாரம்பர்யத்தை அறிவித்தாள் அஜந்தா எனும் அஜந்தா தேவி..

“சாய் குடிச்சோ..?” அவந்திகா விசாரித்தாள்..

‘இந்தக் கேரள மலைநாட்டில இது ஒண்ணை எல்லோரும் கேட்டு வைச்சிருவாங்க..’

“ஆச்சு அம்மே..” என்றாள் அஜந்தா..

தாயும் மகளும் தாழ்ந்த குரலில் எதையோ விவாதிக்க ஆரம்பிக்க தப்பித்தேன் பிழைத்தேன் என்று லேசான தலையசைவில் விடை பெற்றுக் கொண்டு தன் அறைக்கு ஒரே ஓட்டமாக ஓடித் தப்பித்தாள் நந்தினி.. அறையின் கதவைப் பூட்டித் தாழிட்டு விட்டு அதன்மீது சாய்ந்து நின்று ஆசுவாசப்

படுத்திக் கொண்டவள் மறந்தும் அந்த அறையை விட்டு வெளியேறி விடக் கூடாது என்று தனக்குள் சங்கல்பம் செய்து கொண்டாள்.. அறையிலிருந்த ஆள் உயர ஜன்னலின் கண்ணாடிக் கதவை கனத்த திரை மறைத்திருந்தது.. விலக்கிப் பார்த்தாள்.. ஹாலின் கண்ணாடிக் கதவை விட இங்கே அதியற்புதமான இயற்கைக் காட்சிகளைப் பார்க்க முடிந்தது..

‘இங்கேயே வியூ பிரமாதமாய் இருக்கே.. எதுக்காக ரூமைவிட்டு வெளியே போய் தேவையில்லாத அக்கப் போரையெல்லாம் காதில் கேட்கனும்..?’

சோஃபாவை இழுத்துக் கண்ணாடிக் கதவின் பக்கம் போட்டு கம்பளியைப் போர்த்திக் கொண்டு அதில் கால் மடக்கி படுக்கை வாக்கில் உட்கார்ந்து மழையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்த நந்தினி அப்படி யே தூங்கி விட்டாள்..

“டிர்ர்ர்ர்...ர்..”

அறையின் காலிங் பெல் அலறியதில் உலுக்கிப் போட்டவளாக கண் விழித்தவள் சோஃபாவை விட்டுக் குதித்து கம்பளியை தலையோடு போர்த்திக் கொண்டு கதவைத் திறக்கப் போனாள்..

“நந்தினி அம்மே..” என்று வாயிலிருந்த பற்களையெல்லாம் இந்தா எண்ணிக்கொள் என்று காட்டியபடி உள்ளே வந்த ஓமனா கம்பளி போர்த்திய உருவத்தைக் கண்டு பயந்து போனவளாக துள்ளிக் குதித்து நான்கடி தள்ளி நின்று..

“என்டே மலையாள பகவதி அம்மே..!” என்று அபயக்குரல் கொடுத்து நெஞ்சில் கை வைத்தாள்..

“பகவதியம்மனை டிஸ்டர்ப் பண்ணாதே ஓமனா.. இந்த மழையில் அவங்க கோவிலுக்குள்ள நிம்மதியா ரெஸ்ட் எடுக்கட்டும்..” நந்தினி கம்பளிக்குள் இருந்து வெளிப்பட்டு முகம் காட்டினாள்..

“நீங்களா அம்மே எனைச் சோதிச்சது..?”

“உன்னைச் சோதிக்கிற அளவுக்கு நான் பெரிய ஆள் இல்லை ஓமனாக்குட்டி.. என்னைத்தான் இந்த வாழ்க்கை சோதனையாய் சோதிக்குது..” அலுத்துக் கொண்டாள் நந்தினி..

“ஏன் அம்மே..?” கதை கேட்க ஆர்வமானாள் ஓமனா.

“விதி ஓமனே..” நந்தினி நெற்றியின் மையத்தில் ஆள்காட்டி விரலைக் கொண்டு சென்று சுழி போட்டுக் காட்டினாள்..

“அம்மே சம்சாரிக்கிறதும் சரிதானு.. விதி வலியது அம்மே..” ஓமனா கன்னத்தில் கையை வைத்துப் பெருமூச்சு விட்டாள்..

“தா.. நீயே சொல்லிட்ட பாரு.. இதை நீ சொல்லி நான் கேட்க வயநாட்டுக்கு வந்து சேரனும்னு காலம் எனக்கு விதிச்சிருக்கு பாரு.. அங்கதான் ஆண்டவன் நிற்கிறாரு ஓமனா..” என்றாள் நந்தினி..

“அவ்விடத்தே நம்ம ஐயன் அல்லவோ நிக்கிறாரு அம்மே..” ஓமனாவின் சுட்டு விரல் சுட்டிக் காட்டிய இடத்தில் கைகளை மடித்துக் கட்டி.. அறை வாசலில் சாய்ந்து நின்றிருந்தான் ரவிச்சந்திரன்..

‘இவன் எதுக்கு இங்கே வந்திருக்கான்..?’

நந்தினி கம்பளியின் ஞாபகம் வரப் பெற்றவளாய் அதைச் சுருட்டிக் கட்டிலில் போட்டுவிட்டு அவனைப் பார்த்தாள்.. நிதானமாக அவன் உள்ளே வந்தான்.. ஓமனாவைப் பார்த்தான்..

“நந்தினி அம்மேயை ஊன் கழிக்க வரச்சொல்லி.. அம்மே விளிச்சு..” என்றாள் அவள்..

# அத்தியாயம் 63

“**நா**ன் அழைத்துக்கிட்டு வர்றேன்.. நீ போ..” என்றான் ரவிச்சந்திரன்..

எஜமானனே சொன்ன பின்பு தனக்கு அங்கு என்ன வேலை எனும் விதமாக ஓமனாவின் முகம் வாடி விட்டது.. நந்தினியுடன் இன்னும் சற்று நேரம் சம்சாரிக்க இயலாமல் போன சோகத்துடன் பிரியாவிடை பெறுகிறவளைப் போல நந்தினியை ஏக்கத்துடன் பார்த்து..

“ஞான் வரட்டே அம்மே..?” என்றாள்..

“இந்த அம்மேயை கட் பண்ணிரு ஓமனாக்குட்டி.. உனக்குப் புண்ணியமாப் போகும்ன்னு அப்போதே சொன்னேனே.. உனக்குப் புண்ணியம் வேண்டாமா ஓமனா..?” நந்தினி உருக்கமாகப் பேசிய தினுசில்..

“மறந்து போயி அம்மே..” என்று வாய் பொத்திச் சிரித்தாள் ஓமனா..

“இப்பவும் ‘மே,மே’ன்னுதான் கூப்பிடற.. எங்கே.. மேம்ன்னு சொல்லு பார்க்கலாம்..”

“மேம்..”

“குட்.. ‘மே’க்கு ‘மேம்..’ பெட்டர்.. கீப் இட் அப்..”

“எந்தா பறயுனு..?”

“இப்படியே.. ‘மேம்’ன்னு கூப்பிட்டுப் பழகுன்னு சொன்னேன்..”

“அதானு..”

“அதே.. அதே..”

பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்ற ஓமனாவை வேடிக்கையாய் பார்த்த ரவிச்சந்திரன் நந்தினியின் தலையில் கொட்டி..

“ஏய்ய்.. அரட்டை.. எங்க வீட்டு சர்வண்டுக்கு என்ன வசிய மருந்து வைச்ச..? இப்படி மந்திரித்து விட்டதைப் போலப் போகிறாளே..?” என்று சிரித்தான்..

“அவ என்னை மந்திரித்து விட்டாப் பத்தாதாக்கும்..?”

“இப்படி ‘உக்கும்’ போடறதை நிறுத்திட்டு எழுந்து வா..”

நந்தினி ஜன்னல் பக்கமாகப் பார்த்தாள்.. மையிருட்டுக் கவிந்து அவளை பயமுறுத்தி வைத்தது.. அதை

உணர்ந்தவனாக திரையை இழுத்து ஜன்னலை மூடிய ரவிச்சந்திரனிடம்..

“இந்த இருட்டு வேளையிலே எங்கே கூப்பிடறீங்க..” என்று

கேட்டாள்..

“ம்ம்ம்..? வயநாட்டைச் சுற்றிப் பார்த்துட்டு வரலாம்ன்னு கூப்பிடறேன்.. வர்றியா போகலாம்..?”

“அதுக்கு உங்க அத்தை மகள்தான் லாயக்கு.. இருட்டே அவளைக் கண்டா இருண்டு போகும்.. நான் அதுக்குச் சரிப்பட்டு வரமாட்டேன்..”

“நீ எதுக்குச் சரிப்பட்டு வர மாட்ட..?”

விஷமமாக கண் சிமிட்டினான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் முகம் வெட்கத்தினால் சிவந்து தொலைத்தது.. எதைப் பேசினாலும் அதில் ஓர் வில்லங்கத்தைக் கண்டு பிடித்து விடுகிறானே என்று மனதுக்குள் குமைந்தாள்..

‘சரியான வில்லங்கம் வீராச்சாமி..’

“எழுந்திரி..”

“எங்கே..?”

“இப்பத்தானே ஓமனா சொன்னா..?”

“என்னத்தைச் சொன்னா.. என்னவோ ஊன் கழிக்கனும்னு சொன்னா.. அதுக்கு நான் எதுக்கு வரனும்..”

“ஹா.. ஹா..”

மனம் விட்டுச் சிரித்த ரவிச்சந்திரனின் கவர்ச்சிகரமான அழகு பன் மடங்கு பெருகியதில் நந்தினி தரையைப் பார் த்துத் தப்பித்தாள்.. இல்லாவிட்டால் தேவையற்ற கிளர்ச்சி ஏற்பட்டுத் தொலைக்குமே...

“உன் பக்கதிலிருந்தா மனசு லேசாகிருது நந்தினி.. அது என்ன மாயமோ, மந்திரமோ தெரியலை.. இறக்கை விரித்துப் பறக்கனும் போல ஆகிருது..” உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னவனை திகைப்புடன் பார்த்தாள் நந்தினி..

‘இவன் என்ன அலுவலுக்கு சாம்பிராணி காட்டறான்..? உஷார்.. நந்தினி.. உஷார். .’

“ஊன் கழிஞ்சுன்னு சொன்னா சாப்பிட வாங்கன்னு அர்த்தம்.. டின்னருக்கு உன்னைச் சாப்பிட அழைத்துக் கிட்டு வரச் சொல்லி அம்மா அனுப்பி வைச்சிருக்காங்க.. நான்

அழைத்துக்கிட்டு வர்றேன் போன்னு ஓமனாவை அனுப்பி வைத்ததை கேட்டுக்கிட்டுத்தானே இருந்தே..?"

"அதுக்கு இதுவா அர்த்தம்..?"

"ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்.. கிளம்பு, கிளம்பு.."

டைனிங் ஹாலுக்குப் போனால் யார் யார் இருப்பார்களோ என்று தயங்கினாள் நந்தினி.. அறியாதவர்களின் முன்னிலையில் சங்கடத்துடன் உட்கார்ந்து சாப்பிடும் கொடுமைக்கு பட்டினியாக படுத்து விடுவதே சாலச் சிறந்தது என்று தோன்றிவிட..

"எனக்குப் பசியே இல்லை.." என்று அண்டப் புளுகு, ஆகாசப் புளுகை புளுகினாள் நந்தினி..

அவளை உற்றுப் பார்த்த ரவிச்சந்திரன்..

"யாரிடம் கதை விடுகிற..?" என்று நிதானமாக கேட்டான்..

"கதையா..?"

"கதைதான்.. பின்னே நிஜமா..? உனக்குப் பசிக்கலைன்னு சொன்னாக் கைக் குழந்தைகூட நம்பாது.. உன்னை எனக்குத் தெரியாதா..?"

'நான் தின்னிப் பண்டாரம்ன்னு தெரிந்து வைத்திருக்கிறான்..' நந்தினி மூக்கை உறிஞ்சியபடி அவனுக்கு புறமுதுகு காட்டி உட்கார்ந்தாள்.. சில நொடிகளில் அவள் தோள்களில் அவனது கரங்கள் படிந்தன.. அவளது இரு தோள்களிலும் கை வைத்து குனிந்து அவள் முகம் பார்த்தவன்..

"கோபமா..?" என்று சரசமாக வினவி அவளை சோதித்து வைத்தான்..

"இல்லை.." நந்தினி அவன் கைகளை விலக்கி விட்டு தள்ளி உட்கார்ந்தாள்..

"ஓகே.." அவளுக்கு முன்னால் வந்து உட்கார்ந்து அவள் முகம் பார்த்தவன் ஆழ்ந்த குரலில்..

"எதிலிருந்து தப்பிக்க நினைக்கிற நந்தினி..?" என்று கேட்டான்..

'கண்டு பிடிச்சுட்டான்..'

அவளது மன உணர்வுகளை வெகு துல்லியமாக அவன் கணித்து வைத்திருக்கிறான் என்பதில் நந்தினிக்கு ஆறுதலும் ஆச்சரியமும் ஒருசேர ஏற்பட்டன..

“இப்பத் தப்பிக்கலாம்.. காலையிலே..?”

“பாஸ்..” நந்தினி தேம்பி விட்டாள்..

“ம்ப்ச்.. நானிருக்கேன்னு சொல்றேனில்ல..”

ரவிச்சந்திரன் ஆதரவாய் அவளது முடி கோதியதில் நந்தினியின் பயந்த மனம் சற்று அமைதியடைந்தது..

“இந்த வீட்டில அஜந்தா மட்டும் இல்ல நந்தினி.. இதைத்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் உன்னிடம் சொன்னேன்.. எங்க பிரியத்துக்கு நீ மதிப்புக் கொடுக்க மாட்டியா..?” இறைஞ்சுவதைப் போல ரவிச்சந்திரன் பேசியதில்..

‘இவனா இத்தனை தூரத்துக்கு தழைஞ்சு பேசறான்..?’ என்று ஆச்சரியப்பட்டுப் போனாள் நந்தினி..

ரவிச்சந்திரனுக்கு இருக்கும் தலைக்கனத்திற்கு அவன் நந்தினியை ஒரு மனுஷியாகவே நினைக்க மாட்டான் என்றுதான் அவள் கோழிக்கோடில் நினைத்திருந்தாள்.. அவனும் அப்படித்தான் இருந்தான்.. அவள் மனதை புண்படுத்தினான்.. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் மட்டம் தட்டினான்.. அவன் முதலாளி.. அவள் தொழிலாளி என்பதை

அவள் மறந்து விட்டாலும் நினைவு படுத்தினான்.. ஓர் எல்லைக் கோடு வகுத்து அவளை தள்ளி நிறுத்தினான்..

எல்லாம் முதல்நாள் மாலை வரைதான்.. இரவு ஆரம்பித்தபோது தண்டித்தவனே தா யின் மடியாகி அவளை தோள் சாய்த்துக் கொண்டான்.. இப்போது வயநாட்டில் அரண்மனை போன்ற அவனது வீட்டில் அவளது தனிமையைப் போக்கி ஆறுதல் தர முனைகிறான்..

“ஜஸ்ட் எ மினிட்..” என்றாள் நந்தினி..

“வாட் ஃபார்..” ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தி அவளைக் கிறக்கத்தில் ஆழ்த்தினான்..

“பிரஷ்ஷாகிட்டு வந்திடறேன்..”

“என்ன பிரஷ்ஷானாலும் இருக்கிற மூஞ்சிதான் இருக்கும்.. புதுசா உன் மூஞ்சி அழகா மாறிராது..”

“அழகுப் பாட்டி, அழகு அம்மா, அழகுத் தங்கை, அழகு அத்தை இன்னும் அழ…கு அத்தை மகள்ன்னு அழகிகள் வாழ்கிற குடும்பத்தில பிறந்திருக்கிற ஆணவமா..?”

“ஹா.. ஹா.. அதென்ன அத்தை மகளுக்கு மட்டும் ஸ்பெஷல் இழுவை..?”

“ஊம்..? உங்க அத்தைமகள் என்னை அந்த அளவுக்கு இம்ப்ரெஸ் பண்ணியிருக்கா..”

“ஊஹும்..?”

புன்சிரிப்புடன் அவன் கேட்டபோது.. உண்மையாகவே இவன் அஜந்தாவைக் காதலிக்கிறானோ என்று நினைக்கத் தோன்றியது நந்தினிக்கு..

அப்படி இல்லாவிட்டால் அவளைப் பற்றிப் பேசும் போது இவன் முகம் மலர்ந்திருக்கக் காரணமே இல்லையே.. நந்தினியின் மனம் சோர்ந்தது.. தளர்வாக எழுந்து நின்றாள்..

“என்ன ஆச்சு..?”

“நத்திங்..”

நந்தினியின் சோர்ந்த முகத்தைப் பார்த்த ரவிச்சந்திரன்..

“புது இடமில்ல.. இப்படித்தான் லோன்லியா இருக்கும்.. போகப் போக சரியாகிரும்..” என்றான் ஆறுதலாக..

“ம்ம்ம்..”

“நீ மூடி டைப்பில்ல நந்தினி.. கலகலன்னு பழகறவ.. நீயே பாரேன்.. கொஞ்ச நாளிலேயே என் ஃபேமிலியோட மிங்கிள் ஆகிருவ..”

“மிங்கிள் ஆகலைன்னாலும் ஒண்ணுமில்லை.. நான் இங்கே இருக்கப் போகிறது கொஞ்ச நாள்தானே.. அப்பாம்மாக்கு என் மேல பாசம் அதிகம்.. அவங்களை விட்டு நான் பிரிஞ்சு வந்திருக்கிறதைத் தாங்கிக்க மாட்டாங்க.. என் லெட்டர் கிடைச்சதுமே என்னைத் தேட ஆரம்பிச்சிருப்பாங்க.. கல்யாணத்தை நிறுத்திட்டு என்னைக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிடுவாங்க..”

நந்தினி சொல்லிக் கொண்டே போக ரவிச்சந்திரனின் முகம் கடுமையானது.. சீற்றத்துடன் நந்தினியைப் பார்த்தவன்..

“நீ இங்கேயிருக்கிறது தெரிஞ்சாத்தானே வந்து கூப்பிட்டுக்கிட்டுப் போவாங்க..?” என்று எரிந்து விழுந்தான்..

‘இவனுக்கு ஏன் இத்தனை கோபம் வருது..?’

“எப்பப் பாரு.. திரும்பிப் போகறதைப் பத்தியே பேச்சு.. திரும்பிப் போகனும்னு இந்த அளவுக்கு ஆசைப்படறவ எதுக்காக வீட்டை விட்டு ஓடி வரனும்..? தஞ்சாவூரிலேயே இருந்து தொலைக்க வேண்டியது தானே..? வயநாட்டுக்கு வந்து எதுக்காக என் உயிரைக் குறைக்கிற..?”

சுள்ளென்று அவன் பேசிய பேச்சில் நந்தினிக் கு அழுகை வந்து விட்டது.. பற்களைக் கடித்தபடி கண் கலங்க நின்றவளைப் பார்த்தவன் கோபம் குறைந்தவனாக..

“ஐ ஆம் ஸாரி..” என்றான்..

“நான்.. என் ஊருக்குப் போறேன்..” நந்தினி அழுக ஆரம்பித்தாள்..

“ஆரம்பிச்சுட்டியா..? கண்ணில என்ன டேம் கட்டி வைத்திருக்கியா..?”

விளையாட்டைப் போலக் கேட்டபடி அவளது கண்ணீரை துடைத்து விட்டுத் தோளில் கை போட்டு ஆறுதலாகப் பேசியபடி நந்தினியின் அறையை விட்டு வெளியே வந்தான் ரவிச்சந்திரன்.. மூக்கை உறிஞ்சியபடி அவனது பேச்சிற்கு ஊம் கொட்டியபடி கூட வந்த நந்தினி மாடி ஹாலில் நின்றிருந்த மனிதரைக் கண்டதும் அப்படியே நின்று விட்டாள்..

ஆள் என்னவோ உயரமாக கம்பீரமாக தோரணையுடன்தான் இருந்தார்.. அவரது முகம் மட்டும் கொடூரமாக இருந்தது.. விழிகள் சிவக்க விரோதியைப் போல நந்தினியை அவர் பார்த்த பார்வையில் அவள் நடுங்கி விட்டாள்..

கோவைப்பழம் போல சிவந்த கண்கள்..! தடித்த புருவம்..! குரூரமான கொலைவெறி கொண்ட பார்வை..!

எப்பேற்பட்ட கம்பீரத் தோற்றம் கொண்ட மனிதராக இருந்தாலும் இப்பேற்பட்டக் கொலைவெறித் தோற்றத்துடன் எதிரே வந்தால் மனம் நடுங்குமா..? நடுங்காதா..?

நந்தினி பயத்துடன் அவளையுமறியாமல் ரவிச்சந்திரனின் பின்னால் மறைந்து கொண்டாள்.. அதில் எதிரே நின்றவரின் கோபமும், ரவிச்சந்திரனின் கோபமும் ஒரே சமயத்தில் அதிகரித்தது..

“எங்கன இருக்கியனோ ரவிச்சந்திரா..? சுகமானோ..?” நந்தினியைக் கொன்று விடுவதைப் போலப் பார்த்தபடி கர்ஜித்தார் அந்த மனிதர்..

“ஐ ஆம் ஃபைன்.. என் வீட்டிலே இருந்துக்கிட்டு என்னை நலம் விசாரிக்கிற துணிச்சல் என் அத்தையை கல்யாணம் பண்ணியிருக்கிற மாமாவுக்குத்தான் வரும்.. இந்தக் கேள்வியை நானில்ல கேட்கனும்..?”

குத்தலாக கேட்ட ரவிச்சந்திரன் அந்தக் கொடூரத் தோற்றம் கொண்ட மனிதர் யாரென்பதை தன் கேள்வியின் மூலமாக நந்தினிக்கு உணர்த்தினான்..

‘இந்த மனிதர்தான் அஜந்தாவோட அப்பாவா..?’

ராஜ பாரம்பர்யம் கொண்ட கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்து அதே பாரம்பர்யம் கொண்ட கோடிஸ்வரக் குடும்பத்தில் சரிபாகச் சொத்துகளுடன் வந்த பெண்ணைத் திருமணம் செய்து.. அத்தனையையும் தொலைத்து விட்டு மனைவி, குழந்தைகளுடன் மாமனார் வீட்டில் அடைக்கலமாகி அதற்கும் மேல் ஆயிரம் கோடி கடனை மாமனார் வீட்டின் மீது சுமத்தி விட்டுப் படு.. திண்ணக்கமாக மைத்துனன் மகனிடம் நலம் விசாரித்த அஜந்தாவின் அப்பாவைப் பார்த்த போது அஜந்தாவின் மனோதிடம் யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பதை நந்தினியால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

ரவிச்சந்திரனின் கேள்வியினால் துளிக்கூடப் பாதிக்கப் படாதவராக நந்தினியை உறுத்துப் பார்த்த அந்த மனிதர்.. நந்தினி எதிர்பார்த்த அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தார்..

“ஈ பெண்குட்டி ஆரானு..?”

‘இது ஒண்ணை மறக்காம எல்லோரும் கேட்டிருவாங்க.. நான் பெண்ணா இல்லை ஈயா..?’ முதுகுப் பக்கம் சிறகு இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டா ள் நந்தினி..

ஈ பெண் குட்டியாவதற்கா கேரளத்துக்கு அவள் கிளம்பி வந்தாள்..?

# அத்தியாயம் 64

“இவள் நந்தினி..”

அஜந்தாவின் அப்பாமீது இருந்த பயத்தில் ரவிச்சந்திரன் நந்தினியை ‘இவள்’ என்று குறிப்பிட்டதை அவள் பொருட் படுத்தவே இல்லை.. பயம் வந்தால் பத்தும் பறந்து போகும் போது ஒருமை, பன்மை குறித்த உணர்வும் பறந்து போகாதா என்ன..?

“ஓ..” அஜந்தாவின் அப்பா தலையை மே லும் கீழுமாக ஆட்டிவிட்டு..

“ஈ பெண்குட்டிக்கு இவ்விடத்தில் எந்தா ஜோலி..?” என்று கேட்டார்..

“அதை உங்க மகளும், என் அத்தையும் சொல்லியிருப்பாங்களே... அவங்க சொல்லாமலா இங்கே வந்திருக்கீங்க..?”

“ஆ விஷயத்த எண்ட மருமகன் பறஞ் செவியுறனும்னு ஆசை மருமகனே.. அம்மாவன் ஆசையை மருமகன் நிறைவேற்ற மாட்டியளோ..”

“உங்க ஆசையை நிறைவேத்தனும்னா என் ஆயுள் முழுக்க நிறைவேத்திக்கிட்டே இருக்கனும் அம்மாவனே.. அதுக்கு நான் ஆளில்ல.. கேட்டோ.. எனக்கு ஆயிரம் ஜோலி இருக்கு.. நிங்களப் போல ஜோலி எதுவுமில்லாம மாமனார் வீட்டில குடியிருக்கல.. மனசிலாயி..? நீ வா நந்தினி..”

ரவிச்சந்திரன் நந்தினியின் கைபிடித்து இழுத்தபடி மாடிப்படிகளில் இறங்கி விட்டான்.. நந்தினியின் நடுக்கத்தைப் போக்க படிவளைவில் நின்றவன் அவள் முகத்தை கைகளில் ஏந்தி.. ஆறுதலாக புன்னகைத்து..

“பயப்படக் கூடாது..” என்றான்..

“அவர்தான் அஜந்தாவின் அப்பாவா..?”

“ம்ம்ம்.. யோகானந்தன்னு பெயர்... ராஜா யோகானந்தன்.. எல்லோருக்கும் ஆக்கத் தெரியும்ன்னா இந்த மனிதருக்கு அழிக்கத்தான் தெரியும்.. ஆசைக்கு அளவே கிடையாது.. எல்லாத்தையும் தொலைத்துட்டு எங்களுக்கு பெரும் சுமையா வீட்டோட மாப்பிள்ளையா செட்டிலாகிட்டாலும் இவரோட செலவும் ஊதாரித்தனமும் குறையலை.. இவரோட பிள்ளைகளை படிக்க வைத்து ஆளாக்குகிற பொறுப்பை நாங்க எடுத்துக்கிட்டோம்.. அதுவும் போதாதுன்னு ரம்யாவை

இவரோட மகனுக்குப் பெண் கேட்டு இந்தக் குடும்பத்தோட ஒட்டிக்கப் பார்த்தாங்க.. ரம்யா மறுத்துட்டா.. அதில் இவங்களுக்கு ஆங்காரம்.. தாத்தாவிடமும், அப்பாவிடமும் சண்டை போட்டாங்க..”

“அஜந்தாவை நீங்க கல்யாணம் பண்ணிக்கிட்டா எல்லாம் சரியாகிடும்ல்ல..”

தானும் ரவிச்சந்திரனும் காதலிப்பதாக அஜந்தா சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்து வேதனையுடன் சொன்னாள் நந்தினி.. எதற்காக அந்த மனவேதனை என்று அவளுக்கே புரியவில்லை..

ரவிச்சந்திரன் அவளுக்கு வேலை கொடுத்திருக்கும் முதலாளி.. நந்தினி அவனிடம் அடைக்கலம் கேட்டு வந்திருப்பவள்.. என்னதான் பரிவும், பாசமும் காட்டினாலும் ரவிச்சந்திரன் நந்தினிக்கு யாரோ எவரோதானே..? சொந்தமா..? பந்தமா..?

புருவங்கள் முடிச்சிட நந்தினியை உறுத்துப் பார்த்த ரவிச்சந்திரனின் விழிகளில் கோபம் கொப்பளித்தது.. அவன் பார்வையில் தெரிந்த குற்றச்சாட்டில் நந்தினி வாயடைத்துப் போனாள்..

“நான் யாரைக் கல்யாணம் பண்ணிக்கனும்ங்கிறதை நான்தான் முடிவு பண்ணனும்... நீ இல்லை... அண்டர்ஸ்டாண்ட்..?” அவன் சீறினான்..

“ஐ ஆம் ஸாரி..” சங்கடத்துடன் முணுமுணுத்தாள் நந்தினி..

“இனியொருதரம் இதுபோல நீ பேசினா நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது... அறியாப் பெண்ங்கிறதினால பேசாம இருக்கேன்... எல்லாச் சமயத்திலயும் நான் அமைதியா இருப்பேன்னு நினைச்சிராதே..”

“நினைக்கவே மாட்டேன்..” பயம் மறந்து உறுதியளித்தாள் நந்தினி..

“இந்த ஒரு வாரத்திலே செகண்டுக்கொருதரம் மாறுகிற உங்கள் குணத்தைப் பார்த்துப் பழகின பின்னாலும் நீங்க சிரித்த முகமாவே இருப்பீங்கன்னு நினைத்துக்க நான் ஒண்ணும் முட்டாளில்லை பாஸ்.. இதுவரை இரண்டு தடவை என்னைத் திரும்பிப் போகிற தீர்மானத்தை எடுக்க வைத்திருக்கீங்க.. ஒரே வாரத்தில ரெண்டு தடவை பெட்டியைத் தூக்க வைத்த உங்க கோபத்தை நான் குறைத்து

எடை போட மாட்டேன்..” நந்தினியின் உத்திரவாதத்தில் ரவிச்சந்திரன் கோபம் குறைந்தவனாக சிரித்தான்..

“இந்த வாய்தான் உன் பிளஸ் பாயிண்ட்..” அவள் கன்னத்தில் தட்டினான்..

“இப்படிப் பேசியே பொழுதை ஓட்டிடலாம்ன்னு டிசைட் பண்ணியிருக்கீங்களா பாஸ்...? சாப்பிடப் போகலாம்ன்னு ஆசை காட்டிக் கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டு சாப்பாட்டைக் கண்ணிலேயே காட்டாம பூச்சாண்டியைக் காட்டிப் பயமுறுத்துனீங்க.. இப்ப என்னடான்னா கோபப் படறதைப் போல நேரத்தைக் கடத்தறீங்க.. எனக்கு ஒண்ணேயொன்னு சொல்லுங்க..”

“என்ன..?”

“சாப்பாட்டைக் கண்ணில காட்டுவீங்களா மாட்டிங்களா..?”

“ஊஹூம்..”

அவன் வசீகரமாக புருவங்களை உயர்த்தி மயக்கியத்தில் அடப் போடா என்றிருந்தது நந்தினிக்கு.. பசி மயக்கத்தில் இருக்கிறவளை கிறக்க மயக்கத்தில் ஆழ்த்தி வைக்கிறான்...

சைட்டடித்தா பசி மறந்து போகும்ன்னு கண்டு வைத்திருக்கிறான்..

“சாப்பாட்டைக் கண்ணில காட்டினா மட்டும் போதுமா..?”

“ஓ.. பாஸுக்கு அந்த ஐடியா வேற இருக்கா..? கோபம் வந்தா நாலு மொத்து மொத்திருங்க பாஸ்.. சாப்பாட்டில மட்டும் கை வைக்காதீங்க..”

“உன் மேல கை வைச்சா ஓகேங்கிற..”

விஷமம் வழியும் விழிகளுடன் படு உல்லாசமாக அவன் கேள்வி கேட்டதில் வெறுத்துப் போனாள் நந்தினி..

‘என் உணர்வுகளுடன் விளையாடுவதே இவனுக்கு வேலையாப் போச்சு..’

“ஆமாம்.. பூச்சாண்டியைக் காட்டிப் பயமுறுத்தினேன்னு சொன்னியே.. யாரைச் சொன்ன..?”

“உங்களைச் சொல்லலை..”

“ஏன் சொல்லலை..? டிரெயினில் என்னைப் பூச்சாண்டின்னு நீ சொல்லலை.. பாட்டுக்கூடப் பாடினயே.. என்ன பாட்டு அது..? ம்ம்ம்..?”

நெற்றிப் பொட்டில் விரல் வைத்து யோசித்தவன் உற்சாகமாகி..

“ம்ம்ம் ஞாபகம் வந்திருச்சு..” என்று உற்சாகமாக விரல் சொடுக்கினான்..

“அமெரிக்காவைக் கண்டு பிடிச்ச கொலம்பஸ் கூட இப்படி பிலிம் காட்டியிருக்க மாட்டார்..” என்று நொடித்தாள் நந்தினி..

**“வாரான் வாரான் பூச்சாண்டி..**

**ரயிலு வண்டியிலே..”**

பாடிக் காட்டிய ரவிச்சந்திரன்..

“இந்தப் பாட்டுத்தானே..?” என்று கேட்டான்..

“ஆக மொத்தம் பாட்டுப் பாடியே என் பசியை ஆத்திடலாம்ங்கிற முடிவோட இருக்கீங்க.. நீங்க ஒரு முடிவோடதான் இருக்கீங்கன்னு தெரியாம டின்னருக்குத் தான் போறோம்ன்னு நம்பி உங்க பின்னாலே வந்தேன் பாருங்க.. என்னைச் சொல்லனும்..”

“நீ என்னைத்தானே சொன்னே..?”

“என்னன்னு..?”

“பூச்சாண்டின்னு..”

“உங்களைச்சொல்லலைன்னுதான்சொல்லிட்டேனே..”

“டிரெயினில் சொன்னியே..”

“அது அப்ப.. இது இப்ப..”

“ஓ.. ஐ ஸீ.. இப்ப யாரைச் சொன்னியாம்..?”

“உங்க அருமை அம்மாவனை..”

உதட்டைச் சுழித்து அவள் நொடித்த அழகில் மனம் லயித்து அவளையே பார்க்க ஆரம்பித்து விட்டான் ரவிச்சந்திரன்.. அவனது அந்தப் பார்வை வசியம் செய்ததில் பார்வையை விலக்க முடியாதவளாக அவன் பார்வையோடு பார்வை பிணைய அப்படியே நின்று விட்டாள் நந்தினி.. அதில் ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின..

“ஈ இடம் டைனிங் ஹால் இல்ல மருமகனே..”

காதில் விழுந்த கர்ண கடூரமான குரலில் தூக்கிவாரிப் போட்டவளாக முகம் சிவந்த நந்தினி பார்வையை விலக்கிக் கொண்டு மனம் படபடக்க பயத்துடன் வேறு பக்கம் பார்த்தாள்..

“என் வீட்டில எது எந்த இடம்ன்னு என் அம்மாவனுக்கே தெரிந்திருக்கிறப்ப எனக்குத் தெரியாதா அம்மாவனே.. நாங்க டைனிங் ஹால் வர நேரமாகும்.. உங்களுக்கு அவசரம்ன்னா நீங்க போங்க.. வழி விடு நந்தினி..”

நந்தினியை தன் பக்கமாக இழுத்துக் கொண்டு ஒதுங்கி நின்றான் ரவிச்சந்திரன்.. ரவிச்சந்திரனின் மார்பில் படிந்தபடி நின்ற நந்தினியைக் கண்டதும் யோகானந்தனின் முகம் ஜிவுஜிவுத்து விட்டது.. கொலைவெறி முகத்தில் தாண்டவமாட உறுமினார்..

“ஸ்ஸ்ஸ்.. ஓவர் சவுண்டு உடம்புக்கு ஆகாது.. போங்க போங்க..” ரவிச்சந்திரன் உதட்டில் விரலை வைத்து எச்சரித்தபடி யோகானந்தனுக்கு மாடிப்படிகளை கை காட்டினான்..

தடதடவென மாடிப் படிகளில் இறங்கிய யோகானந்தன் நந்தினியைப் பார்த்த பார்வையில் அரண்டு போன நந்தினி அவர் இருப்பதையும் மறந்து ரவிச்சந்திரனின் மார்பில் முகம் புதைத்து விட்டாள்..

கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்த நந்தினியின் முதுகில் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்திய ரவிச்சந்திரன்..

“இவ்வளவு வாயடிக்கிற.. இவரைப் பார்த்து இப்படி பயப்படற..” என்று கேலி செய்தான்..

வெட்கத்துடன் அவன் மார்பிலிருந்து விலகி நின்றாள் நந்தினி..

“ஏன் அப்படியே இருக்க வேண்டியதுதானே..” ஏமாற்றத்துடன் கேட்டான் அவன்.. நந்தினியின் உடலில் ‘ஜிவ்’வென்ற உணர்வு ஏற்பட்டது..

“ஸ்ஸ்ஸ்.. ஜோக்கடிக்க வேண்டாம் பாஸ்.. பசிக்குது..”

சமாளித்துக் கொண்டவளாக அவள் படியில் இறங்க ஆரம்பித்து விட்டாள்..

கூடவே சேர்ந்து இறங்கிய ரவிச்சந்திரனின் பார்வை அவள் மீது தாகத்துடன் படிந்ததை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்... மனதில் எழும்பிய ஆசையின் அலைகளை டைனிங்ஹாலில் அமர்ந்திருந்தவர்களின் மத்தியிலிருந்த அஜந்தாவின் குரோதப் பார்வை தலையில் அடித்து ஒட்டி விட்டது..

அஜந்தா மட்டுமா குரோதப் பார்வை பார்த்தாள்..? அவந்திகா என்னவோ அவள் சொத்தை எல்லாம் ஒட்டு

மொத்தமாக அபகரிக்க வந்த விரோதியைப் பார்ப்பதைப் போல நந்தினியை முறைத்துப் பார்த்தாள்... யோகானந்தனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்..

‘ஏகே 47’ தான் கையில் இல்லை.. மற்றபடி மெஷின் கன்னை கைப்பற்றி நந்தினியைச் சுட்டுத் தள்ளி விட்டுத்தான் வேறு வேலை என்பதைப் போல கொந்தளித்துக் கொண்டிருந்தார்..

‘எங்கே போனாலும் எனக்கு இப்படியா வந்து விடியனும்..? பெல்ட் மன்னனோட பெல்ட்டுக்கும், துப்பாக்கிக்கும் பயந்து கேரளாவுக்கு ஓடி வந்தா இங்கே அவனுக்கு மேலயில்ல ஆள்கள் இருக்காங்க.. எண்ட மலையாள பகவதி..! ஈ பெண்குட்டி ஒன்றும் அறியா பேதை பெண்குட்டி..! நிண்ட தேசத்தில நீதான் என்னை ரட்சிக்கனும் அம்மே..!’

மலையாள தேசத்தில் காக்க மலையாள பகவதிக்கு மலையாளத்திலேயே வேண்டுகோள் விடுத்தாள் நந்தினி.. இப்படிப்பட்ட சூழலில் அமர்ந்து சாப்பிட்டால் ஒரு விள்ளலாவது உள்ளே இறங்குமா..?

‘பேசாம ரூமுக்கே சாப்பாட்டை கொண்டு வரச் சொல்லியிருக்கலாம்.. ஈ ஓமனாக் குட்டிதான் அம்மே, அம்மேன்னு அப்பினாளே.. அவளிடம் ஈ அம்மைக்கு டின்னரை ரூமுக்கு கொண்டு வந்து கொடுப்பியல்லோன்னு கேட்டிருந்தா ஆகட்டும் அம்மேன்னு கொண்டு வந்திருக்க மாட்டாளா..? நந்தினி.. இந்த ரவிச்சந்திரன் சொல்கிறதைப் போல நீ மக்கு தாண்டி..’

கூட்டுச் சதி போல.. கூட்டு கொலை வெறிப் பார்வையில் பயந்து போனவளாக கால்கள் பின்ன நின்று விட்டவளை..

“வரனும் மோளே..” என்று பிரியத்துடன் அழைத்தாள் யாழினி..

“வாம்மா.. ஏன் அங்கேயே நின்னுட்ட.. வந்து ரம்யா பக்கத்திலே உட்காரு..” வீணா வாத்சல்யத்துடன் கை நீட்டினாள்..

அவளுக்கும் ரம்ய மாலினிக்கும் இடையே இருந்த சேர் நந்தினிக்காக காத்திருந்ததில் நந்தினி ஆசுவாசமானாள்.. பாசத்தைப் பொழியும் வீணாவும், நட்பைப் பிழியும் ரம்ய மாலினியும் அவளுக்கு இருபக்கமும் காவல் காக்கும் போது

யோகானந்தனின் ‘ஏகே 47’ பார்வை நந்தினியை என்ன செய்து விடும்..?

தைரியம் வரப் பெற்றவளாக நந்தினி வீணாவுக்கும் ரம்ய மாலினிக்கும் இடையில் இருந்த சேரில் உட்கார்ந்து கொண்டாள்.. அதன் பின்னர்தான் அவளால் நிம்மதியாக

மூச்சுவிட முடிந்தது.. சுவாசம் சீரானவளாக சுற்று முற்றும் பார்த்தாள்..

தஞ்சாவூரில் நந்தினியின் வீட்டில் இருக்கும் டைனிங் ஹால் பெரியதாக இருக்கிறது என்று அவர்களின் வீட்டிற்கு வரும் உறவினர்கள் அனைவரும் ஆச்சரியப் பட்டுப் போவார்கள்.. அத்தகைய பெருமை கொண்ட டைனிங்ஹாலைப் போல பல மடங்கு பெரியதாக இருந்தது ரவிச்சந்திரனின் வீட்டு டைனிங்ஹால்.. அவ்வளவு பெரிய டைனிங்ஹாலை நந்தினி பார்த்ததே இல்லை.. அத்தனை பெரிய டைனிங் ஹாலை அடைத்ததைப் போல மிகப் பெரிய டைனிங் டேபிள் அழகான வேலைப்பாடுகளுடன் போடப் பட்டிருந்தது.. அதன் இரு முனைகளிலும் சிம்மாசனம் போன்ற இரண்டு சேர்கள் இருந்தன.. அவற்றின் வேலைப்பாடுகளில் மயங்கிப் போனாள் நந்தினி.. கேரளத்து மரப் பொருள்களின்

வேலைப்பாடுகள் வெகு நுட்பமாக அமைக்கப் பட்டிருப்பதின் மர்மம் யாதாக இருக்கக் கூடும் என்று யோசித்தாள்..

குளிர் பிரதேசம் என்பதினால் கேரள வீடுகளில் அதிக அளவில் மரங்களைப் பயன் படுத்தி வீடுகளைக் கட்டியிருந்தார்கள்.. ரவிச்சந்திரனின் வீடு முற்றிலும் மாறுபட்டதாக வெண்மை நிறக் கடைசல்களுடன் கூடிய தாஜ்மஹாலைப் போன்ற வடிவமைப்புடன் வெந்நிறத்தில் பளபளத்தது.. அந்த அரண்மனையின் அழகுக்கு அழகு சேர்ப்பதைப் போல அந்த டைனிங் ஹால் இருந்தது..

டைனிங் ஹாலின் இருபக்கமும் இருபது, இருபது சேர்கள் போடப்பட்டு இருந்தன..

‘நாற்பத்தியிரண்டு சேர்களா..?’ நந்தினிக்கு கண்ணைக் கட்டியது..

டைனிங் ஹாலின் நடுமையத்தில் கூரையிலிருந்து அழகான லஸ்தர் விளக்குகள் ஹாலில் தொங்கிக் கொண்டிருந்ததைப் போலவே கொத்துக் கொத்தாய் தொங்கிக் கொண்டிருந்தன.. டைனிங் டேபிளின் ஒரு முனையில் இருந்த சேரில் தாத்தா அருள்மொழிவர்மன் உட்கார்ந்திருக்க.. டைனிங் டேபிளின் இருபக்க ஆரம்பச் சேர்களிலும்

ரவிவர்மனும், ரவிச்சந்திரனும் உட்கார்ந்திருந்தார்கள்.. ரவிவர்மானின் பக்கத்தில் யோகானந்தன்.. அடுத்து அவந்திகா, அஜந்தா என்று அமர்ந்திருக்க.. எதிர் வரிசையில் ரவிச்சந்திரனின் பக்கத்தில் வீணா, அடுத்து நந்தினி, ரம்ய மாலினி என்று அணி பிரிக்கப்பட்டதைப் போல அமர்ந்திருந்தார்கள்..

‘தினமும் இதே ‘ரோ’வைப் ஃபாலோ பண்ணுவாங்களா..?’ நந்தினிக்கு பெருத்த கவலையாக இருந்தது.. அவந்திகாவுக்கும் அஜந்தாவுக்கும் நடுவில் அவள் மாட்டிக் கொண்டால் ஒரு கவளம் கூட தொண்டையில் இறங்காதே.. அவள் பிரச்னை அவளுக்கு.. இதுபோன்ற பிரச்னை ஏற்பட்டால் அதிலிருந்து தப்பிக்க மார்க்கமென்ன என்று ஆழ்ந்து ஆலோசிக்க ஆரம்பித்தாள் நந்தினி.. வழியும் புலப்பட்டு விட்டது..

‘ஐடியா..’ உற்சாகமானாள்..

‘இருக்கிற நாற்பத்தி ரெண்டு சேரில எதிலாவது ஒன்னில் உட்கார்ந்து தப்பிச்சிட்டாப் போகுது.. இவ்வளவு பெரிய டைனிங் ஹாலில் சேர்களுக்கா பஞ்சம்..?’

தீர்வு கண்ட பின்னால்தான் அவளுக்கு நிம்மதியானது.. அவள் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த யாழினிப் பாட்டி..

"நந்தினி எந்தா இத்தர ஆலோசிக்கனது..?" என்று கேட்டதும் தூக்கிவாரிப் போட்டவளாக..

"ஹி.. ஹி.. ஒண்ணுமில்ல பாட்டி.." என்றாள்..

அவள் பக்கம் திரும்பிய ரவிச்சந்திரனின் கேலிப் பார்வையில் வாயை இறுக மூடிக் கொண்டாள்.. ஆனால் அஜந்தா அவ்வாறு இருக்கவில்லை..

"டைனிங் டேபிளில இருக்கிற வெரைட்டிஸைப் பார்த்ததும் மலைத்துப் போயிருப்பா.. எப்படிக் கட்டுக் கட்டுன்னு கட்டறதுன்னு யோசிச்சிருப்பா.." என்று ஏளனமாகச் சொன்னாள்..

நந்தினியின் முகம் மாறி விட்டது..

# அத்தியாயம் 65

மகள் சொன்னதைப் பாராட்டுவதைப் போல யோகானந்தன் சிரித்து வைத்தார்.. இந்த மனிதருக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா என்று மலைத்துப் போனாள் நந்தினி.. அவளுக்கு மேகநாதனின் நினைவு வந்தது.. மற்றவர்களின் மனம் புண்படும்படி தன் பிள்ளைகள் பேசுவதை மேகநாதன் விரும்ப மாட்டார்.. சிறுவயதிலிருந்தே இயல்பாக வரும் வார்த்தைகளுக்குக் கூட கடும் கண்டனத்தை தெரிவிப்பார்.. பேசுவதற்கு முன்னால் யோசித்துப் பேச வேண்டாமா என்று கண்டிப்பார்.. சிதறிய மற்ற பொருள்களை அள்ளி விடலாம்.. வார்த்தைகளை கொட்டிச் சிதற விட்டு விட்டால் அதை அள்ள முடியாது என்பதைச் சுட்டிக் காட்டுவார்..

அப்படி வளர்ந்தவள்தான் நந்தினி... மேற்குடி என்பது பணத்தால் மட்டுமல்ல.. சில குணங்களினாலும் நிர்ணயிக்கப் படுகிறது..

பேத்தி சொன்னதில் முகம் இறுகிப் போன அருள்மொழிவர்மன்.. அவளை விட்டுவிட்டு மகளைச் சாடினார்..

“அரச குடும்பம்ன்னு பறஞ்சா மட்டும் போதாது.. அதுக்குரிய வல்லிய குணங்களோட மகளை வளர்க்கத் தெரிஞ்சிருக்கனும்... எவ்விடத்தில எப்படி சம்சாரிக்கிறதுனனு தெரியாம சம்சாரிக்கிறது ஈ கொட்டாரத்துக்கு உகந்ததில்ல அவந்திகா..”

‘கொட்டாரமா..?’

அருள்மொழி வர்மன் சொன்ன அத்தனையையும் விட்டுவிட்டு அவர் சொன்ன கொட்டாரத்தில் குழம்பிப் போனாள் நந்தினி... இத்தனைக்கும் அவர் ஒன்றும் படுசுத்தமான மலையாளத்தில் சம்சாரிக்கவில்லை... ஆங்காங்கே ஒன்றிரண்டு மலையாள வளர்த்தைகளைப் போட்டுக் கொண்டுதான் சம்சாரித்தார்... இருந்தும் அவளுக்கு சந்தேகம் வந்து விட்டது.. “கொட்டாரம்ன்னா என்ன..?”

மைண்ட் வாய்ஸில் பேசுவதாக நினைத்து அவள் சவுண்ட் இல்லாத வாய்ஸில் மெலிதாக முணுமுணுத்து வைக்க ரம்ய மாலினி சிரித்தபடி.

“கொட்டாரம்ன்னா அரண்மனைன்னு அர்த்தம்..” என்று பதிலுக்கு முணுமுணுத்தாள்..

இவர்கள் முணுமுணுத்ததை தனக்கு எதிராக முணுமுணுத்ததாக அர்த்தப்படுத்திக் கொண்ட அஜந்தா ஆத்திரம் கொண்டாள்..

அது என்ன அவளைத் தன் பேத்தியென்று சொல்லாமல் உனது மகள் என்று அவந்திகாவிடம் அருள்மொழிவர்மன் சொல்லலாம்.. ரம்ய மாலினி மட்டும்தான் அவருடைய பேத்தியா..? அஜந்தா எவளோ ஒருத்தியா..?

“இருந்தாலும் உங்களுக்கு இந்த ஃபார்ஷியாலிட்டி ஆகாது தாத்தா.. ரம்ய மாலினிதான் உங்க பேத்தி.. ஞான் மட்டும் எண்ட அம்மையோட புத்திரி.. நிங்கள் கொட்டாரத்தில இதுதான் நியாயமோ..?” என்று பொரிந்து தள்ளினாள்..

இதற்கும் யோகானந்தனிடமிருந்து மெச்சுதலான சிரிப்பு வெளிவந்தது.. அது எப்படி அங்கிருந்த அனைவரின் முன்னிலையிலும் என்ன உன் பெண்ணை இப்படி வளர்த்து வைத்திருக்கிறாய் என்று அருள்மொழிவர்மர் அவந்திகாவிடம் கேட்டதை கொஞ்சம் கூடக் கண்டு கொள்ளாமல் அஜந்தாவால் வேறு ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்ப முடிகிறது என்று நந்தினிக்கு ஆச்சரியமாகி விட்டது..

‘அஜந்தாவால் மட்டும்தான் இது முடியும்..’

உறவினர்கள் முன்னிலையில் பெற்றவர்களிட மிருந்து சின்னஞ்சிறிய கண்டன வார்த்தையை வாங்கி விட்டால்கூட நந்தினி முகம் வாடி விடுவாள்.. பெற்றவர்களிடம் திட்டு வாங்கி விட்டோமே என்று மனம் அடித்துக் கொள்ளும்.. தீவிர மன உளைச்சலில் தலைவலியே வந்து விடும்..

இவள் என்னடாவென்றால் வயதில் பெரிய மனிதர் கடிந்து கொண்டதையே கண்டு கொள்ளாமல் தட்டி விட்டுவிட்டு அவர்மீதே குற்றம் கண்டு பிடித்து சண்டைக்குப் போகிறாள்..

“அஜந்தாவும் எண்ட பேத்திதான்.. பட்சே.. மகளிண்ட பேத்தி.. எண்ட உரிமையாகிட்ட பேத்தி ரம்ய மாலினிதானல்லோ..”

அருள்மொழி வர்மர் நிதானமாகச் சொல்லிவிட்டு உணவில் கவனமானார்..

யோகானந்தனின் சிரித்த முகம் கொடூர முகமாக மாறியது.. அருள்மொழி வர்மரின் விளக்கத்தை அவர் விரும்பவில்லை.. அருள்மொழி வர்மரின் உரிமையான பேத்தி ரம்ய மாலினிதான் என்றால் அஜந்தாவுக்கு அந்த அரண்மனையில் உரிமையில்லை என்றல்லவா ஆகி விடுகிறது..?

அவர் மனைவியை முறைத்துப் பார்த்தார்.. கணவனின் பார்வை சொன்னதை சடுதியில் புரிந்து கொண்ட அவந்திகா..

“எந்தா அச்சன் இப்படி பேதம் பார்க்கிறது..? பெற்ற பிள்ளைகளிடையே நிங்கள் பேதம் பார்ப்பீகளோ..? அப்படியெண்டால் அச்சனுக்கு ஞான் வேறு.. சேட்டன் வேறு எண்டல்லவா அர்த்தமாயினு.. இது அநியாயம் அச்சா..” என்றாள்..

“எண்ட பிள்ளைகளில ஞான் பேதம் பார்க்கியல மோளே.. நிண்ட சேட்டனுக்கு ஞான் அளிச்ச சொத்துக்களைவிட பலமடங்கு அதிமமாயினு சொத்தத்தான் நிண்டனுக்கு வழங்கினேன்.. எந்தா பிரயோசனம்..? நிண்ட சேட்டன் ஞான் அளித்த குறச்ச சொத்தப் பெருக்கி எண்ட பாரம்பர்யப் பெருமை குலையாம ஜீவிக்கிறான்.. அவந்திகா ஞான் அளிச்ச சொத்துக்கள அழிச்சுட்டு அதுக்கு மேலும் ஆயிரம் கோடி கடனை எண்ட கொச்சுமோன் சிரத்தில சுமத்தியது.. கணவனோட கொட்டாரத்தில ஜீவிக்காம அச்சனோட கொட்டாரத்தில ஜீவிக்கிறது.. இதில ஈ அச்சன் பேதம் பார்க்கிறது நிண்ட சேட்டன் கிட்டத்தான் மோளே.. அவந்திகாவிடம் அல்ல..”

அவந்திகாவின் முகம் சுருங்கி விட்டது.. யோகானந்தன் மீசை துடிக்க மாமனாரை வெட்டி விடுவதைப் போல பார்த்து வைத்தார்.. ரவிவர்மன் நிமிர்ந்து மைத்துனனை ஆழ்ந்து பார்த்தார்.. அந்தப் பார்வையைத் தாள மாட்டாமல் மாமனாரின் பக்கமிருந்த பார்வையைத் திருப்பி மனைவியை முறைக்க ஆரம்பித்தார்..

இதற்கு மேலும் பொறுக்க முடியாது என்பதைப் போல ரவிச்சந்திரன் “அத்தை..” என்று அழுத்தமான குரலில் அழைத்தான்..

பதறிப் போனாள் அவந்திகா.. “ரவி..?” என்றாள்..

“இது டைனிங் ஹால்.. சாப்பிட வந்த இடத்தில சாப்பிடற வேலையை மட்டும் பார்க்கனும்.. அதை விட்டுட்டு உங்க மக என் பெர்சனல் மேனேஜரை வம்புக்கு இழுக்கிறா.. அப்பா வீட்டில எதுவுமில்லாம தாய்மாமன் வீட்டில டேரா போட்டிருக்கிற உங்க மகள்தான் இத்தனை ஃபுட் வெரைட்டிஸைப் பார்த்ததும் மலைத்துப் போகனும்.. நந்தினி மலைக்க வேண்டியதில்லை.. படித்த படிப்புக்கு வேலை பார்க்க ஈ ஊருக்கு வந்திருக்கிறா.. ஒன்று பெத்தவங்க பணத்தில உட்கார்ந்து சாப்பிடனும்.. இல்லை தன்னோட

சம்பாத்தியத்தில உட்கார்ந்து சாப்பிடனும்.. இது இரண்டும் நிங்கள் மகளிண்ட இல்லை.. அதுக்கப்புறம் எதுக்கோசரம் மத்தவங்களை கிண்டல் பண்ணனும்..? அவ்விதம் செய்யறதுக்கு முன்னாடி தான் யார்ங்கிற சுய பரிசோதனை செய்த பின்னால சம்சாரிக்கனும்.. ஈ விஷயத்த நிங்கள் மகளிண்ட செவிகளில போட்டு வைக்கனும் அத்தை.. இனியொருதரம் அஜந்தா இவ்விதம் சம்சாரிச்சா ஞான் நோக்கிக்கிட்டு சும்மா இருக்க மாட்டேன்.. மன்சிலாயி..”

‘இனி அடங்கி விடுவாள்..’

இப்படித்தான் நந்தினி நினைத்தாள்.. உன் வீட்டில் உட்கார்ந்து சாப்பிடாமல் என் வீட்டில் உட்கார்ந்து என் சாப்பாட்டைச் சாப்பிடும் உனக்கு இத்தனை வாய் இருக்கக் கூடாது என்ற பேச்சைக் கேட்ட பின்பும் ஒருத்தி வாயைத் திறந்து பேசுவாளா என்ன..?

அஜந்தா பேசினாள்.. நந்தினி போட்ட கணக்கீடு அத்தனையையும் முறியடித்து தன்னை வெல்வது அத்தனை சுலபமல்ல என்பதை உடனடியாக நிலை நாட்டி விட்டாள்..

“விவாக வயதில் இருக்கிற பெண்கள் அச்சனோட சம்பாத்தியத்திலயும், தன்னோட சம்பாத்தியத்திலயும்

உட்கார்ந்து போஜனம் பண்ணனும்னு அவசியமில்ல அத்தான்.. ஹஸ்பெண்டோட சம்பாத்தியதிலயும் ஜீவிக்கலாம்.. எனக்கு அந்த வகையிலான ஜீவிதம்தான் வேணும் அத்தான்.. அந்த வகையில ஈ கொட்டாரத்தில ஞான் கழிக்கும் ஊன் எண்ட புருஷனோட கொட்டாரத்தில கழிக்கும் ஊனல்லோ..?"

"ஹா.. ஹா.. வல்லிய நாயம் பறஞ்ச மோளே.."

யோகானந்தன் மகிழ்ந்து போய் விட்டார்.. ரவிச்சந்திரனின் முகம் அருவெருப்பில் சுருங்கி விட்டது.. இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா என்று அவன் வெறுத்துப் போய் விட்டான்.. நந்தினி அவனுடைய உறவினர்களைப் பற்றி என்ன நினைப்பாள் என்ற நினைவில் நிதானம் இழந்தான்..

"எப்படி உங்களால் இப்படிச் சிரிக்க முடியுது..?"

ரவிச்சந்திரனின் புயலை உள்ளடக்கிய குரலில் அவந்திகா மறுபடியும் பதறிப் போனாள்.. ரவிச்சந்திரனிடம் அவளுக்கு உள்ள பயத்தை நந்தினியால் தெளிவாக உணர முடிந்தது.. ரவிச்சந்திரனை நிமிர்ந்து பார்த்துப் பேச அவந்திகா அஞ்சினாள்.. ரவிச்சந்திரன் பேச ஆரம்பித்தாலே கிடுகிடுவென நடுங்கினாள்..

“ரவி..”

“ம்ப்ச்.. சும்மாயிருங்க அத்தை.. ஞான் கேட்பது நிங்களிடையல்ல.. நிங்கள் ஹஸ்பெண்டிடம்..”

அழுத்தம் திருத்தமான ரவிச்சந்திரனின் பேச்சில் குன்றிப் போய் விட்டாள் அவந்திகா.. அவளது முகம் வெளுத்துக் கண்களில் நீர் மல்கியத்தில் அவளைப் பெற்ற தாய் தந்தையான யாழினியும் அருள்மொழிவர்மனும் துயரம் கொண்டார்கள்..

# அத்தியாயம் 66

**ர**விச்சந்திரனின் கோபத்தில் நியாயம் இருந்தாலும் அவமானப்படுவது அவர்கள் பெற்ற பெண்ணல்லவா..? அருள்மொழி வர்மனுக்கும், யாழினிக்கும் மனது வலிக்கத்தான் செய்தது.. ஆனாலும் அதை வெளிக்காட்டாமல் மனதுக்குள் அடக்கி வைத்து அமைதி காத்தார்கள்.. அவர்களது பாசத்தை வெளிப்படுத்தியதால் ஏற்பட்டு விட்ட இன்னல்களும் ரவிச்சந்திரனின் பக்கமிருந்த நியாயமும் அவர்களை ஊமையாக்கி விட்டன..

"நிங்கள் எங்களப் போல ராஜ பாரம்பர்யம்ன்னுதான் எங்க தாத்தா நிங்களுக்கு பெண் கொடுத்தார்.. எண்ட அச்சனுக்குக் அளித்த பங்கை விட அதிகமான பங்கை நிங்களோட பார்யாளுக்கு அளித்தார்.. நிங்க செய்தது எந்தா..? நிங்களோட சொத்தையும் அழிச்சு.. நிண்ட பார்யாளோட சொத்தையும் அழிச்சு நிர்க்கதியா எங்க கொட்டாரத்துக்கு வந்து நின்னிங்க.. நாங்க இருக்க இடம் கொடுத்தோம்.. நிங்கள் பிள்ளைகளை படிக்க வைச்சோம்.. மாமனார் கொட்டாரத்தில இருக்கிற நினைப்பில்லாம நிங்கள் பண்ணின அட்டகாசத்தையெல்லாம் மனசில வைச்சுக்காம

நோக்கிக்கிட்டோம்.. அத்தோட விட்டு வைத்தீகளா..? ஆயிரம் கோடி கடனைக் கொண்டு வந்து அத்தனை சொத்தையும் ஞான் வாங்கும்படி செய்தீங்க.. அதையும் பல்லைக் கடித்து ஏத்துக்கிட்டு நிண்ட மகனுக்கு ஜோலி போட்டுக் கொடுத்திருக்கேன்.. நிண்ட மகளுக்கு விவாகம் செய்து கொடுக்கிற பொறுப்பை ஏத்துக்கிட்டு இருக்கேன்.. இப்படி பார்யாள் வீட்டில எந்தவிதப் பொறுப்புமில்லாம உட்கார்ந்து ஜீவிதம் பண்ணிக்கிட்டு இருக்கிற நிலைமையில எந்தா சிரிப்பு இது..? எப்படி உங்களாலே சிரிக்க முடியுது..? ஆர் யு நாட் அஷேம்டு எபௌட் இட்..?"

யாழினி கண்களை இறுக மூடி விட்டாள்.. அவந்திகாவின் குனிந்த தலை நிமிரவேயில்லை.. அவள் விழிகளில் வழிந்த கண்ணீர் உதிர்ந்து டைனிங் டேபிளில் விழுந்தது.. அருள்மொழி வர்மர் உணவிருந்த தட்டில் கை வைக்க முடியாமல் தவித்துப் போய் வெறித்தார்.. வீணாவும், ரம்ய மாலினியும் உதட்டைக் கடித்துக் கொண்டு சங்கடப்பட்டார்கள்.. ரவிவர்மன் மகன் பேசுவது சரிதான் என்ற முறையில் ஆழ்ந்த பெருமூச்சுடன் தலையை அசைத்தார்.. ரவிச்சந்திரன் மட்டும் பொறுப்போடு இல்லாமலிருந்தால் அந்தக் குடும்பம் எப்படிச்

சிதறிச் சின்னாப் பின்னமாகியிருக்கும் என்பதை அவரும் நன்கு அறிவார்..

அருள்மொழிவர்மனும் நன்கு அறிவார்..

பழம் பெருமையிலேயே காலத்தை கழிக்காமல் ரவிச்சந்திரன் இளம் வயதிலேயே வய நாட்டைக் கடந்து கேரளத்தின் அத்தனை நகரங்களிலும் கால் பதித்து விட்டான்.. அவன் ஆரம்பித்த 'யாழ்..' நட்சத்திர ஹோட்டல்களின் சங்கிலித் தொடர் கேரளத்தையும் தாண்டி இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் வியாபித்த போது ரவிவர்மன் 'இவன் என் மகன்..' என்று பூரித்துப் போய் விட்டார்.. அவரால் சாதிக்க முடியாத அனைத்தையும் அவரது மகன் சாதித்து விட்டானே.. ரவிவர்மனை அருள்மொழிவர்மனின் அவந்திகாவின் மீதான பாசம் பிணைத்து வைத்திருந்தது.. வயநாட்டிலிருந்த 'சேரளம்' எஸ்டேட்டிலிருந்து வரும் வருமானத்தில் அவர் வேறு சில தொழில்களைத் தொடங்கலாம் என்று நினைத்திருந்தால் அதற்கான செலவுகளோடு அவந்திகா வந்து நின்று விடுவாள்.. அருள்மொழிவர்மரின் ஒரு சிறு பார்வையில் ரவிவர்மன் கையிலிருக்கும் கோடிக் கணக்கான ரூபாய்களை அப்படியே

பெட்டிகளில் அடுக்கித் தங்கைக்கு தாரை வார்த்து கொடுத்து விடுவார்..

“என் கண் முன்னாலே நம்ம சொத்தும் செல்வமும் குறைஞ்சுக்கிட்டு இருக்கு ரவி.. நெல்லுக்கு நீர் வார்த்தாக் குற்றமில்லை.. உன் தாத்தா புல்லுக்கு நீர் வார்க்கிறதோட புதருக்கும் சேர்த்து நீர் வார்க்கிறார்டா.. வயநாட்டு ராஜ பரம்பரையா நிமிர்ந்து நிற்கிற நம்ம குடும்பம் நிலை குலைஞ்சிருமோன்னு பயமாயிருக்குடா..” என்று வீணா கண்ணீர் விடுவதைக் கண்டு வளர்ந்தவன் ரவிச்சந்திரன்.. அவன் விநாயகனைப் போல தாயை நேசிக்கும் பிள்ளை.. வீணாதான் அவனுக்கு எல்லாம்.. அன்னையின் கண்ணில் கண்ணீரைக் காணப் பொறுக்க மாட்டான்.. மகள் மீதான கண்மூடித்தனமான பாசத்தில் மகனின் சொத்தை விரயம் பண்ணும் மாமனார், மாமியாருக்கு எதிராக வீணா ஒற்றைச் சொல்லை உதிர்த்ததில்லை.. அளவுக்கு அதிகமான சொத்தை தங்கைக்கு விட்டுக் கொடுத்து விட்டு இருக்கும் சொத்தையும் தாரை வார்த்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் கணவனிடம் நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் என்ன மிச்சம் இருக்கப் போகிறது என்று தட்டிக் கேட்டதில்லை..

வீணா சாத்வீகமானவள்.. அமைதியின் வடிவம்.. அதிர்ந்து பேசாதவள்.. அவளது இந்தக் குணத்தைத்தான் அந்தக் குடும்பம் தங்களுக்குச் சாதகமாக பயன் படுத்திக் கொள்கிறது என்று ரவிச்சந்திரன் வெகுண்டு போவான்.. இதுபோன்ற அட்டூழியம் மற்றக் குடும்பங்களில் நடக்காது என்று கொதித்துப் போவான்..

வீணா கணவனிடம் மனம் விட்டுப் பேச மாட்டாள்.. அவள் மனதிலிருப்பதை மறைத்துக் கொண்டு ரவிவர்மன் எதைச் செய்தாலும் அதை ஆட்சேபிக்காமல் புன்னகையுடன் ஏற்றுக் கொள்வாள்... அவள் மனதிலிருப்பதை பகிர்ந்து கொள்ள விரும்பியது அவளது மகன் மட்டும்தான்.. ஆறு வயதிலேயே அன்னையின் முகம் வாடினால் என்ன ஏது என்று கேள்வி கேட்டுத் துளைத்து விடுவான் ரவிச்சந்திரன்.. மனம் தாளாமல் மகனுக்குப் புரிகிறதோ இல்லையோ தனது மனதிலிருப்பதை எல்லாம் கொட்டிக் கவிழ்த்து விடுவாள் வீணா..

ரவிச்சந்திரன் வளர, வளர, குடும்பத்தின் நிலையைத் தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்டு விட்டான்.. தன் குடும்பப் பாரம்பர்யத்தைக் காப்பாற்ற என்ன செய்ய வேண்டும் என்பதையும் மனதுக்குள் வரையறுத்து வைத்து விட்டான்..

# எண்ணியிருந்தது ஈடேற... 2

வீணா ரவிவர்மனின் கரம் பிடித்து அந்த வீட்டில் மருமகளாகக் கால் பதித்து வந்த போது அவந்திகா கல்லூரி மாணவி.. வீணாவிடம் திமிர் காட்டுவாள்.. வெகு அலட்சியமாகப் பேசுவாள்.. ரவிச்சந்திரன் பிறந்து அவனுக்கு நான்கு வயதான போது அவந்திகாவுக்குத் திருமணம் நடந்தது.. யோகானந்தன் அருள் மொழிவர்மனின் குடும்பத்திற்கு இணையான கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்தவர்.. ராஜ பாரம்பர்யம் கொண்டவர்.. அவரும் அவருடைய அண்ணனும் என்று குடும்பத்திற்கு இரண்டே வாரிசு..

அவந்திகாவிற்கு மணம் முடித்துக் கொடுத்த போதே அவளுக்கான சொத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டார் அருள்மொழி வர்மன்.. ‘சேரளம்’ எஸ்டேட்டையும், அரண்மனை போன்ற வீட்டையும் ரவிவர்மனுக்குக் கொடுத்து விட்டு மற்ற சொத்துக்களான ரப்பர் ஃபேக்டரியையும், சணல் தயாரிக்கும் ஃபேக்டரியையும் அவந்திகாவுக்கு எழுதிக் கொடுத்து விட்டார்.. அவந்திகாவுக்கு கிடைத்த அசையாச் சொத்துக்களின் மதிப்பு ‘சேரளம்’ எஸ்டேட்டையும் வீட்டின் மதிப்பையும் விட பல மடங்கு அதிகமானது.. மகளுக்கென

பத்திரப் படுத்தியிருந்த பரம்பரை வைர நகைகளை மகளிடம் கொடுத்து விட்டாள் யாழினி..

‘சேரளம்’ எஸ்டேட்டும், வீடும் பரம்பரையாக வரும் சொத்துக்கள்.. அவை மகனைத்தான் சேர வேண்டும்.. ரப்பர் ஃபேக்டரியும், சணல் தயாரிக்கும் ஃபேக்டரியும் அருள் மொழிவர்மன் புதிதாக ஆரம்பித்த தொழில்கள்.. அவற்றை அவந்திகாவுக்கு அவர் கொடுத்திருக்கிறார்.. யாழினியின் பிறந்த வீட்டில் அளிக்கப்பட்ட வைர நகைகளை அவள் மகளுக்கு அளித்திருக்கிறாள் என்ற விளக்கம் வந்தபோது எவராலும் அதில் தவறு காண முடியவில்லை..

கங்கு கரையில்லாத சொத்து ‘சேரளம்’ எஸ்டேட்டும் அரண்மனை போன்ற வீடுமாக சுருங்கிப் போனதில் வருத்தம் கொள்ளாமல்தான் வளைய வந்தாள் வீணா.. திருமணமாகிப் புகுந்த வீட்டிற்குப் போன அவந்திகா மகனையும் அடுத்து ஒரு மகளையும் பெற்றெடுத்த போது தாய் வீட்டின் சார்பாக அவளை நன்றாகக் கவனித்து நிறைவான சீர் செய்து அனுப்பி வைத்தாள்.. அதுவும் அஜந்தாவைப் பெற்றெடுக்க அவந்திகா பிறந்த வீட்டுக்கு வந்த போது வீணாவின் உடல்நிலை பலவீனமாக இருந்தது.. மெலிந்து சோர்ந்திருந்தாள்.. அதைப் பற்றிக் கடுகளவும் கவலை கொள்ளாமல் தன்னை

அண்ணனின் மனைவி சரவரக் கவனிக்கவில்லையென்று அவந்திகா புகார் செய்வாள்..

அனைத்திற்கும் ஈடு கொடுத்த வீணாவுக்கு ரம்ய மாலினி பிறந்த போது ரவிச்சந்திரனுக்கு எட்டு வயது.. அவனுக்கும் ரம்ய மாலினிக்கும் எட்டு வயது வித்தியாசம் இருந்ததில் தங்கையிடம் தகப்பனைப் போன்ற அன்பைக் காட்டுவான்.. ரம்ய மாலினிக்கு இரண்டு வயதாகவும் ரவிச்சந்திரனுக்கு பத்து வயதாகவும் இருந்த போதுதான் அந்த உண்மை ம வெடித்துச் சிதறியது..

அவந்திகா வாழ்ந்த வாழ்க்கை கடனில் வாழ்ந்த வாழ்க்கையாக இருந்திருக்கிறது.. அவள் திருமணமாகிப் புகுந்த வீட்டிற்குப் போனவுடனே பாகம் பிரிக்கப் பட்டு விட்டது.. யோகானந்தனின் உல்லாச நடவடிக்கைகளை தெரிந்து வைத்திருந்த அவரது அண்ணன் பத்மானந்தன் தனக்குரிய பாகத்துடன் ஒதுங்கி விட்டார்.. உலகம் சுற்றி உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபடும் யோகானந்தனு க்கு அப்பன் வீட்டுச் சொத்தைக் கரைக்க வெறும் ஆறு மாதங்கள்தான் தேவைப்பட்டிருக்கிறது.. அடுத்ததாக அவர் மனைவி அவந்திகாவின் சொத்தில் கை வைத்திருக்கிறார்..

அள்ள அள்ளக் குறையாத லாபம் கொடுக்கும் ரப்பர் ஃபேக்டரியும், சணல் தயாரிக்கும் ஃபேக்டரியும் கை மாறிவிட.. அவந்திகா குடும்பத்தை நடத்த அருள்மொழிவர்மரிடம் தொழிலில் நஷ்டம் என்று பொய் சொல்லிப் பணம் கேட்க ஆரம்பித்திருக்கிறாள்.. அவரும் யாழினியும் மகளுக்கு உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு மகனின் வருமானம் முழுவதையும் பறித்து அவந்திகாவின் கையில் கொட்டியிருக்கிறார்கள்.. கடைசியில் குடியிருந்த வீடும் கடனில் மூழ்கிப் போக யோகானந்தன் வெட்கமே இல்லாமல் மனைவி குழந்தைகளோடு மாமனார் வீட்டில் செட்டில் ஆகி விட்டார்..

எதிர்காலம் இருள்மயமாகி விடுமோ என்று பயந்து போனாள் வீணா.. நாத்தனார் குடும்பத்தைத் தாங்கி நிற்க அவள் தயங்கவில்லை.. இருக்கும் இடத்தை அழிக்கும் குணாதிசியம் கொண்ட யோகானந்தன் மைத்துனனின் குடும்பத்தை வாழ விட்டு விடுவாரா என்பதுதான் அவளது பயமாக இருந்தது..

**- மூன்றாம் பாகத்தில் தொடரும் . . .**


லட்சுமி பாலாஜி பதிப்பகம்